முத்தமிழ்க்கவி வீரராகவமுதலியார்

இயற்றியருளிய

# திருவேங்கடக்கலம்பகம்.

வை. மு. சடகோபராமாநுஜாசாரியர்

இயற்றிய உரையுடன்

சே. கிருஷ்ணமாசாரியரால்

பதிப்பிக்கப்பட்டது.

இரண்டாம் பதிப்பு

சென்னைப் புரசை

நே. முனிசாமிமுதலியாரவர்களது

கணேச அச்சுக்கூடம்.

பரிதாபி-௵

விலை அணா-௧௦.

# முத்தமிழ்க்கவி வீரராகவமுதலியார்.

திருவேங்கடக்கலம்பகநூலாசிரியராகிய முத்தமிழ்க்கவி வீரராகவமுதலியார், அந்தகக்கவிவீரராகவமுதலியாரது தௌஹித்திரர் [பெண்வயிற்றிற்பிறந்த பிள்ளை]. இவரது சரித்திரத்தைப்பற்றிய விவரம் நன்றாய்த்தெரியாதாயினும், கர்ணபரம்பரையாகக் கேள்விப்பட்டதைக்கொண்டு ஒருவாறு அடியில் எழுதப்படுகின்றது.

இவரது மாதாமகராகிய கவிவீரராகவமுதலியார் பிறவிக்குருடரென்றும், தமது முதுகிலே பிறர் எழுத்துக்களை எழுதிக்காட்ட அதைக்கொண்டு அறிந்து கற்றுத் தேர்ந்தவரென்றும், தொண்டைநாட்டிற் செங்கற்பட்டுக்கு அருகிலுள்ள உழலூரிலே வேளாளர் குலத்திற் பிறந்து வளர்ந்து சிறந்தவரென்றும், திருக்கழுக்குன்றப்புராணம் திருவாரூருலா கீழ்வேளூருலா முதலிய நூல்களை இயற்றியவரென்றும், அவரது சமயம் சைவமென்றும், ஈழநாட்டிற்குப்போய் அந்நாட்டரசனிடங் கவிபாடி யானைக்கன்றும் வளநாடும் பரிசுகொடுக்கப்பெற்றவரென்றும், கண்டசித்தி பாடுபவரென்றும், அவர்காலம் இற்றைக்குச் சற்றேறக்குறைய நானூற்றைம்பது வருஷங்களுக்குமுன் பென்றுந் தெரியவருகிறது. [யானைக்கன்றும் வளநாடும் பெறுதல், அக்காலத்துத் தமிழ்வித்துவான்களுக்குப் பெரிய கௌரவம்.]

"ஆந்திரு வேதா சலத்தரு கண்மிய, பூந்திரு மகளும் புனையிசை மடந்தையும், புலரா தென்றும் பொருந்திவீற் றிருப்ப, வலர்வா யாயிர மணித்தள மாளிகை, யனந்த மேற்கொ டரும்பெற ளித்தில, வினந்திவ ளொளிசெய விமிழ்திரைத் தண்டுறை, நிழலூர் தேம்பொழி லுழலூர்ப் பதியினன், மிக்கவே ளாண்குல மேதகு தவமென, விக்கடற் புவியி லெழில்பெற வந்தோன், கண்ணினு முயர்மனக் கண்ணி னொருவரு, முண்ணிலா வியற்றமி ழியல்பெலா மகங்கை, யுட்கனி போன்மென வொருங்கினி துணர்ந்தோ, னட்புறு கலைமக ணடாநவி னுவினன், சொல்லுவோர் சொல்வன துகளற நோக்குறி, னொல்லுவ சிலபல வொல்லா வெனுமொழி, பிற்பட வுட்பரிந் தற்புற யாவருந், தேவரும் வியப்ப மூவரும் பொருட்பகர், கண்ட சுத்தியைக் காணு துரைத்தாங், கெண்டரு புலவரு ளிதுமுற் பெற்றுளா, ரித்தகை யோன்று னேயென நுவலு, மத்தகை நீளிடை யவனியிற் பராவ, வானைக் கன்று மணிவள நாடுந், தானைப் பெருவளந் தங்கு மீழ, நன்னாட் டரசனின் முன்னாட் பெற்றுள, கவிவீர ராகவ னென்னுங் கவிஞன்" எனத்திருக்கழுக்குன்றப்புராணச்சிறப்புப்பாயிரத்துவருமாறுஉணர்க.

முத்தமிழ்க்கவிவீரராகவமுதலியார் செங்கற்பட்டுக்குச்சமீபத்திலுள்ள பொன்விளைந்தகளத்தூரில் நம்மாழ்வாரது கிருபாகடாக்ஷத்தாற் பிறந்தவரென்றும், பிறந்தசிலகாலத்திற்குப்பின்பு ஒருகலாபனை நேரிடத் தந்தையின்மையால் தாய் கலாபனைக்குப்பயந்து குழவிப்பருவத்தினராகிய இவருடனே ஊரைவிட்டு ஓடித் தெற்கேசென்று சோழநாட்டில் திருக்கண்ணமங்கை யென்னுந் திருமால்திருப்பதியின் அருகிலுள்ளதோர் ஆற்றினது நடுவிலே ஒருகுடிசைபோட்டுக்கொண்டு வசித்திருக்கையில் அந்நதியில் சடக்கெனப் பெருவெள்ளம் வரத் தாய் கண்டு அஞ்சிக் குழந்தையைவிட்டிட்டு ஓடிப்போய்விட இவர் அத்திருப்பதியில் எழுந்தருளியிருக்கும் அபிஷேகவல்லித்தாயார் எடுத்து முலைகொடுத்து வளர்த்துவர வளர்ந்து அத்தாயார்கடாக்ஷத்தாலே முத்தமிழையும் இளமையிலேயே ஐயந்திரிபற அறிந்து உடனே அவ்வம்மையின்மீது திருக்கண்ணமங்கைமாலை யென ஒருபிரபந்தம்பாடிச் சிலகாலம் அவ்வூரிலேயே வசித்திருந்து பின்பு தொண்டை மண்டலத்துக்கு மீண்டு வந்து வல்லிபுரத்துக்குச் சமீபத்தில் திம்மூரில் வாழ்ந்திருந்தன ரென்றும், இவர் ஒருகால் காஞ்சீபுரத்துக்குச் சென்று அத்திவ்வியதேசத்தில் அத்திகிரியில்எழுந்தருளியுள்ள தேவர்பெரு

மானாகிய வரதராஜப்பெருமாள்மீதும் பெருந்தேவித்தாயார்மீதும் பஞ்சரத்தினம் பாடிப் பணிகையில் இவரதுகழுத்தில் எம்பெருமானது திருமாலை தானேவிழ அதுகண்ட அவ்வூர்வைஷ்ணவர்கள் மிகவும் வியந்து இவர்க்குப் பரிவட்டம் தீர்த்தம் ஸ்ரீசடகோபன் முதலியன சாதித்து மற்றும்பல பரிசுகளைக் கொடுத்து அங்குத்தானே சிலகாலம் வைத்திருந்து உபசரித்தனரென்றும், அதுமுதல் அயல்கிராமங்கள்பலவற்றில் வருஷாசனமாகத் தாணியம்முதலியன இவர்க்கு ஏற்பாடுசெய்து கொடுக்கப்பட்டுவந்தன வென்றும், இவர்காலம் ஏறக்குறைய நானூறு வருஷங்களுக்குமுந்தி யென்றும், இவரதுமதம் வைஷ்ணவ மென்றும், இவர்செய்துள்ள வேறுநூல்கள் பாலூர்க்கலம்பகமும் செய்யூர்ப்பிள்ளைத்தமிழும் சிலதனிப்பாடல்களும் பிறவுமா மென்றுங் கூறுவர்.

“பைந்தமிழ்மாலைபுனைந்தான் களந்தைப்பதிப்பகலான், மைந்தன்குருகை வருகாரிமாற மகாமுனிவன்,றந்தருள் கல்விக் கவிவீரராகவன் றாணிக்கே”எனத் திருக்கண்ணமங்கைமாலையினிறுதியில் வருவதையும் நோக்குக.

இவருக்குக்கொடுத்துவந்த வருஷாந்தரவரும்படியை இப்பொழுதும் இவர்சந்ததியார் பெற்றுவருகின்றனர்; இப்பொழுது உழலூரிலிருக்கிற கவிவீரராகவஸ்ரீநிவாசமுதலியார்பரம்பரையோர், இவர்வமிசத்தைச்சேர்ந்தவர்களே.

## சிறப்புப்பாயிரம்.

விரகறிமுத்தமிழ்வீரராகவன்
வரகவிமாலையைவழுத்துந்தோறெலா
முரகனும்வாணனுமொக்கக்கூடினாற்
சிரகரகம்பிதஞ்செய்யலாகுமே.

(இதன்பொருள்.) விரகு அறி - (கருமம் ஞானம் பக்தி பிரபத்தி என்னும் நால்வகை) உபாயங்களை அறிந்த, முத் தமிழ் - (இயல் இசை நாடகம் என்னும் மூவகைத்) தமிழிலும் வல்ல, வீரராகவன் - வீரராகவகவியினது, வர கவி மாலையை - சிறந்த பாடல்களின் ஒழுங்கினாலாகிய பிரபந்தத்தை, வழுத்தும் தோறு எலாம் - சொல்லும்பொழுதெல்லாம்,—உரகனும் வாணனும் ஒக்க கூடினால் - (ஆயிரந்தலைகளையுடைய) ஆதிசேஷனும் (ஆயிரங்கைகளையுடைய) பாணாசுரனும் ஒன்றாகச்சேர்ந்தால், சிர கர கம்பிதம் செய்யல் ஆகும் - (கொண்டாட்டத்தால்) தலையசைத்தலும் கைகொட்டுதலும் செய்தல் கூடும்; (என்றவாறு.)—ஏகாரம் - ஈற்றசை.

கருமம்முதலியநான்கும்,எம்பெருமானை அடைதற்குஏற்ற உபாயமாம். வீரராகவ னென்னும் எம்பெருமானதுபெயரைக் கவிக்குஇட்டுவழங்குவது ஆகுபெயரெனக் கொள்க. வீரராகவன்மாலை - ஆறாம்வேற்றுமைத்தொகை: செய்யுட்கிழமையாகிய பொருட்பிறிதின்கிழமைப்பொருளில் வந்தது; கபிலரகவல்,கம்பராமாயணம் என்பவற்றிற் போல. எலாம் - இடைக்குறைவிகாரம். உரகன்-(காலில்லாமையால்) மார்பினால் நகர்பவன்; ‘பாம்பின்கால்பாம்பறியும்.’ வாணன் - வடசொற்றிரிபு. உரகன் சிரகம்பிதமும், வாணன் கரகம்பிதமுஞ் செய்யலாகு மென முறையே இயைதலால், முறைநிரனிறைப்பொருள்கோள்; கிரமாலங்காரம்.

இது - மூன்றாஞ்சீரொன்று மாச்சீரும், மற்றைமூன்றும் விளச்சீர்களுமாகிய அளவடி நான்கு கொண்ட கலிவிருத்தம்.

இத்துதிகவி, பிறன்கூறியது ; வைஷ்ணவசம்பிரதாயத்தில் ‘தனியன்’ எனப்படும்.

ஸ்ரீ - சுப்ரமணிய ஐயர் ஸ்வா.

ஸ்ரீ

# திருவேங்கடக்கலம்பகம்.

'திரு' என்னும் பலபொருளொருசொல் - வடமொழியிலே 'ஸ்ரீ' என்பதுபோல, தமிழிலே தேவர்கள், அடியார்கள், ஞானநூல்கள், மந்திரங்கள், புண்ணியஸ்தலங்கள், புண்ணியதீர்த்தங்கள் முதலிய மேன்மையையுடைய எப்பொருள்களுக்கும் விசேஷணபதமாகி, அவற்றிற்குமுன்னே மகிமைப்பொருளைக் காட்டிவரும்: ஸ்ரீமகாவிஷ்ணு, ஸ்ரீபக்திசாரர், ஸ்ரீராமாயணம், ஸ்ரீ அஷ்டாக்ஷரம், ஸ்ரீரங்கம், ஸ்ரீகைரவிணி, ஸ்ரீபாதம் எனவும்; திருமால், திருமழிசைப்பிரான், திருவாய்மொழி, திருவெட்டெழுத்து, திருவரங்கம், திருவல்லிக்கேணி, திருவடி எனவும் வழங்குமாற்றால் அறிக. இனி, இதனை 'ஸ்ரீ' என்பதன் சிதைவென்பாரும் உளர். இது, வேங்கடத்துக்கு அடைமொழி; கலம்பகத்துக்கு அடைமொழியாகவுமாம்.

வேங்கடம் கலம்பகம் - வேங்கடத்தினது கலம்பகம் என விரியும்; ஆறும்வேற்றுமைப்பொருளில் தொக்குநின்ற தொகைநிலைத்தொடர்மொழி: விஷயமாகவுடைமை, வேற்றுமைப்பொருளாகிய சம்பந்தம்; விஷ்ணுபுராணம், விநாயகரகவல் என்பவற்றிற்போல. இனி, வேங்கடத்தைப்பற்றிய கலம்பகமெனப் பொருள்உரைத்து, இத்தொடர்மொழியை இரண்டனுருபும் பொருளும் உடன்தொக்கதொகையாகவுங் கொள்ளலாம்.

வேங்கடமென்பது - திருமாலினது திவ்வியதேசங்கள் நூற்றெட்டனுள் ஒன்றும், வடநாட்டுத்திருப்பதிகள் பன்னிரண்டனுள் முதலதுமாகிய தலம்; தன்னையடைந்தவர்களது பாவமனைத்தையும் ஒழிப்பதனால் 'வேங்கடம்' எனப்பெயர்பெற்றது: வேம்-பாவம், கடம் - எரித்தல் எனப் பொருள். இதனை "அத்திருமலைக்குச் சீரார் வேங்கடாசல மெனும்பேர், வைத்தன ரதுவே தென்னில் வேமென வழங்கெழுத்தே, கொத்துறு பவத்தைக் கூறுங் கடவெனக்கூறிரண்டாஞ், சுத்தவக்கரங் கொளுத்தப்படு மெனச் சொல்வர் மேலோர்," "வெங்கொடும் பவங்க ளெல்லாம் வெந்திடச் செய்வதா னன், மங்கலம் பொருந்துஞ் சீர் வேங்கடமலை யான தென்று" என்னும் புராணச்செய்யுட்களால் அறிக. ஸ்ரீசைலத்தின் மேற்கிலுள்ள நந்தபுரமென்னும் ஊரில் புரந்தரனென்னும் பிராமணோத்தமனது குமாரனாகிய மாதவனென்பவன் தன்மனைவியாகிய சந்திரரேகையென்பவளோடு பூஞ்சோலையிற்சென்று விளையாடுகையில் மாலினியென்பாளொரு சண்டாளகன்னிகையின் கட்டழகைக் கண்டு காமுற்று அவளைக்கூடி மனையாளைத்துறந்து அவளுடனே சென்று புலால்நுகர்ந்துங் கட்குடித்துங் கைப்பொருள் முழுவதையும் இழந்து பின்பு வழிபறித்தல் உயிர்க்கொலை முதலிய கொடுந்தொழில் புரிந்து திரவியஞ்சம்பாதித்து அவட்குக் கொடுத்துவந்து முடிவில் வறியவனாகிப் பலநோய்களையும் அடைந்து அவளால்அகற்றப்பட்டவனாய்ப் பலபாவமுந் தொடரப் பித்தன்போல அலைந்து திரிந்து இத்திருமலையை அடைந்தமாத்திரத்தில் தனது தீவினையெல்லாஞ் சாம்பலாகப்பெற்று முன்னையபிரமதேஜஸைப் பொருந்தி நல்லறிவுதோன்றித் திருமாலைச்சேவித்து வழிபட்டுப் பரமபதமடைந்ததனால் இதற்கு வேங்கடாசலமென்னும் பெயர் நிகழ்ந்ததென்று வடமொழியிற் ப்ரஹ்மாண்டபுராணத்திலும், பவிஷ்யோத்தரபுராணத்திலுங் கூறப்படுதல்காண்க. அன்றியும், 'வேம் என்பது-அழிவின்மை, கடமென்பது - ஐச்வரியம்; அழிவில்லாத ஐச்வரியங்களைத் (தன்

னை யடைந்தார்க்குத்) தருதலால் வேங்கடமெனப் பெயர்கொண்டது' என வராகபுராணத்திற் சொல்லப்பட்டுள்ளவாறும் உணர்க. இனி, தமிழ்மொழியாகவே கொண்டால், வெவ்விய காடுகளை யுடையதெனப் பொருள்படும்.

கலம்பகமாவது — ஒருபோகும் வெண்பாவும் கட்டளைக்கலித்துறையும் முதற்கவியுறுப்பாக முதலிற் கூறி, புயவகுப்பு மதங்கு அம்மானை காலம் சம்பிரதம் கார் தவம் குறம் மறம் பாண் களி சித்து இரங்கல் கைக்கிளை தூது வண்டு தழை ஊசல் என்னும் பதினெட்டுறுப்புக்களும் காலத்தால்மருவிய இடைச்சியார் பிச்சியார் வலைச்சியார் முதலியனவும் இயையுமாறு, மருட்பா ஆசிரியப்பா கலிப்பா வஞ்சிப்பா ஆசிரியவிருத்தம் கலிவிருத்தம் கலித்தாழிசை கலிநிலைத்துறை வஞ்சிவிருத்தம் வஞ்சித்துறை ஆசிரியத்துறை வெண்டுறை முதலியவற்றால், இடையிடையே வெண்பாவும் கலித்துறையும் விரவிவர, மடக்குடைச்செய்யுளும் வண்ணம் சந்தம் முதலியனவும் பொருந்த, அந்தாதித்தொடையால் முற்றுற, இறுதியும் முதலும் மண்டலித்துப் பாடுங்கால், தேவர்க்கு நூறும் அந்தணர்க்குத் தொண்ணூற்றைந்தும் அரசர்க்குத் தொண்ணூறும் அமைச்சர்க்கு எழுபதும் வணிகர்க்கு ஐம்பதும் வேளாளர்க்கு முப்பது மாகப் பாடுவதொரு பிரபந்தம்; இக்கலம்பகவிலக்கணத்தைப் பன்னிருபாட்டியல், வச்சணந்திமாலை, இலக்கணவிளக்கம் முதலியவற்றிற் காண்க.

ஆசிரியர் தொல்காப்பியனார் செய்யுளியலில் "விருந்தே தானும், புதுவது கிளந்த யாப்பின்மேற்றே" என்பதனால் 'விருந்துதானும், பழங்கதை மேலதன்றிப் புதிதாகத் தாம் வேண்டியவாற்றாற் பலசெய்யுளுந்தொடர்ந்துவரத் தொடுக்கப்படுந் தொடர்நிலைமேலது' என்று கூறினமையின், இக்கலம்பகம் அங்ஙனங்கூறிய விருந்தாமென்று உணர்க; இனி, இதனைச் சிறுகாப்பியத்துள் அடக்குவர், பிற்காலத்தார்.

"களிவண்டு மிழற்றிய கலம்பகம் புனைந்த, அலங்கலந் தொடையல் கொண் டடியிணை பணிவா னமரர்கள் புகுந்தன ராதலி லம்மா" என்னும் பெரியார்பாசுரத்தில், பலவகைமலர்களைக்கொண்டு தொடுக்கப்பட்டுள்ள மாலை 'கலம்பகம்புனைந்ததொடையல்' எனக் கூறப்பட்டுள்ளதனால், அப்பூமாலைபோலப் பலவகைப்பாக்களைக் கொண்டு அமைக்கப்பட்ட பாமாலையைக் கலம்பகமெனப் பெரியோர் பெயரிட்டுவழங்கின ரென்பர்; இதற்கு இவ்வாறுபொருள்கொள்ளும்போது, இது கதம்பகம்என்னும் வடமொழியின் திரிபுபோலும்: இனி, கலப்பு அகம் எனப்பிரித்து, மெலித்தல்விகாரம் பெற்றதாக்கி, பலவுறுப்புக்களுங் கலத்தலைத் தன்னிடத்தேயுடையதென அன்மொழித்தொகைக்காரணக்குறியாகவுங் கொள்ளலாம்; இனி, ஒருசாரார், பன்னிரண்டுமரக்காலென்னும் பொருளுள்ள கலமென்னுஞ்சொல்லுங் கடவுளது ஆறுகுணங்களைக் குறிக்கும் பகமென்னுஞ்சொல்லுங் குறிப்பாய்ப் பன்னிரண்டு ஆறு என்னுந் தொகையைமாத்திரம் உணர்த்தி உம்மைத்தொகையாகப்புணர்ந்து பதினெட்டுறுப்புக்களையுடைய பிரபந்தத்துக்கு ஏதுப்பெயராயிற் றென்றும் உரைப்பர்.

எனவே, மேன்மையான வேங்கடமென்னுந்திருப்பதியின் விஷயமாகப் பாடியதொரு பிரபந்த மென்று பொருள்; அத்திருப்பதியில் திருக்கோயில்கொண்டு எழுந்தருளியிருக்கிற எம்பெருமானைப்பற்றிப் பாடிய தொரு நூலென்பது கருத்து.

## காப்பு.

காப்பு - காத்தல்: அது - இங்கு, காக்கின்ற கடவுளின் விஷயமான வணக்கத்துக்குத் தொழிலாகுபெயர்; ஆகவே, கவி தமக்கு நேரிடத்தக்க இடையூறுகளை நீக்கித் தமதுஎண்ணத்தை முடிக்கவல்லதோர் பொருளின் விஷயமாகச் செய்யுந் தோத்திரம் என்பது கருத்து.

[நம்மாழ்வார்.]

பூப்பாதம்வேங்கடவெற்பில்வைத்தோர்புயல்போலநின்றோன்
மாப்பாவைமேவும்பெருமாள்கலம்பகமாக்கவிக்குக்
காப்பாகும்வேதக்கரும்பிழிசாறெனக்கன்னித்தமிழ்ப்
பாப்பாடியநங்குருகாபுரீசன்பராங்குசனே.

(இ - ள்.) பூ பாதம் - (தனது) தாமரைமலர்போன்ற திருவடிகளை, வேங்கடம் வெற்பில் வைத்து - திருவேங்கடமலையின்மேலே வைத்து, ஓர் புயல் போல - ஒரு காளமேகம்போல, நின்றோன் - நின்றருளியவனும், பாவை மா மேவும் பெருமாள் - சித்திரப்பிரதிமைபோன்ற [மிகஅழகிய] திருமகள் (தன்னிடம்) வாசஞ்செய்யப்பெற்ற பெருமையை யுடையவனுமாகிய ஸ்ரீநிவாசனது விஷயமான, கலம்பகம் மா கவிக்கு - கலம்பகரூபமான சிறந்த பாடல்களை நிறைவேற்றுதற்கு,—வேதம் கரும்பு இழி சாறு என-வேதமாகிய கரும்பினின்று இறங்குகின்ற சாரம்போல, கன்னி தமிழ் பா பாடிய - அழிவில்லாத தமிழ்ப்பாசுரங்களைப் பாடியருளிய, நம் குருகாபுரீ ஈசன் - நமது திருக்குருகையென்னுந்திருநகரிக்குத் தலைவரும், பர அங்குசன் - பராங்குசனென்னுந் திருநாமமுடையவருமாகிய நம்மாழ்வார், காப்பு ஆகும் - பாதுகாவலாவர்; (எ - று.)

எல்லாநூல்களும் மங்கலமொழிமுதல்வகுத்துக்கூறவேண்டுவது பெருமரபாதலின், காப்புச்செய்யுளின் முதலில் ‘பூ’என்று தொடங்கினார்; மேல்நூல்தொடக்கத்தில் ‘மலர்’என்னுஞ் சொல்லை வைத்தவாறுங் காண்க. புயலுவமை - கரியதிருநிறத்துக்கும், கைம்மாறுகருதாது கருணைமழைபொழிதற்கும், குளிர்ந்ததோற்றத்துக்கும், மலைமேலிருத்தற்கு மென்க. மா - வடசொல். பாவை - மிக்க அழகுக்கு உவமை; மனத்திற்குத் திருப்தியுண்டாகிறவளவுங் கலைத்துக்கலைத்துச் சீர்திருத்தமாக நன்குஎழுதக்கூடு மாதலால்,சித்திரப்பதுமை மிகஅழகியதாம்: கண்ணின்மணியில் வாழும் பாவையெனப் பொருள்கொண்டால்,அருமைக்கு உவமையா மென்க. பெருமாள்-ஆள்என்னும் பெண்பால்விகுதி, இங்கே ஆண்பாலுக்கு வந்தது; பெருமானென்பது ஈறுதிரிந்ததென்றுங் கூறுவர். சாறு-ஸாரம்என்னும் வடசொல்லின் விகாரம்.தமிழ்ப்பாஎன்றது-முறையேநான்குவேதங்களின் சாரமாகிய திருவிருத்தம், திருவாசிரியம்,திருவாய்மொழி, பெரியதிருவந்தாதி என்னும் நான்கு திவ்வியப்பிரபந்தங்களை. ஸம்ஸ்கிருதவேதம்போல இத்தமிழ்வேதமும் நித்தியமாதலால், ‘கன்னித்தமிழ்ப்பா’ எனப்பட்டது; “ஆகஸ்த்யமும் அநாதி”என்னும் ஆசார்யஹ்ருதயவாக்கியத்தை நோக்குக. உயர்வுதோன்ற, ‘நங்குருகாபுரீசன்’என்றார்;“நம்பெருமாள் நம்மாழ்வார் நஞ்சீயர் நம்பிள்ளை, யென்ப ரவரவர்த மேற்றத்தால்” என்பது காண்க. புரீ + ஈசன், பர + அங்குசன் - வடமொழிப்புணர்ச்சி,தீர்க்கசந்தி. பராங்குசனென்பதற்கு-வேற்றுமதத்தினராகிய யானைகளை அடக்கவல்ல மாவெட்டிபோன்றவ ரென்று பொருள். ஆகும் - செய்யுமென்முற்று, ஆண்பாலிற் சென்றது.

இது - நேரசைமுதலாய் ஒற்றொழித்துப் பதினாறெழுத்துப் பெற்றுவந்த கட்டளைக்கலித்துறை. (௧)

[ஆழ்வார்கள் பன்னிருவர்.]

குருகையர்கோன்பொய்கைபேய்பூதன்பாணன்குறையற்பிரான்
றிருமழிசைப்பெருமாள்குலசேகரன்றென்புதுவை
வருமுனிகோதைதென்கோளூர்க்கதிபதிமண்டங்குடிக்
கரசிவர்தாளைப்பணிவாம்வினையையகற்றுதற்கே.

(இ - ள்.) குருகையர் கோன் - திருக்குருகூரிலுள்ளார்க்குத் தலைவராகிய நம்மாழ்வாரும், பொய்கை - பொய்கையாழ்வாரும், பேய் - பேயாழ்வாரும், பூதன் - பூதத்தாழ்வாரும், பாணன் - திருப்பாணாழ்வாரும், குறையல் பிரான் - திருக்குறையலூர்க்குத் தலைவராகிய திருமங்கையாழ்வாரும், திருமழிசை பெருமாள்-திருமழிசையாழ்வாரும், குலசேகரன்-குலசேகராழ்வாரும், தென் புதுவை வரு முனி - அழகிய ஸ்ரீவில்லிபுத்தூரில் திருவவதரித்த பெரியாழ்வாரும், கோதை - ஆண்டாளும், தென் கோளூர்க்கு அதிபதி - அழகிய திருக்கோளூர்க்குத் தலைவராகிய மதுரகவியாழ்வாரும், மண்டங்குடிக்கு அரசு - திருமண்டங்குடிக்குத் தலைவராகிய தொண்டரடிப்பொடியாழ்வாரும், இவர் - ஆகிய இவ்வாழ்வார்கள் பன்னிருவரது, தாளை - திருவடிகளை, வினையை அகற்றுதற்கு - (நமது)கருமத்தை ஒழிப்பதற்காக, பணிவாம் - (நாம்) வணங்குவோம்; (எ - று.)

பொய்கை-குளம்; பொய்கையில் திருவவதரித்த ஆழ்வாரை'பொய்கை' என்றது,இடவாகுபெயர்: இனி, உவமையாகுபெயராய், ஊரின்நடுவேயுள்ள ஊருணிபோல எல்லார்க்கும் எளிதிற் பயன்கொடுப்பவரென்றுமாம்.பூதன்- "கடல்வண்ணன் பூதம்," "மறுத்திருமார்பனவன்றன் பூதம்" என்றவாறு எம்பெருமானது உளனாகையாலே தமது உளனாகையை உடையவர்; உலகத்தவரோடு சேராமையாற் பூதம்போன்றவரென்றுமாம். பேய்-உவமையாகுபெயர்;ஸம்ஸாரிகளால் பேய்போல எண்ணப்படுபவர்: அல்லது,அவர்களைத் தாம் பேய்போல எண்ணுபவர். "பேயரே யெனக்கி யாவரும் யானு மோர், பேயனே யெவர்க்கும் மிது பேசியென், ஆயனே யரங்கா வென் றழைக்கின்றேன்,பேயனா யொழிந்தேனெம்பிரானுக்கே"என்பதுகாண்க.மழிசை-மஹீஸாரக்ஷேத்ரம். செய்யுளாதலின், ஆழ்வார்களை முறைபிறழ வைத்தார்; முறை இன்னதென்பதை"பொய்கையார் பூதத்தார் பேயார் புகழ்மழிசை, யைய னருண் மாறன் சேரலர்கோன்-றுய்யபட்ட, நாத னன்பர்தாட்டூளி நற்பாண னன்கலிய, னீதிவர்தோற்றத் தடைவா மிங்கு." "ஆழ்வார் திருமகளா ராண்டாள் மதுரகவி, யாழ்வார்" என்பவற்றால் அறிக. குருகை, குறையல், திருமழிசை, புதுவை, கோளூர்,மண்டங்குடி என்பன - அவ்வவ்வாழ்வார்களது திருவவதாரஸ்தலங்கள். பாணன் - வீணையுங் கையுமாய்ப் பெரியபெருமாள்திருவடிக்கீழே நிரந்தரசேவைபண்ணிக்கொண்டு பாட்டுப் பாடிப் புகழ்பவர்;"பாட்டினாற் கண்டு வாழும் பாணர்"என்பர். பெருமாள்- பெருமையையுடையவர். குலசேகரன் - தாம்திருவவதரித்த சேரகுலத்துக் குத்தலையணிபோலச்சிறந்தவர். தென்-தெற்கிலுள்ள எனவுமாம்.கோதை- மாலை: எம்பெருமானுக்கு மாலைபோல மிகவிருப்பமாயிருப்பவள்; அன்றிக்கே, பாமாலையையும் பூமாலையையுஞ் சூடிக்கொடுத்தவள்.

சிருஷ்டிதொடங்கித் தன்கோத்திரத்தாரையுந் தன்னொடுகூட்டி,அவர்கட்கும் ஆழ்வார்களைவணங்குவதனாலுண்டாம் பயனை அடைவிக்கவேண்டுமென்னுங் கருத்தால், உளப்பாட்டுத்தன்மைப்பன்மையாக,'பணிவாம்'என்றார். நாமென்பது,தோன்றாஎழுவாய். நல்வினையும் பிறப்புக்குக்காரணமாதலால், இருவகைவினையும் அடங்குமாறு, பொதுப்பட,'வினை'என்றார்; ஒருவனுக்கு முத்தியடைவதைத்தடுத்துப் பிறப்புநெறியிற் பந்தமுறுத்துவதில் நல்வினையுந் தீவினையும் பொன்விலங்கும் இருப்புவிலங்கும் போலத் தம்முள்

ஒப்பனவென்று அறிக. இங்கே 'வினை' என்றது, தாம்எடுத்த நூல் முடியாமைக்கு வரத்தக்க இடையூற்றிற்குக் காரணமான தீவினையை யாகவுமாம். அகற்றுதற்கு - 'கு'விகுதி பெற்றுவந்த எதிர்காலவினையெச்சம்; து அல் இரண்டும் - சாரியைகள். அரசு - அரசனுக்குப் பண்பாகுபெயர்.

இது - நிரையசைமுதலாய்ப் பதினேழெழுத்துப்பெற்றுவந்த கட்டளைக் கலித்துறை. (௨)

[உடையவர்.]

ஐங்கோலைவென் றுகைக்கொண் டமுக்கோலனரையுடுத்த
செங்கோலவாடையன்கார்க்கோலமாயன் றிருச்சமயஞ்
சங்கோலிடுங்கடன்மாயிருஞாலந்தழைக்கவைத்தோன்
பைங்கோலக்காவுடைப்பூதூர்முனிபுகழ்பாடுதுமே.

(இ - ள்.) ஐங் கோலை வென்று - (மன்மதனது)பஞ்சபாணங்களையும் ஜயித்து, கை கொண்ட - திருக்கையில் தரித்த, முக்கோலன் - திரிதண்டத்தையுடையவரும், அரை உடுத்த - இடையிற் சாத்திய, செம் கோலம் ஆடையன் - சிவந்த அழகிய காஷாயவஸ்திரத்தை யுடையவரும், கார் கோலம் மாயன் திரு சமயம் - காளமேகம்போன்ற திருமேனியையுடைய திருமாலினது மேன்மையான (ஸ்ரீவைஷ்ணவ)மதத்தை, சங்கு ஒலிடும் கடல் மா இரு ஞாலம் - சங்கங்கள் ஒலிக்கப்பெற்ற கடலாற் சூழப்பட்ட மிகவும்பெரிய நிலவுலகத்தில், தழைக்க வைத்தோன் - செழிக்கும்படி ஸ்தாபித்தருளியவரும் ஆகிய, பைங் கோலம் கா உடை பூதூர் முனி - பசுமையான அழகிய சோலைகளையுடைய ஸ்ரீபெரும்பூதூரில் திருவவதரித்த இராமாநுசமுனிவரது, புகழ் - கீர்த்தியை, பாடுதும் - பாடித்துதிப்போம்; (எ - று.)

ஸ்ரீவைஷ்ணவ விசிஷ்டாத்வைதமதத்தை உலகத்தில் ஸ்தாபித்த ஆசாரியரான இராமாநுசனைப் புகழ்ந்து பாடுவோ மென்பதாம். ஐங்கோலைவென்ற - காமத்தை ஒழித்து என்றவாறு. மன்மதபாணங்கள் - தாமரைமலர், அசோகமலர், மாமலர், மல்லிகைமலர், நீலோற்பலமலர் என்னும் ஐந்துமாம். இனி, ஐம்பொறிகளாகிய தண்டங்களை அடக்கியென்றுமாம். "நூலே கரக முக்கோல் மணையே, ஆயுங்காலை யந்தணர்க் குரிய" என்ற தொல்காப்பியத்தாலும், "உறித் தாழ்ந்த கரகமும் உரைசான்ற முக்கோலும், நெறிப்படச் சுவலசைஇ" என்ற கலித்தொகையினாலும், சந்நியாசிகளுக்குத் திரிதண்டம் உரியதாதல் உணர்க. திரிதண்டம் - மூன்றுகோல் ஒன்றாகச்சேர்த்துக் கட்டப்பட்டது. துறவிகள் முக்கோல்பிடித்தல் - மனம் மொழி மெய் என்னுந் திரிகரணங்களையும் கண்டபடி செல்லவொட்டாமல் அடக்கித் தம்வசப்படுத்தினமைக்கும், காமம் வெகுளி மயக்கம் என்னும் முப்பகையையும் வென்றமைக்கும், மண்ணாசை பெண்ணாசை பொன்னாசை என்னும் ஈஷணாத்ரயங்களையும் சயித்தமைக்கும் ஓர் அறிகுறியாகு மென்பர். முக்கோல், வைஷ்ணவ சந்நியாசிகளுக்கு உரியது. கருமையென்னும் பண்புப்பெயர், ஈறுபோய் ஆதி நீண்டு அயலுகரமுங்கெட்டு 'கார்' என நின்றது; இந்நிறப்பெயர் - அதனையுடைய மேகத்துக்குப் பண்பாகுபெயர். சங்கு-வடசொல்விகாரம். மாயிரு-ஒருபொருட்பன்மொழி; மா-உரிச்சொல்லாதலால், உயிர்வரு வகரஉடம்படுமெய்பெறாது யகரமெய் பெற்று முடிந்தது: [நன்னூல் - மெய்யீற்றுப்புணரியல்-௩௬.] "மாமுன் னுயிர்வரின் யகரமெய் தோன்றும்" என்றார் பிறரும். பசுமையென்னும் பண்புப்பெயர், ஈறுபோய் அடியகரம் ஐகாரமாகி ஈற்றயலுயிர்மெய்யுங் கெட்டு வருமெழுத்துக்கு இனவெழுத்து மிக்கு 'பைங்கோலம்' எனப் புணர்ந்துநின்றது. அரை-எண்ணலளவாகுபெயர். பாடுதும்-தன்மைப்பன்மையெதிர்காலமுற்று.

இது - நேரசைமுதற் கட்டளைக்கலித்துறை; மேலிரண்டு கவிகளும் இவ்வாறே. (௩)

[எழுபத்துநான்கு ஸிம்ஹாஸநாதிபதிகள்.]

மங்காதகீர்த்தியெதிராசர்பாதமணிமுடியாத்
தங்காதலாற்றந்தலைச்சூடிக்கொண்டுதடங்கடல்சூ
ழங்காசினியைப்புரக்குமெட்டெட்டுடனையிரண்டாஞ்
சிங்காதனக்குருராயர்தம்பேர்சொலிற்றீதறுமே.

(இ - ள்.) மங்காத கீர்த்தி - (எந்நாளும்) அழியாத புகழையுடைய, எதிராசர்தம் - எம்பெருமானாருடைய, பாதம்-திருவடிகளை, மணி முடி ஆ- நவரத்தினங்களிழைத்துச்செய்த கிரீடத்தை யொப்ப, தம் காதலால் - தமது பக்தியினால், தம் தலை சூடிக்கொண்டு - தமது தலையின்மேல் வைத்துக் கொண்டு, தட கடல் சூழ் அம் காசினியை புரக்கும் - பெரிய கடலாற் சூழப் பட்ட அழகிய பூமியைக் காக்கின்ற, எட்டெட்டு உடன் ஐ இரண்டு ஆம் சிங்காதனக் குருராயர்தம் - எழுபத்துநாலுஸிம்ஹாஸநாதிபதிகளது, பேர்- திருநாமங்களை, சொலின் - சொன்னால், தீது அறும்-(நமது)தீவினை நீங்கும்; (எ - று.)—ஏ - தேற்றம்.

எதிராசர் - யதிராஜர்; சந்நியாசிகளுக்குத் தலைவர். மணிமுடி-அழகிய முடியுமாம். காசினி - காஸ்யபீ என்னும் வடசொல்லின் விகாரம்; கச்யப முனிவருக்கு(ப் பரசுராமனால்) தானஞ்செய்யப்பட்ட தென்று பொருள். காசினியைப்புரத்தல் - பூமியிலுள்ளாரை ஸ்ரீவைஷ்ணவசமயசித்தாந்தத்தில் நிலைபெறுத்தி நற்கதியிற்செலுத்துதல். எட்டெட்டு-அறுபத்துநான்கு; பண்புத்தொகை; அதனோடுகூடிய ஐயிரண்டு-பத்து = எழுபத்துநாலு. குரு-(அஜ்ஞாநமான) இருளைப் போக்குபவன்; கு - இருள், ரு - தீர்ப்பவன். குருராயர் - ஆசாரியர்களுக்குத் தலைவர். ராயர்-ராஜர். 'ராயர்' என்றதற்கு எற்ப, 'ராசர்பாதமுடியாத் தலைச்சூடிக்கொண்டு காசினியைப்புரக்கும்' என்றார். தம்-சாரியை. தீது-ஒன்றன்பாற்குறிப்புவினையாலணையும்பெயர்; சாதியொருமை. எழுபத்துநால்வர் - பட்டர், சீராமப்பிள்ளை, கந்தாடையாண்டான், அனந்தாழ்வான், எம்பார், கிடாம்பியாச்சான், திருமலைநல்லான், திருக்குருகைப்பிரான்பிள்ளான், ஆசூரிப்பெருமாள், ஈயுண்ணிப்பிள்ளையாண்டான், அருளாளப்பெருமாளெம்பெருமானார், தொண்டனூர்நம்பி, திருக்குறுங்குடிநம்பி, முடும்பைநம்பி, வங்கிப்புரத்துநம்பி, வடுகநம்பி, கொமாண்டூரிளையவில்லி முதலியோர். 'அணிமுடி' எனப் பிரித்தல், மோனைத்தொடைக்குப் பொருந்தாது. (௪)

## அவையடக்கம்.

அதாவது-கற்றோர்சபைமுன் கவி தன்னைத் தாழ்த்திக்கூறுஞ் செய்யுள்.

பொற்பாலிற்கண்டுயில்வேங்கடவாணன்புகழளவிட்
டற்பாற்கலம்பகநான்பாடவெண்ணுதலாய்முலையி
னற்பான்மணங்கமழ்செவ்வாய்ப்பவளநறுங்குதலைச்
சொற்பாலர்திங்களைக்கையாற்பிடிக்கத்துணிந்தெழலே.

(இ - ள்.) பொற்பு ஆலில் - அழகிய ஆலிலையிலே, கண் துயில் - திருக்கண்வளர்ந்தருளுகிற, வேங்கடம் வாணன் - திருவேங்கடமலையில் வாழும் எம்பெருமானது, புகழ் - கீர்த்தியை, அளவிட்டு - வரையறைசெய்து, அற்பால் - அன்பினால், கலம்பகம் பாட - கலம்பகம்பாடும்படி, நான்—, எண்ணுதல் - நினைத்தல்,—ஆய் முலையின் நல் பால் மணம் கமழ் செம் வாய் பவளம் - தாயினது முலையினுடைய நல்ல பாலின் வாசனை வீசுகின்ற சிவந்த பவழம்போன்ற வாயினிடத்துத் தோன்றுகின்ற,நறு குதலை சொல் - நல்ல மழலைச்சொற்களை யுடைய, பாலர் - சிறுகுழந்தைகள், திங்களை - (ஆகாய

த்திற்சஞ்சரிக்கின்ற) சந்திரனை, கையால் பிடிக்க - கைகளினாற்பிடித்தற்கு, துணிந்து-நிச்சயித்து-எழல்-(இருப்பிடம்விட்டு)எழுதல்போலாம்; (எ - று.)

மிக்கஅன்பின்செய்கையாயினும் கண்டோர்நகைக்கத்தக்க தென்பதாம். அன்பின்செய்கையென அறிந்தோர் பரிகசியாது பொறுத்தருளவேண்டுமென்றவாறு. பொன் பாலில் எனப் பிரித்து, அழகிய திருப்பாற்கடலிலெனவுமாம். ஆல் என்னும் மரத்தின் பெயர், அதன் இலைக்கு முதலாகு பெயர். கண்துயிலுதல் - யோகநித்திரைசெய்தல். அற்பால் - அன்பால்என்பதன் வலித்தல். இன் எனப் பிரித்து, இனிய என்றுமாம். பவளம் - ப்ரவாளமென்னும் வடமொழியின் திரிபு. குதலை - நிரம்பாமென்சொல். குதலைக்கு நறுமை - கேட்டற்கு இனிமை. உவமவுருபுகொடுத்துக் கூறாமல் உபமான உபமேயங்கட்கு ஐக்கியத்தை ஆரோபித்துக் கூறினமையின், காட்சியணி.

## நூல்.

க. மலர்மேவு திருமகளும் வாட்டடங்க ணிலமகளு
மலர்மேவு குழனீளை யணங்குமிரு மருங்கிருப்ப
வலனோங்கு பரமபத மாமணிமண் டபத்திலமர்
நலனோங்கு பரம்பொருளாய் நான்குவியூ கமுமாகு
யுபயகிரிப் புயராம னொடுகண்ணன் முதலான
விபவவுரு வமுமெடுத்து வீறுமுயிர் தொறுங்குடிகொ
ளந்தரியா மியுமான தமையாமே யெளிதாக
விந்தநெடு வேங்கடத்தி லெல்லோருந் தொழநின்றோய்!

க. நளிகடல்சூழ் சகமகட்கு நாயகனீ மாவலிபா
லெளியவர்போன் மூவடிமண் ணிரந்தவித மென்னேயோ.

உ. நீளியவா னலர்தலைமா நிலங்கவிய வளர்ந்தருணின்
றாளிணைப்பூ வுரகமலைத் தலைபூத்த ததிசயமே.

௩. அலகில்பகி ரண்டமெலா மகன்றவயிற் றடக்குமுனை
யிலகுவடச் சிறுதளிரொன் றெந்தவிதந் தாங்கியதே.

ச. கந்தப்பூ வயனார்க்குக் கனமறையைப் போதித்தாய்க்
கந்தச்சாந் தீவினிதா னருங்கலைகூ றத்தகுமே.

ரு. அனைத்துயிரு மாயையெனு மரும்பாசத் தசைத்தாட்டு
முனைக்கனிவா யாய்ச்சியெவ்வா றுரலொடுகட் டினளம்மா.

சு. மிகநம்பி யான்றெருமுன் மெல்லடியிற் பிறந்தகங்கை
குகனம்பி விடவதன்மேற் கொடுகடந்தா யிதுநன்றே.

க. திகழ்பிறை யெயிறுள சினமுதிர் பணியது
நகுமணி முடியினி னடனவி லடியினை.

உ. இருண்முகில் சொரிதலி னினநிரை தளருதல்
கருதுபு வரையொரு கவிகைகொண் மதுகையை.

௩. ஒளியுமிழ் மணிமுடி யுளதுரு பதன்மகள்
களிகொள வலகில கலையருள் பெருமையை.

ச. சலசல வெனமத சலமிழி மலையிடர்
தொலைவுற நொடிவரை துணைவரு கருணையை.

௧. நன்மீன வுருவெடுத்த நான்றிலொரு செலுக்கிடந்த
பன்மீனத் தடங்கடலைப் பலகிரியா லடைத்தனையே.

௨. விண்ணகஞ்சே ரண்டருண வேலையமு தருளியநீ
மண்ணகஞ்சே ரண்டர்திரு மனைவெண்ணெய்க் காடினையே.

௩. துலங்கிலைவா ரிசத்தவனைச் சுதனுகப் படைத்தருணீ
யிலங்கிலைவேற் றசரதன்சே யெனப்பெரும்பேர் பெற்றனையே.

௪. உம்பர்முதல் யாவருக்கு முயர்வாழ்வைப் பணித்தருணீ
யிம்பர்தருங் காணிக்கை யிச்சியா நின்றனையே.

௫. நினையொருசக் கிரியுன்கா ணிரைத்தபொற்பூ விலும்பாண்டம்
வனையொருசக் கிரிசாத்து மட்பூவை யுவந்தனையே.

௬. கைம்மானி னுரிபோர்த்த கண்ணுநுதலு மளக்கவொண்ணுப்
பெம்மானின் விளையாட்டுப் பேதையேன் சொலும்பாற்றே.

௧. கனக நகத்தூர் கமஞ்சூன் முகில்போல்
வினதை மகத்தன் மேல்வரு தன்மையை.

௨. கருமா கடன்மேற் கலந்தசை வலத்திற்
றிருமார் பினிற்சேர் தேங்கமழ் துளவினை.

௧. இருசுட ரிருகை சுமந்தனை.
௨. இணைநெடு மருதிடை சென்றனை.
௩. அருமறை முடியி லமர்ந்தனை.
௪. அடியவ ரகமலர் நின்றனை.

௧. தரையிடந்தனை.
௨. திரைகிடந்தனை.
௩. சகடுவென்றனை.
௪. பகடுகொன்றனை.
௫. அருள்சுரந்தனை.
௬. மருடுரந்தனை.
௭. அலகிகந்தனை.
௮. உலகுகந்தனை.

எனவாங்கு

பதின்மர் வழங்கு முதிர்தமிழ் மறையுங்
கோதிலாக் கிளவி வேதமோர் நான்கும்
வினவு திருச்செவி யனகபு ராதன
விருவிபூ திக்கு மொருதனி முதல்வ
வொப்பி லாதவென் னப்பநி ராமய
மலிபெருங் கருணை யலையெறி கடைக்க
ணங்கனை யலர்மேன் மங்கை மணாள
நித்தநிற் றொழவரும் பத்தர்தாள் சேர்த்தும்
படிக்குல மாகக் கிடக்கப் பெறுகிலே
மெனமுனிக் கணமு மனனினைத் துருக
வோங்குசீர் கெழீஇய வேங்கட நாயக
வேணவா வோடுநிற் காணவந் தீண்டுந்
திருக்கிள ரமரர் நெருக்குணு மெல்லையிற்
பொன்றிக ழவிர்முடி யொன்றொடொன் றுரிஞ்சலிற்

கனகநுண் டுகளுதிர் நினதுசன் னிதியிற்
றிரளை விலக்குநர் கரதல வேத்திர
வடியுண் டொதுங்கிக் கிடப்பமென வந்து
வணங்குபு தொழுதுன் குணஞ்சில துதிப்பல்
பீடுளை வுளத்தே சேடபூ தனுமாய்ச்
சந்தத மிகுபர தந்திர னாகி
யுனைகங் கரிய முகப்பா
லனுதினஞ் செயவைத் தருண்மதி யெனவே.

மலர்மேவு***தொழநின்றோய்.—(இ - ள்.) மலர் மேவு - செந்தாமரை மலரில் வீற்றிருக்கின்ற, திருமகளும் - ஸ்ரீதேவியும், வாள் தட கண் - வாள் போற் கூர்மையான பெரிய திருக்கண்களையுடைய, நிலம் மகளும்-பூதேவியும், அலர் மேவு குழல்-(சூடிய) மலர்கள் பொருந்திய கூந்தலையுடைய, நீளை அணங்கும் - நீளாதேவியும், இரு மருங்கு-(தனது) இரண்டுபக்கங்களிலும், இருப்ப-வீற்றிருக்க, வலன் ஓங்கு பரமபதம்-வெற்றிஉயர்ந்த பரமபதத்தில், மாமணிமண்டபத்தில் - திருமாமணிமண்டபத்திலே, அமர் - எழுந்தருளிய, நலன் ஓங்கு பரம் பொருள் ஆய் - நல்ல திருக்கலியாணகுணங்கள் உயர்ந்த பரதத்துவஸ்வரூபியாய், நான்கு வியூகமும் ஆனாய் - (திருப்பாற்கடலில் வாசுதேவன் ஸங்கர்ஷணன் பிரத்யும்நன் அநிருத்தன் என்கிற) நான்கு வியூகரூபமுமானவனே!—உபய கிரி புய ராமனொடு கண்ணன் முதல் ஆன விபவ உருவமும் எடுத்து-இரண்டுமலைகள்போன்ற திருத்தோள்களையுடைய இராமனும் கிருஷ்ணனும் முதலான விபவரூபங்களையும் எடுத்துத் திருவவதாரஞ்செய்து,வீறும் உயிர்தொறும் குடிகொள் அந்தரியாமியும் ஆனது-சிறப்புப்பெற்ற உயிர்கள்தோறுங் குடியிருத்தலைக்கொண்ட அந்தர்யாமியுமாகிய தன்மை, அமையாமே - போதாமல்,எல்லோரும்-(நம்போலிய)எல்லாவுயிர்களும், எளிது ஆக தொழ - சுலபமாக வணங்கும்படி, இந்த நெடு வேங்கடத்தில் - இந்தப் பெரிய திருவேங்கடமலையில், நின்றோய் - (அர்ச்சாவிக்கிரகமாய்) எழுந்தருளிநின்றவனே! (எ - று.)

இதனால், எம்பெருமானுடைய பரம் வியூகம் விபவம் அந்தரியாமி அர்ச்சை என்னும் ஐந்துநிலைமைகளின் தன்மையைக் கூறினார். பரம்முதலிய நான்கு சொரூபமும் காலவடைவிலே உயிர்களை உய்விக்கமாட்டாமையை நோக்கி, தனது இயல்பான பெருங்கருணையால் அர்ச்சாவடிவமெடுத்துத் திருவேங்கடத்தில்நின்றானென்க. திருமகள்-இலக்குமி,பெரியபிராட்டியார். நிலமகள்-பூமிப்பிராட்டியார். அணங்கு-தெய்வப்பெண். வலன்-எல்லாப்பதவிகளினும் மேலாந் தன்மை. பரமபதம் - சிறந்த பதவி [தானம்].திருமாமணிமண்டபமென்று ஸ்ரீவைகுண்டத்திற் பரமபதநாதன் எழுந்தருளியிருக்கிற மண்டபத்துக்குப் பெயர்; அழகிய பெரிய இரத்தினங்க ளிழைத்த மண்டபமென்று பொருள். நலன் - நலமென்பதன் போலி; இப்பண்புப்பெயர், நற்குணங்களுக்கு ஆகுபெயர். பரம்பொருள் - எல்லாத்தத்துவங்களினும் மேன்மையான பொருள். 'உபயகிரிப்புயம்' என்பதைக் கண்ணனொடுங் கூட்டலாம். கண்ணன் - கரியோ னென்னும் பொருளதாகிய க்ருஷ்ணனென்னும் வடசொல்லின் சிதைவு. உருவம் - வடசொற்றிரிபு. வியூகமும், உருவமும், அந்தரியாமியும் என்கிறவற்றில் உம்மைகள் - எச்சப்பொருளன. எல்லோரும் - முற்றும்மை. அந்தர்யாமி - உள்ளேஉறைபவன். வாட்கண் - ஒளியுடைய கண்ணுமாம்.

இது, நாற்சீர்களுங் காய்ச்சீர்களாய் வந்த எட்டடித்தரவு.

க.—நளி***என்னேயோ.—(இ - ள்.) நளி சடல் சூழ்-பெரியகடலாற் சூழப்பட்ட, சக மகட்கு - பூமிதேவிக்கு,நாயகன் - தலைவனாகிய, நீ—, மா வலிபால்-மகாபலிசக்கரவர்த்தியினிடத்தில்,எளியவர்போல்-வறியவர்போல, மூ அடி மண் - மூன்றடி நிலத்தை, இரந்த விதம் - யாசித்த தன்மை, என் னேயோ - எதனாலோ? (எ - று.)

உலகமுழுவதுக்குந் தலைவனை நீ மாவலிபக்கல் மூவடிமண் வேண் டியது, அவன்செருக்கையடக்கிச் சரணமடைந்ததேவர்களைக்காக்கவேண்டு மென்னுங் கருணையினாலேயேயென்பதாம்.மகாபலியென்னும் அசுரராஜன் தன்வல்லமையால் இந்திரன்முதலிய யாவரையும் ஜயித்து மூவுலகங்களை யுந் தன்வசப்படுத்தி அரசாண்டு செருக்குக்கொண்டிருந்தபொழுது அரசிழ ந்த தேவர்கள் திருமாலைச் சரணமடைந்து வேண்டவே, அவர் குள்ள வடிவ மான வாமநாவதாரமெடுத்துக் கசியபமுனிவர்க்கு அதிதியினிடந் தோன் றின பிராமணப்பிரமசாரியாகி,வேள்வியியற்றி யாவர்க்கும் வேண்டியதனை த்தையுங்கொடுத்துவந்த அப்பலியினிடஞ் சென்று, தவஞ்செய்தற்குத் தன் காலடியால் மூவடிமண்வேண்டி, அதுகொடுத்தற்கு இசைந்து அவன் தத்தஞ் செய்த நீரைக் கையிலேற்று, உடனே திரிவிக்கிரமனாக ஆகாயத்தைஅளாவி வளர்ந்து, ஓரடியால் மண்ணையும் ஓரடியால் விண்ணையும் அளந்து, மற்றோ ரடியால் அவனையும் பாதாளத்தில் அழுத்தி அடக்கினாரென்பது, வரலாறு. நளி-உரிச்சொல். சகம் - ஜகத். மாவலி-வடசொற்றிரிபு. ஏ,ஓ-ஈற்றசைகள்; ஐயமுமாம்.

உ.—நீளிய *** அதிசயமே.—(இ - ள்.) நீளிய வானவர் தலை - உயர்ந்த தேவர்களது தலைகள், மா நிலம் கவிய - பெரிய பூமியிலே தாழும் படி, வளர்ந்தருள் - (அத்தேவர்தலைகளுக்கு மேலாக) வளர்ந்தருளின, நின் தாள் இணை பூ - உனது உபயதிருவடி பாகிய செந்தாமரைமலர், உரக மலை தலை - திருவேங்கடமலையின் உச்சியிலே, பூத்தது-பொலிந்தது, அதிசயமே- வியப்பே; (எ - று.)

இது, அகங்கரிக்கின்ற தேவர்களுக்கு அரியனாயிருந்தும் அன்புடைய அடியார்களுக்கு எளியனாய்வந்துநின்ற திருவருளின் இயல்பை வெளியிட்ட வாறும். நீளிய - இறந்தகாலப்பெயரெச்சம்; இன்என்னும் இறந்தகால இடைநிலை, ஈறுதொக்கது. 'தலை மாநிலங்கவிய'என்றது - அவரவர் தத்தந் தலை எம்பெருமான்திருவடியிற்பொருந்துமாறு சாஷ்டாங்கநமஸ்காரஞ் செய்யவென்றதாம். உரகமலை-சேஷகிரி;பரமபதநாதனது ஆஜ்ஞையின்படி ஆதிசேஷனே மலையுருவானதனாலும்,மேருமலையின் அருகிலிருந்து ஆதிசே ஷனுடனே வாயுவினாற் கொணரப்பட்டதனாலும், இப்பெயர் வாய்த்தது. ஏ - தேற்றம். தாளைப் பூவென்றது,செம்மையும் மென்மையும் தண்மையும் அழகுங் கருதி.

௩.—அலகில் *** தாங்கியதே.—(இ - ள்.) அலகு இல் - அளவில் லாத, பகிர் அண்டம் எலாம் - வெளியிலுள்ள அண்டகோளங்க ளெல்லா வற்றையும், அகன்ற வயிறு அடக்கும் - பரந்த திருவயிற்றிலே (பிரளயகா லத்தில்) அடக்குகின்ற, உனை - உன்னை, இலகு வடம் சிறு தளிர் ஒன்று - விளங்குகின்ற சிறிய ஆலந்தளிரொன்று, எந்த விதம் - எவ்வாறு,தாங்கியது- தாங்கிற்றோ? (எ - று.)

அதுவும் உனது மாயையினாலே யென்றபடி. பகிரண்டம்,வடம் - வட சொற்கள். பிரளயசமுத்திரத்தில் திருமால் ஒரு சிறு குழந்தை வடிவமாய்ச் சிறியதோராலிலையின்மேல் உலகங்களையெல்லாந் தமது திருவயிற்றிலே அடக்கிவைத்துக்கொண்டு அறிதுயிலமருகின்றன ரென்பது, நூற்கொள் கை. அண்டம் - உலகவுருண்டை.

*ச.—கந்தம் * * * தருமே.*—(இ - ள்.) **கந்தம்** - வாசனையையுடைய, **பூ** - (உனது திருநாபித்)தாமரைமலரில் தோன்றிய, **அயனுர்க்கு** - (படைத்தற்றொழிற்கடவுளாகிய) பிரமதேவர்க்கு, **கனம் மறையை போதித்தாய்க்கு** - பெருமைபொருந்திய வேதங்களை உபதேசித்த உனக்கு, **அந்த சாந்தீவினி தான்** - அந்தச் சாந்தீபினிமுனிவர்தாம், **அரு கலை கூற** - (கிருஷ்ணுவதாரத்தில்) அருமையான சாஸ்திரங்களைப் போதிக்க, **தருமே** - தருமோ?

தகாதென்றபடி. ஏ - எதிர்மறை. நீ எடுத்த மநுஷ்யஅவதாரத்துக்கு ஏற்ப அவரிடங் கல்விகற்றனையேயன்றி வேறன்று என்றதாம். அயன் - அஜன்; திருமாலிடத்தினின்றுந் தோன்றியவ னென்று பொருள்: ஆர்விகுதி, உயர்வுபற்றியது. முன்னொருகாலத்திற் பிரமதேவன் கண்துயில்கையில் வேதங்களை அபகரித்துக்கொண்டு கடலில்மூழ்கி மறைந்துபோன சோமுகாசுரனைத் திருமால் மத்ஸ்யரூபமாகத் திருவவதரித்துக் கடலினுட்புகுந்து தேடிக் கண்டுபிடித்துக் கொன்று வேதங்களைக்கொணர்ந்து ஹம்ஸரூபியாய்ப் பிரமனுக்கு உபதேசித்தருளின ரென்பது, புராணவரலாறு. போதித்தாய் - முன்னிலையொருமைத் தெரிநிலை வினையாலணையும்பெயர். அந்த - சுட்டு, பிரசித்தியைக் காட்டிற்று; சுட்டுத்திரிபு. அந்தம் எனப் பிரித்து - அழகிய வென்றும், வேதாந்தத்தை அறிந்த வென்றும் உரைக்கலாம். கண்ணபிரான் பாலியத்திற் சாந்தீபினியென்னும் முனிவரிடத்துச் சகலவேத சாஸ்திரங்களையுங் குசேலர்முதலாயினரோடும் பலராமனுடனுங் கற்றன ரென்பது, ஸ்ரீபாகவதகதை. சாந்தீவினி - வடசொற்றிரிபு. கலா என்னும் வடமொழி, ஆவீறு ஐயாயிற்று; [நன் - பதவியல் - உ0.]

*ரு.—அனைத்து * * * அம்மா.*—(இ - ள்.) **அனைத்து உயிரும்** - எல்லாவுயிர்களையும், **மாயை எனும் அரு பாசத்து அசைத்து** - மாயையென்கிற (கழலுதற்கு) அரிய கயிற்றிலே கட்டி, **ஆட்டும்** - கூத்தாட்டுகின்ற, **உனை** - உன்னை, **கனி வாய் ஆய்ச்சி**-(கொவ்வைப்) பழம்போன்ற அதரத்தையுடைய யசோதைப்பிராட்டி, **எ ஆறு**-எப்படி, **உரலொடு கட்டினள்**-உரலுடனே பிடித்துக்கட்டினுள்? **அம்மா** - ஆச்சரியம். (எ - று.)

மாயையைப் பாசமென்றது, பந்தப்படுத்துதலால். எல்லாவுயிர்களும் கடவுளின்மாயைக்கு வசப்பட்டுப் பலவகைத்தொழில்களைச் செய்கின்றன வென்பது, முதலடிக்குக் கருத்து. ஆய்ச்சி - ஆயனென்பதன் பெண்பால். கண்ணன் குழந்தையாயிருக்குங்காலத்தில் துன்பப்படுத்துகின்ற பலவிளையாடல்களைச்செய்யக் கண்டு கோபித்த யசோதை கிருஷ்ணனைத் திருவயிற்றிற் கயிற்றினுல் அருமையாக வலியக்கட்டி ஒருரலிலே பிணித்துவிட்டாளென்பது, கதை. அங்ஙனங்கட்டும்பொழுது முதலில் வெகுநேரங் கட்டுப்படாதிருந்து பின்பு அவளதுமெய்வருத்தத்தைநோக்கிஇரங்கிக்கட்டுண்டானென்று அறிக; "அரிவையர்கள் மிகநகைக்க யசோதை நங்கை யாயர்மனைத் தாம்பெல்லா முடிந்தொன் றாக்கி,கரியவனைக் கட்டுதலும் போதாதாகிக் கைசலித்து மெய்வேர்வு சொரியக் கண்டு, வரையினமர் யோகிகட்கு மறைநா லுக்கும் வானவர்க்கும் வாசவற்கு மலரின் வந்த, பிரமனுக்கு மகப்படாப் பெரியோன் தாய்கைத் தாம்பினு லுலூகலத்திற் பிணிப்புண்டானுல்"என்பது காண்க. ஆய்ச்சி - நந்தகோபர்மனைவி, கண்ணனை வளர்த்த தாய். அம்மா - வியப்பிடைச்சொல். "பத்துடை யடியவர்க் கெளியவன் பிறர்களுக் கரிய, வித்தகன் மலர்மகள் விரும்புந மரும்பெற லடிகள், மத்துறு கடைவெண்ணெய் களவினி லுரவிடை யாப்புண்,டெத்திற முரலினே டிணைந்திருந் தேங்கிய வெளிவே" என்னுந் திருவாய்மொழிப்பாசுரத்தை இங்கே நோக்குக.

*சு.—மிகநம்பி * * * நன்றே.*—(இ - ள்.) **மிக நம்பி** - மிகவும் விசுவாசம்வைத்து, **யான் தொழும்** - நான் வணங்குகின்ற, **உன் மெல் அடியின்** -

உனது மென்மையான திருவடியினின்றும், பிறந்த - (திரிவிக்கிரமாவதாரத்தில்) உற்பத்தியான, கங்கை - கங்காநதியை, குகன் - குகப்பெருமாள், அம்பி விட - தோணியைச் செலுத்த,அதன்மேற்கொடு - அதன்மேல் ஏறிக்கொண்டு, கடந்தாய் - (ஸ்ரீராமாவதாரத்தில்) தாண்டினாய்; இது நன்று - இது நன்றாயிருந்தது! (எ - று.)—ஏ - வியப்பு.

இது, எம்பெருமானது சௌலப்பியத்தையும் அவதாரத்துக்கேற்ற அமைதியையுங் கூறி வியந்தவாறும். திருமால் உலகமளந்த காலத்தில் மேலே சத்தியலோகத்திற்சென்ற அவரது திருவடியைப் பிரமன் தன்கைக் கமண்டல தீர்த்தத்தாற் கழுவிவிளக்க, அந்த ஸ்ரீபாததீர்த்தமே கங்காநதியாகப் பெருகிய தென்று அறிக. அடியின், இன் - ஐந்தனுருபு, நீக்கப்பொருளது. குகன்-குஹன்; சிருங்கிபேரமென்னும் நகரத்துக்கு நாதனாகிய ஒரு வேடர்தலைவன்; இவன், இராமபிரான் மனைவியோடுந் தம்பியோடும் நகர்நீங்கி வனம்புகும்பொழுது இடையிற்கங்கையைக்கடத்தற்குத் தோணி செலுத்தி அவர்க்கு உயிர்த்தோழனாயினான். குகனென்னும் முருகக்கடவுளின்பெயர், அவனைப்போலப் பலபராக்கிரமங்களையுடையவனும் குறிஞ்சி நிலத்தலைவனுமாகிய வேடர்கோனுக்கு இட்டுவழங்கப்பட்டது. மேற்கொடு-மேற்கொண்டு என்பதன் விகாரம்.

இவை ஆறும், நாற்சீர்களுங் காய்ச்சீர்களாகிய ஈரடித்தாழிசைகள்.

க.—திகழ் * * * அடியினை.—(இ - ள்.) திகழ் - விளங்குகின்ற, பிறை - இளஞ்சந்திரன்போன்ற, எயிறு - பற்களை, உள - உடைய, சினம் முதிர் பணியது-கோபம் மிகுந்த (காளியனென்னும்) பாம்பினது,நகு மணி முடியினில் - பிரகாசிக்கின்ற மாணிக்கத்தையுடைய முடியின்மேல் (ஏறி), நடன் நவில் - நடனம்பயின்ற, அடியினை - திருவடிகளையுடையாய்;(எ-று.)

பிறை - எயிற்றிற்கு வெண்மையாலும், வளைவினாலும்,கூர்மையினாலும், ஒளியாலும் உவமை. உள - குறிப்புப்பெயரெச்சம். பணி - படங்களையுடையது; பணம் - படம். 'அது' - ஆறனுருபு. நடன் - ஈற்றுப்போலி. யமுனாநதியில் ஓர் மடுவில் இருந்துகொண்டு அம்மடுமுழுவதையுந் தன்விஷாக்நியினாற் கொதிப்படைந்த நீருள்ளதாய்ப் பானத்துக்கு யோக்கியமாகாதபடி செய்த காளியனென்னுந்துஷ்டநாகத்தைக் கிருஷ்ணன் தண்டிக்கவேண்டுமென்று திருவுள்ளம்பற்றி, அம்மடுவிற்குச் சமீபத்திலுள்ளதொரு கடம்பமரத்தின்மேலேறி அம்மடுவிற் குதித்து,கொடிய அந்நாகத்தின் படங்களின்மேல் ஏறித் துவைத்து நர்த்தனஞ்செய்து நசுக்கி வலியடக்கி, 'மாங்கலியபிக்ஷையிட்டருளவேண்டும்' என்று தம்மை வணங்கிப் பிரார்த்தித்த நாககன்னிகைகளின் விண்ணப்பத்தின்படி உயிரோடுகடலிற்சென்றுவாழுமாறு அந்தக்காளியனை விட்டருளினனென்பது, வரலாறு; "காளியன் பொய்கை கலங்கப் பாய்ந் திட்டவ, னீண்முடி யைந்திலு நின்று நடஞ்செய்து, மீள வவனுக் கருள்செய்த வித்தகன்" எனப் பெரியாழ்வாரும் பணித்தார். அடியினை - முன்னிலை யொருமைக் குறிப்பு முற்று.

உ.—இருள் * * * மதுகையை.—(இ - ள்.) இருள் முகில் - இருள் போலக் கரிய மேகங்கள், சொரிதலின் - மழைபெய்தலினால்,இனம் நிரை- பசுக்கூட்டங்கள், தளருதல் - தளர்ச்சியடைதலை,கருதுபு - திருவுள்ளத்திற்கொண்டு, வரை ஒரு கவிகை கொள் - (கோவர்த்தன) கிரியை ஒருகுடையாகக்கொண்டு பிடித்த, மதுகையை - வலிமையையுடையாய்; (எ - று.)

கிருஷ்ணவதாரத்தில் திருவாய்ப்பாடியில் ஆயர்களெல்லாருங் கூடித் தமது வழக்கத்தின்படி மழையின்பொருட்டாக இந்திரனை ஆராதித்தற்கென்று சமைத்த சோற்றை இந்திரன்செருக்கை அடக்கவேண்டுமென்று திருவுள்ளம்பற்றிய வாசுதேவன் அவனுக்கிடாதபடி விலக்கிக் கோவர்த்தனமலை

க்குஇடச்சொல்லித் தானேஒருதேவதாரூபமாய்அமுதுசெய்தருள, அவ்விந்
திரன் பசிக்கோபத்தாலே புஷ்கலாவர்த்தம் முதலிய மேகங்களை ஏவித்
தாம் விரும்பிமேய்த்துக்கொண்டுபோகிற கன்றுகளுக்கும் பசுக்களுக்கும்
தமக்குஇஷ்டரான ஆயர்க்கும் ஆய்ச்சியர்க்குந் தீங்குதரும்படி கல்மழையை
ஏழுநாள் விடாதுபெய்வித்தபொழுது, கண்ணபிரான் கோவர்த்தனகிரி
யைக் குடையாகப்பிடித்துக் காத்தகதையை உட்கொண்டு, இங்ஙனங் கூறி
னார். கருதுபு - எண்ணி; இறந்தகாலவினையெச்சம்: பு-விகுதி, காலங்காட்
டிற்று. வரை என்னுங் கணுவின்பெயர், அக்கணுக்களையுடைய மூங்கிலுக்கு
முதலிற் சினையாகுபெயராய், பின்பு அம்மூங்கில்விளையும் மலைக்குத் தானி
யாகுபெயராதலால், இருமடியாகுபெயர்.

௩.—ஒளி***பெருமையை.—(இ - ள்.) ஒளி உமிழ் - காந்தியை வீசு
கின்ற, மணி முடி உள - இரத்தினகிரீடத்தையுடைய, துருபதன் - துருபத
மகாராஜனது, மகள் - பெண்ணாகிய திரௌபதி, களி கொள - களிப்புக்
கொள்ளும்படி, அலகு இல கலை அருள் - (அவளுக்கு) அளவில்லாத சேலை
யைத் தந்தருளிய, பெருமையை - மகிமையையுடையாய்; (எ - று.)

துருபதன்-பாஞ்சாலதேசத்தரசனாகிய யாகசேனன். களி-முதனிலைத்
தொழிற்பெயர். துரியோதனன் தனதுமாமனான சகுனியைக்கொண்டு தரும
புத்திரனுடனே சூதாடுவித்து வென்று செல்வமெல்லாம்பறித்துக்கொண்டு
அவனையும் அவன்தம்பிமாரையும் அவர்கள்மனைவியான பாஞ்சாலியையும்
அடிமையாக்கி அவளைத் தீண்டக்கூடாதகாலத்தில் துச்சாசனனைக்கொண்டு
சபையிற் பலாத்காரமாகக்கொண்டுவந்து துகிலுரியச்செய்ய, அவள் ஸ்ரீகிரு
ஷ்ணாநுக்கிரகத்தால் மேன்மேல் ஆடைவளரப்பெற்றுத் தன்மானத்தைக்
காத்துக்கொண்டா ளென்பது வரலாறு.

௪.—சலசல *** கருணையை.—(இ - ள்.) மத சலம் - மதநீர், சல
சல என - சலசலவென்னும்ஒலி உண்டாம்படி, இழி-பெருகப்பெற்ற, மலை-
மலைபோன்ற யானையினது, இடர்-துன்பம், தொலைவுஉற-நீங்கும்படி, நொடி
வரை-நொடிப்பொழுதினுள்ளே, துணை வரு-துணையாகவந்த, கருணையை -
திருவருளுடையாய் ; (எ - று.)

சலசல - ஒலிக்குறிப்பு ; அநுகரணம் : இரட்டைக்கிளவி. 'மதசல மிழி
மலை' என யானையைக் கூறியது, ஒருவகைக்குறிப்பு. மலை - உவமையாகு
பெயர். நொடிவரை - ஒருமாத்திரைப்பொழுது; ஒருமகன் இயல்பாகக்
கையை ஒருகால்நொடித்தற்கு வேண்டும் பொழுது. பாண்டியநாட்டில் இந்
திரத்யும்நனென்று ஓரரசன் மிக்கவிஷ்ணுபக்தியுடையவனா யிருந்தான்;
அவன் ஒருநாள் விஷ்ணுபூசைசெய்கையில் அகஸ்தியமகாமுனிவர் அங்கு
எழுந்தருள, அவர்க்கு அவன் உபசாரஞ்செய்யாதிருக்க, அவர் கோபித்து
'நீ யானையாகக்கடவை' என்று சபித்தனர் ; அங்ஙனமே அவன் ஒருகாட்
டில் யானையாகத் தோன்றினனாயினும், முன்செய்த விஷ்ணுபக்தியின் மகி
மையால் அப்பொழுதும் விடாமல் நாள்தோறும் ஆயிரந்தாமரைமலர்களைக்
கொண்டு திருமாலை அருச்சித்துப் பூசைசெய்துவந்தான்; அங்ஙனஞ்செ
ய்யுநாட்களில் ஒருநாள், பெரியதொரு தாமரைத்தடாகத்தில் அருச்சனைக்
காகப் பூப்பறித்தற்குப் போயிறங்கினபொழுது, அங்கே (முன்பு நீர்நிலையில்
நின்றுதவஞ்செய்துகொண்டிருந்த தேவலரென்னும்முனிவரதுகாலைப்பற்றி
யிழுத்து அதனாற் கோபங்கொண்ட அவரது சாபத்தாற்) பெரிய முதலை
யாய்க் கிடந்த ஹூஹூ என்னுங் கந்தருவன் அவ்யானையின்காலைக் கவ்விக்
கொள்ள, அதைவிடுவித்துக்கொள்ளமுடியாமற் கஜேந்திரன் 'ஆதிமூலமே'
என்று கூவியழைக்க, உடனே திருமால் ஸ்ரீகருடவாகநாரூடராய் அங்கு
எழுந்தருளித் தம்திருவாழியாழ்வானைப்பிரயோகித்துமுதலையைத்துணித்து
அதன்வாயினின்றுங் கஜேந்திரனை விடுவித்து மோக்ஷமளித்துப் போக,

ஹூம்ஹூம்வும் சாபவிமோசனமாகித் தன்னுலகஞ்சேர்ந்தன னென்பது, இதிற் குறித்த கதை.

இவைநான்கும், நாற்சீருங் கருவிளச்சீர்களாகிய ஈரடிஅராகங்கள்.

இவற்றுள், பெரும்பாலுங் குற்றெழுத்துக்களே வந்தது - சொல்லணி.

க.—நல்***அடைத்தனையே —(இ - ள்.) நல் மீனம் உரு எடுத்த நான்றில் - (நீ) நல்ல மற்சியத்தின் வடிவத்தை யெடுத்துத் திருவவதாரஞ் செய்த காலத்தில், ஒரு செலு கிடந்த - (உனது திருமேனியிலுள்ள) ஒரு புறமுள்ளினிடத்தே அடங்கியிருந்த, பல் மீனம் தட கடலை - பலமீன்களையுடைய பெரிய சமுத்திரத்தை, பல கிரியால் அடைத்தனையே - (ஸ்ரீராமாவதாரத்தில் வாநரர்களைக்கொண்டு) பலமலைகளால் திருவணைகட்டிஅடைத்தாயே; (எ - று.)—இது, உனது ஒருதிருவிளையாட்டேயன்றி வேறன்று.

மீநம் - வடசொல். நான்று என்பது, போலியாய் 'ஞான்று' எனவும் வழங்கும். செலு-மீனின்புறமுள். இங்கே, அவ்வகைமுட்களின் இடையே சூழ்ந்துள்ள இடம். எம்பெருமான் எண்ணிடற்கரிய மிகப்பலயோஜனை நீளமும் அதற்கேற்ற பருமனும் வாய்ந்த பெருமீனனபோது அந்தமற்சியத்தின் ஒருசெலுவினகத்தே கடல்வெள்ளமுழுவதும் ஒடுங்கும்படி யிருந்ததென அதன்பெருமையைக் கொண்டாடியவாறு. சோமுகாசுரன் வேதங்களை அபகரித்துக்கொண்டு கடலில் ஒளித்துப்போக, தேவலோகத்தளவுஞ் சென்று கடல்வெள்ளம் பரந்தகாலத்தில், அவ்வெள்ளமுழுவதையுந் தனது ஒருசெலுவிலே அடக்கவல்ல மிடுக்கையுடைய பெரிய மத்ஸ்யமாய் வந்து திருவவதரித்து அசுரனைத் தேடிக் கொன்று வேதங்களைக் கொணர்ந்தருளினர் திருமா லென்பதாம். "அருமறையாரிருக்கெசுர்சாமத்திருேடு மதர்வணமாகிய சதுர்வேதங்கள் தம்மைத்,திருடியெடுத்துக்கொண்டேயுததிசேருந் தீயனுக்கா மச்சாவதாரமாய் நீ, ஒருசெலுவிற் சமுத்திரத்தைச் சுருக்கியே வைத் துக்கிரத்தாற் சோமுகாசுரனைக்கொன்றிட்,டிருளறவேவிதிபடைக்க வவ்வேகத்தை யிரங்கியளித்தனை யரியே யெம்பிரானே" என்றது காணத்தக்கது.

உ.—விண் * * * ஆடினையே.—(இ - ள்.) விண் அகம் சேர் அண்டர் உண - வானுலகத்திற் பொருந்திய தேவர்களெல்லாம் உண்ணும்படி, வேலை அமுது அருளிய - திருப்பாற்கடல்கடைந்தெடுத்த திவ்வியாமிருதத்தை (அவர்களுக்கு) க் கொடுத்தருளிய, நீ—, மண் அகம் சேர் அண்டர் திரு மனை - நிலவுலகத்திற்பொருந்திய இடையர்களது அழகிய வீடுகளில், வெண்ணெய்க்கு - வெண்ணெயைப்பெறும்பொருட்டு, ஆடினையே - நர்த்தனஞ்செய்தாயே; (எ - று.)—இது,என்ன திருவிளையாடல்? என்றபடி.

அண்டரென்னுஞ் சொல் தேவர்களையும் இடையர்களையுங் குறித்தலை, "அண்டரே பகைவர் வானோ ராயரென் றூகு முப்பேர்" என்பதனால் அறிக. உண - உண்ண வென்பதன் விகாரம். வெண்ணெய்க்கு - நான்கனுருபு, பொருட்டுப்பொருளது. வெண்ணெய் - உருக்காதநெய். அமுது-அம்ருதம்; சாவாமருந்து. இது-அமுதம்,அமிழ்தம்,அமிழ்து எனவுந் திரிந்து வழங்கும்.

ந.—துலங்கு * * * பெற்றனையே.—(இ - ள்.) துலங்கு இலை வாரிசத்தவனை - விளங்குகின்ற இலைகளையுடைய தாமரையின்மலரில் தோன்றிய பிரமனை, சுதன் ஆக படைத்தருள் - பிள்ளையாகப் பெற்றருளிய, நீ—, இலங்கு இலை வேல் தசரதன் சேய் என - விளங்குகின்ற இலைவடிவமான வேலாயுதத்தையுடைய தசரதனது குமாரனென்று, பெரு பேர் பெற்றனையே- பெரிய திருநாமத்தைப் பெற்றாயே; (எ - று.)—இது, என்னவிளையாட்டு?

துலங்கிலை - முதலுக்கு ஏற்ற அடைமொழி. வாரிசம் - வாரிஜம்; நீரிற்பிறப்பது என்று பொருள்:இது - காரணங்கருதியபொழுது அல்லி ஆம்

பல் குவளை நெய்தல் முதலிய நீர்ப்பூங்கொடிகள்பலவற்றிற்குஞ் செல்லுத லாலும், காரணங்கருதாதபொழுது இடுகுறியளவாய்த் தாமரைக்கே செல்லுதலாலும், காரணவிடுகுறிப்பெயர்; வடநூலார் யோகரூட மென்பர். இலை - அரசிலை,அல்லது வெற்றிலை. வேல் - வில் வாள் முதலிய மற்றைஆயுதங்களுக்கும் உபலக்ஷணம். செம்மையென்னும் பண்புப்பெயர், ஈறுபோய் ஆதிநீண்டு முன்நின்றமெய்திரிந்து 'சேய்' என நின்றது; இந்நிறத்தின் பெயர், அதனையுடைய முருகக்கடவுளுக்கு முதலிற் பண்பாகுபெயராய், பின்னர் அவனைப்போன்ற பலபராக்கிரமங்களையுடைய மைந்தனை 'குமாரன்' என்னும் வடமொழிபோல உவமையாகுபெயராற் குறித்தலால், இருமடியாகுபெயர். பெரும்பேர் - சக்கரவர்த்தித்திருமகன் என்பது.

ச.—உம்பர்*** நின்றனையே.—(இ - ள்.) உம்பர் முதல் யாவருக்கும் - தேவர் முதலிய எல்லார்க்கும், உயர் வாழ்வை பணித்தருள் - உயர்ந்தவாழ்க்கைகளைக் (கைம்மாறுகருதாமற்) கட்டளையிட்டருளுகின்ற, நீ—, இம்பர் தருங் காணிக்கை - இவ்வுலகத்தார் தருகின்ற காணிக்கைப்பொருள்களை, இச்சியாநின்றனையே-(பெற) விரும்புகின்றாய்; (எ - று.)—இதுஎன்னலீலை!

உம்பர் - மேலிடம், இம்பர் - இவ்விடம்; இவ்விடப்பெயர்கள், அங்குஉள்ளார்க்கு ஆகுபெயர். கலியுகத்தில் வேங்கடாசலத்திலே அடியார்களிடத்தினின்றும் பல்பொருள்களைக் கைம்மாறாக வலியவாங்கிக்கொண்டே அவரவரது அபீஷ்டங்களைப் பூர்த்திசெய்வதாக எம்பெருமானது சங்கல்ப மென்பதை, வராகபுராணத்தில் ஐம்பத்தெட்டாம் அத்தியாயத்தால் அறிக. இச்சியாநின்றனை, ஆநின்று - நிகழ்காலஇடைநிலை. இச்சியா நின்றனை என இருசொல்லாகப் பிரித்து, இச்சித்து நின்றா யெனவுமாம்.

ரு.—நினை***உவந்தனையே.—(இ - ள்.) நினை - (உன்னையே எப்பொழுதுந்) தியானிக்கின்ற, ஒரு சக்கிரி - ஒரு சக்கரவர்த்தி[தொண்டைமான்], உன் கால் - உனது திருவடிகளில், நிரைத்த - கூட்டமாகச் சமர்ப்பித்து அருச்சனைசெய்த,பொன்பூவிலும் - பொன்னினாற்செய்த மலர்களைக்காட்டிலும் (சிறந்ததாக), பாண்டம் வனை ஒரு சக்கிரி சாத்து மண் பூவை - பானைகளைச் செய்கின்ற ஒருகுயவன் [குரவைநம்பி] அருச்சித்த இடுகிற மண்ணினாலாகிய மலரை, உவந்தனையே - (திருவுள்ளம்) விரும்பினாயே;(எ - று.)—இது, என்ன பெருவிளையாட்டு!

நினை - வினைத்தொகை. நின்னை யென முன்னிலையாகப்பொருளுரைத்தல், பொருந்தாது. சக்கிரி-ஆஜ்ஞாசக்கரமுடையவன். பூவிலும் - ஐந்தாம் வேற்றுமை, எல்லைப்பொருள். வனையொருசக்கிரி யென்பதில், சக்கரம் - குடம்முதலியன வனைதற்குத் துணைக்கருவியாகிய திரிகை. சக்கிரியென்னுஞ் சொல் அரசனுங்குயவனுமாதலை,"சக்கிரி குயவன் செக்கான் தராபதி நெடுமால் பாம்பு" என்னும் நிகண்டினால் அறிக. தொண்டைமான்சக்கரவர்த்தி ஸ்ரீநிவாசனுடைய கட்டளைப்படி நாள்தோறும் அநேகசுவர்ணபுஷ்பங்களைக் கொண்டு அவருடையதிருவடிகளில் அருச்சித்துத் தன்னளவுபக்தன்வேறு யாருமில்லையென்று செருக்குக்கொண்டிருக்கையில், திருவேங்கடமலையின் வடக்கில் ஒருயோஜனைதூரத்தில் குரவையென்னுங் கிராமத்தி லுள்ள பீமனென்னுங்குயவன் தன்மனைவியாகிய தமாலினியென்பவளுடனே தான் ஒரு சுவரிலே மரத்தினால் ஸ்ரீநிவாசனைப் பிரதிஷ்டித்து மிகுந்த பக்தியுடன் அவருடைய திருவடிகளில் மண்மயமான புஷ்பத்தை யிட்டு அருச்சித்து வர, திருவேங்கடமுடையான் பொன்மலர்களை விலக்கி அம்மண் மலரை அவற்றின்மேலே ஏற்றுக்கொண்டு சக்கரவர்த்திக்குச் சேவைசாதித்ததனால், அரசன் செருக்கொழிந்து குயவனைத்தேடிச்சென்று சேர்ந்து அவனுடன் அளவளாவுகையில், அவன் மனைவியுடனே பரமபத மடைந்தா

னென்பது, இங்குக் குறித்த கதை; இவ்வரலாறு, வராகபுராணத்திலும் பவிஷ்யோத்தரபுராணத்திலுங் கூறப்பட்டுள்ளது. இவனுக்குக் குரவைநம்பி யென்று சம்பிரதாயத்திற் பெயர்; குறும்பறுத்தநம்பி யென்றுங் கூறுவர். இங்கே "மண்பூவையிட்டேனோ குரவைநம்பியைப்போலே" என்கிற திருக்கோளூரம்மாள் ரஹஸ்யவாக்யமும், "புஷ்ப, த்யாக, போக மண்டபங்களில் பணிப்பூவும் ஆலவட்டமும், வீணையுங் கையுமான அந்தரங்கரை முடிமன்னனும் வைதிகோத்தமரும், மகாமுனியும் அநுவர்த்தித்த க்ரமம்" என்கிற ஆசார்யஹ்ருதயவாக்கியமும் அறியத்தக்கனவாம்.

சு.—கைம்மானின் *** பாற்றே.—(இ - ள்.) கைம்மானின் - யானையினுடைய, உரி - தோலை, போர்த்த - மேலேசாத்திக்கொண்டுள்ள, கண்ணுதலும் - கண்ணை நெற்றியிலுடைய பரமசிவனும், அளக்க ஒண்ணு- வரையறையிட்டு அறியமுடியாத, பெம்மான்-பெருமையையுடையவனே!— நின் விளையாட்டு - உனது திருவிளையாடல், பேதையேன் சொலும் பாற்றே - அறியாமையையுடைய அடியேனாற் சொல்லத்தக்கதன்மை யுடையதோ? [அன்று என்றபடி]; (எ - று.)

கைம்மான் - துதிக்கையையுடைய விலங்கு; எனவே, யானையாயிற்று. உரி - உரிக்கப்படுவது என்னும் பொருளிற் செயப்படுபொருள்விகுதி புணர்ந்துகெட்ட பெயர்; கெடாக்கால் 'உரிவை' என நிற்கும். கைம்மானின் உரிபோர்த்த கதை:—அருந்தவ மியற்றிப் பெருவரம்பெற்ற கஜாசுரனென்பவன் தேவர் முனிவர் முதலியோரை இடைவிடாமல் வருத்தித்துரத்த, அஞ்சி ஓடின அவர்களது பிரார்த்தனையாற் பரமசிவன் தம்மை எதிர்த்துப் போர்செய்யவந்த அவ்வசுரனைக் காலாலுதைத்துத்தள்ளிக் கொன்று தோலைஉரித்துப் போர்த்தருளின தென்றாயினும்; தாருவனமுனிவர் ஏவிய யானையின் உட்சென்று உருத்திரமூர்த்தி உடல்பிளந்து அதன் உரியைப் போர்த்துக்கொண்ட தென்றாயினுங் கொள்க.

கண்ணுதல் - வேற்றுமைத்தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. உம்மை - உயர்வுசிறப்பு; அது, அவ்வுருத்திரனது முற்றுணர்தலாகிய ஸர்வஜ்ஞதையும், ஒப்புயர்வில்லாத பகவத்பக்தியுந் தோன்ற நின்றது. ஒண்ணு - ஒன்றாத என்பதன் விகாரம். பெம்மான் - பெருமான் என்பதன் மரூஉ. பெம்மான் - அண்மைவிளியாதலின், இயல்பாயிற்று. பாற்று - பான்மையென்னும் பண்புப்பெயரின் அடியாகிய பால் என்பதைப் பகுதியாகக்கொண்டு பிறந்த ஒன்றன்பாற்குறிப்புமுற்று. ஏ - எதிர்மறை. இதனால், எம்பெருமானது திருவிளையாடலின் சிறப்பு வாசாமகோசர மென்றவாறும்.

இவைஆறும், மறுபடியும்வந்த நாற்சீருங்காய்ச்சீராகிய ஈரடித்தாழிசை.

க.—கனகம் *** தன்மையை.—(இ - ள்.) கனகம் நிகத்து - பொன்மயமாகிய மேருமலையின்மீது, ஊர் - பொருந்திய, கம சூல் முகில் போல்- நிறைந்த சூலையுடைய காளமேகம்போல, வினதை மகன் மேல் வரு - விநதையினது குமாரராகிய கருடாழ்வானின்மீது ஏறிவருகின்ற, தன்மையை - தன்மையையுடையாய்; (எ - று.)

பெரிய திருவடிக்குப் பொன்மலை - ஒளியும் நிறமும் பருமையும் பற்றியும், எம்பெருமானுக்குக் காளமுகில் - நிறம்பற்றியும் உவமையெனக் காண்க; "கருமுகில் தாமரைக் காடு பூத்துநீ, டிருசுட ரிருபுறத் தேந்தி யேடவிழ், திருவொடும் பொலிய வோர் செம்பொற் குன்றின்மேல், வருவபோற் கலுழன்மேல் வந்து தோன்றினான்", "பொன்வரை யிழிவதோர் புயலின் பொற்புற,வென்னையா ளுடையவன் றோன்றினெம்பிரான்" என்றார் கம்பரும். ஊர்முகில் - வினைத்தொகை. கம என்னும் உரிச்சொல் நிறைவென்னும்பொருளை யுணர்த்துதலை, "கம நிறைந்தியலும்" என்னுந் தொல்காப்

பியச்சூத்திரத்தால் அறிக. கமஞ்சூல் - உரிச்சொற்புணர்ச்சியாதலின், வருமொழிமுதலில் வல்லெழுத்து மிகாமல் இனமெல்லெழுத்து மிக்கது; [நன்-மெய்-௩௬.] கமஞ்சூல்முகில் - நீர்கொண்டகாளமேக மென்றபடி. விநதை-கசியபப்பிரமாவினது மனைவிகளில் ஒருத்தி. இவளது திருமகனானதனால், கருடனுக்கு 'வைநதேயன்' என்று ஒருபெயர். மக - இளமை; பண்புப்பெயர்: ஆகுபெயராய்க் குமாரனை உணர்த்திற்று.

உ.—கருமா * * * துளவினை.—(இ - ள்.) கரு மா கடல் மேல் - கரிய பெரிய கடலின்மேலே, கலந்த சைவலத்தின் - பொருந்திய பாசிபோல, திரு மார்பினில் சேர் - அழகிய மார்பின்மேற் பொருந்திய, தேம் கமழ் துளவினை - வாசனைவீசுகின்ற திருத்துழாய்மாலையையுடையாய்; (எ - று.)

கருங்கடல் - கரிய திருமார்புக்கும், சைவலம் - பசிய திருத்துழாய்க்கும் உவமை. சைவலம்-வடசொல். துளவு-துளஸீஎன்னும் வடமொழியின் சிதைவு. திருத்துழாய்மாலை, திருமாலுக்கு உரியது.

இவைஇரண்டும் - பெரும்பாலும் மூன்றாஞ்சீர் விளச்சீரும், மற்றை மூன்றும் மாச்சீர்களுமாகிய நாற்சீர் ஈரடி அம்போதரங்கங்கள்.

க.—(இ - ள்.) இரு சுடர் இரு கை சுமந்தனை - (சூரியன் சந்திரன் என்னும்) இரண்டுசோதிகளையும் இரண்டுதிருக்கைகளிலுந்தரித்தருளினாய்.

என்றது - எம்பெருமானது வலத்திருக்கையிலுள்ள சுதரிசனமென்னுஞ்சக்கரம் சூரியனது ரூபமாதலாலும், இடத்திருக்கையிலுள்ள பாஞ்சசன்னியமென்னுஞ் சங்கம் சந்திரனது ரூபமாதலாலு மென்க.

உ.—(இ - ள்.) இணை நெடு மருது இடை சென்றனை - இரண்டு உயர்ந்த மருதமரங்களின் நடுவிலே தவழ்ந்துபோனாய்; (எ - று.)

என்பது-கண்ணன் தன்னை யசோதை கயிற்றினால் வயிற்றிற் பிணித்துவிட்ட உரலை இழுத்துக்கொண்டு அங்கிருந்ததோர் இரட்டைமருதமரத்தின் நடுவே எழுந்தருளியபொழுது, அவ்வுரல் குறுக்காய்நின்று இழுக்கப்பட்டபடியினாலே அம்மரங்களிரண்டும் முறிந்துவிழுந்தவளவில், நாரதர்சாபத்தால்மரங்களாய்க்கிடந்த நளகூபரன் மணிக்கிரீவன் என்னுங் குபேரபுத்திரரிருவரும் சாபந்தீர்ந்துசென்றன ரென்னுஞ் சரித்திரத்தை உட்கொண்டு.

௩.—(இ - ள்.) அரு மறை முடியில் அமர்ந்தனை - (அறிவதற்கு) அருமையான வேதங்களின் சிரசிலே பொருந்தியருளினாய்; (எ - று.)

என்றது - வேதத்தின் பிரிவு இரண்டனுள் பிரமகாண்டமென்றும் வேதாந்தமென்றும் பெயர்சொல்லப்படுகின்ற உபநிஷத்துக்களிற் பிரதிபாதிக்கப்படுபவ னென்றபடி. அரு - அளவிடுதற்கரிய வென்றுமாம்.

௪.—(இ - ள்.) அடியவர் அகம் மலர் நின்றனை - திருவடியையடைந்தொண்டர்களது இருதயகமலத்தில் வந்தெழுந்தருளிநின்றாய்; (எ - று.)

என்றது - அன்பால் நினைவாரது உள்ளக்கமலத்தில் அவர்நினைந்தவடிவோடு விரைந்துசென்று வீற்றிருத்தலால்.

இவைநான்கும் - முச்சீரும் விளச்சீராகிய ஓரடிஅம்போதரங்கங்கள்.

க.—(இ - ள்.) தரை இடந்தனை - பூமியைக் குத்தியெடுத்தாய்; (எ-று.)

என்றது - முன்னொருகாலத்திற் பூமியைப் பாயாகச்சுருட்டி எடுத்துக்கொண்டு கடலில்மூழ்கிப்போன இரணியாக்கனைத் திருமால் தேவர் முனிவர் முதலியோரது வேண்டுகோளின்படி வராகரூபமாகத்திருவவதரித்துக்கொன்று பூமியைக்கோட்டாற்குத்தி யெடுத்துக்கொண்டுவந்து விரித்தருளின வரலாற்றை உட்கொண்டு. தரை - தராஎன்னும்வடமொழியின்திரிபு; எல்லாப்பொருள்களையுந் தரிப்பது.

உ.—(இ - ள்.) திரை கிடந்தனை-கடலிலே பள்ளிகொண்டருளினாய்.

என்றது - திருப்பாற்கடலில் திருவனந்தாழ்வானின்மீது யோகநித்திரைசெய்தருளுந்தன்மையை: இனி,கடல்கள்தோறுங் கண்வளர்ந்தருளுமென்று ஒருபிரமாணசித்தி உண்டாகையாலே எழ்கடல்களிலும் அறிதுயிலமர்ந்தா யென்றுமாம்; பிரளயகாலத்துப் பெருங்கடலிற் படுத்தா யென்றலுமொன்று. திரை - அலை: கடலுக்குச் சினையாகுபெயர்.

ங.—(இ - ள்.) சகடு வென்றனை - வண்டியுருவமாய்வந்த அசுரனைச் சயித்தாய்; (எ - று.)

வண்டியின்கீழ்ப் பள்ளிகொண்டிருந்த குழந்தைப்பருவத்தினனாகிய ஸ்ரீகிருஷ்ணபகவான், ஒருகால் அச்சகடத்தில் கம்சனால்ஏவப்பட்ட அசுரனொருவன் வந்து ஆவேசித்துத் தன்மேலேவிழுந்து தன்னைக்கொல்லமுயன்றதை அறிந்து, பாலுக்குஅழுகிறபாவனையிலே தனது சிறியதிருவடிகளை மேலே தூக்கியருள, அவ்வடிகளால் உதைபட்டமாத்திரத்தில் அச்சகடு திருப்பப்பட்டுக் கீழேவிழுந்து அழிந்ததென்பது, கதை. சகடு - சகடம்என்னும் வடமொழியின் திரிபு.

ச.—(இ - ள்.)பகடு கொன்றனை - ஆண்யானையை வதைத்தருளினாய்.

என்றது - கம்சனால் தம்மைக்கொல்லும்படி ஏவப்பட்டு எதிர்த்துவந்து போர்செய்த குவலயாபீடமென்னும் மதயானையைக் கிருஷ்ணபலராமர்கள் கொம்புகளைப்பிடுங்கி அடித்துக் கொன்ற கதையை. பகடு என்பதற்கு - பசுவின்ஆண் என்றும் பொருள் உள்ளதாதலால், கண்ணன் நப்பின்னைப்பிராட்டியைத் திருமணஞ்செய்துகொள்வதற்காக அவளது தந்தையின் ஏற்பாட்டின்படி யாவர்க்கும்அடங்காத அசுராவிஷ்டமான ஏழெருதுகளையும் ஏழுதிருவுருக்கொண்டுசென்று வலியடக்கித் தழுவினனென்னும் வரலாற்றையுங் கொள்ளலாம். ஒருகால் ஸ்ரீகிருஷ்ணபகவான், அரிஷ்டனென்னும்அசுரன் எருதின்வேடம்பூண்டு பசுக்களையெல்லாம்முட்டி இடைச்சேரியைப்பயப்படுத்திக்கொண்டு தம்திருவயிற்றின்மேற்கண்வைத்துக் கொம்புகளைநீட்டிப் பாய்ந்துவர, அவனைக் கொம்புகளிற்பிடித்து அசையவொட்டாமற்செய்து தமதுகாலினால் அவன்வயிற்றில் ஓரிடிஇடித்து அவன்கழுத்தைப்பிடித்துக்கசக்கி அவனுடைய கொம்புகளில் ஒன்றைப்பிடுங்கி அதனாலே அவனை அடித்துக்கொன்று விழுத்தினனென்னுங் கதையையுங் கொள்வது உண்டு. பகடு இவ்விருபொருளை புணர்த்ததலை,"பெருமை யானை யெருதிவை பகடெனல்" என்னும் பிங்கலந்தையினாலும் அறிக.

ரு.—(இ - ள்.) அருள் சுரந்தனை - கருணை மிகஉண்டாகப் பெற்றாய்.

என்றது - ஒருசம்பந்தமுமில்லாமல் இயல்பாகவே எல்லாவுயிர்கள்பக்கலிலும் உண்டாகிய நிர்ஹேதுககிருபையை யுடையவனென்றபடி.

சு.—(இ - ள்.) மருள் துரந்தனை - அவித்தையை ஒழித்தாய்; (எ - று.)

என்றது-மாயைக்கு உட்படாதவனென்றபடி. அடியார்களது விபரீத ஞானத்தை ஒழித்தாய் என்றுமாம்.

எ.—(இ - ள்.) அலகு இகந்தனை - (திருக்கலியாணகுணங்களுக்கு) ஓர்அளவுகடந்துநின்றாய்; (எ - று.)

என்றது - அநந்தகல்யாணகுணகணபரிபூர்ணனென்றபடி.

அ.—(இ - ள்.) உலகு உகந்தனை - உலகமுழுவதையும் விரும்பினாய்.

என்றது - உலகங்களை உண்டு 'உமிழ்ந்து அளந்து ஆண்டதை. இனி, உலகத்திலுள்ள உயர்ந்தவர்களால் விரும்பப்பட்டுநின்றா யென்றுமாம்.

இவை எட்டும் - முதற்சீர் புளிமாச்சீரும், மற்றொருசீர் கூவிளச்சீருமாகிய இருசீர் ஓரடி அம்போதரங்கங்கள்.

எனவாங்கு - அசைநிலை. இது - தனிச்சொல்.

பதின்மர் * * * எனவே.—(இ - ள்.) பதின்மர் வழங்கும் - பத்துஆழ்வார்கள் அருளிச்செய்த, முதிர் - சுவைமிகுந்த, தமிழ் மறையும் - தமிழ் வேதங்களையும், கோது இலா கிளவி - குற்றமில்லாத சொற்களையுடைய, வேதம் ஓர் நான்கும் - ஒப்பற்ற நான்குவேதங்களையும், வினவு - கேட்டருளுகின்ற, திரு செவி - மேன்மையான காதுகளையுடைய, அனக - குற்றமற்றவனே!—புராதன - பழமையானவனே!—இரு விபூதிக்கும் ஒரு தனி முதல்வ-(த்ரிபாத்விபூதி லீலாவிபூதி என்னும்) இரண்டுவிபூதிகளுக்கும் ஒப்பற்றதொரு தலைவனுயுள்ளவனே!—ஒப்பு இலாத என் அப்ப - உவமைபெறாத எனதுசுவாமியே!—நிராமய - நோயற்றவனே!—மலி பெரு கருணை அலை எறி கடைக்கண் - நிறைந்த சிறந்த திருவருளின் அலைகளை வீசுகின்ற கடைக்கண்களையுடைய, அங்கணே அலர்மேல்மங்கை - அலர்மேல்மங்கையென்னுந் திருநாமமுடைய திருமகளுக்கு, மணாள - கணவனே!—'நித்தம்-நாள்தோறும், நின் - உன்னை, தொழ - சேவித்தற்கு, வரும் - வருகின்ற, பத்தர் - உனது அடியார்கள் [பாகவதர்கள்], தாள் சேர்த்தும் - கால்களை வைத்து ஏறுகின்ற, படி குலம் ஆக-படிகளின் வரிசையாகவாயினும், கிடக்க பெறுகிலேம் - இராமற் போய்விட்டோம்,' என - என்று, முனி கணமும் - முனிவரது கூட்டமும், மனன் நினைத்து-மனத்திலே எண்ணி, உருக-இரங்கும்படி, ஓங்கு சீர் கெழீஇய - உயர்ந்த புகழ் நிறைந்த, வேங்கடம் - திருவேங்கடமலைக்கு, நாயக - தலைவனே!—'வேண் அவாவோடு - வேட்கையாலுண்டாகிய அவாவுடனே, நின் காண வந்து ஈண்டும் - உன்னைத் தரிசிப்பதற்கு வந்து சேர்கின்ற, திரு கிளர் அமரர் - செல்வம்மிக்க தேவர்கள், நெருக்கு உறும் எல்லையில் - (ஒருவரோடொருவர்) நெருங்குதல்படுஞ்சமயத்தில், பொன் திகழ் அவிர் முடி - பொன்மயமாக மிகவிளங்குகிற (அவர்களது) கிரீடங்கள், ஒன்றொடு ஒன்று உரிஞ்சலின்-ஒன்றோடொன்றுஉராய்தலினால், கனகம் நுண் துகள் உதிர்-(அவற்றினின்று) பொன்னின்சிறுபொடிகள் சிந்தப்பெற்ற, நினது சன்னிதியில் - உனது சந்நிதானத்திலே, திரளை விலக்குநர் கர தல வேத்திரம் அடி உண்டு ஒதுங்கி கிடப்பம் - கூட்டத்தை விலக்குகின்ற அடியார்களது கைகளினிடத்திலுள்ள பிரம்பின் அடியைப்பட்டு ஒருபுறத்தே ஒடுங்கியிருப்போம்,' என - என்றுஎண்ணி, வந்து-(உன்சன்னிதிக்கு) வந்து, வணங்குபு - (உன்னைச் சாஷ்டாங்கமாக) நமஸ்கரித்து, தொழுது - (கைகூப்பி) அஞ்சலிசெய்து,—'சேடபூதனும் ஆய் - (யான் உனக்கு) அடிமையானவனுமாய், சந்ததம் மிகு பரதந்திரன் ஆகி - எப்பொழுதுந் தலையெடுத்த பாரதந்திரியத்தை யுடையவனுமாய், உன கைங்கரியம் - உனது திருத்தொண்டை, உகப்பால்-மகிழ்ச்சியால், அநுதினம் - நாள்தோறும், செய - செய்யும்படி, (என்னை), பீடு உள உளத்தே வைத்து - பெருமைபொருந்திய (உனது) திருவுள்ளத்திலே வைத்து, மதி அருள் - (எனக்கு) நல்ல புத்தியைக் கொடுத்தருளுவாயாக,' என - என்று சொல்லிப்பிரார்த்தித்து, உன் குணம் சில துதிப்பல் - உனது குணங்கள் சிலவற்றைத் துதிப்பேன், (யான்) ; (எ - று.)

பதின்மர்-கீழ் இரண்டாங்காப்புக்கவியிற் கூறிய ஆழ்வார் பன்னிருவருள் தொண்டரடிப்பொடியும் மதுரகவியும் தவிர்ந்த மற்றையவர்;இவ்விருவரும் திருவேங்கடமுடையானைப் பாடிற்றில ராதலின். இனி, மதுரகவியும் கோதையுந் தவிர்ந்த மற்றையவ ரெனக் கொள்ளுதலும் ஒன்று. பதின்மர்-தொகைக்குறிப்பு; இப்பலர்பாற்பெயரில், பத்து - பகுதி, ஈறுகெட்டது : இன் - சாரியை, ம் - பெயரிடைநிலை, அர் - விகுதி. தமிழ்மறை என்றது - அவர்கள் பாடிய திருவாய்மொழி முதலிய திவ்வியப் பிரபந்தங்களை. கிளவி - தொழிலாகுபெயர் ; சொல்லப்படுவது : கிள - பகுதி, வி - விகுதி:

தி - செயப்படுபொருள்விகுதி யெனினும் இழுக்காது. அநகன் என்றது - தான் இயல்பாகவே எக்குற்றங்களும் இல்லாதவனென்னும் பொருளோடு, தனக்குச்சரீரமாகவுள்ள சராசரங்களின் குற்றம் தன்னிடத்தே தட்டாதவனென்னுங் கருத்தையும் உடையது; ந அகம் எனப் பிரிக்க. புராதநன்-அநாதியானவனென்றபடி. விபூதி-ஐசுவரியம். இருவிபூதி - வீட்டுலகச்செல்வமும், இம்மைச்செல்வமுமாம்; மறுமையும், இங்கே இம்மையில் அடங்கும். உம்மை - இனைத்தென்றறிபொருளில் வந்த முற்றும்மை. 'ஒப்பிலாத' எனவே, 'உயர்வில்லாத' என்பது தானே பெறப்படும். அப்பனென்று தென்மொழியிலும், ஸ்வாமி யென்று வடமொழியிலுந் திருவேங்கடமுடையானுக்குச் சிறப்புப்பெயர். திருவாய்மொழியில் "தன்னொப்பா ரில்லப்பன்" என்றதைத் தழுவி 'ஒப்பிலாத என்னப்ப' என்றார். நிராமயனென்றது - இளமை முதுமைகளும், பிணி பசி மூப்புத் துன்பங்களும் இல்லாதவனென்றபடி.

'கருணையலையெறி கடைக்கண்' என்றது - கண்ணின்பார்வை சென்றவிடத்தே அருள் நிகழ்வதாதலின். கடைக்கண் - கடாக்ஷம்; கண்ணின் கடை: முன்பின்னாகத்தொக்குவந்த ஆறாம்வேற்றுமைத்தொகை; இலக்கணப்போலி யென்றுமாம். அங்கனை - அங்கநா என்னும் வடமொழியின் திரிபு; இதற்கு - பெண்ணென்று பொருள்: பெண்ணிற்சிறந்தவளென்று கருத்து; நல்ல அங்கங்களை யுடையவளென்றும், தனது அங்கங்களால் கொழுநனை மகிழ்விப்பவளென்றும் அவயவப்பொருள். அலர்மேன்மங்கை-திருமலையிற்பிராட்டியினது திருநாமம்; "அகலகில்லே னிறையு மென்றலர்மேன்மங்கையுறை மார்பா, * * * நிகரி லமரர் முனிக்கணங்கள் விரும்புந் திருவேங்கடத்தானே" என்பது காண்க: தாமரைமலரின்மேல் வாழ்கின்ற மகளென்று பொருள். மணாளன்-மணவாளனென்பதன் மரூஉ; கலியாணஞ்செய்தவனென்று பொருள்.

நித்தம் - நித்யம் என்னும் வடமொழியின் திரிபு. நிற்றொழு, நிற்காண என்றவிடங்களில், இரண்டாம்வேற்றுமைத்தொகையாதலால், நின் என்பதன் ஈறு இயல்பாகவில்லை. பத்தர் - பக்தர். சேர்த்தும், சேர் என்பதன் பிறவினையாகிய சேர்த்து - பகுதி. 'படிக்குலமாகக் கிடக்கப்பெறுகிலேம்' என நினைத்து உருகுவது, படியாய்க்கிடந்து பாகவதர்களது பாததூளி பரிசிக்கப்பெற்றால் புனிதராய்ப் பிறப்பறுவோமென்னுங் கருத்தால்; "வெறியார் தண்சோலைத் திருவேங்கடமலைமேல்,நெறியாய்க் கிடக்கு நிலையுடையேனாவேனே", "நெடியானே வேங்கடவா நின்கோயி லின்வாசல், அடியாரும் வானவரு மரம்பையருங் கிடந்தியங்கும், படியாய்க் கிடந்துன் பவளவாய் காண்பேனே" எனக் குலசேகராழ்வார் கூறியிருத்தல் காண்க. முனிக்கணமும், உம்மை - உயர்வுசிறப்பு. சீர்-மிக்ககீர்த்தி. கெழீஇய-கெழுவிய அல்லது கெழுமிய என்பதன் விகாரம்; சொல்லிசையளபெடை.

வேட்கையாவது - பொருள்களின்மேல் தோன்றும் பற்றுள்ளம். அவாவாவது-அப்பொருள்களைப்பெறவேண்டுமென்று மேன்மேல்நிகழும் ஆசை. வேட்கை + அவா = வேணவா; மூன்றாம்வேற்றுமைஉருபும்பயனுமுடன்தொக்க தொகை: இப்புணர்ச்சி, "செய்யுண் மருங்கின் வேட்கை யென்னும், ஐயெ னிறுதி அவாமுன் வரினே, மெய்யொடுங் கெடுதலென்மனார் புலவர், டகார ணகார மாதல் வேண்டும்" என்னுந் தொல்காப்பியச்சூத்திரவிதியால் முடிந்தது; இச்சந்தியை மரூஉமொழியில் அடக்குவர், பிறநூலார். நெருக்கு - முதனிலைதிரிந்ததொழிற்பெயர். திகழ்அவிர்-ஒருபொருட்பன்மொழி. உரிஞ்சல், உரிஞ்சு - பகுதி. சந்நிதி-முன்னிடம். திரளை விலக்குநர்-கோஷ்டியை ஒதுக்கிஒழுங்குபடுத்துபவர். விலக்குநர்,ந்-பெயரிடைநிலை. கிடப்பம்-தனித்தன்மைப்பன்மைமுற்று; அம்-விகுதி. 'குணம்சிலதுதிப்ப' என்றது,

பலகுணங்களையுந் துதித்தல் முடியாதென்னுங் கருத்தால். துதிப்பல்,அல்-தன்மைவினைமுற்றுவிகுதி. உளம் - மனம். சேடன் - சேஷன்; அடியன். பரதந்திரன் - தன்வசமல்லாமல் வேறொருவர்க்கு வசப்பட்டவன். உன, அ-ஆறனுருபு. கிங்கரன் - ஏவல்செய்பவன்; அவனது தொழில், கைங்கரியம். உகப்பு - தொழிற்பெயர். அருள், மதி - முன்னிலையசையுமாம்.

இது - ஈற்றயலடியொன்றொழிய மற்றையடிகளெல்லாம் நாற்சீரும், ஈற்றயலடி முச்சீருமாய்ப் பெரும்பாலும் ஈரசைச்சீர்களால் வந்த இருபத்தீரடி நேரிசையாசிரியச்சுரிதகம்.

இப்பாட்டு - தரவும் தாழிசையும் அராகமும் மீண்டுந் தாழிசையும் அம்போதரங்கங்களும் தனிச்சொல்லும் சுரிதகமும் பெற்றுவந்த மயங்கிசைக்கொச்சகக்கலிப்பா. (க)

உ. வேங்கடவா சத்திருமான் மேற்பத்தி யுள்ளசனர்
தாங்கடவா நிற்பர்பவ சாகரத்தைத்—தீங்கடவா
சித்தமே கண்ணன்பாற் சிந்துமதித் தோனவனை
நித்தமே கண்ணன்பா னீ.

(இ - ள்.) வேங்கடம் வாசம் திருமால் மேல் - திருவேங்கடமலையில் வாசஞ்செய்கின்ற ஸ்ரீமகாலட்சுமியினது கணவனாகிய ஸ்ரீமகாவிஷ்ணுவினிடத்தில், பத்தி உள்ள - பக்தியை யுடைய, சனர் - ஜனங்கள், பவம் சாகரத்தை - பிறப்புத் துன்பங்களாகிய கடலை, தாம் கடவா நிற்பர் - தாம் தாண்டி முத்தியாகிய அக்கரையைப் பெறுவர்; (ஆதலால்),—சித்தமே - மனமே! கண்ணன்பால் - கிருஷ்ணாவதாரஞ்செய்த அப்பகவானிடத்தில், தீங்கு அட வா-(உனது) தீமைகள் நீங்கும்பொருட்டு வருவாயாக;நீ—,சிந்து மதித்தோன் அவனை - பாற்கடல்கடைந்தருளினவனாகிய அக்கடவுளை, நித்தமே - நாள்தோறுமே [எப்பொழுது மென்றபடி],அன்பால் - பக்தியினால், கண் - தியானிப்பாயாக; (எ - று.)—இது, நெஞ்சிற்கு அறிவுறுத்தியது.

திருமால் - ஸ்ரீயஃபதி; ஸ்ரீநிவாஸன். எவ்வளவு கடைப்பட்டவராயினும் பகவத்பக்தியுள்ளவர் கடைத்தேறிவிடுவர் என்பது தோன்ற, 'சனர்' என்று பன்மையாற் கூறினார். கடவாநிற்பர் - கடந்துநிற்பரென்றபடி. பிறவித்துன்பங்களாவன - தன்னைப் பற்றி வருவனவும், பிறவுயிர்களைப்பற்றி வருவனவும், தெய்வத்தைப்பற்றி வருவனவும் என்று மூவகையால் வருந் துன்பங்கள்; இவை, முறையே ஆத்தியாத்துமிகம், ஆதிபௌதிகம், ஆதிதைவிகம்என்னுந் தாபத்திரய மெனப்படும்: ஆத்தியாத்துமிகமாவன - சரீரத்தைப் பற்றி வருகிற தலைநோய் முதலியனவும், மனத்தைப்பற்றிய காமம் கோபம் முதலியனவுமாம்; ஆதிபௌதிகமாவன - மனிதர், விலங்கு, பிசாசு முதலியவற்றால் நேர்பவை; ஆதிதைவிகமாவன-காற்று, மழை, இடி, வெயில் முதலியவற்றால் நேர்பவை. இச்செய்யுளின் முதலிரண்டடியை "பிறவிப் பெருங்கட னீந்துவர் நீந்தார், இறைவ னடி சேராதார்" என்னுந் திருக்குறளோடு ஒப்பிடுக. சாகரம்-சகரசக்கரவர்த்தியினது புத்திரர்களால் தோண்டப்பட்டதெனக் கடலுக்குக் காரணக்குறி. காரணகாரியத்தொடர்ச்சியாய்க் கரையில்லாமல் வருதலால், பிறவித்துன்பங்களை'கடல்' என்றார்.

கண்ணன் - கரியோன் என்னும் பொருளதாகிய க்ருஷ்ண னென்னும் வடமொழியின் சிதைவு. பால் - ஏழனுருபு. வா, கண் - ஏவலொருமை முற்றுக்கள். அமரர்களும் அசுரர்களும் தனது நியமனத்தின்படி மந்தர பருவதத்தை மத்தாகவும் வாசுகியென்னும்பாம்பைக் கடைகயிறாகவுங் கொண்டு திருப்பாற்கடலைக் கடையும்போது எம்பெருமான் தேவர்களை வாசுகியின்வாலைப்பிடிக்கும்படியாகவும் அசுரர்களை அதன்தலையைப் பிடிக்கும்படியாகவும் நியமித்துத் தானும் ஒருதிருமேனியைத்தரித்துத் தேவர்கள்பக்கத்

திலேயும்,வேறொருதிருமேனியைத்தரித்து அசுரர்கள்பக்கத்திலேயும் நின்று வாசுகியினுடைய வாலையுந் தலையையும் பிடித்து வலமும் இடமுமாக இழுத்துக்கடைந்தருளியதனால், 'சிந்து மதித்தோன்' என்றார். கடலைக் கடையத் தொடங்கியது, தூர்வாசமகாமுனிவனது சாபத்தாற் கடலில் மூழ்கி மறைந்துபோன கல்பகவிருட்சம், காமதேநு, சிந்தாமணி முதலிய இந்திரனது ஐசுவரியங்களையும்,அமிருதத்தையும் தேவர்பெறும்பொருட்டென அறிக.

இது, நாளென்னும்வாய்பாட்டால்முடிந்த இருவிகற்பநேரிசைவெண்பா.

௯. நீயேகத்தாவென்றறியாதுபாவியர்நிந்தைசொல்லி
வாயேகத்தாநிற்பரென்சொல்லுகேனவர்வல்வினையாம்
பேயேகத்தாமுய்யுங்காலமுண்டோகைப்பிடித்தகுறள்
வேயேகத்தாய்வடவேங்கடமேவியமெய்ப்பொருளே.

(இ - ள்.) கை பிடித்த குறள் வேய்ஏகத்தாய்-திருக்கையில்தரித்தசிறிய மூங்கிலொன்றையுடையவனே! வட வேங்கடம் மேவிய மெய் பொருளே-வடக்குத்திக்கி லுள்ள திருவேங்கடமலையில் எழுந்தருளிய உண்மையான பொருளாக உள்ளவனே!—நீயே கத்தா என்று அறியாது - நீயே பிரபஞ்ச முழுவதற்குஞ் செய்பவனென்று அறியாமல், பாவியர் - தீவினையையுடையவர்கள், நிந்தை சொல்லி - பழிப்போடு கூடிய வார்த்தைகளைச் சொல்லி, வாயே கத்தாநிற்பர் - வாயினாற் பிதற்றுவார்கள்:என் சொல்லுகேன்-(அவர்களுக்கு அதனால் வருந் தீங்கை) எவ்வாறு சொல்வேன்? (என்னவெனில்), அவர் - அவர்கள், வல் வினை ஆம் பேய் ஏக - (தங்களது) வலிய கருமமாகிய பேய் நீங்க,தாம் உய்யும் காலம்-தாங்கள் நன்மைபெறுங்காலம், உண்டோ-உள்ளதோ? [இல்லை யென்றபடி]; (எ - று.)

'குறள்வே யேகம்' என்றது, கிருஷ்ணாவதாரத்தில் பசுக்களை மேய்க்கும்பொருட்டு எடுத்த சிறிய தொரு கோலை; வேய்ங்குழலை யாகவுமாம்: அருச்சுனனுக்குச் சாரத்தியஞ் செய்யும்பொழுது எடுத்த உளவுகோலை யெனினுமாம். வேங்கடம் எவ்விடத்தி லுள்ளதென்றால், வடக்கிலுள்ளதென வேண்டுதலின், அதனை 'வடவேங்கடம்' என விளங்கக் கூறினார்; அல்லது, தமிழ்நாட்டுக்கு வடவெல்லையா யிருத்தல்பற்றி யாகவுமாம். மெய்ப் பொருள் - சத்தியமானதத்துவ மென்றபடி. வினையைப் பேய் என்றது, தான் கெட்டிருத்தலோடு சேர்ந்த இடத்தையுங் கெடுத்தலால். நீயே, ஏகாரம் - பிரிநிலை. கத்தா - கர்த்தா; செய்பவன். பாவி - பாபீ என்னும் வடமொழியின் திரிபு. வாயே. ஏ - அசை. ஊழ்வினைக்கு வலிமையாவது - தன்னைச் செய்தவர்களைப் பயனை அனுபவிப்பித்தே விடுதல்.

இது - நேரசை முதலான கட்டளைக்கலித்துறை. (௯)

௧0. பொருளடுத்தமுதிர்தீஞ்சொற்பூந்தமிழாற்சிறியேனிப்புவியிற்போக, மருளடுத்தமாந்தர்தமைப்பாடாதுன்புகழ்பாடவரந்தந்தாள்வா, யருளடுத்தகடைக்கண்ணுவம்புயப்பெண்ணடுத்துறையுமகன்றமார்பா, விருளடுத்தமலர்ச்சோலையினமடுத்தவடமலைவாழெம்பிரானே.

(இ - ள்.) அருள் அடுத்த கடை கண்ணு - கருணை பொருந்திய கண்ணின் கடைசியையுடையவனே! அம்புயம் பெண் அடுத்து உறையும் அகன்ற மார்பா - செந்தாமரைமலரில் வீற்றிருக்கின்ற திருமகள் சேர்ந்து வசிக்கின்ற பரந்த மார்பை யுடையவனே! இருள் அடுத்த மலர் சோலை இனம் அடுத்த வடமலை வாழ் எம்பிரானே - (அடர்த்தியினால்) இருள்பொருந்திய பூக்களையுடைய சோலைகளின் கூட்டம் பொருந்தியுள்ள வடவேங்கடமலையில் வாழ்கின்ற எமது சுவாமியே!— சிறியேன் - (அறிவு ஒழுக்

கங்களிற்) சிறுமையையுடைய யான், பொருள் அடுத்த தீம் முதிர் சொல் பூ தமிழால் - நல்லஅருத்தம் பொருந்திய இனிமைமிக்க சொற்களையுடைய அழகிய தமிழினால், இ புவியில் போகம் மருள் அடுத்த மாந்தர்தமை பாடாது-இந்நிலவுலகத்தில் சிற்றின்ப அனுபவங்களி லுண்டாகின்ற ஆசை யாகிய மயக்கம் பொருந்திய மனிதர்களைப் பாடல்பாடித் துதியாமல், உன் புகழ் பாட - உனது கீர்த்தியைப் பாடும்படி, வரம் தந்து - (எனக்கு) வரத் தைக் கொடுத்து, ஆள்வாய் - (என்னைக்) காப்பாயாக ; (எ - று.)

வரம் - வேண்டுவென கொள்ளுதல். ஆளுதல் - அடிமை கொள்ளல். அம்புயம் - அம்புஜம்; நீரிற் பிறப்பது. இருளடுத்த சோலை எனக; கருநிறத் தால் இருளை யொத்த சோலை என்றுமாம். பிரான் - ப்ரபு அல்லது விராட் என்னும் வடமொழியின் சிதை வென்பர் மாந்தர் - ஒருமையில்சொல்.

இது - ஈற்றுச்சீரிரண்டும் மாச்சீரும், மற்றை நான்கும் காய்ச்சீர்களு மாகிய அறுசீராசிரியவிருத்தம். (௪)

[இரங்கல்.]

௫. எம்பிரான்மழைதோயஞ்சனசலம்வாழிந்திராதியர்விண்ணோர்
தம்பிரானெனையாள்கின்றிலானணிதார்தந்திலானிதுவென்னே
கம்புளேமணிகாலம்புளேயிரைதேர்கம்புளேகணிதுன்னு
வம்புளேயடல்கூர்சிம்புளேநிகர்வேளம்புளேபடுமுன்னே.

(இ - ள்.) கம்பு - சங்கங்கள், உளே-உள்ளிடத்திலே, மணி கால் - முத் துக்களை வெளியிடப்பெற்ற, அம்பு உளே - நீரினிடத்தே, இரை தேர் - (மீனுகிய) இரையைத் தேடுகின்ற, கம்புளே - நீர்ப்பறவையே! கணி துன்னு அம் புளே - வேங்கைமரத்திற் சேராத அழகிய (வண்டாகிய) பறவையே!— அடல் கூர் சிம்புளே நிகர் வேள் அம்பு உளே படும் முன்னே - வலிமைமிகு ந்த சரபத்தையேபோன்ற மன்மதனது பாணம்(எனது)உடம்பினுள்ளே தை த்தற்கு முன்னமே, எம் பிரான்-எமக்குத் தலைவரும், மழை தோய் அஞ்சனு அசலம் வாழ் - (உயர்ச்சியினால்) மேகமண்டலத்தை அளாவிய அஞ்சநா சலமென்னும் ஒருபெயரை யுடைய திருவேங்கடமலையில் வாழ்கின்ற, இந் திர ஆதியர் விண்ணோர்தம் பிரான் - இந்திரன் முதலியவராகிய தேவர் களுக்குத் தலைவரு மாகிய திருமால், எனை ஆள்கின்றிலான்-என்னை வந்து அணைந்துகாத்தருளுகின்றாரில்லை; அணி தார் தந்திலான் - அழகிய தமது பூமாலையையாயினும் கொடுத்தனுப்பியருளுகின்றாரு மில்லை; இது என்னே - இது என்னமுறைமை? (எ - று.)

"இரங்கல் நறுநெய்தல்"என்றபடி இரங்குதல் நெய்தல்திணைக்கு உரிய தாதலால், இக்கவி - அங்ஙனம்நெய்தனிலத்தில் தலைவனைப் பிரிந்து தனியே யிருந்த தலைமகள் அவ்விடத்திலுள்ளபொருள்களை நோக்கி இரங்கிக்கூறியது.

"ஞாயிறு திங்க ளறிவே நாணே,கடலே கானல் விலங்கே மரனே,புலம் புறுபொழுதே புள்ளே நெஞ்சே, யவையல பிறவு நுவலிய நெறியாற், சொல்லுந போலவுங் கேட்குந போலவுஞ், சொல்லியாங் கமையு மென்ம னார் புலவர்"என்னுஞ் சூத்திர விதியால், அஃறிணைப் பொருள்கள் கேட்பன போலச் சொல்லப்படும்; [நன் - பொதுவியல் - ருச.] கம்புள் - நீர்வாழ் பறவை; சம்பங்கோழி: கம் - நீர். கம்பு - வடசொல்; சங்கு: இது, முத்துப் பிறக்கு மிடங்கள் இருபதில் ஒன்று. மணி-முத்தாதலை "வனப்பு நவமணியு மௌத்திகமு நீலமுங், கருநிறமு நன்மையுங்கண்டையு மணியே" என்னும நிகண்டினால் அறிக. "சண்பகமும் வேங்கையும் வண்டுணு மலர்மரம்"ஆத லால், வண்டு 'கணி துன்னு அம்புள்' எனப்பட்டது. சிம்புள் - எண்காற் பறவை; இதனை, மிருக மென்பாரு முளர்: இது, சிங்கத்தைக் கொல்லவல்

லது. சரபம், சிங்கம், புலி, யானை, ருஷபம் இவை, சிறந்த வீரனுக்கு உவமை கூறப்படும். அணி தார் - அணியும் மாலையுமாம்.கேசரி யென்னும் அரக்கனது குமாரியும் கேசரி யென்னும் வாநரசிரேஷ்டனது மனைவியுமாகிய அஞ்சனாதேவி இம்மலையை அடைந்து பலகாலம் தவம்புரிந்து ஹநுமானாகிய புத்திரனைப் பெற்றதனால் இது அஞ்சநாத்திரியெனப் பேர்பெற்றதென்று வாராகபுராணத்திலும், பிரமாண்ட புராணத்திலும், பவிஷ்யோத்தரபுராணத்திலும், ஸ்காந்தபுராணத்தினுள்ளும் கூறப்பட்டவாறு அறிக. அசலம்-மலை; சலித்த லில்லாதது. அசலம் வாழ் தம்பிரா னென்ன இயையும்.

இது - இரண்டு நான்காஞ்சீர்கள் புளிமாச்சீர்களும், ஒன்று மூன்று ஐந்தாஞ் சீர்கள் கூவிளச்சீர்களும், ஈற்றது புளிமாங்காய்ச்சீரு மாகிய அறுசீராசிரியவிருத்தம். (ரு)

கூ. முன்னஞ்சினவிமலைந்தாங்குமுனைவாளியினாற்கனைகடலை
யின்னம்பொருவனெனிலிங்ஙனிருந்திக்கோதைவருந்துவளோ
தன்னந்தனிதானறிதுயில்கூர்சயனத்தலமாய்நயனளிக்கும்
வன்னந்திகழ்தண்டளிர்க்கடவுள்வடத்தான்வடவேங்கடத்தானே.

(இ - ள்.) தன்னந்தனி - வேறொரு துணையு மில்லாமல் மிகவுந் தனியாய், தான் அறி துயில் கூர் - தான் யோகநித்திரையைச் செய்தற்குஉரிய, சயனத்தலம் ஆய் - படுக்கையிடமாய், நயன் அளிக்கும்-இன்பத்தைத் தருகின்ற, வன்னம் திகழ் தண் தளிர் கடவுள் வடத்தான் - நிறம் விளங்குகின்ற குளிர்ந்த தெய்வத்தன்மையை யுடைய ஆலந்தளிரை யுடையவனும், வட வேங்கடத்தான்-வடக்கிலுள்ள திருவேங்கடமலையில் வாழ்பவனுமாகிய திருமால், முன்னம் சினவி மலைந்தாங்கு - முன்னே [இராமாவதாரத்தில்] கோபித்து எதிர்த்தாற் போல, முனை வாளியினால் - கூர்மையையுடைய அம்பினாலே, கனை கடலை - ஒலிக்கின்ற சமுத்திரத்தை,இன்னம் பொருவன் எனில்-இன்னொருகால் எதிர்த்துப் போர்செய்வே னென்றால்,இ கோதை மாலைபோன்ற இந்தப் பெண், இங்ஙன் இருந்து வருந்துவளோ - இவ்வாறு ஒருபடிப்பட இருந்து வருத்த மடைவளோ? [அடையா ளென்றபடி];(எ-று.)

ஜாநகியினிடத்து மிக்க அன்புகொண்டு அதனால் அவளை அடைதற்கு இடையூறா யிருந்த கடலின்மீது அம்புதொடுத்து அதனை அடக்கினாற்போல இந்தத் தலைவியினிடத்தும் அன்புகொண்டு இவளுக்கு விரகவேதனையை விருத்திசெய்கின்ற கடலின்மீது இன்னொருகால் அம்புதொடுத்து அதனை அடக்கலாகாதோ?எனப் பாங்கி இரங்கிக்கூறியது. விரைவில்வந்து தலைவியைத் தலைவன் கூடவேண்டு மென்பது, இதன் பயன்.

இராவணனாற்கவர்ந்துபோகப்பட்ட சீதாபிராட்டி இலங்கையிலிருக்கிற செய்தியை அநுமான் சென்று அறிந்துவந்து சொன்னபின்பு,இராமபிரான் வானரசேனையுடனே புறப்பட்டுச் சென்று கடற்கரையை அடைந்து, கடலைக்கடக்க உபாயஞ் சொல்லவேண்டு மென்று வருணனைப் பிரார்த்தித்து அங்குத் தருப்பசயனத்திலே படுத்து ஏழுநாள்வரையிலே பிராயோபவேசமாகக் கிடக்க. கடலரசனாகிய வருணன் அப்பெருமானது மகிமையை அறியாமல் உபேக்ஷையா யிருக்க, சக்கரவர்த்தித்திருமகனார் அதனைக்கண்டு கோபங்கொண்டு, வாநரர் காலால் நடந்துசெல்லும்படி கடலை வற்றச் செய்வே னென்று ஆக்கிநேயாஸ்திரத்தைத் தொடுக்கத் தொடங்கவே, வருணன் அஞ்சி நடுங்கி ஓடிவந்து அவரைச்சரணமடைந்து தன்மீது அணை கட்டுதற்கு உடன்பட்டா னென்பது, இராமாயணகதை.

மலைந்தாங்கு என்பதை - மலைந்தாலாங்குஎன வினையெச்சவிகாரமாகவாயினும், மலைந்ததாங்கு எனத் தொழிற்பெயர் விகாரமாகவாயினுங் கொள்க. கோதை - உவமவாகுபெயர்; மென்மைக்கும், அழகுக்கும் உவமை:

ஆகுபெயராய், மாலையை யுடையவ னென்றும் பொருள் கொள்ளலாம். அறிதயில் - எல்லாவற்றையும் அறிந்துகொண்டே செய்யும் நித்திரை வன்னம்-வர்ணம் என்ற வடமொழியின் திரிபு. ஆலிலைக்குத் தெய்வத்தன்மை - அனைத்துலகுக்கும் ஆதாரமாகிய எம்பெருமானுக்கும் தான் ஆதாரமாயிருக்குந் தன்மை; எல்லாமழிந்த பிரளயகாலத்தும் தான் அழியாதிருக்குந் தன்மையுமாம். வடம் - வடசொல்.

இது - மூன்று ஆறுஞ் சீர்கள் காய்ச்சீர்களும், மற்றை நான்கும் மாச்சீர்களுமாகிய அறுசீராசிரியவிருத்தம். (௬)

[புயவகுப்பு.]

முதல் அடி.

௭. தானமகலாதவிமையோர்மகிழநீழலிடு
தருவளர்சாகைநிரைதமையொத்திலங்கின
தாளமுலைஞாலமகணீள்பசியதாளுடைய
தாமரையின்மேவுகொடிதழுவக்குழைந்தன
சாலநலமேவிடையர்கோலமனைநாளுமுறி
தாவிநவநீதமொடுதயிரைக்கவர்ந்தன
தாமமுடிராவணன்விசாலநெடுவேலைநிகர்
தானையொடுமாளவடுசமரைத்தொடங்கின,

இரண்டாம் அடி.

காணிலிகன்மான்மடியநீடுசிலைகோலிவரு
கால்படர்வபோலவொருகணையைத்துரந்தன
காசடைகிலாதுகருகாதுவெளிறாதுகுரு
காபுரியின்மாறர்புகல்கவியைப்புனைந்தன
காமர்துளிதேவர்திருநாடளவுலாவவொரு
கார்வரையினெடியகடலைக்கடைந்தன
காதிணையிலாடுகுழைகாலும்வெயின்மூழ்கியிருள்
காய்கனகவாடைபொதிகருவெற்பினின்றன,

மூன்றாம் அடி.

வானமுகில்கூடியொழியாதுபொழிபோதுநிரை
வாடுதலுறாமல்கனமலையைச்சுமந்தன
வாசமதிதூரம்விடுபாளிதபராகநறு
மான்மதபடீரமிவைமருவிக்கமழ்ந்தன
வாளிரவிசோதிமதிகூடுமிருநாகமென
வாகையுடையாழிபருவரிநத்தணிந்தன
வாழ்விசயனேறிணையிலாதவொருதேரில்விசி
வாசிநிரைகோல்கொடமர்வயின்மிக்குறைந்தன,

நான்காம் அடி.

தேனினமுலாவியறுகாலிடறியோலமிடு
தேமலிதுழாய்தொடையல்செறியச்சிறந்தன
தேகவெழிலானநதிவாயினெழுகால்களிவை
சீரியவெனவுலகுதினமெச்சவிஞ்சின

தேனணையநாதமெழவூதுசிறுவேயினிடை
சேர்தொளைகண்மூடிவிடுசெயலைப்புரிந்தன
சீதமதுமாரிசொரிசோலைவளர்சாரல்வட
சேடகிரிமாயன்வரசிகரப்புயங்களே.

(இ - ள்.) தானம் அகலாத - இருப்பிடத்தை விட்டு நீங்காத, இமையோர் - தேவர்கள், மகிழ - மகிழ்ச்சியை யடையும்படி, நீழல் இடு - (அவர்களுக்கு) நிழலைச் செய்கின்ற, தாரு-கற்பகவிருட்சங்களினது,வளர் சாகை, நிரைதமை ஒத்து - வளர்ந்த கிளைகளின்வரிசைகளைப்போன்று, இலங்கின - விளங்கின; தாளம் முலை - தாளம்போன்ற தனங்களை யுடைய, ஞாலம் மகள் - பூமிதேவியும், நீள் பசிய தாள் உடைய தாமரையில் மேவு கொடி - நீண்ட பசுமையான நாளத்தையுடைய செந்தாமரைமலரிலே வீற்றிருக்கின்ற பூங்கொடிபோன்ற ஸ்ரீதேவியும், தழுவ - (தம்மை) ஆலிங்கனஞ் செய்ய, குழைந்தன - நெகிழ்ந்தன; சால நலம் மேவு - மிகவும் நன்மைகள் பொருந்திய,இடையர்-இடையர்களது, கோலம் மனை-அழகிய வீடுகளிலே, நாலும் - தொங்குகின்ற, உறி - உறிகளை, தாவி - எட்டிப்பிடித்து, நவநீதமொடு தயிரை கவர்ந்தன - (அவற்றில் வைக்கப்பட்டுள்ள) வெண்ணெயையும் தயிரையும் கொள்ளைகொண்டன; தாமம் முடி ராவணன் - வெற்றி மாலையைச் சூடிய முடியையுடைய இராவண னென்னும்இராக்கதராஜன், விசாலம் நெடு வேலை நிகர் தானையொடு - பரப்பாகிய பெரிய கடலையொத்த சேனையுடனே,மாள - அழியும்படி, அடு சமரை தொடங்கின-கொல்லுகின்ற போரை ஆரம்பித்துச் செய்தன;

கானில் இகல் மான் மடிய- தண்டகாரணியத்தில் வலிமையையுடைய மான்வடிவங் கொண்டுவந்த மாரீசன் இறக்கும்படி, நீடு சிலை கோலி-நீண்ட (தமது கோதண்ட மென்னும்) வில்லை வளைத்து, வரு கால் படர்வ போல - (எப்பொழுதும்) சஞ்சரித்தலையுடைய காற்று விரைந்து செல்வது போல, ஒரு கணையை துரந்தன - ஓர் அம்பை (அம்மானின்மேல்) எய்தன; காசு அடைகிலாது - குற்றத்தை அடையாமலும், கருகாது-வாடிப்போகாமலும், வெளிறாது-அசாரமாகாமலும், குருகாபுரியில் மாறர் புகல் - திருக்குருகைநகரில்திருவவதரித்த நம்மாழ்வார் திருவாய்மலர்ந்தருளிய, கவியை-பாமாலையை, புனைந்தன - சூடின; காமர் துளி - அழகிய நீர்த்துளிகள் தேவர் திரு நாடு அளவு உலாவ - தேவர்களது அழகிய உலகமட்டிலும் மேலேதெறிக்கும்படி, ஒரு கார் வரையினால் - ஒரு பெரிய மந்தரமலையினால், நெடிய கடலை கடைந்தன-பெரியதிருப்பாற்கடலைக் கடைந்தருளின;காது இணையில் ஆடு குழை காலும் வெயில் மூழ்கி - இரண்டுகாதுகளிலும் அசைகின்ற குண்டலங்கள் வெளிவீசுகின்ற சூரியனொளிபோன்ற ஒளியினுள்ளே பொருந்தி, (அதனால்), இருள் காய் கனகம் ஆடை பொதி கரு வெற்பின் நின்றன-(தனது ஒளியால்) இருளைப்போக்குகின்ற பொன்மயமான பீதாம்பரத்தால் மூடப்பட்டதொரு கரியமலைபோல இருந்தன;

வானம் -ஆகாயத்தில், முகில் - மேகங்கள், கூடி - திரண்டு, ஒழியாது-இடைவிடாமல், பொழி போது - மழை பெய்த பொழுது, நிரை வாடுதல் உறாமல் - பசுக்கூட்டம் வாட்டத்தை யடையாதபடி, கனம் மலையை சுமந்தன - பெரிய கோவர்த்தன கிரியைக் குடையாக எடுத்துப் பிடித்தன; வாசம் அதிதூரம் விடு - வாசனையை வெகுதூரத்தளவும் வீசுகின்ற, பாளித பராகம் நறு மான்மத படீரம் இவை - பச்சைக்கர்ப்பூரப்பொடியும் நல்ல கஸ்தூரியும் சந்தனமும் என்னும் இவற்றை, மருவி - பூசப்பெற்று, கமழ்ந்தன - வாசனை வீசின; வாள் இரவி - காந்தியை யுடைய சூரியனையும், சோதி மதி - ஒளியை யுடைய சந்திரனையும், சூடும் - (தன்மேல்) தரித்

துள்ள, இரு நாகம் என - இரண்டு மலைபோல, வாகை உடை ஆழி - வெற்றியை யுடைய சக்கரத்தையும், பரு வரி நத்து - பருத்ததும் கோடுகளுடையது மாகிய சங்கத்தையும், அணிந்தன - தரித்தன; வாழ் விசயன் ஏறு - எல்லாவாழ்க்கைகளையுமுடைய அருச்சுனன் ஏறியுள்ள, இணை இலாத ஒரு தேரில் - ஒப்பில்லாத தொரு இரதத்திலே, வீசி - சட்டப்பட்டுள்ள, வாசி நிரை - குதிரைகளின் வரிசையை, கோல் கொடு - உளவுகோலினால், அமர் வயின் - போர்க்களத்தில், மிக்கு உழைந்தன - மிகுதியாய் அடித்து ஓட்டின;

தேன் இனம் உலாவி - வண்டுக்கூட்டங்கள் வந்துமொய்த்துச் சஞ்சரித்து, அறு கால் இடறி - (மதுவுண்ட மயக்கத்தால் தமது) ஆறுகால்களும் இடறி, ஓலம் இடு - ஆரவாரஞ் செய்தற்கு இடமான, தேம் மலி துழாய் - வாசனை மிகுந்த திருத்துழாய், தொடையல் செறிய - மாலையாகப் பொருந்த, சிறந்தன - சிறப்புற்றன; 'தேகம் எழில் ஆன - திருமேனியினது சௌந்தரிய மாகிய, நதி வாயின் - ஆற்றினிடத்தே, எழு - தோன்றுகின்ற, சீரிய கால்கள் இவை - சிறப்புள்ளனவாகிய வாய்க்கால்களாகும் இவை,' எனு - என்று, உலகு - உயர்ந்தவர்கள், தினம் - நாள்தோறும், மெச்ச - கொண்டாடும்படி, விஞ்சின - அழகு மிக்கன; தேன் அனைய நாதம் எழ - தேனை ஒத்து இனிமையான இசை எழும்படி, ஊது - (வாயினால்) ஊதப்படுகின்ற, சிறு வேயின் இடை - சிறிய வேய்ங்குழலினிடத்தில், சேர் - பொருந்திய, தொளைகள் - துவாரங்களை, மூடி விடு - (விரல்களினால்) மூடுதலும் விடுதலு மாகிய, செயலை - செய்கையை, புரிந்தன - செய்தன; (எவை யென்னில்),—சீதம் மது மாரி சொரி - குளிர்ந்த தேன்மழையைப் பொழிகின்ற, சோலை - பூஞ்சோலைகள், வளர் - வளரப்பெற்ற, சாரல் - பக்கங்களையுடைய, வட சேடகிரி - வடக்கிலுள்ள சேஷமலையில் எழுந்தருளிய, மாயன் - ஆச்சரிய கரமான குணங்களையுடைய எம்பெருமானது, வரம் சிகரம் புயங்கள் - சிறந்த மலையுச்சிபோன்ற திருத்தோள்கள்; (எ - று.)

பிரபந்தத்தலைவனது தோள்களை வருணித்தல், புயவகுப்பாம்.

தானம் - ஸ்தாநம். 'தானமகலாத இமையோர்' என்றது, மனிதர்களைப்போல அலையாமல் சுகானுபவஞ் செய்பவ ரென்றபடி; இனி, வேண்டுவார் வேண்டும் வரங்களைக் கொடுக்கும் வண்மைக் குணம் நீங்காத தேவ ரென்றுமாம். இமையாக்கண்ணராதலால், இமையோர் என்று பெயர்; பலர்பால் வினையாலணையும்பெயர்: எதிர்மறை ஆகாரம் புணர்ந்து கெட்டது; ரகாவீற்றயல் ஆகாரம் ஓகாரமாயிற்று: இமைத்தல் - கண்களை மூடித்திறத்தல்; இனி, உடன்பாடாக, இமையில் விசேஷ முடையவ ரென்றும் பொருள் கொள்ளலாம். நீழல் - நீட்டல்விகாரம். தாரு - வடசொல். தேவர்கள் பஞ்சதருக்களின் நிழலில் வாசஞ்செய்தலை, "இன்றளிர்க் கற்பக நறுந்தே னிடைதுளிக்கு நிழலிருக்கை யிழந்து போந்து" என்னும் இராமாயணத்தாலும் அறிக. "கற்பகக் காவன நற்பல தோளற்கு" என்னும் ஆழ்வார் அருளிச்செயலை அடியொற்றி, 'தாருவளர் சாகைநிரை தமை யொத்திலங்கின' என்றார். தாளம் - ஓர் இசைக்கருவி; இது, தனத்திற்கு உவமையாதலை, "கோங்கரும்பு பந்து கொலைச்சூது தாள மொக்குள்" என்னும் இரத்தினச்சுருக்கத்தாலும் அறிக. கொடி - உவமையாகுபெயர். இடையர் - குறிஞ்சிநிலத்துக்கும் மருதநிலத்துக்கும் நடுவிடமான முல்லைநிலத்தி லுள்ளவர்; 'பொதுவர்' என்னும் பெயர்க்கும் காரணம் இது; குறிஞ்சி - மலை, மருதம் - நாடு, முல்லை - காடு. நவநீதம் - நாள்தோறும் புதிதுபுதிதாகச் சேர்க்கப்படுவது. என வெண்ணெய்க்குக் காரணக்குறி; வடசொல். தாமம் - ஒளியுமாம். ராவணன் - (பிறரை வருத்துதலால் உலகமுழுவதையும்) கூச்சலிடும்படி பண்ணுபவன்: அன்றிக்கே, (தான் கைலாசாதிகளை எடுத்து நெருக்குண்டு) கூப்பிடுபவன்; இதனால் தனக்கும் பிறர்க்கும் நன்மையறியாத்துஷ்ட

சுவபாவமுடையவனென்றபடி: இனி, இச்சொல்லுக்கு - விச்சிரவசினது குமாரனென்று நலிந்து பொருளுரைப்பாருமுளர். சேனைக்குக் கடலுவமை - பரப்பும், ஆரவாரமும், அணியணியாக வருதலும் பற்றி. சமர், அமர்-ஸமரம் என்னும் வடமொழியின் திரிபுகள்.

இராவணன் சூர்ப்பணகைவார்த்தையினால் சீதையின்மேற் காதல்கொண்டு மாரீசனைத் துணையாகவரும்படிவேண்ட,அவனும்பொன்மயமான மாயமான்வேடம் பூண்டு ஸ்ரீராமலட்சுமணர்கள் ஜாநகியுடனே வசித்திருக்கும் ஆச்சிரமத்தருகே சென்று விளையாட,அதனைச் சீதை கண்டு ‘பிடித்துத் தரவேண்டும்’ என்று இராமசந்திரனைப் பிரார்த்திக்க, அவரும் பின்தொடர்ந்து வெகுதூரம் சென்றும் அகப்படாமையால் இது மாயை என்று அறிந்து ஓரம்பெய்து வதைத்தாரென்பது, இரண்டாமடியின் முதற்பாகத்திற் குறித்த கதை. ஸதாகதி யென்னும் வடமொழிப்பெயரின்பொருள்பற்றி, ‘வருகால்’என்றார். படர்வ-படர்வது என்பதன்விகாரம். இடத்திருக்கை வில்லை வளைக்க, வலத்திருக்கை அம்புதொடுத்தலால்,‘சிலைகோலிக் கணைதுரந்தன’ என்றார். புனைதல் என்னும் வினைக்கு ஏற்ப, கவி, மாலையாகக் கொள்ளப்பட்டது. பூமாலையினும்பாமாலைக்குள்ள சிறப்பை‘காசடைகிலாது கருகாது வெளிறாது’ என்பவற்றாற் குறித்தார்; பூமாலை, வண்டுமொய்த்தல் முதலியவற்றாற் குற்றமடையும், விரைவில் வாடிப்போம், சாரமாகிய தேனை இழக்கும், பொலிவு கெடும், நிறம் மாறும்: இத்தன்மையனவாகிய தீங்குகள் பாமாலைக்கு இல்லையென்பதாம். குருகாபுரி - இக்காலத்தில் ஆழ்வார்திருநகரியென வழங்கும். மாறன் - வலிய வினைகளுக்கு மாறாக இருத்தலினாலும், பாண்டிய நாட்டில் திருவவதரித்ததனாலும் வந்த பெயர். மாறர் - உயர்வுப்பன்மை. காமர்-காமம் என்னும் வடமொழி ஈறுதிரிந்தது; விருப்பமென்று பொருள்: விரும்பப்படும் அழகென்று கருத்து. வெயில் - வெம்மையையுடையது எனக் காரணப்பெயர்; வெம் என்னும் பண்படியின் விகாரமாகிய வெய் - பகுதி, இல் - பெயர்விகுதி. பொற்குழையினொளிக்கு - பொன்னுடையும், கரிய தோளுக்கு - நீலகிரியும் உவமை. பகைவர் படைக்கலங்களால் ஊறடையாத உறுதிக்கும், திரட்சிக்கும், உயர்ச்சிக்கும், பருமைக்கும் தோள் - மலையோடு உவமை கூறப்படும்.

கனமலை - மேகந் தவழும் மலையுமாம். மான்மதம் - கஸ்தூரியென்னும் மானினது கொழுப்பு; ‘ம்ருகமதம்’ என்பது வடசொல். இரவி - ஆழிக்கும், மதி - நத்துக்கும் முறையே உவமை. இருநாகம்-உதய அஸ்த கிரிகளுமாம். நாகம் - அசையாதது; அசலம். வாகை யென்னும் மரத்தின் பெயர்,அதன் பூவின் மாலையை இருமடியாகுபெயராய்க் குறித்து, இங்கே, இலக்கணையால் அம்மாலையை அடையாளமாகச் சூடும் வெற்றியை உணர்த்திற்று. உடை-உடைய என்னுங் குறிப்புப் பெயரெச்சத்தின் அகரவீறு தொகுத்தல்; இனி,உடையாழி என்பதை - வினைத்தொகையாக் கொண்டு,பகைவர்களது வெற்றிஉடைதற்குக்காரணமான ஆழியென்றுமாம்.ஆழி-வட்டவடிவானது; அல்லது, பகைவர்களை அழிப்பது. வரி நத்து - இசையை யுடைய நத்தையுமாம். விஜயனென்பதற்கு - விசேஷமான வெற்றியை யுடையவனென்று பொருள்; இராஜசூயயாகத்திற்காக வடக்கிற் சென்று பல அரசர்களை வென்றதனாலும், காண்டவ தகனகாலத்துத் தேவர்களை வென்றதனாலும், பாசுபதம் பெறுங்காலத்துப் பரமசிவனைஎதிர்த்து விற்கழுந்தால் முடியில் அடித்ததனாலும், பின்பு தேவர்களின் வேண்டுகோளால் அவர்களால் அழிக்கமுடியாத நிவாதகவசர் காலகேயரென்னும் அசுரர்களைக் கொன்றதனாலும், அருச்சுனனுக்கு இப்பெயர் அமைந்தது. “உற்றாரையெல்லாமுடன்கொன்றரசாளப், பெற்றாலும் வேண்டேன் பெருஞ்செல்வம்” என்று பகைவர்களைக் கொன்று பெறும் அரசவாழ்க்கையில் வெறுப்புக்கொண்ட அருச்

சுனனுக்குக் கண்ணன் தத்துவோபதேசஞ்செய்து அவனைப் போர்புரிந்து வாழ்வுபெறும்படி உடன்படுத்தியமை தோன்ற, இங்கே 'வாழ்விசயன்' என்றார். வாசி - வாஜி, வடசொல். கோல் - குதிரைச்சம்மட்டி. வயின் - ஏழனுருபு.

அறுகால் - ஷட்பதம். தேமலி - தேன் மலி யென்று பிரித்தால், மதுப்பொருந்திய என்று பொருள். துழாய் - துளஸீ என்னும் வடமொழியின் சிதைவு. தொடை - தொடுக்கப்படுவது; ஐ-செயப்படுபொருள் விகுதி, அல் - சாரியை: அல் - விகுதி யெனின், ஐ - சாரியையாம். சீரிய - சீர் என்பத னடியாகப் பிறந்த பலவின்பாற் பெயர்; இ - சாரியை. வேய் - அதனாலாகிய குழலுக்குக் கருவியாகுபெயர். சாரல் - சாருதல்; மலையைச் சார்ந்த பக்கத்துக்குத் தொழிலாகுபெயர்.

இது - பெரும்பாலும் முதல் ஆறு சீர்கள் கூவிளங்காய்ச் சீர்களும், ஏழாவது புளிமாச்சீரும்,எட்டாவது கருவிளச்சீருமாய் வந்தது காலடியாகவும், அஃது நான்கு பெற்றது ஓரடியாகவும் வந்த கழிநெடிலடி நான்கு கொண்ட முப்பத்திருசீராசிரியவண்ணவிருத்தம். (எ)

அ. புயங்கமலை மேற்றொழுத புண்ணியர்க்கு முண்டோ
பயங்கமலை மேவு பரமன்—வியங்கமல
நேருநாட் டத்த னிலமே லமருலகத்
தாருநாட் டத்தன் சரண்.

(இ - ள்.) புயங்கம் மலை மேல் - ஸ்ரீசேஷகிரியின்மேல், கமலை மேவு பரமன் - செந்தாமரைமலரில் வாழ்கிற திருமகளோடு கூடிய யாவரினுஞ் சிறந்தவனும், வியம் கமலம் நேரும் நாட்டத்தன் - பெருமையையுடைய செந்தாமரைமலர்களைஒத்திருக்கிற திருக்கண்களை யுடையவனும்,அமர் உலகம் தாரு நிலமேல் நாட்டு அத்தன் - தேவலோகத்தி லுள்ள பாரிஜாதமரத்தைப் பூமியிற்கொணர்ந்து நட்ட தலைவனுமாகிய திருமாலினது, சரண் - திருவடிகளை, தொழுத-வணங்கின, புண்ணியர்க்கும்-நல்வினையை யுடையவர்களுக்கும், பயம் - (பிறவித் துன்பங்களா லுண்டாகும்) அச்சம், உண்டோ - உள்ளதோ? [இல்லை யென்றபடி]; (எ - று.)

புயங்கம்-புஜங்கம்; பாம்பு: மார்பினால் நகர்வது; அல்லது, வளைந்து வளைந்துசெல்வது. "தவமுந் தவமுடையார்க்காகும்"என்றபடிமுற்பிறப்பில் நல்வினை செய்துள்ளவர்களுக் கன்றிப் பிறர்க்கு எம்பெருமானுடைய தரிசனம் நேராதென்பார்,'தொழுத புண்ணியர்'என்றார். உம்மை-உயர்வுசிறப்பு. கமலத்துக்கு 'வியம்' என்னும் அடைமொழி கொடுத்தது, ஒருபொழுதும் வாடாமல் இரவிலும் மலர்ந்துள்ள செந்தாமரைமலர்கள் உளவாயின் அவையே எம்பெருமானது திருக்கண்களுக்கு உவமையாம் என்றற்கு. கமலநேரு நாட்டத்தன்-புண்டரீகாக்ஷன். நாட்டம்-(பொருள்களை)நாடுதற்குக்கருவியாவது; நாடுதல்-காணுதல்: அம் - கருவிப்பொருள்விகுதி; பகுதி தன்னொற்றிரட்டியது - விகாரம். சரண் - சரணம். அமர் - அமர ரென்பதன் விகாரம்.

கண்ணன் நரகாசுரனைச் சங்கரித்தபின்பு,அவனால் முன்னே கவர்ந்து போகப்பட்ட இந்திரன்தாயான அதிதியினது குண்டலங்களை அவளுக்குக் கொடுப்பதற்காகப் பெரியதிருவடியின்மேல் சத்தியபாமையை உட்காருவித்துத் தாமும் உட்கார்ந்துகொண்டு தேவலோகத்திற்குச்செல்ல, அங்கு இந்திராணி சத்தியபாமைக்குப் பல உபசாரங்களைச் செய்தும் தேவர்க்கே யுரிய பாரிஜாதபுஷ்பம் மானிடப்பெண்ணாகிய இவளுக்குத் தகாதென்று சமர்ப்பிக்கவில்லை யாதலின், அவள் அதனைக் கண்டு விருப்புற்றவளாய்ச் சுவாமியைப்பார்த்து'பிராணநாயகனே! இந்தப் பாரிஜாததருவைத் துவாரகைக்குக்கொண்டுபோகவேண்டும்' என்றதைக்கண்ணன்திருச்செவிசார்த்தி

உடனே அந்த விருட்சத்தை வேரோடு பெயர்த்துப் பெரிய திருவடியின் தோளின்மேல் வைத்தருளி, இந்திராணி தூண்டிவிட்டதனால் வந்து மறித்துப் போர்செய்த இந்திரனைச் சகலதேவசைனியங்களுடனும் சங்கநாதத்தாலே பங்கப்படுத்தி, பின்பு வணங்கின அவனது பிரார்த்தனைப்படியே திருத்துவாரகைக்குக் கொண்டுவந்து புறங்கடைத்தோட்டத்தில் நாட்டியருளினா ரென்பது, நிலமேல் அமருலகத்தாரு நாட்டிய கதை.

இது - மலரென்னும்வாய்பாட்டால்முடிந்தஇருவிகற்பநேரிசைவெண்பா.

௯. சரணமெனத்தன்சரணேயடைந்தசனர்சனன
மரணமடுத்துவருந்தாதுதன்பதம்வாழவைக்குங்
கிரணம்விரிக்குமதிதீண்டுஞ்சேடகிரியிலம்பொ
னரணமுடுத்ததிருக்கோயின்மேவியவற்புதனே.

(இ - ள்.) கிரணம் விரிக்கும் - ஒளியை வீசுகின்ற, மதி - பூர்ண சந்திரனை, தீண்டும்-(உயர்ச்சியினால்) ஸ்பரிசிக்கின்ற, சேட கிரியில்-திருவேங்கட மலையில், அம் பொன் அரணம் உடுத்த திரு கோயில் - அழகிய பொன்னினாலாகிய மதில்கள் சூழ்ந்துள்ள சிறந்த ஆலயத்திலே, மேவிய - (திருவுள்ளமுவந்து) எழுந்தருளிய, அற்புதன் - ஆச்சரியகரமான செய்கையையுடைய எம்பெருமான்,—சரணம் என தன் சரணே அடைந்த சனர் - (வேறுகதியில்லாமல் தேவதாந்தரங்களை விட்டு இதுவே)அடைக்கலமென்று கருதித் தனது திருவடிகளையே அடைந்த ஜனங்கள், சனனம் மரணம் அடுத்து வருந்ாது-(மறுபடியும்) பிறத்தலையும் இறத்தலையும் அடைந்துவருத்தப்படாதபடி, (அவர்களை), தன் பதம் வாழ வைக்கும் - தனது பரமபதலோகத்திலே வாழும்படி வைத்தருள்வான்; (எ - று.)

மீளாவுலகமாகிய முத்தியை அடைந்தவர்க்குப் பிறப்பு இறப்புக்களும் பிற துன்பங்களும் இல்லை; நிரதிசய ஆனந்தமே உள்ளது என அறிக. சரணம் - ஶரணம; ரக்ஷகவஸ்து. 'திருவடியே வீடாயிருக்கும்'என்னுங் கொள்கைபற்றி, 'தன்பதம்' என்றுருமாம். வைக்கும் - ஆண்பாற் செய்யுமென்முற்று.

இது - நிரையசைமுதற் கட்டளைக்கலித்துறை. (௯)

க0. அற்புதனலர்மேன்மங்கையாருயிர்க்கணவன்சேட
வெற்பினின்மடவாய்காமவேட்குநீவெருவலென்னே
பொற்பமர்தடங்கண்வாளிபுருவவில்லல்குற்றிண்டேர்
பற்பலகலந்தோய்கொங்கைப்பகட்டையும்படைத்தாயன்றே.

(இ - ள்.) அற்புதன் - ஆச்சரியகரனும், அலர்மேன்மங்கை ஆர் உயிர் கணவன் - அலர்மேன்மங்கையினது அரிய உயிர்போன்ற [மிக்கஅன்புக்கு விஷயமான] கொழுநனுமாகிய ஸ்ரீநிவாஸனது, சேடவெற்பினில்-திருவேங்கடமலையி லுள்ள, மடவாய் - மடமைக்குண முடைய பெண்ணே!—நீ காமவேட்கு வெருவல் என்னே- நீ மன்மதனுக்கு அஞ்சுவது ஏன்? பொற்பு அமர் தட கண் வாளி - அழகு பொருந்திய பெரிய கண்களாகிய அம்புகளையும், புருவம் வில் - புருவங்களாகிய விற்களையும், அல்குல் திண் தேர்-அல்குலாகிய வலிய தேரையும், பல் பல கலம் தோய் கொங்கை பகட்டையும்- பலபலவகையான ஆபரணங்கள் பொருந்திய தனங்களாகிய யானையையும், படைத்தாய் அன்றே - (நீ) பெற்றுள்ளாயன்றோ? (எ - று.)

யானை தேர் வில் அம்பு முதலிய போர்க்குஉரிய படைகளைக் கொண்டுள்ள நீ அவை யொன்று மில்லாத என்னுடன் செய்யுங் காமப்போரில் தோற்றல் தகுதியன்றெனக் கூறியவாறும்; இது, தலைமகளைப்புணர்ந்த தலைமகன் அவளைநோக்கி அவள் புணர்ச்சியில் மெலிந்ததுபற்றிக் கூறியது;

புறங்காட்டல் என்னுந் துறை. இச்செய்யுளை "அறந்தந்த பொன்பொலி கூடற் பிரான்வெற்பி லம்பொற்படா, நிறந்தந்த கும்ப மதயானையு நெடுந்தேர்ப்பரப்பு, மறந்தந்த விற்படை வாட்படையுங் கொண்டு மற்றொரு நீ, புறந்தந்தவா வணங்கே நன்று காமவெம் போரினுக்கே" என்னும் மதுரைக் கலம்பகச் செய்யுளோடு ஒப்பிடுக.

ஆருயிர் - பண்புத்தொகை; ஆர்-அருமையென்னும் பண்புப்பெயரின் விகாரம்: இனி, ஆருயிரென்பதை வினைத்தொகையாகக் கொண்டு, நிறைந்த உயி ரென்றுமாம். உயிர்க்கணவன் - பிராணநாயகன். மடவாய் - மடவாள் என்பதன் விளி; ஈறு திரிந்தது-விளியுருபு மடமை-அறிந்தும் அறியாது போலிருக்குந் தன்மை; இது, பெண்களுக்கு உரிய முக்கியமான குணங்களுள் ஒன்று: இளமையுமாம். குமரவேளை விலக்குதற்கு, 'காமவேள்' எனப்பட்டது. "பொற்பே பொலிவு" என்னுஞ் சூத்திரத்தால், பொற்பென்பது - உரிச்சொல்லாம். கொங்கைக்கு யானையின் மஸ்தகமும் மருப்பும் உவமைகூறப்படுமாதலால், 'கொங்கைப்பகடு' என்றார். நெற்றிப்பட்டம், சதங்கை, மணி முதலிய ஆபரணங்களை அணிவதனால், 'பற்பல கலந்தோய்' என்னும்அடைமொழியைப் பகட்டுக்குங்கூட்டலாம். கண்ணை வாளி யென்றது-கூர்மையும் ஆடவரை வருத்துதலுங் கருதி. புருவத்துக்கு வில்லுவமை - வளைவுக்கும், போர்க்கருவியா யிருத்தற்கு மென்க. அன்று, ஏ - தேற்றம்.

இது - முதற்சீரும் நான்காஞ்சீரும் விளச்சீர்களும், மற்றை நான்கும் மாச்சீர்களு மாகிய அறுசீராசிரியவிருத்தம். (௧௦)

௧௧. அன்றுலகமுண்டுமிழ்ந்தாயகிலசெகற்காரணனீ
யென்றுனக்கேயாளானோமிமிழருவிவடமலைவாழ்
மன்றல்கமழ்துளவோயுன்வயிற்றுளெங்களொடுகடைநாட்
சென்றுறைந்துமீளவருந்தேவரையாமதியோமே.

(இ - ள்.) இமிழ் - ஒலிக்கின்ற, அருவி - நீர்ப்பெருக்குக்களையுடைய, வடமலை - உத்தரதிசையிலுள்ள திருவேங்கடமலையில், வாழ் - வாழ்ந்தருளுகின்ற, மன்றல் கமழ் துளவோய் - வாசனைவீசுகிற திருத்துழாய்மாலையையுடையவனே!—(நீ), அன்று - அந்நாளில் [பிரளயகாலத்தில்], உலகம் - எல்லாவுலகங்களையும், உண்டு - உட்கொண்டு, உமிழ்ந்தாய் - (பிரளயம் நீங்கின பின்பு முன்போலவே இருக்கும்படி) உமிழ்ந்தருளினாய்; (ஆதலால்), அகில செகத் காரணன் நீ என்று - உலகமுழுவதுக்கும் காரணனாகுபவன் நீயே யென்று நிச்சயித்து, உனக்கே —, ஆள் ஆனோம் - அடிமை யாயினோம் (யாங்கள்); உன் வயிற்றுள் - உனது திருவுதரத்திலே, எங்களொடு - எங்களுடனே, கடை நாள் - யுகாந்தகாலத்தில், சென்று - பிரவேசித்து, உறைந்து - வசித்து, மீள வரும் - பின்பு வெளியில் வருகின்ற, தேவரை - (பிரமன் முதலிய மற்றைத்) தேவர்களை, யாம் - நாம், மதியோம் - (ஒரு பொருளாக) லக்ஷியஞ் செய்யமாட்டோம்; (எ - று.)—ஏ - தேற்றம்.

தேவதாந்தரபஜநஞ் செய்யாமல் பரதேவதையாகிய உனக்கே தொண்டுபூண்டு ஒழுகுகிற எங்களைக் காத்தருளுதல்வேண்டு மென்றபடி. "களிர் மதிச்சடையனு நான்முகக்கடவுளுந், தளிரொளியிமையவர் தலைவனு முதலா, யாவகையுலகமும் யாவரு மகப்பட, நிலநீர்தீகால் சுடரிரு விசும்பு, மலர்சுடர்பிறவுஞ் சிறிதுடன் மயங்க, ஒருபொருள்புறப்பாடின்றி முழுவதும், மகப்படக்கரந்தோ ராலிலைச்சேர்ந்தவெம், பெருமாமாயனை யல்லது, ஒருமா தெய்வ மற்றுடையமோ யாமே" எனத் திருவாசிரியத்துள் நம்மாழ்வார் அருளிச்செய்திருத்தல் காண்க. செகற்காரணன் - ஜகத்காரணன்.

இது - நாற்சீருங் காய்ச்சீராய்த் தனித்துவந்த கோச்சகக்கலிப்பா; கலிவிருத்த மெனினும் அமையும். (௧௧)

௩௨. மதியாரிகச்சுகங்காதலியாரண்டர்வாழ்வினையுந்
துதியார்பிறதெய்வமஞ்சார்வெங்கூற்றுக்குஞ்சொன்மறைதேர்
விதியாரையீன்றதிருவுந்தியார்வடவேங்கடமாம்
பதியாரிருதிருப்பாதாம்புயத்தைப்பணிபத்தரே.

(இ - ள்.) சொல் - சொற்களின் சொரூபமான, மறை - வேதங்களை, தேர் - ஆராய்ந் தறிகின்ற, விதியாரை - பிரமதேவரை, ஈன்ற - படைத்த, திரு உந்தியார் - அழகிய நாபீகமலத்தை யுடையவரும், வட வேங்கடம் ஆம் பதியார் - வடக்கிலுள்ள திருவேங்கடமாகிய திருப்பதியை யுடையவரு மாகிய எம்பெருமானது, இரு திரு பாத அம்புயத்தை - உபயதிருவடித்தா மரைமலர்களை, பணி - வணங்குகின்ற, பத்தர் - பக்தியை யுடைய அடியார் கள்,—இக சுகம் மதியார் - இம்மையின்பங்களை ஒருபொருளாக எண் ணார்; அண்டர் வாழ்வினையும் காதலியார் - (மறுமையி லடையும் இந்தி ராதி) தேவபோகத்தையும் விரும்பார்; பிற தெய்வம் துதியார் - வேறு தே வதைகளைத் தோத்திரஞ் செய்யார்; வெம் கூற்றுக்கும் அஞ்சார் - கொடிய யமனுக்கும் பயப்படமாட்டார்கள்; (எ - று.)

வீட்டுலகத்து நிரதிசயஇன்பத்தையே விரும்பிப் பெறுவ ரென்றபடி. உம்மைகள் - உயர்வுசிறப்பு. தெய்வம் - தைவம்; வடசொல். கூற்று - (உட லையும் உயிரையும் வேறு பிரித்துக்) கூறுபடுத்துபவன்; அல்லது, (பொதுப் படச் செல்லுங் காலத்தைப் பிராணிகளுக்கு ஏற்பக்) கூறுக்குபவன். சொல் மறை - சப்தப்பிரமவடிவமான வேதம்; பாராயணஞ் செய்தற்குரிய வேத மென்றும், யாவராலுஞ் சிறப்பித்துச் சொல்லும் வேத மென்றுமாம். விதி யார் என்பதில், ஆர் என்னும் பலர்பால்விகுதி, பிரமனது படைத்தற்றொழில் வன்மையாகிற சிறப்பை உணர்த்திற்று. விதி - (எல்லாவற்றையும்) விதிப்ப வன்; விதித்தல் - படைத்தல். இகச்சுகம் - இஹஸுகம்; வடசொல்.

இது - நிரையசையாதிக் கட்டளைக்கலித்துறை. (௩௨)

[இரங்கல்.]

௩௩. பத்தர்மனப்பதுமத்திலிருப்பவர்பற்பவிழித்துணையார்
கத்துகடற்றுயிலச்சுதர்மெச்சுரகக்கிரியிற்கிளிகா
ளத்தனநத்தியெனைப்பிரிவுற்றவரற்புதமைக்கணினீர்
தத்துறவிப்படியித்தனநிற்குதல்சற்றுநினைக்கிலரே.

(இ - ள்.) பத்தர் மனம் பதுமத்தில் இருப்பவர் - அடியார்களது இருதய கமலத்தில் எழுந்தருளி யிருப்பவரும், பற்பம் விழி துணையார் - தாமரைமலர்போன்ற இரண்டு திருக்கண்களையுடையவரும், கத்து கடல் துயில் அச்சுதர் - ஒலிக்கின்ற கடலிலே யோகநித்திரைசெய்தருளுகிற அச் சுதனென்னுந் திருநாம முடையவரும் ஆகிய எம்பெருமான், மெச்சு - திருவுள்ள முவந்து எழுந்தருளியிருக்கு மிடமான, உரக கிரியில் - சேஷா சலத்திலுள்ள, கிளிகாள் - கிளிகளே!—அ தனம் நத்தி - அந்தப் பொருளை விரும்பி, எனை பிரிவு உற்றவர் - என்னைப் பிரிந்து சென்ற தலைவர், அற்புதம் மை கணின் நீர் தத்துற - (மிக்க அழகினால் கண்டவர்) வியக்கும்படியான மையிட்ட கண்களினின்றும் (துயரத்தாற் பெருகுகின்ற) நீர் அலையெறியும் படி, இ படி - இவ்வாறு, இ தனம் - இந்தக் கொங்கைகள், நிற்குதல் - வீணாய் நிற்றலை, சற்றும் நினைக்கிலர் - சிறிதும் நினைக்கின்றாரில்லை; (எ - று.)

பொருள்வயிற் பிரிந்த தலைவனது விரகத்தை ஆற்றாத தலைவி கிளிகளை நோக்கி இரங்கிக் கூறியது, இச்செய்யுள்.

பின் இரண்டடிகளால், கையிற் கிடைத்துள்ள தனத்தை ஆளாமல் விட்டு வேறேதனத்தைத் தேடமுயலுதல் விவேகிகளுக்கு அழகன் றென்ற

வாரும். தன மென்னுஞ்சொல் இரண்டனுள், பின்னது - ஸ்தநம் என்னும் வடமொழியின் திரிபு. பதுமம், பற்பம் - வடமொழித்திரிபுகள்; பத்மம். மலர்ச்சியும் குளிர்ச்சியும் கண்டோரை மகிழ்வித்தலும் பற்றி, கண்களுக்குத் தாமரைமலர் உவமை. அச்சுதர் - அச்யுதர்; இவ்வடசொல்லுக்கு - (தன்னையடைந்த அடியார்களை)நழுவவிடாமற் காப்பவ னென்றும், அழிவில்லாதவ னென்றும் பொருள். உரகம் - பாம்பு: மார்பினால் நகர்வது. கிளிகாள் - ஈற்றயல் நீண்ட விளி. அத்தனம், இத்தனம் எனச் சேய்மைச்சுட்டாலும் அண்மைச்சுட்டாலுங் குறித்தது,முறையேகிடைத்தற்கு அருமையும் கிடைத்தற்குஎளிமையு மாகிய தன்மையைக் கருதி. மைக்கண் - குளிர்ந்த கண்ணுமாம். நினைக்கிலரே என இரங்கியது,நினைப்பராயின் இங்ஙனம் வாராதிரார் என்னும் நிச்சயத்தால். ஈற்றேகாரம் - இரக்கம். நிற்குதல், கு - சாரியை. பிரிவுறுதல் - பிரிதலைப்பொருந்துதல்.

இது - ஈற்றுச்சீரொன்று கூவிளங்காய்ச்சீரும், மற்றவை கூவிளச்சீருமாகிய அறுசீராசிரியவண்ணவிருத்தம். (௧௩.)

[இரங்கல்.]

௧௪. நினைத்துருகு மேங்கும்விழி நீரினாற் கொங்கை
நனைக்குமட லூர்ந்திடவு நாடுங்--கனைக்குளனு
ளாங்கடத்தா னைக்கரசை யன்றுபுரந் தோன்கடவுள்
வேங்கடத்தா னைக்கலவா மின்.

(இ - ள்.) கனை குளனுள் ஆம் - (நீர்) நெருங்குதலையுடைய குளத்தினுள்ளே இழிந்த, கடத்து ஆனைக்கு அரசை - மதஜலத்தையுடைய கஜேந்திராழ்வானை, அன்று - (முதலையினாற் பிடிக்கப்பட்ட) அக்காலத்தில், புரந்தோன் - காத்தருளினவனாகிய, கடவுள் வேங்கடத்தானை - தெய்வத்தன்மையையுடைய திருவேங்கடமலையில் எழுந்தருளிய தலைவனை, கலவா - சேராத, மின் - மின்னற்கொடிபோன்ற இந்தப்பெண்,—நினைத்து - (விரகவேதனையை) எண்ணி, உருகும் - (மனம்) கரைவாள்; ஏங்கும் - பரிதபிப்பாள்; விழி நீரினால் கொங்கை நனைக்கும் - கண்ணீரால் தனங்களை நனைப்பாள்; மடல் ஊர்ந்திடவும் நாடும் - மடல்மா ஏறவுங் கருதுவாள்; (எ - று.)

இது - பாங்கி இரங்கியது.

மடலூர்தலாவது-தலைமகனும் தலைமகளும் கொடுப்பாரும் அடுப்பாரும் இன்றித் தமது இச்சைப்படியே களவுப்புணர்ச்சி புணர்ந்து பிரிந்தபின்பு அவ்வாற்றாமை விஞ்சி அதனால் நாணம் முதலியன அழிந்து இவர்களுள் ஒருவர் மற்றொருவரது வடிவத்தையும் பெயரையும் தமது பெயரையும் ஒருபடத்திலே எழுதிக் கையிற்கொண்டு பனைமடலினால் ஒருகுதிரையுருச் செய்வித்து அதன்மேல் தாம் ஏறி அதனைப் பிறரால் இழுப்பித்து வீதிவழியே பலருங் கூடும் பொதுவிடங்களிற் செல்லுதல்; இதற்குப்பயன், இவரது இக்கடுந்தொழிலைக் கண்டு அதனாற் பெருவேட்கையையுணர்ந்து உறவினராயினும் அரசராயினுங் கூட்டுவிக்கக் கூடுதலாம். இது, ஆடவர்க்கே பெரும்பாலும் உரியதாம். அளவுக்கு விஞ்சின ஆசையின்மிகுதிப்பாட்டால் மகளிர்க்கும் சிறுபான்மை வரும்; அன்றியும், மடலூர்தல் ஆடவர்க்கே உரியதென்றும், மடலூர்வேனென்று சொல்லுதலும் எண்ணுதலும் மகளிர்க்கும் உரியதென்றும் உய்த்து உணர்க.

கனை - முதனிலைத்தொழிற்பெயர். கனைக்குளன் - இரண்டனுருபும் பயனுந்தொக்கதொகை; ஒலிக்கின்ற குளம் என வினைத்தொகையாயின், கனைகுளன் என வலி இயல்பாம். கடம் - வடசொல்; யானைக்கன்னத்தின் பெயர்: அதனினின்று வழியும் மதநீர்க்கு ஆகுபெயர். ஆனை - யானை யென்

பதன் மரூஉ; ஆளி, ஆடு, ஆமை, ஆர், ஆக்கை,ஆறு என்பனவும் இவ்வாறே. சிறந்ததை அரசென்றல், மரபு. அரசு - பண்பாகுபெயர். வேங்கடத்துக்குக் கடவுட்டன்மை - தன்னையடைந்தவர்களது தாபத்திரயத்தையும் ஒழித்தல்; இனி, (எல்லாக்கடவுளர்க்கும்) கடவுளாகிய வேங்கடத்தா னென்றுமாம். மின்-உவமவாகுபெயர்;ஒளிக்கும்,மென்மைக்கும் உவமை. உருகும் முதலிய செய்யுமென் முற்றுக்கள்,இங்கே பெண்பாற்கு வந்தன. ஊர்ந்திடவும், உம்மை - இழிவுசிறப்பு.

இது - இரண்டாங்கவிபோன்ற இருவிகற்பநேரிசைவெண்பா. அக்கவியில் ‘நிற்பர்பவ’ என்றதில் ரகரவொற்றுப்போல இங்கே ‘ஏங்கும்விழி’ என்னும் இரண்டாஞ்சீரில் வகரத்தின்முன் வந்த மகரக்குறுக்கம் அலகு பெறாமையை அறிக. (கச)

[மேகவிடுதூது.]

கரு. மின்கொண்டுபுனல்கொண்டுவிற்கொண்டுவருகின்ற மிகு கொண்டல்காள், தென்கொண்டல்வரவந்ததெய்வங்கரங்கொண்ட சிலைகோலியென், பொன்கொண்டவிருகொங்கைவரைமீதுசரமாரி பொழிமுன்னமே, மன்கொண்டபணிவெற்பில்வாழ்மாயர்தார்கொண்டுவம்மின்களே.

(இ - ள்.) மின் கொண்டு - மின்னலைத் தம்மிடத்தே கொண்டும்,புனல் கொண்டு - நீரை நிரம்ப முகந்து கொண்டும், வில் கொண்டு - இந்திர வில்லை ஏந்தியும், வருகின்ற - (ஆகாயத்தே) வருகின்ற, மிகு கொண்டல் காள் - மிகுந்த மேகங்களே!—தென் கொண்டல் வர-தெற்கிலிருந்து வரும் மந்தமாருதம் வீச, வந்த தெய்வம் - (அக்காற்றை வாகனமாகக் கொண்டு அதன்மேலேறி) வந்த(மன்மதனாகிய)தேவன், கரம் கொண்ட சிலை கோலி-(தன்) கையிலேகொண்ட கரும்புவில்லை வளைத்து, என் பொன் கொண்ட இரு கொங்கை வரைமீது -எனது பொன்னிறமான சுணங்கைக் கொண்ட இரண்டுதனங்களாகிய மலைகளின்மேல், சரம் மாரி பொழி முன்னமே - மலரம்பாகியமழையைச்சொரிதற்குமுன்பே, மன் கொண்ட பணி வெற்பில் வாழ் மாயர் தார் கொண்டு வம்மின்கள் - பெருமையைக் கொண்ட சேஷகிரியிலே வாழ்கின்ற எம்பெருமானது மாலையை வாங்கிக்கொண்டு வாருங்கள்; (எ - று.)

இது - தலைவி தலைவனிடம் மேகத்தைத் தூதுவிடுத்தது.

பொழிமுன்னம் கொண்டு வம்மின்கள் என்றதனால், மன்மதன் அம்பு மழையைப் பொழிந்துவிடுவானாயின் உயிர் உடலில் தங்காதென்றபடி. கொண்டல் - நீர்கொண்ட மேகம்; இது - கொள் என்பதனடியாகப் பிறந்த பெயர்போலும். இச்சொல் காற்றுக்கும் பெயராதலை, ‘‘குணக்கெழுகாற்று மேகமுங் கொண்டல்’’ என்பதனா லறிக. ‘தென் கொண்டல்’ எனவிசேடித்துக் கூறியதனால், கொண்டலென்பது - காற்றென்னு மாத்திரையாய் நின்றது. மன்மதனுக்குத் தென்றற்காற்றுத் தேராதலை, ‘‘செந்தமிழ்வரைதரு தேரன்,’’ ‘‘மாலைக்கிளிபுரவிமாருதந்தேர்’’ என்பவற்றாற் காண்க. பொன்-இங்கே, பிரிவினா லாகுந் தேமலுக்கு, உவமையாகுபெயர்; கருவியாகுபெயராய், பொன்னாபரணங்களை யணிந்த கொங்கை யெனவுமாம். வம்மின் - வா என்னும் பகுதியடியாகப் பிறந்த ஏவற்பன்மைமுற்று; கள் - விகுதிமேல் விகுதி. ஈற்றேகாரம் - இரக்கந்தோன்ற நின்றது.

இது - ஈற்றுச்சீரொன்று மாங்கனிச்சீரும், மற்றவை நான்கும் மாங்காய்ச்சீர்களு மாகிய கலிநிலைத்துறை. (கரு)

௧௬. கள்ளநெடுங்கயல்போல்வள்ளையில்வந்துவிழுங்
கண்கள்படைத்தமடப்பெண்கண்மயக்கமெனும்
வெள்ளமழுந்தெளியேனுள்ளமெழுந்தொருநின்
மென்பதவேலையில்வந்தின்புறுநாளுளதோ
தெள்ளுறுமறைவேரேயொள்ளியபைங்காரே
திரையடுசாயகனேதிருமகணாயகனே
யுள்ளுகிலார்க்கிருளேநள்ளுநர்கைப்பொருளே
யோங்கியசிலையானேவேங்கடமலையானே.

(இ - ள்.) தெள் உறு மறை வேரே - தெளிவான வேதங்களுக்கு மூலமாயுள்ளவனே! ஒள்ளிய பைங் காரே - பிரகாசத்தையுடைய பசுமையான காளமேகம் போன்றவனே! திரை அடு சாயகனே - கடலை அழிக்கத்தொடங்கிய அம்பையுடையவனே! திருமகள் நாயகனே - இலக்குமி கொழுநனே! உள்ளுகிலார்க்கு இருளே - (உன்னைத்) தியானஞ்செய்யாதவர்க்கு இருள்போலப் பொருள்களை விளங்கவொட்டாமற் செய்பவனே! நள்ளுநர் கைப்பொருளே - விரும்பும் அடியார்களுக்குக் கையிலுள்ள பொருள் போலச் சமயத்தில் வந்து உதவுபவனே! ஓங்கிய சிலையானே - உயர்ந்த (சார்ங்கமென்னும்) வில்லையுடையவனே! வேங்கடம் மலையானே - திருவேங்கடமலையில் எழுந்தருளியவனே! — கள்ளம் நெடு கயல் போல் - வஞ்சனையையுடைய நீண்ட கயல்மீன்போல, வள்ளையில் வந்து விழும் - வள்ளையிலைபோன்ற காதுகளிலே வந்துவிழுகின்ற, கண்கள் - கண்களை, படைத்த - பெற்ற, மட பெண்கள் - இளைய மங்கையரின் விஷயமான, மயக்கம் எனும் - காமமயக்கமென்கிற, வெள்ளம் - நீர்ப்பெருக்கிலே, அழுந்து - அமிழ்ந்துள்ள, எளியேன் உள்ளம் - எளியவனாகிய எனது மனம், எழுந்து - (அவ்வெள்ளத்தினின்றும் மேலே) எழுந்து, ஒரு நின் மெல் பதம் வேலையில் வந்து - ஒப்பற்ற உனது மெல்லிய திருவடியாகிய கரையிலே வந்து, இன்பு உறும் நாள் - பேரின்பத்தை அடைவதொரு நாளும், உளதோ - உண்டாகுமோ? (எ - று.)

அடியேன் சிற்றின்பவேட்கையைத் துறந்து பேரின்பவாழ்க்கையைப் பெறும்படி அருள்செய்யவேண்டுமெனப் பிரார்த்தித்தவாறும். கயல், கண்ணுக்கு - பிறழ்ச்சிபற்றி உவமை. அதற்குக் கள்ளம் என்றது - "யானோக்குங் காலை நிலனோக்கு நோக்காக்கால், தானோக்கி மெல்ல நகும்" என்பதிற் கூறியதுபோன்ற குறிப்புநோக்கத்தை; அதனை "கண்களவு கொள்ளுஞ் சிறுநோக்கம்" என்றதுங் காண்க: இனி, ஆடவரது மனத்தை அபகரிக்குந் தன்மையுமாம். கள்ளம் - தொழிற்பெயர்; கள் - பகுதி, அம் - விகுதி. வள்ளை யென்னுங் கொடியின்பெயர், அதன் இலைக்கு முதலாகுபெயர்; அது - இங்கே, காதிற்கு உவமையாகுபெயர்: எனவே, இருமடியாகுபெயராம். 'வள்ளையில் வந்துவிழுங் கண்கள்' என்றது காதளவும் நீண்ட கண்களென்றபடி. 'படைத்த' என்றதனால், செயற்கையழகினுஞ் சிறப்புடையதான இயற்கையழகின் இயல்பைக் கூறியவாறும். 'மடப் பெண்கள்' என்றது - மற்றையெல்லாப்பருவங்களினும் உயர்ந்ததாகிய மங்கைப் பருவத்தையுடைய மகளிரென்றபடி; இனி, மடம் - நாணம், அச்சம், பயிர்ப்பு என்னும் மற்றைப்பெண்குணங்கட்கும் உபலக்ஷணமாம். 'பதம்' என்றதனால், திருவடியே வீடாயிருக்குமென்றார்; இனி, பதம் - பரமபதமுமாம். வேதங்கள் கடவுளைப்போலவே நித்தியமாயினும், கடவுளால் ஆதியில் வெளியிடப்பட்டதனால், 'மறைவேரே' என்றார்; இனி, வேதங்களிற் கூறப்படும் மூலப்பொருளே எனவுமாம். பசுமைக்குங் கருமைக்கும் மிக்கவேறுபாடு கருதாமல், 'பைங்கார்' என்றார்; இங்ஙனம் அபேத

மாகக் கூறுதல், கவிசமயம்: இனி, பசுமை - குளிர்ச்சியாகவுமாம். ஜீவாத்மா பரமாத்மாக்களினது இயல்பை உள்ளபடி எவர்க்குந் தெரிவிப்பதனால், 'தெள்ளூறு மறை' எனப்பட்டது. வள்ளை - நீர்க்கொடியாதலால், 'கயல் போல் வள்ளையில் வந்து விழும்' என்றார்.

இது - முதல் மூன்று ஐந்து ஏழாஞ்சீர்கள் விளச்சீர்களும், மற்றை நான்கும் காய்ச்சீர்களு மாகிய எண்சீராசிரியவிருத்தம். இதில், வந்த எழுத்துக்கள் மீண்டுவந்தது - பிராசம் என்னுஞ் சொல்லணி. (௧௬)

௧௭. மலைவளைத்துமதில்வளைத்தபுரமெரித்தசிவனுடன்
மதுரமூறுகழைவளைத்துமலையும்வேள்வளைக்கநீ
ளலைவளைத்தகடல்வளைத்தவவனிகாணவுடலமே
யறவளைந்தபிறையிறைக்குமனல்வளைக்கவெருவியே
முலைவளைத்தபொன்னுநல்லமைவளைத்தகண்ணில்வீழ்
முத்துமாதர்திரள்வளைத்துமொழியுமந்தவம்பினாற்
றலைவளைப்புமுடையளாகியிவள்பதைத்தலறிவரோ
சக்கரத்திருக்கரத்தர்சர்ப்பவெற்பிலத்தரே.

(இ - ள்.) மலை வளைத்து-மகாமேருமலையாகிய வில்லை வணக்கி, மதில் வளைத்த புரம் எரித்த - மதில்கள் சூழ்ந்துள்ள திரிபுரத்தை எரியச் செய்த, சிவனுடன்-பரமசிவனோடு, மதுரம் ஊறு கழை வளைத்து மலையும்-இனிமை மிகுந்த கரும்பாகிய வில்லை வணக்கிப் போர்செய்த, வேள் - மன்மதன், வளைக்க-(போரின்பொருட்டு)நெருங்குதலாலும்,—நீள் அலை வளைத்த கடல் வளைத்த அவனி காண - நீண்ட அலைகள் மடங்கப் பெற்ற கடல்களினாற் சூழப்பட்டுள்ள நிலவுலகத்தார் யாவரும் காணும்படி, உடலமே அற வளைந்த பிறை இறைக்கும் அனல் - உடம்புமுழுவதும் நன்றாகவளைந்துள்ள பிறைச் சந்திரன் சொரிகின்ற (நிலவாகிய) நெருப்பு, வளைக்க - சுற்றிலும் நெருங்குதலாலும்,—இவள் இத்தலைவி, வெருவி - மிகப்பயந்து, முலை வளைத்த பொன்னும் - தனங்களின்மேற் சூழ்ந்த பசலையையும், நல்ல மை வளைந்த கண்ணில் வீழ் முத்தும் - சிறந்த மையை நன்றாக இடப்பெற்றுள்ள கண்களினின்றும் விழுகின்ற முத்துப்போன்ற நீர்த்துளிகளையும், மாதர் திரள் வளைத்து மொழியும் அந்த வம்பினால் தலை வளைப்பும் - ஊரிலுள்ள அயல் மகளிரது கூட்டம் வந்து சூழ்ந்து எடுத்துச் சொல்லுகின்ற பிரசித்தமான பழிமொழிகளினால் தலையிறக்கத்தையும், உடையள் ஆகி - உடையவளாய், பதைத்தல் - துடித்தலை,—சக்கரம் திரு கரத்தர்-சக்கராயுதத்தைத் தரித்த அழகிய திருக்கையை யுடையவராகிய, சர்ப்பவெற்பில் அத்தர்-சேஷாசலத்தி லெழுந்தருளியுள்ள சுவாமி, அறிவரோ?—(எ-று.)—அறிவாராயின் உடனே வந்திருப்பர்; அங்ஙனம் வாராமையால் அறியார்போலு மென்றபடி.

இது, பாங்கி இரங்கல்.

தாரகாசுரனது புத்திரர்களாகிய வித்யுந்மாலி தாரகாக்ஷன் கமலாக்ஷன் என்னும் மூவரும் மிக்க தவஞ்செய்து மயனென்பவனாற் சுவர்க்க மத்திய பாதாள மென்னும் மூன்றிடத்திலும் முறையே பசும்பொன் வெண்பொன் கரும்பொன்களால் அரண்வகுக்கப்பட்டு ஆகாயமார்க்கத்திற் சஞ்சரிக்குந்தன்மையையுடைய மூன்று பட்டணங்களைப் பெற்று மற்றும் பல அசுரர்களோடும் அந்நகரங்களுடனே தாம் நினைத்தவிடங்களிற் பறந்துசென்று பலவிடங்களையும் பாழாக்கிவருகையில், அத்துன்பத்தைப் பொறுக்கமாட்டாத தேவர் முனிவர் முதலியோரது வேண்டுகோளால், சிவபெருமான், பூமியைத் தேராகவும், சந்திர சூரியர்களைத் தேர்ச்சக்கரங்களாகவும், நான்கு வேதங்களைக் குதிரைகளாகவும், பிரமனைச் சாரதியாகவும், மகாமேருவை வில்லாகவும், ஆதிசேஷனை நாணாகவும், விஷ்ணு

வை வாயுவாகிய சிறகமைந்து அக்கினியை முனையாகவுடைய அம்பாக வும் மற்றைத் தேவர்களைப் பிற போர்க்கருவிகளாகவும் அமைத்துக்கொண்டு யுத்தசன்னத்தனாகிச் சென்று புன்சிரிப்புச்செய்து அசுரரானவரையும் அப்புன்சிரிப்பினாலாகிய நெருப்பினாற் பட்டணங்களோடு எரித்தருளினனென்பது. புரமெரித்த வரலாறு.

மதுரம் ஊறு - இனிப்பான சாறு மிகச் சுரக்கின்ற எனவுமாம். மன்மதனது ஒப்புயர்வில்லாத வில்வன்மை விளங்க, வலியமலையை வளைத்துப் பொருத சிவனோடு மெல்லியகரும்பை வளைத்துப்போர்செய்தவனென்றார். 'மலைவளைத்துப்புரமெரித்த' என்னும்அடைமொழி,சிவபெருமானது அகடிதகடநா சாமர்த்தியம் தோன்ற நின்றது. மலையும் வேள் - இயல்புபற்றிவந்த காலவழுவமைதி; உம்விகுதி - எதிர்காலமுணர்த்தாமல் தன்மையுணர்த்திற்றெனினும் அமையும்: இனி, மன்மதன் முன்னமே பரமசிவனால் எரிக்கப்பட்டாலும் அவனது போர்த்தொழில் சிவபிரானிடத்தே இன்னம் நிகழ்வதென்பது தோன்ற, 'மலையும்வேள்' என எதிர்காலமாகக் கூறியதாகவுங் கொள்ளலாம். வளைத்தல் - முற்றுகைசெய்தல். அவனி - ஆகுபெயர். பிறை இறைக்கும் அனல் என்றது, துணைவரோடு கூடியவர் யாவர்க்கும் தண்ணியதாயுள்ள சந்திரிகை அவரைப் பிரிந்தவர்களுக்கு வெவ்வியதாகத் தோன்று மாதலின். பொன் - அதன் நிறமான பசலைக்கு உவமையாகுபெயர். பசலையாவது - காமம் முதலியவற்றா லுண்டாகும் நிறவேறுபாடு. முத்து - உவமவாகுபெயர். காதலுணர்த்தும் 'மாதர்' என்னும் உரிச்சொல், விரும்பப்படும் மகளிர்க்குப் பண்பாகுபெயர். அந்த - சுட்டு, பிரசித்தியைக் காட்டிற்று; இனி,எனக்குஅழிவைச்செய்யும் அம்பெனவுமாம்: அந்தம்-இறுதி;வடசொல். தலைவளைப்பு-நாணத்தினாலுண்டாவது. விரோதிநிரஸநசீல ரென்பது தோன்ற 'சக்கரத்திருக்கரத்தர்' என்றும், கஜேந்திராழ்வானுக்கு ஆபத்துநேர்ந்த காலத்தில் எல்லாவுலகங்களுக்கும் சேய்மைத்தான பரமபதத்திலே எழுந்தருளி யிருந்தாற்போலன்றிக்கே இப்பொழுது நிலவுலகத்தில் அணித்தா யுள்ள திருவேங்கடமலையில் உள்ளவரென்பார் 'சர்ப்பவெற்பிலத்தர்'என்றுங்கூறினார். ஸர்ப்ப மென்னும் வடசொல்லுக்கு-ஓடுவதென்று பொருள். இதுகுப் பிறசொற்களாற் கூறாமல் 'சர்ப்பவெற்பு' என்றது, அவரெழுந்தருளியுள்ள இடமும் ஓடிவருந் தன்மையாகிய தோர் அசலமென்பது தொனித்தற்கு. அத்தர் என்னும் சொல், தலைவர் என்னும் பொருளோடு,அர்த்தர் என்பதன் விகாரமாய்ப் பொருளாசையினாற் பிரிந்து சென்றவ ரென்றும், இவளுடம்பின் பகுதியாயுள்ளவ ரென்றும் பொருள் பட நிற்கும். திரு என்பது - கண்டாரால் விரும்பப்படுந் தன்மை நோக்கம்; அழகு. •

இது - பெரும்பாலும் முதலாறுசீரும் மாச்சீர்களும், ஏழாஞ்சீரொன்று விளச்சீருமாய் வந்தது அரையடியாகவும், அஃது இரட்டி கொண்டது ஓரடியாகவு முள்ள பதினான்குசீராசிரியச்சந்தவிருத்தம்; எண்சீராசிரிய விருத்தமெனினும் இழுக்காது. இதில், நான்காமடியின் பிற்பாதியில், வல்லெழுத்தோசையே மிக்குவந்ததுங் காண்க. (௧௭)

௪௫. அத்தன்மலர்மகண்மேவுகத்தன் வடமலைவாழுமப்பனடி பணியாமலே, முத்திபெறன்முடியாது சித்தமிதுபலநூலை முற்றவறிதருநாவலீர், மைத்தவரையடுவீரவச்சிரதரனலர்வேதன் மத்தகரிமுகன்வேலின்வேள், சத்திபதியிவர்தாளினித்தம்விழுகினுமாறுதத்தமதுபதமீவரே.

(இ - ள்.) பல நூலை முற்ற அறிதரு நாவலீர் - அநேக சாஸ்திரங்களை முழுவதும் அறிந்த வித்துவான்களே!—அத்தன் - (யாவர்க்குந்) தலைவ

னும், மலர்மகள் மேவு - செந்தாமரை மலரில் வீற்றிருக்கின்ற திருமகள் தழுவிய, கத்தன் - (பிரபஞ்ச முழுவதுக்குஞ்) செய்பவனும், வட மலை வாழும் - வடக்கிலுள்ள திருவேங்கடமலையில் வாழ்கின்ற, அப்பன்-சுவாமியுமாகிய ஸ்ரீநிவாசனது, அடி - திருவடிகளை, பணியாமலே - வணங்காமல் தானே, முத்தி பெறல் - வீட்டுலகத்தைப் பெறுதல், முடியாது - கைகூடாது; சித்தம் இது - (எல்லா நூல்களிலும்) முடிந்த உண்மையான விஷயமாகும் இது; (தேவதாந்தர பஜனத்துக்குப் பயனேதென்னில்),—மைத்த வரை அடு வீர வச்சிர தரன் - கறுத்த மலைகளை அழித்த வீரத்தன்மையையுடைய வச்சிராயுதத்தைக் கையில் தரித்த தேவேந்திரனும், அலர் வேதன் - தாமரைமலரில் தோன்றிய பிரமதேவனும், மத்த கரி முகன் - மதம் பிடித்த யானையின் முகம்போன்ற முகத்தையுடைய விநாயகக்கடவுளும், வேலின் வேள் - வேலாயுதத்தை யுடைய சுப்பிரமணியக் கடவுளும், சத்தி பதி - சக்திவடிவமான உமாதேவிக்குத் தலைவனாகிய பரமசிவனும், இவர் - (ஆகிய) இவர்களது, தாளில் - பாதங்களில், நித்தம் - நாள்தோறும், விழுகினும் - (ஒருவர் சாஷ்டாங்கமாக) விழுந்து பணிந்தாலும், (அவர்கள் அவருக்கு), மாறு - (தம்மை வழிபட்டதற்குக்) கைம்மாறாக, தத்தமது பதம் ஈவரே - (சுவர்க்கம் முதலிய) தங்கள் தங்களது பதவியையே கொடுப்பார்கள்; (எ - று.)—முத்திதர வல்லரல்ல ரென்றபடி.

கத்தன்-கர்த்தா என்னும் வடசொல்லின் திரிபு. 'மலர்மகள்மேவு' என்னும் அடைமொழியை இங்கே கொடுத்தது, புருஷகாரபூதையாகிய பிராட்டியினது அணிமையைப் புலப்படுத்தற்கென்க. 'பணியாமலே' என்னும் பிரிநிலை யேகாரம், வேறு உபாயங்களால் என்னும் பொருளைத் தந்தது. முத்தி-முக்தி; (இவ்வுலகப்பற்றுக்களை அறவிட்டு அடையத்தக்க இடமென்று பொருள். நாவலீர் - நாவலர் என்பதன் விளி; ஈற்றயல் திரிந்தது - விளியுருபு. நாவலர்-நாவினாற் பாடல் பாடவும் பிரசங்கஞ் செய்யவும் வல்லவர். வில்லையுடைய காமவேளை விலக்குதற்கு, 'வேலின்வேள்' என்றார். நித்தம் - நித்யம். விழுகின், கு-சாரியை. உம்மை, விழலாகாமையை விளக்கிற்று. இனி, மாறுபதம்-எந்நாளும் அழியாததும், அடைந்தவர் மீண்டுவரப் பெறாததும், அளவுகடந்த ஆனந்தத்தைத் தருவது மாகிய ஸ்ரீவைகுண்டம்போலன்றிக்கே, அழிவுடையதும் அடைந்தவர் மீண்டுவரப் பெறுவதும், அளவுபட்ட ஆனந்தத்தைத் தருவதுமாய் மாறுபட்ட பதவியென்றுமாம். பிரிநிலைப்பொருளதாகிய ஈற்றேகாரம், பிரித்துக் கூட்டப்பட்டது. நூல்-சாஸ்திரத்துக்கு உவமவாகுபெயர்; பஞ்சினால் நூற்கப்படும் நூல்போலச் சொல்லாற் கோக்கப்படுதலாலும், நூல் மரம்முதலியவற்றின் கோணலைத் தீர்ப்பதுபோல மனத்தின் கோணலைத் தீர்த்துச் செப்பஞ்செய்தலாலும் வந்த பெயரென்று அறிக. பலம்நூல் எனப்பிரிந்து - பயன்படும் நூலெனினுமாம்; நலம் - வலிமையுமாம்.

'வரையடு வச்சிரதரன்' என்பதன் வரலாறு:—முன்காலத்தில் மலைகளெல்லாம் பறவைகள்போல இருபுறத்தும் இறகுடையனவாயிருந்து அவற்றாற் பூமியினின்று ஆகாயத்தில் எழும்பிப் பறந்து திரிந்து தாம் நினைத்த இடங்களில் உட்கார்ந்து பல இடங்களையும் பாழாக்கிவருகையில், அதனை முனிவர்களால் அறிந்த மூவுலகங்களுக்குந் தலைவனாகிய தேவேந்திரன் சினந்து தனது வச்சிராயுதத்தினால் அவற்றின் இறகுகளை அறுத்துத் தள்ளினனென்பது.

இது - பெரும்பாலும் முதல் மூன்று ஐந்தாஞ் சீர்கள் கூவிளங்காயாகவும், இரண்டு நான்காஞ்சீர்கள் புளிமாங்காயாகவும், ஆறாவது புளிமாங்கனியாகவும் வந்த அறுசீராசிரியச்சந்தவிருத்தம். (கஅ)

[அம்மானை.]

௧௯. பதமலரா ற்சகடுதைத்தபரமர்வடமலைமாய
ரதிகுணத்திந்நிலமகண்மேலாசையுள்ளோரம்மானை
யதிகுணத்திந்நிலமகண்மேலாசையுள்ளோராமாகின்
மதிநுதலினவளைவிடமாட்டாரோவம்மானை
மாட்டார்மாதரைவிடத்தான்மாலானாரம்மானை.

(இ - ள்.) பதம் மலரால் - (தமது) திருவடித்தாமரைமலர்களால், சகடு உதைத்த - சகடாசுரனை உதைத்து ஒழித்த, பரமர் - (யாவரினும்) சிறந்தவராகிய, வட மலை மாயர் - வடக்கிலுள்ள திருவேங்கடமலையி லெழுந்தருளிய ஆச்சரியகரமான குணங்களையுஞ் செயல்களையு முடைய எம்பெருமான், அதி குணத்து இ நிலம் மகள்மேல் - மிக்க நற்குணங்களையுடைய இந்தப் பூமிதேவியினிடத்து, ஆசை உள்ளோர் - விருப்ப முடையவர்; அம்மானை—; அதி குணத்து இ நிலம்மகள் மேல் ஆசை உள்ளோர் ஆம் ஆகில்- மிகுந்த குணங்களை யுடைய இந்தப் பூமிப்பிராட்டியின்பக்கல் ஆசையுடையவ ராயவரானால், மதி நுதலின வளை விடமாட்டாரோ - அர்த்தசந்திரன் போன்ற நெற்றியையுடைய ஸ்ரீதேவியை விட்டிடமாட்டாரோ? அம்மானை—; மாதரை விடத்தான் மாட்டார்-அந்தத் திருமாதையும் விடவேமாட்டார்; (ஏனெனில்), மால் ஆனார் - (அவளிடத்தும்) மிகுந்த வியாமோக முடையவரானார் [திருமாலென்பவரானார்], (ஆதலால்); அம்மானை—; (எ-று.)

மூன்றுமங்கையர் அம்மானையாடும்பொழுது பிரபந்தத்தலைவனது தன்மையை வார்த்தையாடுவது, அம்மானையென்னும் உறுப்பின் இலக்கணம்.

இதில், மாதரைவிடத்தான்மாலானார் என்பதனால்-மகளிர்களைக்காட்டிலும் தாம் மோகமுடையவ ரென்றும் பொருள்படும். மால் - வேட்கை மயக்கம். மாட்டு ஆர் எனப் பதம்பிரித்து - தம்பக்கல் பொருந்திய மகளிரை விட என்றுமாம். மிகவும் மெல்லிய பதமலரினால் மிகவும் வலிய சகடத்தை உதைத்தொழித்தா ரென்றதற்கு ஏற்ப,உடனே 'மாயர்'என்றார். இதில், சொற்போக்கால் இரண்டு மல்லர்களைக் கொண்டு சகடத்தை உதைத்தவ ரென்னும்பொருளுந் தொனிக்கும். அதிகுணம் என்றது, தெரிவரும் பெருமையும் திண்மையும் பொறையும் பருவமுயற்சி யளவிற்பயத்தலும் போய்ச் சார்ந்தோரை இடுதலும் எடுத்தலும் முதலியவற்றை. இ - அண்மை.

இது, எல்லாச்சீருங் காய்ச்சீர்களாகிய நான்கடிகளால் தனித்துவந்து ஈற்றடிஎண்சீராய்மிக்கு ஏனையடிகள்நாற்சீராய்நின்ற கலித்தாழிசை. (௧௯)

[தவம்.]

௨௦. மானிடர்காள் கானிலுடல் வாடப் பெருந்தவஞ்செய்
தேனிடருற் றீர்பணிவெற் பெம்பெருமான்—றானே
தவமதுவே வீசுதுழாய்த் தாமனடி யுள்ளின்
தவமதுவே யாவருக்குந் தான்.

(இ - ள்.) மானிடர்காள் - மனிதர்களே!—(நீங்கள்), கானில் - காட்டிலே யிருந்து, உடல் வாட - உடம்பு வருந்தும்படி, பெரு தவம் செய்து - பெரிய தவத்தைப் பண்ணி, ஏன் இடர் உற்றீர் - ஏன் துன்பப்பட்டீர்கள்? பணி வெற்பு - சேஷகிரியி லெழுந்தருளிய, எம் பெருமான் - எமக்குத் தலைவனும், தானே தவ மதுவே வீசு துழாய் தாமன் - தானாகவே மிகுதியாகத் தேனையே சொரிகின்ற திருத்துழாய்மாலையை யுடையவனுமாகிய ஸ்ரீநிவாசனது, அடி - திருவடிகளை, உள்ளின் - தியானித்தால், அது தானே-அந்தத் தியானமே, யாவருக்கும் - எல்லோர்க்கும், தவம்-(சிறந்த) தவமாம். (எ-று.)

தவத்தை விலக்கிப் பகவத்தியானத்தை வற்புறுத்தல், தவம் என்னும் உறுப்பின் இலக்கணமாம். பகவத்பிராப்திக்கு விரோதியான சரீரசம்பந்தாதிகளை அறுத்துக்கழித்து எம்பெருமானைப் பெறவேண்டுமென்று "தொன்னெறியைவேண்டுவார் வீழ்கனியு மூழிலையு, மென்னுமிவையேநுகர்ந்துடலந் தாம்வருந்தித், துன்னு மிலைக்குரம்பைத் துஞ்சியும் வெஞ்சுடரோன், மன்னுமழனுகர்ந்தும்வண்டடத்தினுட்கிடந்து,மின்னதோர்தன்மையராய்" என்கிறபடியே சரீரத்தை ஒறுத்துத் தவஞ்செய்து வருந்தல் வேண்டா, அடியார்கள்பக்கல் மிக்க அருளுடையவனாகிய எமது திருவேங்கடமுடையானைச் சென்று சேர்ந்து சகல விரோதிகளும் போகப்பெறவீர்களென்று பரோபதேசம் பண்ணுகிறார்; "காயோடு நீடுகனியுண்டு வீசு கடுங்கானுகர்ந்து நெடுங்காலமைந்து, தீயோடுநின்று தவஞ்செய்யவேண்டா திருமார்பனைச் சிந்தையுள்வைத்துமென்பீர், *** தில்லைத் திருச்சித்திரகூடஞ் சென்றுசேர்மின்களே" என்றார் திருமங்கையாழ்வாரும்.

மானிடர் - மானுஷர்; மனுவின் சந்ததியார்: கள் - விகுதிமேல்விகுதி; ஈற்றயல் நீண்டது - விளியுருபு. என்-எவனென்னும் அஃறிணைப் பெயரின் விகாரம். தவ - மிகுதி யுணர்த்தும் உரிச்சொல்; "உறு தவ நனியென வரூஉ மூன்றும், மிகுதி செய்யும் பொருள வென்ப."

இது-நாளென்னும்வாய்பாட்டால்முடிந்தஇருவிகற்பநேரிசைவெண்பா.

இதில் பின்னிரண்டடிகளில் முதலைந்து எழுத்தும் ஒற்றுமைப்பட்டு வந்தது, யமக மென்னுஞ் சொல்லலங்காரமாம். (௨0)

௨௧. யாவருக்கிந்தப்பெருமையுண்டோதுகவின்னுயிர்காண்
மாவருக்கைத்திரள்பொற்குடந்தூங்குவடமலைவாழ்
தேவருக்காட்பட்டுவைகுந்தமேவித்தினமிருப்போர்
பூவருக்கம்பொருதாட்கீழ்ப்படுமெப்புவனமுமே.

(இ - ள்.) இன் உயிர்காள் - இனிமையான உயிர்களே!—எ புவனமும்- எல்லாவுலகங்களும்,—மா வருக்கை திரள் - பெரிய பலாப்பழங்களின் கூட்டம், பொன் குடம் தூங்கும - சுவர்ணமயமான குடங்கள்போலத் தொங்குதற் கிடமான, வட மலை - வடவேங்கடமலையில், வாழ் - வாழ்கின்ற, தேவருக்கு - எம்பெருமானுக்கு, ஆள் பட்டு - அடிமையாகி, வைகுந்தம் மேவி - ஸ்ரீவைகுண்டலோகத்தை அடைந்து, தினம் இருப்போர் - எந்நாளும் (அழிவில்லாமல்) இருப்பவர்களாகிய பாகவதர்களது, பூ வருக்கம் பொரு தாள் கீழ் படும்-தாமரைப்பூவினினத்தோடு எதிர்த்துப் போர்செய்கின்ற [ஒக்கின்ற] திருவடிகளின் கீழ்ப்படும்; (ஆதலால்), யாவருக்கு இந்த பெருமை உண்டு - வேறு எந்தக் கடவுளுக்குத்தான் இப்படிப்பட்ட மகிமைஉள்ளது?[எவர்க்கும் இல்லையென்றபடி];ஓதுக-சொல்வீராக;(எ-று)

'யாவருக் கிந்தப் பெருமையுண்டு' என்பதற்கு - வேறெந்தக் கடவுளது அடியாருக்குத்தான் இவ்வடியார்க்குஉள்ள பெருமை உண்டு? என்றும் உரைக்கலாம். வருக்கை என்னும் பலாமரத்தின் பெயர், அதன் பழத்துக்கு முதலாகுபெயர். பொற்குடம் - பலாப்பழத்துக்கு, பசுமைநிறம்பற்றிய உவமை. மாவருக்கை - பண்புத்தொகை; உம்மைத்தொகையாய், மாம்பழங்களின் திரளும், பலாப்பழங்களின் திரளுமெனினுமாம். தூங்குதல்-தொங்குதலென்னும் பொருளதாதலை, "தூங்குசிறைவாவல்" எனச் சிந்தாமணியிலுங் காண்க. வைகுந்தம் - வடமொழித்திரிபு. வருக்கம் - வர்க்கம்; வடசொல். பொரு - உவமவுருபுமாம். எல்லாவுலகத்துக்கும் பாகவதரது திருவடி மேம்பட்ட தென்பது, ஈற்றடியின்கருத்து; "பெரிது பெரிது புவனம் பெரிது, * * * தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே" என்றார் ஔவையாரும். உயிர்காள் - பிராணிகளே என்றபடி.

இது - நேரசைத்தொடக்கத்துக் கட்டளைக்கலித்துறை. (௨௧)

௨௨. புவனமுழுதும்பணியுமிருசரணபுண்டரிகர்பொறியளிகள் கிண்டுதுளவா, ரவனிமகள்செங்கமலமகள்கணவர்தங்குகிரி யழகுதிகழுங்குழையில்வீழ், குவளைவிழியின்குறவர்மடமகளிர்செங்கைவிரல்கொளுவியகவண்கல்படவே, நவமணம்வழங்குசுரதருமலருதிர்ந்துவிழுநலமலிபுயங்ககிரியே.

(இ - ள்.) புவனம் முழுதும் பணியும் - எல்லாவுலகங்களிலு முள்ளார் யாவரும் வணங்குகின்ற, இரு சரண புண்டரிகர் - இரண்டு திருவடித் தாமரை மலர்களை யுடையவரும், பொறி அளிகள் கிண்டு துளவார் - புள்ளிகளையுடைய வண்டுகள் நெருங்கி மொய்க்கின்ற திருத்துழாய்மாலையையுடையவரும், அவனி மகள் செம் கமலம் மகள் கணவர் - பூமிப்பிராட்டியும் செந்தாமரைமலரில் வீற்றிருக்கிற பெரியபிராட்டியும்என்னும் இவர்களது கொழுநரும் ஆகிய எம்பெருமான், தங்கு - (திருவுள்ள முவந்து) எழுந்தருளியிருக்கின்ற, கிரி - மலை, (யாதென்னில்),—அழகு திகழும் - அழகு விளங்குகின்ற, குழையில் வீழ் - காதணியிலே விழுகின்ற, குவளை விழி-நீலோற்பல மலர் போலுங் கண்களையுடைய, இன் - இனிய, மடம் - இளமையையுடைய, குறவர் மகளிர் - குறத்தியர், செம் கை விரல் கொளுவிய - சிவந்த கைகளின் விரல்களினால் (விளையாட்டாக) உயர எடுத்து எறிந்த, கவண் கல் - கவண்கற்கள், படவே - (மேலே) படுதலாலே, நவ மணம் வழங்கு சுர தரு மலர் உதிர்ந்து விழும் - புதிய வாசனையை வீசுகின்ற தேவலோகத்துக் கற்பகவிருக்ஷங்களின் மலர்கள் உதிர்ந்து விழப்பெற்ற, நலம் மலி - அழகு மிக்க, புயங்க கிரியே - சேஷாசலமேயாம் ; (எ - று.)

இது - பிரயாணங்களுக்கு உரிய ஊர் என்னுந் துறையின்பாற் படும்.

புவனம் - இடவாகுபெயர். புண்டரீகம் என்பது வெண்டாமரைக்குப் பெயராக வடமொழிநிகண்டினுட் கூறப்பட்டிருப்பினும், இங்கே எம்பெருமானது செய்ய திருவடிகட்கு உவமை கூறப்பட்டதனால், தகுதிநோக்கி, செந்தாமரை மலரெனக் கொள்ளத்தக்கது ; 'புண்டரீகாக்ஷன்' என்னுமிடத்துப் போல. திருவடிக்குத்தாமரைமலர், செம்மை மென்மை தண்மை அழகுகளால் உவமை. காதளவும் நீண்ட கண் என்பார், 'குழையில்வீழ்விழி' என்றார். விழிக்குக் குவளைமலர், கருமை மென்மை தண்மை அழகுகளால் உவமை. குறவர் - குறிஞ்சிநிலமக்கள். கவண்கல் - கயிற்றினா லெறி கல். சுரர் - பாற்கடலில் தோன்றியதொரு சுரையை [மதுவை] ப் பானஞ்செய்தவர். பின்னிரண்டடியிற் கூறிய வருணனையால், மலையினது உயர்ச்சி தொனிக்கின்றது.

இது - முதல் மூன்று ஐந்தாஞ் சீர்கள் கருவிளங்காய்ச் சீர்களும், இரண்டு நான்காஞ் சீர்கள் கூவிளங்காய்ச் சீர்களும், ஆறாவது தேமாச்சீரும், ஏழாவது புளிமாச்சீரு மாகிய எழுசீராசிரியவிருத்தம். (௨௨)

௨௩. கிரிச்சிலையரன்பலியொழித்தவனெடுந்துயர் கெடுத்தவனடுஞ்சிலையே, தரித்தவனிருங்கடல்கொதித்திடமுனம்பொரு சரத்தவனுறைந்தருளூர், மருக்கமழ்தடம்பொழி லுதிர்த்திடுபழம்பொழி மதுத்திரடினந்தினமே, தெருத்தொறுநடந்தகல்வபற்றலைபுகுந்திடு திருப்பதிவளம்பதியே.

(இ - ள்.) கிரி - மகாமேருமலையை, சிலை - வில்லாகக் கொண்ட, அரன் - பரமசிவனுடைய, பலி - பிக்ஷாடனத்தை, ஒழித்து - நீக்கி, அவன் நெடுந்துயர் கெடுத்தவன் - (அப்பிச்சையெடுத்தலினா லாகிய)அச் சிவனது மிகுந்த

துன்பத்தை முற்றும் ஒழித்தருளினவனும், அடும் சிலையே தரித்தவன் - (பகைவர்களைக்) கொல்லவல்லதொரு வில்லையே தரித்தவனும், இரு கடல் கொதித்திட முனம் பொரு சரத்தவன் - பெரிய சமுத்திரம் கொதிக்கும் படி முன்னே பிரயோகிக்கத் தொடங்கிய ஆக்கினேயாஸ்திரத்தை யுடைய வனும் ஆகிய எம்பெருமான், உறைதருள் - (திருவுள்ள முவந்து) வசித் தருளுகின்ற, ஊர் - நாடு. (எதுவென்றால்),—மரு கமழ் - வாசனை வீசுகின்ற, தட பொழில் - பெரிய சோலைகளிலுள்ள மரங்கள், உதிர்த்திடு - (கீழே) சிந்து கின்ற, பழம் - பழங்கள், பொழி - சொரிகின்ற, மது திரள் - தேனின் பெருக்கு, தினம் தினமே - நாள் தோறுமே, தெரு தொறும் நடந்து - வீதி களி லெல்லாம் சென்று, (அவற்றின் வழியாக), அகல் வயல்தலை புகுந்திடு - விசாலமான கழனிகளிலே பிரவேசித்துப் பாய்கின்ற, திருப்பதி வளம் பதியே - (எல்லா) வளங்களையு முடைய திருப்பதியென்னும் திவ்விய தேச மேயாம்; (எ - று.)—இதுவும், ஊர் என்னும் துறை.

பரமசிவன் தன்னைப்போலவே பிரமனும் ஐந்து சிரமுடையனா யிருப்பது பலரும்பார்த்து மயங்குதற்கிடமாயிருக்கின்றதெனக் கருதி அவனது சிரங்களி லொன்றைக் கிள்ளியிட, அக்கபாலம் அப்படியே அவன்கையில் ஒட்டிக்கொள்ளுதலும், இதற்கு என் செய்வதென்று அலமர, தேவர்களும் முனிவர்களும் 'இந்தப் பாவந் தொலையப் பிச்சையெடுக்கவேண்டும்; என்றைக்கு இக் கபாலம் நிறையுமோ, அன்றைக்கே இது கையை விட்டு அகலும்' என்று உரைக்க, அங்ஙனமே சிவபிரான் பலகாலம் பல தலங்களிலும் சென்று பிச்சை யேற்று வருந்தித் திரிந்தும் அக்கபாலம் நிறைந்து நீங்காதாக, ஒருநாள் ஸ்ரீமகாவிஷ்ணுவை அடைந்து ஏற்ற போது, அவர் 'அக்ஷயம்' என்று பிச்சை யிட, உடனே அது நிறைந்து கையை விட்டு அகன்றதென்பது, அரன்பலியொழித்த வரலாறு.

சிலை ஏ தரித்தவன் எனப் பிரித்து - வில்லையும் அம்பையும் கைகளில் தரித்தவன் என்றும் பொருள்கொள்ளலாம். வயற்றலை, தலை - ஏழனுருபு. திருப்பதி யென்று திருவேங்கடத்துக்கு ஒரு பெயர்; சிறந்த ஸ்தல மென்று பொருள். பின் இரண்டடியிற் கூறிய வருணனை, அப் பதியினது நீர்வள நிலவளங்களை உணர்த்திற்று. பொழில் - ஆகுபெயர்.

இது - முதலெந்தும் கருவிளச்சீர்களும், ஆறாவது கருவிளங்காய்ச் சீரு மாகிய அறுசீராசிரியச்சந்தவிருத்தம். (உ௩)

உச. பதின்மர்செந்தமிழைப்படிக்கிலாய்கேளாய் படித்தபேர்
தாளையும்பணியா, யெதிபதிசரணேசரணமென்றொருகாலிசைக்கி
லா யெமதுவேங்கடத்தைத், துதிசெயாயிருந்தவிடத்திருந்தேனுந்
தொழுகிலாய்வாழியென்மனனே, மதிநுதலலர்மேன்மங்கைநாயக
னார்மலர்ப்பதங்கிடைப்பதெவ்விதமே.

(இ - ள்.) என் மனனே - என்னுடைய நெஞ்சே! (நீ),—பதின்மர் செம் தமிழை - பத்து ஆழ்வார்கள் பாடி யருளிய சுத்தமான தமிழ்ப்பிரபந்தங் களை, படிக்கிலாய் - படிக்கமாட்டாய்; கேளாய் - (காதினாற்) கேட்கவும் மாட்டாய்; படித்த பேர் தாளையும் பணியாய் - (அப் பிரபந்தங்களை) ஓதிய வர்களது திருவடிகளை வணங்கவும்மாட்டாய்; எதிபதி சரணே சரணம் என்று - சந்யாசிகளுக்குத் தலைவராகிய ஸ்ரீபாஷ்யகாரரது திருவடிகளே நமக்கு ரக்ஷக மென்று, ஒரு கால் இசைக்கிலாய் - ஒருதரமாகிலும் சொல்ல வும் மாட்டாய்; எமது வேங்கடத்தை - எங்கள் திருவேங்கடமலையை, துதி செயாய் - தோத்திரஞ் செய்ய மாட்டாய்; இருந்த இடத்து இருந் தேனும் தொழுகிலாய் - (அங்குச் செல்லாவிடினும்) இருந்த இடத்திலே இருந்தாயினும் வணங்கவும் மாட்டாய்; வாழி - வாழ்வாயாக; (இப்படிப்

பட்ட உனக்கு), மதி நுதல் அலர்மேல் மங்கை நாயகனார் மலர் பதம் கிடைப்பது - பாதிச் சந்திரன் போன்ற நெற்றியை யுடைய அலர்மேன்மங்கை யென்னும் நாய்ச்சியாருக்குக் கொழுநராகிய எம்பெருமானது தாமரைமலர் போலுந் திருவடி கிடைப்பது, என் விதம் - எவ்வாறு? (சொல்வா யென்றபடி).

யதி, எதி என யகரம் எகரமாகத் திரிந்தது. துதி - ஸ்துதி. வாழி என்றது, இகழ்ச்சி தோன்றக் கூறியது. இனி, இவ்வா றிராமல் பதின்மர் தமிழைப் படித்தல் முதலிய உபாயங்களைச் செய்து எம்பெருமானது திருவடியைப் பெறுவா யென்று நெஞ்சிற்கு உபதேசித்தபடி. தமது பரம்பரையாரைக் கூட்டி, உளப்பாட்டுத்தன்மைப்பன்மையாக, 'எமது வேங்கடம்' என்றார். பேர் - பெயரென்பதன் மரூஉ.

இது - பெரும்பாலும் முதல் மூன்று ஐந்து ஆறாஞ் சீர்கள் விளச்சீர்களும், மற்றை மூன்றும் மாச்சீர்களு மாகிய எழுசீராசிரியவிருத்தம். (௨௪)

[இரங்கல்.]

௨௫. மேகந்தவழ்காவேவளர்நாகங்கமழ்பூவே
வேலைக்கெழுதிரையேயறல்சாலத்திகழ்கரையே
யேகும்படவினமேகழிபோகுங்களியனமே
யிளமைச்சிறுகயலேயெனதுளமிக்கதுமயலே
யாகந்துளவணிவார்தினமாகம்புவிபணிவா
ரணிபொற்றுகிலுடையாருயர்பணிவெற்பினையுடையார்
மாகந்தரவுருவார்வருமோகங்கெடமருவார்
மனமுந்தரியாதேயவர்சினமுந்தெரியாதே.

(இ - ள்.) மேகம் தவழ் காவே - மேகங்கள் தவழப்பெற்ற [மிகவும் உயர்ந்த] சோலையே! வளர் நாகம் கமழ் பூவே - (ஓங்கி) வளர்ந்த சுரபுன்னை மரத்தினது வாசனை வீசுகின்ற மலரே! வேலை செழு திரையே - கடலினது விளங்குகின்ற அலையே! அறல் சால திகழ் கரையே - கரு மணல் மிகுதியாக விளங்கப் பெற்ற கடற்கரையே! ஏகும் படவு இனமே - செல்லுகின்ற படகுகளின் கூட்டமே! கழி போகும் களி அனமே - உப்புக் கழிகளிலே செல்லுகின்ற களிப்பையுடைய அன்னப்பறவையே! இளமை சிறு கயலே - இளம்பருவத்தையுடைய சிறிய கயலென்னும் மீனே!—எனது உளம் மயல் மிக்கது - என்னுடைய மனத்தில் காமமயக்கம் மிகுந்தது; ஆகம் துளவு அணிவார் - மார்பில் திருத்துழாய்மாலையைத் தரிப்பவரும், தினம் மா கம் புவி பணிவார் - நாள்தோறும் பெரிய வானுலகத்தி லுள்ளாராலும் நிலவுலகத்தாராலும் வணங்கப்படுபவரும், அணி பொன் துகில் உடையார் - அழகிய பொன்மயமான பீதாம்பரத்தை உடுக்கும்ஆடையாக உடையவரும், உயர் பணி வெற்பினை உடையார் - உயர்ந்த சேஷகிரியை இடமாக உடையவரும், மா கந்தரம் உருவார் - பெரிய காளமேகம்போன்ற திருமேனி நிறத்தை யுடையவரும் ஆகிய எம்பெருமான், வரு மோகம் கெட - (மேன்மேல்) வளர்கின்ற எனது வேட்கைமயக்கந் தீரும்படி, மருவார் - (என்னை வந்து) கூடுகின்றா ரில்லை; (ஆதலால்), மனமும் தரியாதே - (எனது) மனமும் ஒருநிலைப் படுவ தில்லை; அவர் சினமும் தெரியாதே - அத் தலைவரது கோபத்திற்குக் காரணமும் தெரியவில்லை; (எ - று.)

இது - தலைவனைப் பிரிந்துறைகின்ற தலைமகள் நெய்தல்நிலத்திலுள்ள பொருள்களை நோக்கித் தான் படும் வருத்தங் கூறி இரங்கியது.

இங்கே, கேளாதவை கேட்பன போலக் கூறப்பட்டன; மரபுவழுவமைதி. வேலைக்கு எழு எனப் பிரித்து, கடலிலே எழுகின்ற அலையே என்று

மாம்; வேலைக்கு - உருபு மயக்கம்: "கிழங்கு மணற்கீன்ற முளை" என்பதிற் போல. கந்தரம் - நீரைத் தரிப்பது; மேகம்: கம் - நீர்.

இது - நான்கு எட்டாஞ் சீர்கள் மாச்சீர்களும், மற்றவை மாங்கனிச் சீர்களுமாகிய எண்சீராசிரியவிருத்தம். (௨௫)

[இதுவும் இரங்கல்.]

௨௬. தெரியாமன்மதுவருந்துஞ்சிறையளியைத்தூதுவிட்டேன்
றரியாழிவேங்கடமாறனக்கென்மால்சாற்றுமற்
கரியானங்கவன்கரங்கால்கண்கனிவாய்கமலமெனப்
பரியாநின்றவைக்கெதிரேபறந்தென்னையுமறந்ததுவே.

(இ - ள்.) மது அருந்தும் - தேனைக்குடிக்கின்ற, சிறை அளியை - இறகுகளை யுடைய வண்டை, தெரியாமல் - ஆலோசியாமல், தூது விட்டேன் - (தலைவனிடம்) தூதாக அனுப்பினேன்; (அவ்வண்டு), தரி ஆழி வேங்கடம் மால்தனக்கு - ஏந்திய சக்கரத்தை யுடைய திருவேங்கடத்தி லெழுந்தருளிய திருமாலுக்கு, என் மால் சாற்றுமல் - எனது மோகத்தைச் சொல்லாமல், அங்கு - அத்திருவேங்கடமலையில், கரியான் அவன் - கருநிற முடைய அப்பெருமானது, கரம் - திருக்கைகளையும், கால் - திருவடிகளையும், கண் - திருக்கண்களையும், கனி வாய் - கொவ்வைக்கனி போன்ற திருவாயையும், கமலம் என - தாமரை மலரென்று கருதி, பரியாநின்று - (அவற்றினிடத்து) அன்புகொண்டு, அவைக்கு எதிரே பறந்து - அத்திருவவயவங்களுக்கு எதிரிலே பறந்து திரிந்துகொண்டு, எனையும் மறந்ததுவே - (அனுப்பிய) என்னையும் மறந்துவிட்டதே! (எ - று.)

இது - வண்டைத் தலைமகனிடம் தூதுவிடுத்த தலைமகள் அது மீண்டு வாராதாகத் தோழிமாரை நோக்கி இரங்கிக் கூறியது.

தெரியாமல் மது அருந்தும் என இயைத்து, (அறிவு) தெரியாதபடி மதுபானஞ்செய்து மயங்குகிற வண்டென்றும், (மயக்கந் தருவதென்று) அறியாமல் மதுவைக் குடித்துக் களிக்கின்ற வண் டென்றுமாம். கனிவாய் - உவமைத்தொகை; வினைத்தொகையாய், கண்டவர் மன முருகுவதற்குக் காரணமான வாயெனவுமாம். பரியாநின்று - நிகழ்கால வினையெச்சம். 'என்னையும் மறந்தது' என்ற உம்மையால், தன்னையும் மறந்து பரவசமாயிற்று என்னும் பொருள் பெறப்படும். ஈற்றேகாரம் - இரக்கம்.

இது - பதினோராங்கவிபோன்ற கோச்சகக்கலிப்பா. (௨௬)

[மறம்.]

௨௭. மறவர்கொம்பைவினவவந்தவிறைவர்தூதகேளடா
வடமலைக்குணின்றமாயர்தடமலர்க்கணருளினால்
விறல்பொருந்துமெங்கள்கொம்புவீறுமுங்களானையின்
வெண்மைபெற்றகொம்புபோலவிற்பதோவரைந்திடுந்
திறனடைந்தகொம்புபோலவிதியினெவ்வினத்தையுஞ்
சேருமோசுவர்க்கலோகதாருவிட்டகொம்புபோ
லறமிகுந்தசுரர்தொடப்பொறுக்குமோசொலரசர்பா
லானகொம்புதண்டிகைக்கமைந்தகொம்புசரதமே.

(இ - ள்.) மறவர் கொம்பை - வேடச்சாதியராகிய எங்களது பூங்கொம்பு போன்ற மகளை, வினவ வந்த - (கலியாணத்தின்பொருட்டுக்) கேட்க வந்த, இறைவர் தூத - அரசரது தூதனே! கேள் அடா - (யான் சொல்வதைக்) கேட்பாயாக; வட மலைக்குள் நின்ற மாயர் - வடக்கிலுள்ள திருவேங்கட மலையினிடத்தே எழுந்தருளிநின்ற ஆச்சரியகரமான குணங்களை யுடைய எம்

பெருமானது, தட மலர் கண் அருளினால் - பெரிய தாமரைமலர்போலுந் திருக்கண்களின் கடாக்ஷவீக்ஷணத்தினா லுண்டான கருணையினாலே, விறல் பொருந்தும் - மகிமை பெற்ற, எங்கள் - எங்களுடைய, கொம்பு - பூங்கொம்பு [மகள்], வீறும் உங்கள் ஆனையின் வெண்மை பெற்ற கொம்பு போல - பெருமைபெற்ற உனது அரசர்களுக்குஉரிய யானையினது வெண்ணிறத்தைப் பெற்ற தந்தம்போல, விற்பதோ - (விலைக்கு) விற்கப்படுவதோ? [அன்று என்றபடி]; வரைந்திடும் திறன் அடைந்த கொம்பு போல - அறுக்கப்படுகிற தன்மையைப்பெற்ற மரத்தின்கொம்புபோல, விதியின் எ இனத்தையும் சேருமோ - சட்டவிலையின்படி எந்த மரத்தினினத்தையும் அடையுமோ? [அடையா தென்றபடி]; சுவர்க்க லோக தாரு விட்ட கொம்பு போல் - சுவர்க்கலோகத்தி லுள்ள கற்பகவிருட்சம் வெளியே விட்ட சிறு கிளைபோல, அறம் மிகுந்த சுரர் தொட பொறுக்குமோ - நல்வினை மிகுந்த தேவர்கள் தொடவும் பொறுக்குமோ? [எங்கள் கொம்பு தேவர்களுந் தொடப் பொறா தென்றபடி]; சொல் - சொல்வாயாக; அரசர் பால் ஆன கொம்பு - அரசர்களிடத்துப் பொருந்திய கொம்பு, (எத்தன்மைய தென்றால்), தண்டிகைக்கு அமைந்த கொம்பு - சிவிகைக்குப் பொருந்திய வளை கொம்பே யாகும்; சரதம் - (இது) உண்மை; (எ - று.)

தமது மகளை மணம்பேசும்படி அரசரால் அனுப்பப்பட்ட தூதனை நோக்கி மறவர்கள் மணம்மறுத்து அவ்வரசரை இகழ்ந்துபேசினதாகச் செய்யுள் செய்வது, மறம் என்னும் உறுப்புக்கு இலக்கணமாம்.

இவ்வாறுகூறியது, தேவதாந்தரங்களைச் சிறிதும்மதியாமல் திருமாலடிக்கே தொண்டுபூண்டதமது மனவுறுதியை வெளியிட்டவாறு. கொம்பு - உவமவாகுபெயர்; மென்மைக்கும், அழகுக்கும், ஒல்கியொசிதற்கும் உவமை. அடா - இகழ்ச்சி தோன்ற நிற்கும் முன்னிலை யசைச்சொல். மறவர் மலையில் வாழ்பவ ராதலால், 'மலைக்கு னின்ற மாய னருளினால் விறல் பொருந்து மெங்கள்' என்றார். தண்டிகைக் கமைந்த கொம்பு - பல்லக்குக்கணை. தாரு இட்ட எனவும் பதம்பிரிக்கலாம்.

இது - பதினேழாங்கவிபோன்ற பதினாற்சீராசிரியச்சந்தவிருத்தம்.

உ௩. சரதங் கதிபெறலாந் தாலத் துயிர்கா
ணிரத மவனை நினையீ—ரருமறையுஞ்
செப்பரிய வெண்ணத்தான் சேடகிரி யான்கரத்தி
லப்பரிய வெண்ணத்தா னால்.

(இ - ள்.) தாலத்து உயிர்காள் - பூமியிலுள்ள ஜீவராசிகளே! அருமறையும் செப்பு அரிய எண்ணத்தான் - அருமையான வேதங்களுக்கும் சொல்லுவதற்கு அருமையான (ஜகத்ரக்ஷண) சிந்தையை யுடையவனும், சேடகிரியான் - சேஷாசலத்தி லெழுந்தருளியிருப்பவனும், கரத்தில் அ பரிய வெள் நத்தான் - திருக்கையில் அந்தப் பருமையை யுடைய வெண்ணிறமான சங்கத்தை யுடையவனுமாகிய, அவனை - அவ்வெம்பெருமானை, நிரதம் - இடைவிடாமல், நினையீர் - தியானிப்பீராக; (தியானிப்பீராயின்), சரதம் கதி பெறல் ஆம் - உண்மையாக உயர்கதியைப் பெறுதல் கூடும்; (எ - று.)—ஆல் - ஈற்றசை.

சரதம் - எளிதி லென்று மாம். தாலம் - ஸ்தலம் என்னும் வடசொல்லின் விகாரமாகிய தல மென்பதன் நீட்டல். செப்பு திசைச்சொல். பெரியாழ்வார் "படைபோர்புக்கு முழங்குமப் பாஞ்சசன்னியமும்" என்றாற்போல 'அப் பரிய வெண்ணத்தான்' என்றார்; 'முன்னிலையா யிருக்கப் பரோக்ஷநிர்த்தேசம் பண்ணுவா னென்னென்னில், புத்திரனை அலங்கரித்த தாய் தன்

கண் படிலும் கண்ணெச்சிலாம் என்று பார்க்கக் கூசுமாப்போலே மங்களாசாஸநம் பண்ணுகிற தம்முடைய கண்ணையும் செறித்து முகத்தை மாற வைத்துச் சொல்லுகிறார்; அன்று யுத்தத்திற் பிறந்த ப்ரமாதத்துக்கு இன்று மங்களாசாஸநம் பண்ணுகிறார் என்றுமாம்' என்று அங்கு வியாக்கியான மிட்டருளினார், பெரியவாச்சான்பிள்ளை. இனி, அ - உலகறிசுட்டு என்றுங் கொள்ளலாம்; இனி, பத்துப்பாட்டுள் பெரும்பாணாற்றுப்படையில் "அவ்வாய் வளர்பிறை" என்பதற்கு - 'அழகிய இடத்தை யுடைய வளரும் பிறை' என்றும், நெடுநல்வாடையில் "அவ்விதழவிழ்பதம்" என்பதற்கு-'அழகிய இதழ்கள் விரியும் செவ்வி' என்றும் ஆசிரியர் நச்சினார்க்கினியர் உரையெழுதிப்போந்ததனால், 'அம்' என்பதற்குப் போல, அ என்பதற்கும்-அழகிய என்று பொருள் கொள்ளலாம். பரிய - பருமையென்னும் பண்பினடியாப் பிறந்த குறிப்புப்பெயரெச்சம். வெண்ணைத்து, வெண்மை-இனமில்லாத அடைமொழி.

இது - நாளென்பதனால் முடிந்த இருவிகற்ப நேரிசைவெண்பா. (உஅ)

உகூ. ஆலத்தரங்கத்தைவாய்ப்பொறிப்பாம்பினிலக்கயிலை
போலத்தரங்கத்தைவீசாழியிற்றுயில்புங்கவர்பைங்
கோலத்தரங்கத்தைநன்மகற்கேபண்டுகூறுமுத்தி
நூலத்தரங்கத்தையேந்தவென்வேங்கடநோற்றதுவே.

(இ - ள்.) ஆலத்து - ஆலிலையிலும், அரங்கத்து - திருவரங்கம் பெரிய கோயிலிலும், ஐ வாய் பொறி பாம்பினில் - ஐந்துவாய்களையும் புள்ளிகளையுமுடைய ஆதிசேஷனிடத்தும், அ கயிலை போல தரங்கத்தை வீசு ஆழியில்-அழகிய கைலாசகிரியைப்போல (வெண்ணிறமான பெரிய) அலைகளை வீசுகின்ற கடலிலும், துயில் - யோகநித்திரை செய்தருளுகின்ற, புங்கவர் - இளவெருது போன்றவரும்,—பை கோல் அத்தர் - பசுமையான உளவுகோலைத் திருக்கையிலுடையவரும்,—அங்கு அத்தை நல் மகற்கே பண்டு கூறும் முத்தி நூல் அத்தர் - அங்ஙனஞ் சாரத்தியஞ் செய்தபொழுது அத்தையாகிய குந்தியினது சிறந்த குமாரனாகிய அருச்சுனனுக்கே முன்காலத்தில் [கிருஷ்ணாவதாரத்தில்] உபதேசித்தருளின மோக்ஷத்தைத் தரவல்ல (கீதையாகிய) நூலையுடைய தலைவருமாகிய எம்பிரானது, அங்கத்தை-திருமேனியை, ஏந்த - (தன்மீது) தரித்தற்கு, வேங்கடம் - திருவேங்கட மலை, என் நோற்றது - என்ன தவஞ் செய்ததோ? (எ - று.)

அந்தத் தவம் இன்னதென்று தெரிந்தால் யானும் அதனைச் செய்து அவ்வெம்பெருமானது திருமேனியைத் தரிப்பேனென்று தலைவி கூறிய இரங்கலாகவாயினும், திவ்வியதேசத்தின் மகிமையை நூலாசிரியர் வியந்ததாகவாயினுங் கொள்க.

அரங்கத்து ஐவாய்ப் பாம்பிலும் ஆழியில் ஆலிலையிலும் பாம்பிலும் துயில்பவரென்க. ஆல் - இலைக்குப் பொருளாகுபெயர். அத்து - சாரியை. ரங்கமென்னும் வடமொழி, அகரம் மொழி முதலாகி முன்வரப் பெற்று நின்றது; [நன்-பத-உ೦.] திருப்பாற்கடல், சூரிய மண்டலம், யோகிகளது உள்ளக்கமலம் இவையெல்லாவற்றையுங்காட்டில் திருமால் இங்கு ரதியை [ஆசைப் பெருக்கத்தை] அடைந்து மிகவும்திருவுள்ளமுகந்து எழுந்தருளியிருத்தலால், ரங்கம் எனப் பெயர்பெற்றது. இங்கு, அரங்கமென்பது, விமானத்தின் பெயர் திவ்விய தேசத்துக்கு ஆனதோர் ஆகுபெயர்; [தானியாகு பெயர்.] இனி, திருமகளார்க்குத் திருநிருத்தஞ் செய்யுமிடமாயிருத்தலாலும், ஆற்றிடைக் குறையாதலாலும், இப்பெயர் வந்ததெனினும் அமையும். "காலாயிர முடியாயிர மாயிரங் கைபரப்பி, மேலாயிரந் தலைநாகங் கவிப்ப விண்பூத்தகஞ்சம், போலாயிரங்கண்வளரும் பிரான்" என்பதற்கு

ஏற்ப, ஐவாய் என்பதற்கு-அழகிய(ஆயிர)வாயென்றும்பொருள்கொள்ளலாம். கயிலை - வடமொழித் திரிபு. ஆழி - ஆழ்ந்துள்ளது: இ - கர்த்தாப்பொருள் விகுதி; இனி, (இறுதிக்காலத்தில் உலகங்களை) அழிப்பது மாம் : வட்டவடி வாயுள்ளதுமாம். கோல் - பசுக்களை மேய்க்குங் கோலுமாம். தந்தையாகிய வசுதேவருக்கு உடன்பிறந்த முறையாதலால், குந்தி, கண்ணனுக்கு அத்தையாவள். கோலத்தர், அத்தம் - ஹஸ்தம்.

இது - நேரசைமுதற் கட்டளைக்கலித்துறை. (௨௧)

௫0. நோற்றவர்மேலருணோக்கம்வைக்குமால்
வீற்றிருந்தருள்பணிவெற்பின்மாதரீர்
தோற்றிருகுழைவலிசொலப்படாதுகட்
கூற்றடுந்தொறுநிலைகுலைந்தவல்லவே.

(இ - ள்.) நோற்றவர்மேல் - (தன்னைக்குறித்துத்) தவஞ்செய்தவர்களிடம், அருள் நோக்கம் வைக்கும் - கருணையோடுகூடிய பார்வையை வைத்தருளுகின்ற, மால் - திருமால், வீற்றிருந்தருள்-வேறொருவர்க் கில்லாத சிறப்புடன் எழுந்தருளி யிருக்கும் இடமான, பணி வெற்பின் - சேஷாசலத்தில் உள்ள, மாதரீர் - மங்கையரே!—தோற்று - விளங்கிக் காணப்படுகின்ற, இரு குழை - (தலைவியினது) இரண்டு காதணிகளின், வலி - வலிமை, சொலப் படாது-(அளவிட்டுச்)சொல்ல முடியாது;(ஏனெனில்),—கண் கூற்று அடும் தொறும் - கண்களாகிய யமன் தாக்கும் பொழுதெல்லாம், நிலை குலைந்த அல்ல - தமது வலிமைநிலை கெட்டனவல்ல; (ஆதலின்) ; (எ - று.)

இது, தலைவியது காதளவும் நீண்ட கண்களின் தன்மையைத் தலைவன் தோழியினிடங் கூறித் தனது வேட்கையைப் புலப்படுத்தியது; தலைவியை முன்னிலைப்படுத்தித் தலைவன் கூறியதெனவுங் கொள்ளலாம்: தலைவியைக் கூடவேண்டுமென்பது, இதன் பயன்.

நோற்றவர், நோல் - பகுதி. மேல் - ஏழனுருபு. அருள் நோக்கம் - கிருபா கடாக்ஷவீக்ஷணம். பணி - படமுடையது. மாதரீர் - மாதரா ரென்பதன் விளி. தோற்று - தன்வினைக்கும் பிறவினைக்கும் பொது வென்றாயினும், தன்வினைப் பொருளில் வந்த பிறவினை யென்றாயினும், எதுகை நோக்கிய வலித்தல்விகார மென்றாயினுங் கொள்க. கண்ணை யமனென்றது, ஆடவரை வருத்துதலால். 'குழை நிலை குலைந்தவல்ல' என்றதனால் தனது மனமும் உயிரும் தலைமகளது கண்ணின் பார்வை விழுதலால் நிலைகுலைந்த தன்மையையும், 'குழைவலி சொலப்படாது' என்றதனால் தான் மெலிந்த தன்மையையும், 'கட்கூற்று' என்றதனால் தனக்கு உண்டான வருத்தத்தையும் குறிப்பாகத் தெரிவித்தான்.

இது-மூன்றாவது மாச்சீரும், மற்றவை விளச்சீர்களுமாகிய கலிவிருத்தம். ()

[மதங்கு.]

௫௧. அல்லிளைசோலைப்பணிச்சிலம்படிக ளடியர்நம்பணிச்சிலம்படிக ளனுதினம்பாடித்துதிக்குமாதங்கி யனமணிப்பூணின்மாதங்கி, யெல்வளைக்கரத்தாற்பற்றுவதுறைவா ளிவட்குநேர்குலிசபாணுறைவாளியமியம்புவதுதக்கதொத்தோதியிருளெனத்தக்கதொத்தோதி, வில்வளைவழிக்குமிருகரும்புருவமேனியோவொருகரும்புருவம்வேட்கையாற்பாடுஞ்சுரஞ்சரிகாமா விழிக்கொருவிதஞ்சரிகாமா, நல்வளைகெழுவெண்டரளமேயாம்ப னலமலிசெவ்விதழாம்ப னருகபோலங் கள்வலயதர்ப்பணமே நடிப்பதுமிலயதர்ப்பணமே.

(இ - ள்.) அல் வளை சோலை - (அடர்த்தியால்) இருள் கவிந்த பூஞ் சோலைகளை யுடைய, பணிச் சிலம்பு - சேஷாசலத்தில் எழுந்தருளிய, அடிகள் - கடவுளது, அடியர் நம்பு அணி சிலம்பு அடிகள் - தொண்டர்களால் (சரணமென்று) நம்பிச்சரணமடையப்படுவனவாகிய அழகிய சிலம்பென்னும் அணியை யுடைய திருவடிகளை, அநுதினம் - நாள்தோறும், பாடி துதிக்கும் மாது - பாடல்பாடித் தோத்திரஞ் செய்கின்ற மகளாகிய, அங்கி அன மணி பூணின் மாதங்கி - நெருப்பையொத்த விளங்குகின்ற இரத்தினாபரணங்களை யுடைய மதங்கியானவள்,—எல் வளை கரத்தால் - ஒளியை யுடைய வளையல்களை அணிந்த தனது கைகளினால், பற்றுவது - பிடித்துச் சுழற்றுவது, உறை வாள் - உறையினின்று எடுத்த வாளாகும்; இவட்கு நேர்- இவளுக்கு ஒப்பு, குலிசபால் உறைவாள் - தேவேந்திரனிடத்தில் வசிக்கின்ற இந்திராணியாவள்; இயம் - (மிருதங்கம் முதலிய) பக்கவாத்தியம், இயம்புவது - பேசுவது, தக்கதொத்தோதி - தக்கதொத்தோதியென்னுந் தாளவகை யநுகரணமாம்; ஒத்த ஓதி - நெருங்கின [அல்லது ஒழுங்கான] (இவளது) கூந்தல் மயிர், இருள் என தக்கது - (மிக்க கருநிறத்தால்) இருளென்று (உவமை) சொல்லத்தக்கது; இரு கரும் புருவம் - (இவளது) இரண்டு கரிய புருவங்கள், வில் வளைவு அழிக்கும் - (தமது மிகுந்த வளைவினால்) வில்லின் வளைவையும் அழித்துவிடும் [வில்லினும் அதிகமாக வளைந்துள்ளன]; மேனியோ ஒரு கரும்பு உருவம்-(இவளது)உடம்போ ஒரு கரும்பின் வடிவமாம் [மிகவும் இனிமைதருவது]; வேட்கையால் பாடும் சுரம் - (இவள்) விருப்பத்தோடு பாடுகின்ற ஸ்வரம், சரிகாமா - ஸ ரி க ம என்பனவாம்; விழிக்கு - (இவளது) கண்ணுக்கு, கா மா - சோலையி லுள்ள மாமரத்தின் வடு, ஒரு விதம் சரி - ஒருபடி ஒப்பாம் [முழுவதும் சரியான உவமையாகாது]; பல் - (இவளது) பற்கள், நல் வளை கெழு வெள் தரளமே ஆம் - சிறந்த (வலம்புரி முதலிய) சங்குகளிலே உண்டாகி விளங்குகின்ற வெண்மையான முத்துக்களேயாம்; நலம் மலி செம் இதழ் - நல்ல சுவை மிகுந்த சிவந்த அதரம், ஆம்பல் - செவ்வாம்பல் மலர் போலும்; நகு கபோலங்கள் - விளங்குகின்ற கதுப்புகள், வலய தர்ப்பணமே - வட்டமாகிய கண்ணாடிகளேயாம்; நடிப்பதும் - (இவள்) நர்த்தனஞ் செய்வதும், இலய தர்ப்பணமே - தர்ப்பணமென்னுந் தாளத்துக்கு ஒத்ததேயாம்; (எ - று.)

இரண்டு கைகளிலும் வாளை யெடுத்துச் சுழற்றிக்கொண்டு தானுஞ் சுழன்று ஆடுவாளொரு இளமங்கையினிடத்துத் தனக்கு உண்டான வேட்கையை ஒரு காமுகன் வெளிப்படுத்திக் கூறுவதாகச் செய்யுள் செய்வது, மதங்கியார் என்னும் உறுப்புக்கு இலக்கணமாம்.

எம்பெருமான் திருவடியில் அணிந்துள்ள சிலம்பை அவன் பக்தஸம்ரக்ஷணார்த்தமாகக் காலிற்கட்டியுள்ள கழலாகக் குறிப்பார், 'அடியர்நம்பணிச் சிலம்படிகள்' என்றார். அடிகள் - அடி என்னும் பகுதியினடியாப் பிறந்து உயர்வுப்பொருளுணர்த்திய சொல்; 'பாதா:' என்னும் வடசொல்லும், இங்ஙனம் சிறப்புப்பொருளை உணர்த்தி நிற்கும். மாதர் என்னும் உரிச்சொல்லின் கடைக்குறை விகாரமாகிய மாது என்பது, ஆகுபெயராய் அழகியபெண்ணை உணர்த்திற்று. அங்கி-அக்நி யென்னும் வடமொழியின் திரிபு. அன- அன்ன என்னுங் குறிப்புப்பெயரெச்சத்தின் தொகுத்தல். மாதங்கி, சரிகாமா - நீட்டல்விகாரங்கள். துதிக்கும் ஆதங்கி என எடுத்து - துதிக்கின்ற விருப்ப முடையவள் என்று உரைத்து, அன-அத்தன்மையன வாகிய என்றுமாம். முதலில் மாதங்கி எனப் பிரித்துவிட்டு, பின்னே மா தங்கி எனப்பிரித்து - அத்தன்மையன வாகிய அழகிய ஆபரணங்களிற் சிறந்த தங்கமயமாக வுள்ளவ ளெனவுமாம். உறை - படைக்கூடு. இது, வாளுக்கு இயற்கை யடைமொழி போலும். குலிசம் - வச்சிராயுதம்; அதனை யுடையவன்-

குலிசி. குலிசபா லுறைவாள் - ஊர்வசி முதலிய தெய்வ மகளுமாம். ஒத்தோதி - பெயரெச்சவீறு தொகுத்தல். இனி, இரண்டாம் அடியின் பின் பாதியில், முன்னே, தக்கது ஒத்து ஓதி என்றும், பின்னே, தக்க தொத்து ஓதி என்றும் பிரித்து, வாத்தியம் வாசிப்பது தகுந்த பாட்டைப் பொருத்த மாகச் சொல்லியாம்,கொத்தாகிய கூந்தல்கள் இருளென்னத் தக்கனவாம் என்றும் பொருள்கொள்ளலாம்; ஓதி யென்னுஞ் சொல், மயிர்மாத்தி ரையாய், முடி, கொண்டை, சுருள், குழல், பனிச்சை என்னும் ஐவகையை யும் உணர்த்துதலால், 'இருளெனத்தக்க' எனப் பன்மைகூறினா ரென்க: "கருங்குழல்கள், வண்ணப்போ தருச்சித்து மகிழ்வாளுத்தகையவே" எனச் சிந்தாமணியிலுங் காண்க. வேட்கையால்,ஆல் - உடனிகழ்ச்சிப்பொருளது. "வடுப்பிளவனைய கண்ணாள்" என்றார் சிந்தாமணியாரும். கபோலம் - கன்னம். இதற்குக் கண்ணாடிவட்டம் உவமை கூறப்படுதலை "விரும்பியிடுந், தர்ப்பணங் கபோலம்" என்னும் இரத்தினச்சுருக்கத்தாலும், "வேனில் வேள் வனப்புநோக்குதற்கமைத்த விளங்கு கண்ணாடியோ வொளிரும்,பான லங்கண் வாடீட்டிய கிடந்த சாணையின் படிவமோ கபோலம்" என்னும் நைடதத்தாலும் உணர்க. தர்ப்பணம் - நூற்றெட்டுத்தாளவகையுள் ஒன்று; அது - இரண்டு துருதமும், ஒரு குருவும் சேர்ந்தது. நடிப்பதும், உம்மை - இறந்தது தழுவிய எச்சம். சுரம் - ஸ்வரம்; வடசொற் சிதைவு.

இஃது, அடிதோறுந் தனித்தனியே வந்த இறுதிமுற்று மடக்கு.

இது - இருபத்துநாலாங் கவிபோல இரட்டித்து வந்த பதினான்கு சீராசிரியவிருத்தம். (௫௧)

[இரங்கல்.]

௫௨. பணம்பரப்புநாகணையினானுலகெலாம்பரவுவேங்கடத்தான்பூ
வணங்கினைப்பிரியாதமால்வேதனையருளினனென்பாரால்
வணங்குவிற்பொருவாணுதற்பவளவாய்மாதரீரம்மாலைத்
தணந்தவிக்கொடிமனத்தெழுமாலும்வேதனையளித்ததுாதனே.

(இ - ள்.) வணங்கு வில் பொரு - வளைவான வில்லை எதிர்க்கின்ற [ஒக்கின்ற], வாள் நுதல் - பிரகாசமான புருவத்தையும், பவளம் வாய் - பவ ழம் போன்ற [சிவந்த] அதரத்தையு முடைய, மாதரீர் - மகளிரே!—'பணம் பரப்பு நாக அணையினான் - படங்களை மேலே பரப்பிய திருவனந்தாழ்வா னாகிய சயனத்தை யுடையவனும், உலகு எலாம் பரவு வேங்கடத்தான் - உலகங்களிலுள்ளார் யாவருந் துதிக்கின்ற திருவேங்கட மலையி லுள்ள வனும் ஆகிய, பூ அணங்கினை பிரியாத மால் - திருமகளையும் நிலமகளையும் விட்டு நீங்காத திருமால், வேதனை அருளினன் - பிரமனைப் படைத்தருளி னான்', என்பார் - என்று (யாவரும்) சொல்வார்கள்; ஆல் - ஆதலால், அ மாலை தணந்த இ கொடி மனத்து எழு மாலும் - அந்தத் திருமாலைப் (புணர்ந்து)பிரிந்த பூங் கொடி போன்ற இந்த மங்கையது மனத்திலே உண் டான மாலும் [காம மயக்கமும்], வேதனை அளித்தது - பிரமனைப் பெற் றது [துன்பத்தைத் தந்தது]; (எ - று.)

இது-தலைவியதுவேட்கைநோயைத் தோழி செவிலியர்க்குஉரைத்தது.

நாகணை - நாகவணை என்பதன் விகாரம்; "நஞ்சுபதிகொண்ட வள நாகணையினான்" எனச் சிந்தாமணியிலும், "ஆடும்படநாகணைமேலணையுமம லன்" எனத் திருவரங்கக்கலம்பகத்திலுங் காண்க. 'பணம் பரப்பு நாகணை யினான்' என்பதில், சொற்போக்கால், (தன்னை யடைந்தவர்களுக்குச்)செல் வத்தைச் செழிக்கச் செய்கின்ற சேஷசாயி யென்றும் பொருள் தோன்றும். உலகு - லோகம்: இடவாகுபெயர். 'உலகெலாம்பரவுவேங்கடம்' என்பதில், உலக முழுவதிலும் பரவிய [அதிவிஸ்தீர்ணமாகிய] திருவேங்கட மலை

யென்றும் பொருள் தொனிக்கின்றது. 'பூ அணங்கு' என்பதற்கு - இரட்டுற மொழித லென்னும் உத்தியால், தாமரை மலரில் வாழ்கின்ற ஸ்ரீதேவி யென்றும், பூமியாகிய தேவி யென்றும் பொருளுரைக்க; "வாயுமனைவியர் பூமங்கையர்கள்" என்றார் நூற்றெட்டுத் திருப்பதி யந்தாதியிலும். 'மால்' என்னுஞ்சொல் இப்பொருள்களையுடைய தாதலை "மாயோன் மேக மயக்கம் வேட்கை, மாலென் றுரைப்பர்" என்னும் நிகண்டினாலும் அறிக. வேதன் - எப்பொழுதும் நான்கு முகங்களாலும் நான்கு வேதங்களையும் பாராயணஞ் செய்பவன்; இதனை வேதா என்னும் வடசொல்லின் திரிபாகக் கொண்டால் விதிப்பவ னென்றுபொருள்படும்: விதித்தல் - படைத்தல். பவளம் - ப்ரவாளம்; வடசொல். கொடி - உவமையாகுபெயர். 'மால் வேதனை யளித்தது' என்பதில், சிலேடையணி. நுதல் - நெற்றியுமாம். மாலும், உம்மை - இறந்ததுதழுவியஎச்சம்.

இது - முதற்சீர் மாச்சீரும், ஈற்றுச்சீர் மாங்காய்ச்சீரும், மற்றை நான்கும் விளச்சீர்களு மாகிய அறுசீராசிரியவிருத்தம். (ருஉ)

[நாரை விடு தூது.]

ருரு. தானேதனக்கிணையாந்தண்வேங்கடவனுடன்
கோனேரிவாழுங்குருகினங்காள்கூறுமினோ
மீனேயெழுதுகொடிவேளெடுத்தவாள்போல
வானேயெழுமதியென்மாமதியுண்டோடுகையே.

(இ - ள்.) கோனேரி வாழும் - (திருவேங்கடமலையிலே) கோனேரி யென்னும் ஏரியிலே வாழ்கின்ற, குருகு இனங்காள் - நாரைகளின் வருக்கங்களே!—வானே எழு மதி-ஆகாயத்திலே உதித்து உயர்ந்து விளங்குகின்ற பிறைச்சந்திரன், மீனே எழுது கொடி வேள் எடுத்த வாள்போல-மீனினுருவத்தையே எழுதியுள்ள துவசத்தை யுடைய மன்மதன் கையில் ஏந்திய வாளாயுதம்போல, என் மா மதி உண்டு ஓடுகை - எனது சிறந்த புத்தியைப் புசித்து [ஒழித்துச்] செல்லுகையை,—தானே தனக்கு இணை ஆம் - (வேறு உவமை யில்லாமையால்) தனக்குத் தானே உவமையாகிய, தண் வேங்கடவனுடன் - குளிர்ச்சியான திருவேங்கடமலையி லெழுந்தருளிய ஸ்ரீநிவாசனுடன், கூறுமின் - சொல்லுங்கள்; (எ - று.)

இது தலைவி தன்னைத்தணந்ததலைவனிடம் நாரைகளைத் தூதுவிட்டது.

தானே தனக்கு இணையாம் வேங்கடவன் - ஒருபொருளையே உபமான மாகவும் உபமேயமாகவுங் கூறியதனால், இயைபின்மையணி. 'தண் வேங்கடம்' என்றது, அவ னெழுந்தருளியுள்ள தேசத்தின் வாய்ப்பை விளக்கியவாறு; இனி, குளிர்ந்ததன்மையை வேங்கடத்தானுக்கு அடைமொழியாகவுங் கொள்ளலாம். வேங்கடவனுடன் என்பதில், உடன் என்னும் மூன்றும் வேற்றுமையுருபு, நான்காம்வேற்றுமைக்குஉரிய கோடற்பொருளில் வந்ததனால், உருபுமயக்கம்; வேங்கடவனுக்குச் சொல்லுங்கள் என்று பொருள். கோனேரி வாழுங் குருகு - பரமபதத்தைச்சார்ந்த விரஜாநதியை அடுத்து இருப்பது போல, வேங்கடத்தைச்சார்ந்த கோனேரியை அடுத்து இருக்குங் குருகு. இருக்கும் என்கிற பொருளுக்கு வேறு பல சொற்கள் உளவாயிருக்கவும் அவற்றை விட்டு 'வாழும்' என்கிற சொல்லைப் பிரயோகித்ததனாலே, அவ்விடத்து வாஸந்தானே போகரூபமா யிருக்கு மென்றபடி. "கூனேறுசங்கமிடத்தான்றன் வேங்கடத்துக், கோனேரி வாழுங் குருகு" என்றார், குலசேகராழ்வாரும். குருகு - நீர்வாழ்பறவைகட்குப் பொதுப்பெயராகவுமாம். கூறுமினோ என்பதில், ஓகாரம் - இரக்கந் தோன்ற நின்றது. மீன் - அதன் வடிவத்துக்குப் பொருளாகுபெயர். மயிலெழுதுகொடியையுடைய குமரவேளை விலக்குதற்கு, 'மீனே யெழுது கொடி வேள்' என்றார்.

"மாரனுக்கு, வாளா மோலைப்பூவுமால்" என்னும் இரத்தினச்சுருக்கத்தால், மன்மதனுக்கு வாள் தாழம்பூவா மென்று அறிக. வாள் போல வானை யெழு மதி என்றது, ஆகாயத்திலே பூத்து விளங்குவ தொரு வெண்டாழை மலர்போல வெண்ணிறத்தையும் முள்ளடர்த்தியையுமுடைய பிறைச்சந்திர னென்றவாறும். பிறைமதியை வாள் என்றது, தன்னைவருத்தி அறுத்தலால். இச்செய்யுளை "செவித்தலைவன்னியிற்சூடுண்ட வேயிசைதீப்பதும் யான்,றவி த்தலைவன்மயலுந்தமர்காப்புந்தமிழ்க்கலியன், கவித்தலைவன்றிருவேங்கடத் தான்முன்கழறுமின் பொன், குவித்தலைவர்தந்து கோனேரிவாழுங் குருகி னமே" என்னுந் திருவேங்கடத்தந்தாதிச் செய்யுளோடு ஒப்பிடுக. மதி - அறிவை அறிவிக்கும்போது வடசொல்.

இது - மாச்சீர்களுங் காய்ச்சீர்களும் விரவிய நாற்சீரால் தனித்து வந்த கொச்சகக்கலிப்பா. (௫௫.)

௫௪. கைத்திகிரியானு மத்திகிரியானுங்
கார்வண்ணத்தானு மோர்வண்ணத்தானு
மத்தியணையானுந் துத்தியணையானு
மருந்தண்டத்தானும் பருந்தண்டத்தானுஞ்
சித்தமருவானும் பத்தமருவானுஞ்
சிறக்குமன்புளானும் பறக்குமன்புளானு
மத்துவரையானு மத்துவரையானு
மாகமலையானு நாகமலையானே.

(இ - ள்.) கை திகிரியானும் - திருக்கையிலே திருவாழியை யுடைய வனும், அத்தி கிரியானும் - ஹஸ்திகிரி யெனப்படுகின்ற பெருமாள்கோயி லில் எழுந்தருளியிருப்பவனும், கார் வண்ணத்தானும் - காளமேகம்போ ன்ற திருநிறமுடையவனும், ஓர் வள் நத்தானும் - அழகிய தொரு சங்கத் தை யுடையவனும், அத்தி அணையானும் - (இராமாவதாரத்தில்) கடலிற் கட்டிய அணையை யுடையவனும், துத்தி அணையானும் - படப்புள்ளிகளையு டைய (ஆதிசேஷனாகிய) சயனத்தை யுடையவனும், அருந்து அண்டத்தா னும் - (பிரளயகாலத்தில்) விழுங்கியருளிய அண்டங்களை யுடையவனும், பருந் தண்டத்தானும் - பருத்த கதாயுதத்தை யுடையவனும், சித்து அமரு வானும் - ஞானசொரூபியாய்ப் பொருந்தினவனும், பத்தம் மருவானும் - ஸம்ஸார பாசபந்தத்தைப் பொருந்ாதவனும், சிறக்கும் அன்பு உளானும் - (அடியார்கள்பக்கல்) மேன்மேல் அதிகப்படுகின்ற அன்பை யுடையவனும், பறக்கும் மன் புளானும் - பறக்கின்ற பெரிய கருடப்பறவையை யுடையவ னும், மத்து வரையானும் - (க்ஷீராப்தி மதந காலத்தில்) மத்தாக மந்தர மலையைக் கொண்டவனும், அ துவரையானும் - பிரசித்தமான துவாரகாபுரி யில் எழுந்தருளியிருந்தவனும், மா கமலையானும் - சிறந்த திருமகளையுடை யவனும், நாகம் மலையானே - சேஷகிரியி லெழுந்தருளிய எம்பெருமானே.

திருமாலின துகதைக்குக் கௌமோதகீ யென்றும், கருடாழ்வானுக்குப் பெரியதிருவடி யென்றும் பெயர். திகிரி - வட்டவடிவமா யுள்ளது. கஜேந் திராழ்வான் பூசித்துப் பேறுபெற்ற மலையாதலால், கச்சிப்பதியிலுள்ள முக் கியமான திவ்வியதேசத்துக்கு ஹஸ்திகிரி யென்று பெயர்: அத்தி-வடசொற் றிரிபு ; யானை : துதிக்கையை யுடைய தென்று அவயவப்பொருள் : ஹஸ் தம் - கை. வண்ணம் - வர்ணம். அத்தி - வடசொற் சிதைவு: அப்தீ; கடல்: நீர்தங்குமிடமென்பது அவயவப்பொருள். துத்தி யணை யெனவே, பாம் பணை யாயிற்று ; இது ஒருவகைக்குறிப்பு. அருந்து அண்டத்தான் - அண்ட மருந்துவான் என விகுதி பிரித்துக் கூட்டினும் அமையும். அமருவான், உ -

சாரியை. சித்தம் மருவான் எனப் பிரித்து - மனத்துக்கு அகப்படாதவனென்றும், பத்து அமருவான் எனப் பிரித்து - பக்தியிலே பொருந்தியவனென்றும் பொருள் கொள்ளலுமாம்; பக்தி யென்னும் வடசொல் பத்து எனத் திரிதலை, "பத்துடையடியவர்க்கெளியவன்" எனத் திருவாய்மொழியிலும், "எட்டினோடிரண்டெனுங் கயிற்றினான் மனந்தனைக், கட்டி" என்னுந் திருச்சந்தவிருத்தத்தைக் கொண்டும் காண்க. இனி, பத்து அமருவான் என்பதற்கு - வாய் ஒன்று, கண் இரண்டு, கை நான்கு, உந்தி ஒன்று, திருவடி இரண்டு ஆகிய பத்துத் தாமரைமலர்கள் பொருந்தியவனென்றும் பொருள்கொள்ளலாம்: "வாய்கண்கையுந்திபதங், கோகனகம்பத்தினார்" என்றாதலின்; தசாவதாரங்கள் பொருந்தியவனெனவுமாம். பத்தும் - கட்டை உணர்த்தும்போது, வடசொல். பக்ஷிராஜனாதலால், 'பறக்குமன்புள்' எனப்பட்டது. துவரை - வடமொழிச் சிதைவு; இது, கண்ணனெழுந்தருளியிருந்த இடம்; முத்திதரும் நகரம் ஏழனுள் ஒன்று. கமலை - செந்தாமரை மலரில் வாழ்பவள்.

இஃது - அடிதோறுந் தனித்தனியே வந்த இறுதி முற்றுமடக்கு.

இது - ஒன்று மூன்று ஐந்து ஏழு மாச்சீர்களும், மற்ற நான்கும் காய்ச்சீர்களுமாகிய எண்சீராசிரியவிருத்தம். (௫௪)

[இரங்கல்.]

௫௫. மலையக்குவடுதனைமுலையாமலையிற்பழித்தாளெனப்பகைத்து
மதன்றேராக்கியனுப்பவருமந்தானிலமக்கிரிப்புலிபாற் [டிக்
கொலைகற்றெழுந்திங்கிவளுடலிற்குடிகொளுயிர்ப்புதனைக்கூட்
கொள்ளச்சுடரைப்பரப்புசெம்பொற்கோலச்சிறுசாளரவாசற்
றலையிற்கதவுதிறந்துந்தன்மைகுறித்துன்றிருவணையைச்
சாலத்துதிக்கின்றனளிவளைத்தழுவாவிதமென்னிதுமொழி
சிலையைச்சிலைவாணுதலாக்கச்சிறியதுகளைவிடுகடவுட் [மோ
செந்தாமரைத்தாட்பெருமானேசேடகிரிவாழ்பெருமானே.

(இ - ள்.) சிலையை - கல்லை, சிலை வாள் நுதல் ஆக்க - விற்போல் வளைவான பிரகாசமாகிய புருவங்களையுடையாளொருமகளாகச் செய்யும்பொருட்டு, சிறிய துகளை விடு - கிஞ்சித்துத் தூளியை (அக்கல்லின்மேலே) வீசிய, கடவுள் செம் தாமரை தாள் - தெய்வத்தன்மையை யுடைய, சிவந்த தாமரைமலர்போலுந் திருவடிகளை யுடைய, பெருமானே - பெருமையிற் சிறந்தவனே! சேடகிரி வாழ் பெரும் ஆனே - சேஷாசலத்தில் வாழ்கின்ற புருஷோத்தமனே!—மலையம் குவடு - பொதியமலையின் சிகரமானது,—தனை - தன்னை, முலை ஆம் மலையின் பழித்தாள் என - (இத் தலைவி தனது) தனங்களாகிய மலைகளினால் (சிறந்த தன்றென்னும்) பழியை அடையச்செய்தாளென்று, பகைத்து - (இவள்மேற்) பகைமை கொண்டு, மதன் தேர் ஆக்கி அனுப்ப-(இவளுக்குப் பகைவனாகிய) மன்மதன் (போரின் பொருட்டு ஏறுதற்குஉரிய) இரதமாக அமைத்து (இவளிடஞ்) செல்ல விட,—வரும் - வருகின்ற, மந்த அனிலம் - இளந் தென்றற் காற்று,—அ கிரி புலி பால் கொலை கற்று - அந்தமலயமலையி லுள்ள புலியினிடத்துக் கொல்லுதற்றொழிலைப் பயின்று, எழுந்து - புறப்பட்டு, இங்கு இவள் உடலில் குடி கொள் உயிர்ப்புதனை கூட்டி கொள்ள - இவ்விடத்தே யுள்ள இத்தலைமகளினது உடம்பினிடத்துத் தங்குதலைக் கொண்ட பிராணவாயுவைத் தன்னோடு கூட்டிக் கொள்ளுதற் பொருட்டு[இவளுயிரைக் கொள்ளைகொள்ளுதற்காக], சுடரை பரப்பு செம் பொன் கோலம் சிறு சாளரம் வாசல் தலையில் - ஒளியை வீசுகின்ற சிவந்த பொன்மயமான அழகிய சிறிய பலகணிவாயிலினிடத்தில்,

கதவு திறந்து - கதவைத் திறந்துகொண்டு, உந்தும் தன்மை - உள்ளே பிர வேசிக்குந் தன்மையை, குறித்து - கருதி, உன் திரு அணையை சால துதிக் கின்றனள்-உனது அழகிய படுக்கைமெத்தையை மிகவும் தோத்திரஞ் செய் கின்றாள் [உனது திருவணையாகிய திருவநந்தாழ்வானை (அக்காற்றை உண் ணுதற்பொருட்டு) மிகத் துதிக்கிறாள்]; இவளை - இங்ஙனம் உனது பிரிவை ஆற்றாமல் மந்தமாருதத்திற்கு வருந்துகின்ற தலைவியை, தழுவா விதம் - (நீ வந்து) அணையாத காரணம், என் - என்ன? இது மொழிமோ - இவ்வினு விற்கு விடை கூறுவாயாக; (எ - று.)

இது - தோழிகூற்று.

மலயபருவதத்தினின்றும் வருகின்ற சிறுகாற்றை, அம்மலை தன்னைத் தலைவி தனங்களினால் வென்றாளென்று அவள்மீது பகைத்து அவளைவருத் தும்படி அனுப்பியதாகக் குறித்தாள்;உத்ப்ரேக்ஷாலங்காரம்.இளந்தென்றல் காமத்தை மூட்டுதற்குக் கருவியா யிருத்தலால்,இங்ஙனங்கூறியது.மலயம்-மலையம் என எதுகையை நோக்கிய இடைப்போலி:[நன் - எழுத்து - சூ.] மலையின், இன் - கருவிப்பொருள். மதன் - மன்மதன்; அல்லது, மதனன். தென்றலும் பிராணனும் இரண்டும் வாயுவாதலால், 'உயிர்ப்புதனைக் கூட் டிக்கொள்ள' எனப்பட்டது. வாசல் - வாயில் என்பதன் மரூஉ. பாம்பு வா தாசந மாதலால், 'உன் திருவணையைச் சாலத் துதிக்கின்றனள்' என்றாள். மொழிமோ, மோ - முன்னிலையசைச்சொல்; "மியா இக மோ மதி" என் னுஞ் சூத்திரத்தால் அறிக. இந்திரனைப்புணர்ந்த குற்றத்திற்காகக் கௌதம முனிவரது சாபத்தைப் பெற்றுக் கல்லுருவாய்க் கிடந்த அவரதுமனைவியா கிய அகலியை ஸ்ரீராமலக்ஷ்மணர்கள் விசுவாமித்திரமுனிவரோடு மிதிலைக் குச் செல்லும்போது இராமபிரானது திருவடித் துகள் பட்டமாத்திரத்தில் இயற்கை யுருவ மடைந்தா ளென்பது, இராமாயண கதை. இதனால், செய் தற் கரிய காரியங்களையுஞ் செய்கின்ற கடவுளது அகடிதகடநாசாமர்த் தியம் விளங்குகின்றது. இங்கே இவ்வரலாற்றை எடுத்துக் கூறியது, வே றொருவரது மனைவிக்கு அருள் செய்த நீ உனது தலைவிக்கு அருள் செய்ய லாகாதோ? என்னுங் கருத்தைப் புலப்படுத்தற்கு. சிலை வாணுதல் - அன் மொழித்தொகைப்பன்மொழித்தொடர். துகள் - வடசொற் றிரிபு. தாளுக் குத் தெய்வத் தன்மை-கல்லைப் பெண்ணாக்குதல்.

இது - ஆறுங்கவிபோல இரட்டித்துவந்த பன்னிருசீராசிரியவிருத்தம்.

[இரங்கல்.]

௫௬. மாளவிராகமளிபாடியாடுமுன்வாசத்துழாய்த்
தோளவிராகத்திலென்கொம்பனுண்முலைதோய்வதென்றோ
நீளவிராகமணிப்பாம்பணைதுயினித்தமலர்த்
தாளவிராகவநந்திருவேங்கடந்தங்கத்தனே.

(இ - ள்.) நீளம்-நீட்சியையும்,இராகம் மணி - சிவந்த மாணிக்கங்களையு முடைய, பாம்பு - ஆதிசேஷனாகிய, அணை - சயனத்திலே, துயில் - யோக நித்திரை செய்தருளுகின்ற,நித்த - நித்தியனே! மலர் தாள - தாமரைமலர் போலுந் திருவடிகளையுடையவனே! இராகவ-ரகுகுலத்தில் திருவவதரித்த வனே! நம் திருவேங்கடம் தங்கு அத்தனே - நமது திருவேங்கடமலையில் வசித்தருளுகிற சுவாமியே!—அளி - வண்டுகள்.மாளவி ராகம்-மாளவியென் னும் இராகத்தை, பாடி - பாடிக்கொண்டு, ஆடும் - சுழன்று மொய்க்கின்ற, வாசம் துழாய் - நறுமணத்தை யுடைய திருத்துழாய்மாலையை அணிந்த, உன் தோள் அவிர் ஆகத்தில் - உனது திருத்தோள்களிலும் விளங்குகின்ற

திருமார்பிலும், என் கொம்பு அனுள் முலை - பூங்கொம்பை யொத்த எனது மகளது தனங்கள், தோய்வது-கூடுவது, என்றோ-எக்காலத்தோ ? (எ-று.)

இது செவிலிகூற்று.

நீளம் - தொழிற்பெயர்; அம் - விகுதி. நித்யன் - முக்காலத்திலும் ஒரு படிப்பட இருப்பவன்; ஆதிமத்தியாந்த ரஹிதன்: பிறப்பிறப்பில்லாதவன். இராகவன் - ராகவன்; தத்திதாந்தநாமம்: ரகுமகாராஜன், தசரதசக்கரவர்த்திக்கு மூதாதை; இவன், எல்லாத்தேசங்களையும் வென்று விச்வஜித் என்னும் வேள்வியைச் செய்து பொருளனைத்தையும் வழங்கிவிட்டு வெறுங்கையனா யிருக்கையில், கௌத்ஸன் என்னும் பிராமணன் தனது குருவாகிய வரதந்து மகாமுனிவர்க்குக் குருதக்ஷிணை கொடுத்தற்பொருட்டு வந்து யாசிக்க, குபேரனிடத்திலிருந்து வேண்டியபொருள்களை அழைப்பித்து அந்தக் கௌத்ஸமுனிக்குக் கொடுத்தான்: இவ்வாறு மிகுந்த வீரமும் கொடையு முடையவனாதலால், இராமபிரானை அவன்வமிசத்துப் பெயராற் கூறினர். திருவேங்கடத்தினது உயர்வும், அதன்பக்கல் தமக்கு உள்ள அன்புந் தோன்ற, 'நம் திருவேங்கடம்' எனப்பட்டது.

இது - நேரசை முதற் கட்டளைக்கலித்துறை. (ருசு)

ருஎ. தங்கநாகத்தானத்தானத்தனன்மயமா
தங்கநாகத்தானத்தானத்தன்—றுங்க
வடமலையானந்தமிறைவன்சிலையான்சேக்கை
வடமலையானந்தமிறைவன்.

(இ - ள்.) தங்க நாகம் தானத்தான் - (தான்) தங்குவதற்கு ஆதிசேஷனை இடமாகவுடையவனும், அத்து அனல் மயம் மாது அங்கன் ஆகத்தான்- சிவந்த அக்கினிமயமானவனும் உமாதேவியைத் தனதுஉடம்பின் ஒருகூற்றிலேகொண்டவனுமானபரமசிவனைத் தனது திருமேனியிலுடையவனும், நத்தான்-பாஞ்சசன்னியமுடையவனும், அத்தன்-(யாவர்க்குஞ்)சுவாமியும், துங்கம்வட மலையான்-உயர்ந்த வடவேங்கட மலையிலுள்ளவனும், அந்தம் இறைவல் சிலையான் - அழகைப் பொழிகின்ற வலிய (சார்ங்க மென்னும்) வில்லையுடையவனும், சேக்கை வடம் அலையான் - ஆலிலையையும் கடலையும் படுக்கு மிடமாக வுடையவனு மாகிய திருமால்,—நம்தம் இறைவன் - நமக்குத் தலைவனாவன்; (எ - று.)

தங்க என்னும் வினையெச்சம், தானத்தா னென்பதில் தொக்குநின்ற உடையா னென்பதனோடு முடியும். தானம் - ஸ்தாநம். அத்து - செந்நிறமென்னும் பொருள தாதலை, "அத்திட்ட கூறை யரைச்சுற்றி வாழினும்" என நாலடியாரிலுங் காண்க. நத்துஎனப்பதம்பிரித்து,விரும்பப்படுவதோர் அனல் எனவு மாம். அனல்மயம் என்பது - மாதங்கனுக்கு அடைமொழி; மாதுக்கு அடைமொழி யன்று. மாதங்க நாகத்தான் என்றவிடத்து,நகரவேறுபாடு, யமகப் பொருத்தம் நோக்கியது. இனி, முதலடியில் தங்கம் நாகம் எனப்பிரித்து, பொன்மயமான மேருமலையை இருப்பிடமாக வுடைய பிரமனையும் அனற்பிழம்பின் வடிவமான உமாபதியையும் தனது திருமேனியில் உடையவனென்றும் பொருள்கொள்ளலாம்; "பிறைதங்குசடையானை வலத்தேவைத்துப் பிரமனைத் தன்னுந்தியிலே தோற்றுவித்து" எனத் திருமங்கையாழ்வார் அருளிச்செய்திருக்கு மாறு அறிக. இனி, தங்கம் நாகத்தான்-பொன்மயமான சேலையாகிய பீதாம்பரத்தை யுடையவன், நத்தான்-சங்கை யுடையவன், அத்து அனல் மயம் மாது அங்கம் நாகம் தானத்தான் அத்தன் - அக்கினிமயனும் மாதை அங்கத்தி லுடையவனும் கயிலாச மலையை ஸ்தாநமாக வுடையவனு மாகிய சிவபிரானைத் தனது வலப்பாதியில்

உடையவன் என்றும் பொருளுரைக்கலாம்; இவ்வுரையில், அத்தம்-அர்த்தம். முதலடியில், அத்தன்-தலைவன் எனஎடுத்து, அல்மயம் மாது-இருள்மயமான [கரிய] உமாதேவி யென்னவுமாம். இனி, முதலடியில் தங்கம் நாகம் தானத்தான் நத்து எனஎடுத்து, பொன்மயமானதும் நாக மென்னும் பேருள்ளது மான தேவலோகத்தை இடமாகவுடைய இந்திரன் விரும்புகின்ற என உரைத்து, எம்பிரானுக்கு விசேஷண மாக்குதலுமாம். இறை - வினைத்தொகை. அந்தம் இறை சிலை - (பகைவர்க்கு) மரணத்தை மிகத்தருகின்ற வில்லுமாம். அந்தம் இறை - அழகு தங்குதலை யுடைய எனவுமாம். நந்து மிறை எனப் பதம் பிரித்து - (பகைவர்) அழியும்படி பாடுபடுகின்ற வில் எனவுமாம். ஆனந்தம் இறை என எடுத்து - பேரின்பத்தைச் சொரிகின்ற எனவுமாம். வடம் - வடபத்திரத்துக்கு ஆகுபெயர். பரமசிவன் "தழல் நிற வண்ணன்" ஆதலால், 'அனன்மய அங்கன்' எனப்பட்டான்.

இப்பாட்டில் முன்னிரண்டடியிலும் பின்னிரண்டடியிலும் பெரும்பாலும் தனித்தனி எழுத்து ஒத்துவந்தது, யமகமென்னுஞ் சொல்லணியாம்.
நாளென்னும்வாய்பாட்டால்முடிந்த இருவிகற்பநேரிசைவெண்பா. (௫௭)

௫௮. இறைவனிவனெனவறியாதிதரதேவரிணையடியைப்பணிந்
துதிரியேழையீர்நா, னறைவனிதுதிடமாதிமூலமேயென்றஞ்சிறு
கண்மதயானையழைத்தபோதஞ், சிறைவனசத்திருமுகப்புள்ளூர்ந்து
வந்துசெகமறியும்படியளித்ததேவதேவ, னறைவனவஞ்சனகிரிமா
லல்லனோகாணடியவற்றொழுதுகதிநண்ணுவீரே.

(இ - ள்.) இறைவன் இவன் என அறியாது - (யாவர்க்குந்) தலைவனாகிய முழுமுதற்கடவுள் இன்னானென்று தெரிந்துகொள்ளாமல், இதரதேவர் இணை அடியை பணிந்து திரி - (திருமாலை யொழிந்த) வேறு தேவர்களது உபய பாதங்களை வணங்கி அலைகின்ற, ஏழையீர் - அறிவில்லாமையை யுடையவர்களே!—நான் அறைவன் - (இன்னான் பரதேவதை யென்று உங்களுக்கு) யான் சொல்லுவேன்: இது திடம் - (யான்சொல்லும்) இவ்வார்த்தை உறுதியாகும்; அம் சிறு கண் மதம் யானை - அழகிய சிறிய கண்களையும் மதஜலத்தையு முடைய கஜேந்திரன், ஆதி மூலமே என்று அழைத்த போது-முழுமுதற் கடவுளே யென்று விளித்துக் கூப்பிட்ட பொழுது, அம் சிறை வனசம் திரு முகம் புள் ஊர்ந்து வந்து - அழகிய சிறகுகளையும் தாமரைமலர்போன்ற அழகியமுகத்தையுமுடையகருடப்பறவையை ஏறிச்செலுத்தி(மடுக்கரைக்கு)வந்து, செகம் அறியும்படி - (எல்லா)உலகத்தவரும்அறிய, அளித்த - (அவ்யானையைக்) காத்தருளிய, தேவ தேவன் - (எல்லாத்) தேவர்க்குஞ் சிறந்த தேவனாகுபவன், நறை வனம் அஞ்சனகிரி மால் அல்லனோ - தேனை யுடைய சோலைகளையுடைய அஞ்சனாசலத்தில் எழுந்தருளிய திருமாலல்லனோ? [திருமாலே யாவன், வேறெந்தத் தேவனுமல்லன்]; (ஆதலால்), அவன்-அவ்வெம்பெருமானையே, நாடி-விரும்பி, தொழுது-வணங்கி, கதி நண்ணுவீர் - நற்கதியை அடையுங்கள்; (எ - று.)

ஏழையீர், ஏழையார் - முதல்வேற்றுமை. திடம் - த்ருடம். ஆதிமூலம் - முதலா யுள்ளவற்றுக்கும் முதல்; "முதலாவார்மூவரே யம்மூவருள்ளும், முதலாவான் மூரிநீர்வண்ணன்" என்றார் பெரியாரும். கல்லாடனார் "முக்கண்மேற்பொங்கும்வெள்ளமெறிகடத்த" எனக் கூறி யிருத்தலால், கண் மத யானை என்பதற்கு - கண்ணினிடத்துப் பெருகுகின்ற மதநீரையுடைய யானை யென்றும் உரைக்கலாம். வனஜம் - நீரிற்பிறப்பது. செகம் - ஜகத். காண் - தேற்றம்; முன்னிலை யசையாயின், ஒருமைப் பன்மை மயக்கமாம். அவற்றொழுது - ஐயுருபு உயர்திணையில் தொக்கது. தேவதாந்தரபஜநத்தால் நற்கதியை நண்ணாமையை விளக்கி, 'பணிந்துதிரியேழையீர்'

என்றார். இவனென - திருமாலென்றுஎனவுமாம். கஜேந்திராழ்வான் ஆதிமூலமே யென்று பொதுப்படக்கூறி அழைக்க, பிறதேவர்களெல்லாரும் நமக்கு ஒருமூல முண்டென்றுகருதி வாளாஇருக்க, ஸ்ரீமகாவிஷ்ணுவே வந்து அந்த யானையைக்காத்தருளியதனால், இவனே தேவாதிதேவனென்பது விளங்கிக் கிடந்த தென்றபடி. இக்கருத்துப்பற்றியே, "கடுத்தகராங்கதுவ நிமிர்கையெடுத்துமெய்கலங்கி, யுடுத்ததிசையனைத்தினுஞ்சென் றோலிகொள்ள வுறுதுயரா, லடுத்தபெருந்தனிமூலத்தரும்பரமேபரமேயென், றெடுத் தொருவாரணமழைப்ப நீயோவன்றேனென்றாய்" என்றார் கம்பரும்.

இது - முதல் இரண்டு ஐந்து ஆறாஞ் சீர்கள் காய்ச்சீர்களும், மற்றை நான்கும் மாச்சீர்களு மாகிய எண்சீராசிரியவிருத்தம். (௩௮)

[இரங்கல்.]

௩௯. வீரமேவுஞ்சுடர்நேமியெம்பிரான் மேவும்வேங்கடவெற்பினிற்காடுகாள், கூரமேவருநெட்டுயிர்ப்பையுங் கோலமேவுகுலவண்டுவீழ்கையு, மாரமேவியகண்களும்பெற்று வாரம்முலைக்கொடியாரலர் தூற்றவே, வாரமேவிநிற்கின்றீரென்போலவே வாஞ்சித்தீர்கொன் மணவாளர்தம்மையே.

(இ - ள்.) வீரம் மேவும் - வீரத் தன்மை பொருந்திய, சுடர் நேமி - பிரகாசத்தை யுடைய சக்கராயுதத்தை யுடைய, எம்பிரான் - எமது தலைவனாகிய திருமால், மேவும் - விரும்பி எழுந்தருளியுள்ள, வேங்கடம் வெற்பினில் - திருவேங்கடமலையி லுள்ள, காடுகாள் - காடுகளே!—(நீங்கள்),— கூரம் மேவ வரு நெடு உயிர்ப்பையும் - கொடுமை பொருந்த வருகின்ற பெருமூச்சையும் [கொடிய பெருங் காற்றையும்], கோலம் மேவு குலம் வண்டு வீழ்கையும் - அழகு பொருந்திய கைவளைகள் கழன்று கீழ்வீழ்தலையும் [அழகிய வண்டினங்கள் மொய்த்து மேல்விழுதலையும்], ஆர் அம் மேவிய கண்களும் - மிக்க சோகநீர் பொருந்திய நேத்திரங்களையும் [ஆரம் மேவிய கண்களும் - முத்துக்கள் பொருந்திய மூங்கிற் கணுக்களையும், ஆர மேவிய கண்களும் - மிகுதியாகப் பொருந்திய இடங்களையும்], பெற்று - (உம்மிடத்தே) கொண்டு, வார் அம் முலை கொடியார் அலர் தூற்ற - கச்சினாற் கட்டுப்பட்டுள்ள அழகிய தனங்களை யுடைய பூங்கொடி போன்ற மகளிர் பெரும்பழியைச் சொல்லி (வெளியில்)தூற்றுநிற்க [நீண்ட அழகிய முல்லைக் கொடிகள் பூக்களைச் சிந்தாநிற்க], வாரம் மேவி நிற்கின்றீர் - அன்பு பொருந்தி நிற்கின்றீர்கள்; (ஆதலால்), என் போலவே - என்னைப் போலவே, மணவாளர்தம்மை - அத்தலைவரை, வாஞ்சித்தீர்கொல் - விரும்பினீர்களோ? (எ-று.)

இது, எம்பெருமானை அணைந்துபுணரவேண்டுமென்று காதல்கொண்ட தலைமகள் அது பெறாமையால் மிகக் கொடிய விரகவேதனைகொண்டு ஆற்றாமையால் காடுகளை நோக்கி இரங்கிக் கூறியது.

இது, காடுகளுக்கும் தலைமகளுக்கும் சிலேடை பற்றி உவமை கூறியதனால், சிலேடையுவமையணி. வீரம் எவும் எனப் பிரித்து, வீரத்தன்மையோடு பிரயோகிக்கப்படுகிற என்றுமாம். கூரம் - க்ரூரம் என்னும் வடமொழியின் திரிபு. முல்லை - முலையென இடைக்குறைவிகாரம்; "முலையணிந்தமுறுவலாண் முற்பாணிதருவாளோ" எனக் கலித்தொகையிலும், "பயிற்சியும் வனமுலைப்பாலே" என அழகர்கலம்பகத்திலும், "முலையேயணிந்தமுகிழ் நகையீர்" என மதுரைக்கலம்பகத்திலுங் காண்க. கொடியார் - லதைகளுக்குச் சிறப்புப்பற்றி வந்த திணைவழுவமைதி. கொல் - வினா.

இது - முதலில் மாச்சீரும் மற்றை மூன்றும் கூவிளச்சீர்களும் பெரும்பாலும் பெற்று நாற்சீராய் வந்தது அரையடியாகவும், அஃதிரட்டிகொண்

டது ஓரடியாகவும், அவ்வடி நான்குகொண்டு, அரையடிக்கு நிரையசைமுத லாயின் ஒற்றொழித்துப் பன்னிரண்டெழுத்தும், நேரசை முதலாயின் பதி னோரெழுத்தும் பெற்றுவரும் கட்டளைக்கலிப்பா. (௩௯)

**௪0.** மையார்தருகண்ணொடுவாரமைவின்மணிசந்தனமாவனமு ம்பெறலா, லையாவிவள்வன்முலையுன்மலைநேராய்நின்றதுநீயணையத்த குமா, னெய்யாரளகச்செய்யாள்கணவா நிறைவெண்மதிகாய்நிலவீ ன்பணிலக், கையாயருளைச்சொரிசெங்கமலக்கண்ணா திருவேங்கட மாயவனே.

(இ - ள்.) நெய் ஆர் - நெய்ப்புப்பொருந்திய, அளகம்-கூந்தலையுடைய, செய்யாள் - செந்நிற முடைய திருமகளுக்கு, கணவா - கொழுநனே!— நிறை வெள் மதி காய் நிலவு ஈன் - வெண்ணிறமாகிய பூர்ணசந்திரன் எறிக் கின்ற நிலாப் போன்ற ஒளியை வெளிவிடுகின்ற, பணிலம் - சங்கத்தை ஏந்திய, கையாய் - திருக்கையை யுடையவனே!—அருளை சொரி - கரு ணையைப் பொழிகின்ற, செம் கமலம் கண்ணா - செந்தாமரைமலர்போலுந் திருக்கண்களை யுடையவனே!—திரு வேங்கடம் மாயவனே - திருவேங்கட மலையி லெழுந்தருளிய ஆச்சரியகரனாயிருப்பவனே!—ஐயா - தலைவனே!— மை ஆர்தரு கண்ணொடு - கருநிறம் பொருந்திய நுனியையும், வார் அமைவு - கச்சின் அமைதியையும், இன் மணி - இனிய முத்தாரங்களை யும், சந்தனம் - சந்தனக்குழம்பையும், மா வனமும் - மிக்க அழகையும், பெறலால் - பெறுதலால், [மை ஆர் தரு - (உயர்ச்சியால்) மேகங்கள் தங்கு கிற மரங்களையும், கண்ணொடு வார் அமை - கணுக்களுடனே நீண்ட மூங் கில்களையும், வில் மணி - ஒளியை யுடைய இரத்தினங்களையும், சந்தனம் மா வனமும் - பெரிய சந்தனக்காட்டையும், பெறலால் - பெறுதலினால்], இவள் வல் முலை - இவளது வலிய தனம், உன் மலை நேர் ஆய் நின்றது - உனது திருவேங்கடமலைக்குச் சமானமாயிருந்தது; (ஆதலால்), நீ அணைய தகும்-(அம் மலையைப்போலவே இம்முலையையும்) நீ சேரத்தகும்; (எ - று.)

தோழி தலைவனிடம் நகையாடி உரைத்தது.

முதலடி - சிலேடையணி. மணி-ஆரத்துக்குக் கருவியாகுபெயர். நெய் ப்பு - கூந்தலுக்கு உரிய ஐந்து குணங்களுள் ஒன்று; அவை - மென்மை, கருமை, மணம், மது, நெய்ப்பு என்பன: இனி, நெய் ஆர் அளகம் - வாசனை யெண்ணெய் தடவிய கூந்தலுமாம். கண் - முலைக்கண். வல்முலை - சூதாடு கருவிபோன்ற தனங்களுமாம்.

இது - எல்லாச்சீரும் மாச்சீராகிய எண்சீராசிரியவிருத்தம். (௪0)

[சம்பிரதம்.]

**௪௧.** மாயமலநெடியகருவேலையொருகைக்கொள்வன்வரைவிரற் றலைநிறுவுவன் வன்னிநடுநிற்ப னம்புலிபுவிவரப்புரிவன் மாவினது கொம்பினுடனே, காயமிகநாறலரிதன்னிலேயோடுதேடிகாட்டுவனொ ருநொடியினிற் கனலோகமுழுவதுமுடைப்பனண்டமுமுண்டுகக்கு வன் னிவைவித்தையோ, வேயனையதோளினயிராணி கலைவாணிபனி வெற்பில்வருகலியாணியும் மென்பாணிவனசநிகர் செம்பாணிதொ ழுதுசொரிவிரிமலர்படக்கன்றுதாட், சாயன்மடவன்னநடைநங்கை யலர்மேன்மங்கைதன்கணவர் வடமலையில்வாழ் சக்ரமாலடிதலையில் வைத்திடாவொருகடவுடன்னையினிமுன் விடுவனே.

(இ - ள்.) மாயம் அல - (யான் சொல்வன) பொய்யல்ல; நெடிய கரு வேலை ஒரு கை கொள்வன் - பெரிய கருநிறமான கடல்முழுவதையும் ஒரு

கையிலே எடுத்துக்கொள்வேன் [நீண்ட பெரிய வேலாயுதத்தை ஒரு கையிலே ஏந்துவேன்]; வரை விரல்தலை நிறுவுவன் - மலையை விரலின் நுனியிலே நிற்கச்செய்வேன் [இரேகைகளை விரலினிடத்தே நிலைபெறுத்துவேன்]; வன்னி நடு நிற்பன் - நெருப்பினிடையிலே நிற்பேன் [வன்னி மரத்தின் கீழே நிற்பேன்]; அம்புலி புவி வர புரிவன் - சந்திரனைப் பூமியிலே வரச் செய்வேன் [அழகிய புலியைப் பூமியிற் பொருந்தச் செய்வேன்]; மாவினது கொம்பினுடன் - குதிரைக்கொம்பையும், ஆகாயம் மிக நாறு அலரி - ஆகாயத்தில் (தோன்றி) மிகுதியாக வாசனைவீசுகின்ற பூவையும், தன்னிலே ஓடு தடி - (பிறர்முயற்சியின்றித்) தானாகவே ஓடுகின்றதொரு தடியையும், காட்டுவன் - காண்பிப்பேன் [மாமரத்தினது கொம்பையும், ஆகாயத்திலே மிகுதியாக விளங்குகின்ற சூரியனையும், தானாகவே ஓடுகிற (சஞ்சலமான கொடி) மின்னலையும் காண்பிப்பேன்]; ஒரு நொடியினில் - ஒரு நொடிப்பொழுதினுள்ளே, கன லோகம் முழுவதும் உடைப்பன் - பெரிய உலகங்கள் முழுவதையும் உடைப்பேன் [சிறந்த (பொன் வெள்ளி முதலிய) லோஹங்களெல்லாவற்றையும் உடைப்பேன்]; அண்டமும் உண்டு கக்குவன் - எல்லா அண்டங்களையும் உட்கொண்டு புசித்து மீண்டும்வெளியிலுமிழ்வேன் [அண்டு அமுதம் உண்டு உகக்குவன் - பொருந்திய நீரையும் உண்டுமகிழ்வேன்]; இவை வித்தையோ - இவையெல்லாம் (எனதுதிறமைக்கு ஏற்ற பெரிய) வித்தைகளோ? [அல்ல]; (இன்னும் என்ன செய்வேனென்றால்),—வேய் அனைய தோளின் அயிராணி - இளமூங்கிலை யொத்த தோள்களை யுடைய இந்திராணியும், கலை வாணி - கல்விக்கு உரிய சரசுவதியும், பனி வெற்பில் வரு கலியாணியும் - இமய மலையினிடத்துத் தோன்றிய ஸர்வமங்களகரையான பார்வதியும், மெல் பாணி வனசம் நிகர் செம் பாணி - மென்மையான நீரிலே தோன்றிய தாமரைமலரை யொத்த சிவந்த தமதுகைகளாக, தொழுது சொரி - அஞ்சலி செய்து அருச்சித்த, விரி மலர் - மலர்ந்த பூக்கள், பட - மேற்படுதலால், கன்று - வெதும்பிப் போன, தாள் - (மிகவும் மென்மையான) திருவடிகளையும், சாயல் மடம் அன்னம் நடை - மென்மையையும் இளமையையு முடைய அன்னப்பறவையினது நடைபோன்ற நடையையுமுடைய, நங்கை - பெண்ணிற் சிறந்தவளாகிய, அலர்மேல் மங்கைதன் - அலர்மேன்மங்கை யென்னும் பெரியபிராட்டியினது, கணவர் - கணவராகிய, வட மலையில் வாழ் சக்கரம் மால் - வடவேங்கட மலையிலே நித்தியவாசஞ்செய்கின்ற திருவாழியையுடைய திருமாலினது, அடி - திருவடிகளை, தலையில்வைத்திடா - தலைமேற்கொண்டு வணங்காத, ஒரு கடவுள்தன்னை - ஒரு தெய்வத்தை, இனி முன் விடுவன் - இனிமேல் (தேடிக் கொணர்ந்து) முன்னே விடுவேன்; (எ - று.)

இந்திரஜாலம் முதலிய மாயவித்தை வல்லவர் தமதுதிறப்பைத் தாமே எடுத்துக் கூறுவதாகச் செய்யுள் செய்வது, சம்பிரதம் என்னும் உறுப்பாம்.

முன்னிரண்டடி - சிலேடையணி. வன்னி - அனலைக் குறிக்கும்போது, வடசொல்; வஹ்நி. புலி சித்திரகாய மாதலால், 'அம்புலி' எனப்பட்டது. 'ஆகாய மிக நா றலரிதன்னிலே ஓடு தடி காட்டுவன்' என்பதற்கு - ஆகாயத்தில் மிக்கு விளங்குகின்ற சூரியனிடத்தே ஓடுகிற மின்னலைக் காட்டுவேன் என்று சம்பிரதமாகஉரை உரைத்து, ஆகாயமுழுவதும் பரவும்படி வாசனை வீசுகிறஅலரிச்செடியிலே நாற்புறமும்பரவிய பூங்கொம்புகளைக் காட்டுவேன் என்று உள்ளுறை பொருள் கொள்ளுதலு மாம். நொடி - இயல்பாக ஒரு மனிதன் கையை ஒருகால் நொடித்தற்கு வேண்டும் பொழுது; அது - மாத்திரை யெனப்படும். வேய் - தோளுக்குத் திரட்சியால் உவமை. இந்திராணியும் சரசுவதியும் பார்வதியும் அலர்மேல்மங்கைக்குத் தொண்டுபூண்டொழுகுகிறார் என்றதனால், இந்திரனும் பிரமனும் சிவனும் அவள்கணவருக்குத்

தொண்டுபூண்டொழுகுகிறாரென்பதுங் கூறியதாம். 'மலர்படக்கன்றுதாள்' எனத் தாளினது மிக்கமென்மையைத் தெரிவித்தபடி; 'அனிச்சமுமன்னத், தின்றூவியுமாத, ரடிக்குநெருஞ்சிப்பழம்'' என்னுந் திருக்குறளை நோக்குக. ''சாயல் மென்மை'' என்னுந் தொல்காப்பியச் சூத்திரத்தால், சாயல் என்பது, ஐம்பொறிகளாலும் நுகரப்படும் பலவகை மென்மைகளையும் உணர்த்துவதோர் உரிச்சொல்லாதலை உணர்க. அன்னம் - ஹம்ஸம் என்னும் வடசொல்லின் சிதைவு. நடை - தொழிற்பெயர்: ஐ-விகுதி, பகுதி ஈறுதொக்கது. நங்கை - பெண்பாற்சிறப்புப்பெயர். 'இனி முன் விடுவன்' என்றது, திருவேங்கட முடையானது திருவடிகளைத் தலைமேல் வைத்துக் கொள்ளாததொரு தேவதாந்தரம் எவ்வுலகத்திலும் இல்லை யாதலால், இனித் தேடி முன் விடுவேன் என அருமை அறிவித்தபடி; இனி, அங்ஙனம் திருமாலுக்கு அடிமையாகாத தெய்வத்தை முன்னே துறந்துவிடுவேன் என்னும் பொருளுந் தோன்றும்.

இது - பெரும்பாலும் முதல் ஐந்து சீர்களும் காய்ச்சீர்களும், ஈற்றது கனிச்சீருமாய் வந்தது அரையடியாகவும், அஃதிரட்டி கொண்டது ஓரடியாகவும் நின்ற பன்னிருசீராசிரியவிருத்தம். (௪௧)

௪௨. விடுத்திடுபடைக்கலவரக்கர்மடியப்பொருவிறற் சிலைவளைத்
தடுபிரான், வடிக்கணைவிழித்திருவிருக்குமகலத்தினன் மணிப்பணி
வரைக்கண்மடவீர், கொடிக்கிணையெனச்சொலுமதுத்தமநுசுப்பெ
ழில் குறித்தறவும்வெட்கியலவோ, விடிப்புயலகத்தெழுதடித்திலகு
மப்புயலிடத்தினிலொளித்துவிடலே.

(இ - ள்.) விடுத்திடு - (பகைவர்மேற்) பிரயோகிக்கின்ற, படைக்கலம்-ஆயுதங்களை யுடைய, அரக்கர்-இராக்கதர்கள், மடிய-ஒருங்கே இறக்கும்படி, பொரு விறல் சிலை வளைத்து அடு - போர்செய்கின்ற திறமையை யுடைய(கோதண்டமென்னும்தனது)வில்லைவணக்கி(அவர்களை)அழிக்கின்ற, பிரான் - தலைவனும், வடி கணை - நெருப்பில்வைத்து நன்றாகக் காய்ச்சிக் கூர்செய்தலையுடைய அம்புகள்போல மிகக் கூர்மையான, விழி - திருக்கண்களையுடைய, திரு - இலக்குமி, இருக்கும் - வீற்றிருக்கின்ற, அகலத்தினன் - விசாலமான திருமார்பை யுடையவனு மாகிய ஸ்ரீநிவாசனது, மணி பணி வரைக்கண் - அழகிய சேஷாசலத்தி னிடத்தே யுள்ள, மடவீர் - இளமகளிரே!—இடி புயல்அகத்து எழு - இடியிடித்தலையுடைய மேகத்தினிடத்தே தோன்றுகின்ற, தடித்து - மின்னல்,இலகும் அ புயலிடத்தினில் ஒளித்துவிடல் - அந்தமேகத்தினிடத்தில்தானே(மீண்டும் உடனே)மறைந்துவிடுதல்,—கொடிக்கு இணை என சொல் - பூங்கொடிக்கு (உபமேய மாகாமல்) உபமான மென்று சொல்லப்படுகின்ற, உமது உத்தமம் நுசுப்பு - உங்களது சிறந்த இடையினது, எழில் குறித்து - அழகைக் கருதி, அறவும் வெட்கி அலவோ - (அவ்விடையின்முன்னே தான் வெளிப்படுதற்கு) மிகவும் நாணங்கொண்டல்லவோ? (எ - று.)

இது - தலைவன் தலைவியை நோக்கி அவளிடத்துத் தனக்கு உண்டான காதலைப் புலப்படுத்திக் கூறியது.

மேகங்களில் தோன்றி இயல்பாக மறைகின்ற மின்னல்களைத் தலைவியாரது இடையின் பொலிவு கண்டு அதன்முன் நிற்க நாணியே மறைவனவாக உத்பிரேக்ஷித்தான்; ஏதுத்தற்குறிப்பேற்றவணி. மடவீர், உமது என்னும் முன்னிலைப்பன்மைகள், மரியாதைபற்றியன; தோழியை உளப்படுத்தியன வென்றலும் ஒன்று. உபமேயப்பொருளினும் உபமானப்பொருள் சிறந்திருத்தல் வேண்டுமென்பது அலங்காரநூலார்துணி பாதலின், 'கொடிக்கிணையெனச்சொல்நுசுப்பு' எனப்பட்டது. படைக்கலம் - சேனைக்குஉரிய

கருவி. படை - பகைவர்களைப் படுப்பது; சேனை அல்லது போர்: படுத்தல் - அழித்தல், ஐ - கருவிப்பொருள்விகுதி. விடுத்திடு படைக்கலம் அரக்கர் - இழக்கின்ற ஆயுதங்களையுடைய அரக்கருமாம். அரக்கர் - ரக்ஷஸ் என்னும் வடசொல்லின் சிதைவு.

இது - முதலைந்தும் விளங்காய்ச்சீர்களும், ஆறாவது தேமாச்சீரும், ஏழாவது புளிமாச்சீருமாகிய எழுசீராசிரியச்சந்தவிருத்தம். (சஉ)

[இரங்கல்.]

சங. ஒளிக்குங்குமக்கொங்கையுகளத்தின்மடவீருத்துங்கசிகரத்தினொருசேடகிரிமா, லளிக்கும்பெருங்காமமுள்ளத்தினுள்ளேயடங்காதுகொல்லோவிடங்காலும்விழியாள், கிளிக்குங்குயிற்குஞ்சிகிக்குஞ்சகிக்கும் கீதத்தளிக்குங்கபோதத்திரட்கும், களிக்கின்றபூவைக்குமன்னங்களுக்குங்காருக்குமேசொல்லுமூரென்சொலாதே.

(இ - ள்.) ஒளி குங்குமம் கொங்கை யுகளத்தின் மடவீர் - பிரகாசத்தையுடையனவும் குங்குமப்பூவின் குழம்பை யணிந்தனவுமாகிய உபய தனங்களையுடைய இளம்பெண்களே!—உத்துங்க சிகரத்தின் ஒரு சேடகிரி மால் - உயர்ந்த சிகரங்களையுடைய ஒப்பற்ற சேஷாசலத்தில் எழுந்தருளியுள்ள திருமால், அளிக்கும் - (இம்மகளுக்குக்) கொடுத்தருளிய, பெருங் காமம் - பெரிய வேட்கையானது, உள்ளத்தினுள்ளே அடங்காது கொல் - மனத்தினுள்ளே அடங்கமாட்டாதோ? (ஏனெனில்),—விடம் காலும் விழியாள் - நஞ்சை உமிழ்கின்ற கண்களையுடைய இவள், கிளிக்கும் - கிளிகளுக்கும், குயிற்கும் - குயில்களுக்கும், சிகிக்கும் - மயில்களுக்கும், சகிக்கும் - தோழிகளுக்கும், கீதத்து அளிக்கும் - இசைப்பாட்டையுடைய வண்டுகளுக்கும், கபோதம் திரட்கும் - மாடப்புறாக்களின் கூட்டத்திற்கும், களிக்கின்ற பூவைக்கும் - (துணையோடுகூடி) மகிழ்கிற நாகணவாய்ப்பறவைகளுக்கும், அன்னங்களுக்கும் - அன்னப்பறவைகளுக்கும், காருக்குமே - மேகங்களுக்கும், சொல்லும் - (தனது வேட்கையை வெளியிட்டுச்) சொல்லுவாள்; (இங்ஙனம் வேட்கையை அடக்காமல் வெளியிட்டால்), ஊர் என் சொலாது - ஊரிலுள்ளார் யாதுதான் சொல்லமாட்டார்கள்? [மிகப் பழிதூற்றுவரென்றபடி]; (எ - று.)

இது-செவிலித்தாய் தோழியருடன் தலைவியது தன்மையை இரங்கிக் கூறியது.

சிகரம் - மலையுச்சி. காமமாவது - ஒருகாலத்தில் ஒருபொருளால் ஐம்புலன்களும் அனுபவிக்குஞ் சிறப்புடையதான சிற்றின்பத்தினிடத்து உண்டாகும் ஆசை. கொல் - ஐயம். ஓ - வினா. 'விடங் காலும் விழியாள்' என்றது - கண்ணின் கருமையினாலும், பார்வையால் ஆடவர்க்குக் காமநோயைஉண்டாக்கி அவர்களுக்கு மரணாந்தமான வேதனையை விளைத்தலாலுமென்க. சிகி - தோகையையுடையது என மயிலுக்கு வடமொழியிற் காரணப்பெயர்; சிகா - தோகை. சகி - ஸகா என்பதன் பெண்பால். 'களிக்கின்ற பூவை' என்றதனால், அவை இவளது நோயைக் குறித்துக் கவலைப்படாமையைக் குறிப்பித்தாள். ஊர் - இடவாகுபெயர்.

இது - நான்கு எட்டாஞ் சீர்கள் மாச்சீர்களும், மற்றவை காய்ச்சீர்களுமாகிய எண்சீராசிரியவிருத்தம். (சங)

[கைக்கிளை.]

சச. தேங்கோதை வாடுமிரு சீரடிகள் பார்கூடும்
பூங்காவிக் கண்ணிமைத்துப் போராடு—மீங்கிவையா

லொப்பிலா வேங்கடத் துறையிவ
ரப்பனுண் டுமிழ்ந்த வலர்பூக் கொடியே.

(இ - ள்.) (இவரது), தேன் கோதை வாடும்-தேனையுடைய மலர்மாலைகள் வாடாநிற்கும்; இரு சிறு அடிகள் பார் கூடும் - இரண்டு சிறிய பாதங்கள் பூமியிற் பொருந்தும்; பூ காவி கண் இமைத்து போர் ஆடும் - அழகிய நீலோற்பலமலர்போன்ற கண்கள் இமைத்துக்கொண்டு போர்செய்யும்; ஈங்கு இவையால் - இங்குக் கூறிய இந்தக் காரணங்களினால், ஒப்பு இலா வேங்கடத்து உறை இவர் - உவமையில்லாத திருவேங்கடமலையிலே வாசஞ்செய்கின்ற இம்மகளார், அப்பன் உண்டு உமிழ்ந்த அலர் பூ கொடியே - அத் திருவேங்கடமுடையான் (பிரளயகாலத்தில்) விழுங்கி (மீண்டும்)வெளிவிட்ட விளங்குகிற நிலவுலகத்திலுள்ள பூங்கொடிபோன்ற மானிடமகளே யாவர்; (எ - று.)

இது - பொழில்விளையாட்டுவிருப்பால் தோழிமார்கூட்டம் நீங்க அப்பொழிலினிடத்துத்தனித்துநின்ற தலைமகளை,வேட்டைவிருப்பால் தோழர்கூட்டம் நீங்கத் தனியனாய்வந்த தலைமகன் கண்ணுற்று, தெய்வமகளோ மானுடமாதோ வென்று ஐயுற்று, பின்பு இவ்வகைக்குறிகண்டு, தெய்வமல்லள் மக்களுள்ளாள் எனத் தெளிந்தது; எனவே, தெய்வமல்லளாதற்குக் காரணம் இனையனகுறியே, வேற்றுமையில்லை யென்பது, கருத்து: தெளிதல் என்னும் அகப்பொருள்துறை; "பாயும்விடையரன்றில்லையன்னாள்படைக்கண்ணிமைக்குந், தோயுநிலத்தடிதூமலர்வாடுந் துயரமெய்தி, யாயுமனனேயணங்கல்லளம்மாமுலைசுமந்து, தேயுமருங்குற்பெரும்பணைத்தோளிச்சிறுநுதலே" என்னுந் திருக்கோவையாரையும், "தாளிரண்டும் பாரொன்றுந் தார்வாடும் வேர்வாடும், வாளிரண்டுங் காதிரண்டில் வந்திமைக்கும் - கோளிரண்டு, மைவகைப் பூத மமைத்தரு ளரங்கர், மைவளர் சோலை மலையிற், றெய்வ மல்ல ளித் திருவுருவினளே" என்னுந் திருவரங்கக் கலம்பகத்தையும் உணர்க. இது - தலைவன் தலைவியர்களுள் ஒருவருள்ளக்கருத்தை ஒருவர் அறியாத ஒருதலைக்காமமாதலால்,கைக்கிளையாயிற்று. கண்ணிமைத்தலும், கால் நிலந்தோய்தலும், மாலைவாடுதலும், உடம்புவேர்த்தலும், மாலையில் வண்டு மொய்த்தலும், தேவர்களினின்றும் மனிதரைப் பிரித்து அறிதற்கு உரிய குறிகளாம்; "கண்ணிமைத்தலா லடிகள்காசினியிற் றோய்தலால், வண்ணமலர்மாலை வாடுதலா - லெண்ணி, நறுந்தாமரைவிரும்புநன்னுதலேயன்று, னறிந்தாளனன்றன்னையாங்கு" எனப் புகழேந்திப் புலவர் கூறியதுங் காண்க.

தேன் + கோதை = தேங்கோதை; தேன்மொழி வலிவர இறுதியழிந்து மெலிமிக்கது:[நன்-மெய் ௧௧.] இனி, தேம் என மகரவீறாகவும் பிரிக்கலாம். மகளிர்க்கு அடி சிறுத்திருத்தல் உத்தமலக்ஷணம்; "நுதலடிநுசுப்பென மூவழிச் சிறுகி" என்றார் கலித்தொகையிலும். 'சீரடி' என்று பாடமாயின், சிறந்த அடியென்க. காவி - மலர்க்கு முதலாகுபெயர். பூ என்பதற்கு - மலர் என்று பொருளுரைத்து,காவிக்கு முதலுக்கு ஏற்ற அடைமொழியாக்கினும் அமையும்; காவிப் பூ என மாற்றுதலுமாம். 'கண்போராடும்' என்றது, விழி பிறழ்தலை. ஈங்கு - சுட்டு நீண்டது. அப்பன் உண்டு உமிழ்ந்த பூமி யென்க; பூ - வடசொல். இவர் - சிறப்புப்பன்மை.

இது - முதலிரண்டடிகளும் வெண்பாவடிகளாய், மற்றிரண்டும் ஆசிரியவடிகளாய், அவற்றுள்ளும் ஈற்றயலடி முச்சீரதாய் வந்து, தெளிதலைச் சொன்ன ஒருதலைக்காம முணர்த்தியதனால். கைக்கிளைமருட்பா. (௪௪)

௪௫. கொடியொன்றிரண்டுசிலைமன்றல்கொண்டகுமிழொன்றிரண்டுநலகூர், வடியொன்றிரண்டுகுழைநின்றிலங்குவளையொன்றிர

ண்டுதிரள்வேய், தொடியொன்றிரண்டுவனசஞ்சுமந்துதுளவன்புய
ங்ககிரிவாய்ப்,படியொன்றிரண்டுதளிர்கன்றவின்றுபடர்கின்றதின்ப
முறவே.

(இ - ள்.) கொடி ஒன்று-ஒருபூங்கொடி[தலைவி],இரண்டுசிலை-இரண்டு விற்களையும் [புருவங்களையும்], மன்றல் கொண்ட குமிழ் ஒன்று - வாசனையைக்கொண்ட குமிழம்பூ வொன்றையும் [மூக்கையும்], இரண்டு நல கூர் வடி ஒன்று இரண்டு குழை - இரண்டு நல்ல கூர்மையான வடித்தஅம்புகள் [கண்கள்] அளாவுகின்ற இரண்டு குழையென்னுங் காதணிகளையும், நின்று இலங்கு வளை ஒன்று - (சஞ்சரியாமல்) நிலைநின்று விளங்குவதொரு சங்கத்தையும் [கண்டத்தையும்], இரண்டு திரள் வேய் - இரண்டு திரண்ட இளமூங்கில்களையும் [தோள்களையும்], தொடி ஒன்று இரண்டு வனசம் - தொடியென்னுங் கைவளை பொருந்திய இரண்டு தாமரை மலர்களையும் [கைகளையும்],சுமந்து - பரித்து, துளவன் புயங்க கிரிவாய் - திருத்துழாய்மாலையையுடைய திருமாலினது சேஷகிரியினிடத்தே, படி ஒன்று இரண்டு தளிர் கன்ற - பூமியிலே பொருந்திய இரண்டு தளிர்கள் கன்றிப்போக [பாதங்கள் வருந்த], இன்று - இப்பொழுது, இன்பம் உற - (காண்பவர்க்கு) இன்பம் மிகும்படி, படர்கின்றது-நடந்து செல்லுகின்றது [நடந்துவருகிறாள்]; (இது என்ன வியப்போ!) (எ - று.)

இது - காட்சி யென்னும் அகப்பொருள்துறை; அதாவது-தலைமகளைத் தலைமகன் முதலிற்கண்ணுற்று'இஃதொரு வியப்புஎன்!'என்பது:"திருவளர் தாமரைசீர்வளர்காவிகளீசர்தில்லைக், குருவளர்பூங்குமிழ்கோங்கு பைங்காந்தள்கொண்டோங்கு தெய்வ, மருவளர் மாலையோர்வல்லியினொல்கி யனநடைவாய்ந், துருவளர்காமன்றன்வென்றிக்கொடிபோன்றொளிர்கின்றதே" என்றார் திருக்கோவையாரிலும்.

உபமானத்தைக் கூறியதனால் உபமேயந்தோன்ற நின்றமையின்,இது, புனைவிலிபுகழ்ச்சியணி; வடநூலார் 'அப்ரஸ்துதப்ரசம்ஸாலங்காரம்' என்பர்: பிறிதுமொழிதலென்றும் பெயருண்டு. குமிழ் - அதன் பூவுக்கு ஆகுபெயர்.வடி-மாவடுவின் பிளவு என்றுங் கொள்ளலாம். வடியொன்று குழை, ஒன்று - வினைத்தொகை. கிரிவாய், வாய் - ஏழனுருபு.

இது - எல்லாச்சீரும் புளிமாச்சீராகிய ஏழுசீராசிரியவிருத்தம். (௬௫)

[வண்டு.]

௬௬. உறவேதுமக்குவண்டீர்வேங்கடேசர்பண்டூதியநன்
னிறவேயனையசொன்மானிடைபோம்படிநித்தமுலை
யறவேபருத்தனநீரோகுழலிலமர்ந்துமலர்
நறவேயுண்டாடுகின்றீர்நடுப்போம்விண்டுநண்ணுவிரே.

(இ - ள்.) வண்டீர்-வண்டுகளே!—உமக்கு உறவு ஏது-உங்களுக்கு (இத் தலைவியினிடம்)நண்பின் பயனாகிய அன்புஏது?[இல்லையென்றபடி];(ஏனெனில்).—வேங்கட ஈசர் பண்டு ஊதிய நல் நிறம் வேய் அனைய சொல் மான் இடை போம்படி - திருவேங்கடநாதர் முற்காலத்தில் [கிருஷ்ணாவதாரத்தில்] ஊதி வாசித்த நல்ல நிறத்தையுடைய வேய்ங்குழலி னிசையை ஒத்த [மிக இனிய] சொற்களை யுடைய மான்போலும் பார்வையுள்ள இவளது இடுப்பு அழியும்படி, நித்தம் - நாள்தோறும், முலை-தனங்கள், அறவே பருத்தன - மிகவும் பருத்து வருகின்றன ; (இங்ஙனம் முலைகள் இடையை மிக வருத்துவதைக் கண்டும்), நீரோ-நீங்களோ,குழலில் அமர்ந்து-(இவளது)கூந்தலில்வந்துபொருந்திநிறைந்து,மலர்நறவு உண்டு ஆடுகின்றீர்-(அதிற் சூடப் பட்டுள்ள)மலர்களின் தேனைப் பருகிக் களிக்கின்றீர்;நடு போம் - (இவ்வாறு

செய்தால் உங்கள்) நடுவுநிலைமை அழியும் ; (ஆதலால்), விண்டு நண்ணுவிர்- (இவள்கூந்தலை விட்டு) ஆகாயத்தே செல்லுங்கள்; (எ - று.)

இது - வண்டோச்சி மருங்கணைதல் என்னும் அகப்பொருள்துறை; அதாவது - தலைமகளைப் பூஞ்சோலையில் ஏகாந்தமான இடத்திலே தனியே கண்ட தலைமகன் தனது தளர்வுநீங்கி அவளருகிற் சென்று தனது ஆற்றாமைமிகுதியைக் கூற, அதுகேட்டு அவள் நாணிழந்து வருந்தாநிற்ப,சென்று சார்தலாகாமையின், தலைமகன் தனது ஆதரவினால் அவ்வருத்தந் தணிப்பான் போன்று, முலையொடு முனிந்து, ஒருகையால் இறுமருங்குல் தாங்கியும், ஒருகையால் அளிகுலம் விலக்கி அளகந்தொட்டும் சென்று அணையாநிற்றல்: "கோலத்தனிக்கொம்பரும்பர்புக்கதேகுறைப்பவர்தஞ்,சீலத்தன கொங்கைதேற்றகிலேஞ்சிவன்றில்லையன்ன, ஞாலத்தநேரிடைநொய்ம்மையெண்ணாதுநுண்டேனசையாற், சாலத்தகாதுகண்டீர் வண்டுகாள் கொண்டைசார்வதுவே" என்றார் திருச்சிற்றம்பலக்கோவையாரிலும். மெய்ப்பாடு - உவகை. பயன் - தலைமகளைச் சார்தல். இவ்வாறு தான் ஆதரவுரைத்து இறுமருங்குல் தாங்குவானாய்ச் சென்று சார்வனென்க.

நல் நிறம் - நல்ல இசைக்கு உரிய வண்ணமுமாம். வேய் - அதன் குழலின் இசைக்கு இருமடியாகுபெயர்; மான் - என்பதும் இவ்வாறே. 'நறவே' என்னும் பிரிநிலை யேகாரத்தால், தலைமகளது இடைமெலிவையும் முலைப்பாரத்தையும் சிறிதும் கருதுகின்றீரில்லை யென்றான். 'நடுப்போம்' என்பதற்கு-இடை முரிவுபடும் என்றும் உரைக்கலாம். நடுவுநிலைமையென்றது,தாம் அடுப்பவரைக் கெடுக்கலாகா தென்னும் முறைமையை. இனி,நடுபோம் - (இவளைவிட்டு) நடுவே விலகிச் செல்லுங்கள் என்றுமாம். விண்டு நண்ணுவிர் - (இவளை) விட்டுச் செல்லுங்கள் என்னவுமாம்; விண்டு-இறந்தகாலவினையெச்சம்: விள் - பகுதி.

இது - நிரையசையாதிக் கட்டளைக்கலித்துறை. (௬௬)

௬௭. நண்ணா ரிலங்கையடு நாயகனே வேங்கடக்கார்
வண்ணாவுன் காற்றா மரையிற்பாய்—கண்ணாசை
யுட்டிருப்ப மாட்டாது நிற்கின்றா ளுன்னையிவள்
விட்டிருப்ப தெந்த விதம்.

(இ - ள்.) நண்ணார் இலங்கை அடும் நாயகனே - பகைவர்களாகிய இராவணன் முதலிய இராக்கதர்களது இலங்காபுரியை அழித்த தலைவனே! வேங்கடம் கார் வண்ணா - திருவேங்கடமலையில் எழுந்தருளிய காளமேகம் போன்ற கரிய திருநிறத்தையுடையவனே!—இவள்-இத்தலைவி, உன் கால் தாமரையில் பாய் கண் - உனது திருவடித்தாமரைமலர்களினிடத்தே செல்லுகின்ற தனது கண்களை, ஆசையுள் திருப்பமாட்டாது - இப்படிமீட்டுச் செலுத்த இயலாமல், நிற்கின்றாள் - வாளா நிற்கிறாள்; (இப்படிப்பட்டவள்), உன்னை விட்டு இருப்பது-உன்னைப் பிரிந்துஉயிர்வாழ்வது, எந்த விதம் - எவ்வாறோ? (எ - று.)

இது-பிரியக்கருதிய தலைமகனுக்குத் தலைமகளது பிரிவாற்றாமையைத் தோழி கூறியது; தலைமகனைச் செலவழுங்குவித்தல், இதற்குப் பயன்.

நண்ணார் - தன்னொடு சேராதவர்;எதிர்மறைவினையாலணையும்பெயர். மலர் என்னும் வாய்பாட்டால் முடிந்த இருவிகற்பநேரிசைவெண்பா. (௬௭)

[துறம்.]

௬௮. எந்தவிதங்களுமறிகுறமகளானிங்கெதிர்வந்தினியெனதிதமொழிகேளெந்தமுறந்தனினவமணிகொடுவா வன்பிலணிந்திடவழ

யகலைதா, கந்தமிகுந்ததனந்தனில்குறியே கண்டனனின்றலர்கமழ் குழன்மடவாய்,வந்தெவருந்தொழவடமலைதனில்வாழ் வண்டுளவன் றினமருவுவனுனையே.

(இ - ள்.) அலர் கமழ் குழல் மடவாய் - மலர்கள் வாசனைவீசுகின்ற கூந்தலையுடைய இளம்பெண்ணே!—எந்த விதங்களும் அறி குறமகள் நான் - குறிசொல்லும்வகைக ளெல்லாவற்றையும் அறிந்த குறச்சாதிப்பெண்ணாவேன் யான்: இங்கு எதிர் வந்து இனி எனது இதம் மொழி கேள் - இவ்விடத்தில் எதிரிலே வந்து இப்பொழுது என்னுடைய நல்லவார்த்தைகளைக் கேட்பாயாக: அந்தம் முறந்தனில் நவம் மணி கொடு வா - அழகிய முறத்திலே புதியனவான நெற்களைக் கொண்டுவந்து தருவாயாக; அன்பில் அணிந்திட அழகிய கலை தா - இஷ்டத்துடனே(யான்) உடுத்துக்கொள்ளும்பொருட்டு அழகையுடைய ஆடையைத் தருவாயாக; கந்தம் மிகுந்த தனந்தனில் - வாசனைமிகுந்த (உனது) கொங்கைகளிலே, குறியே - நல்ல குறிகளையே, இன்று கண்டனன் - (துரிதப்படாமல்) நிதானித்துப் பார்த்தேன்; (பார்த்ததில்), எவரும் வந்து தொழ வடமலைதனில் வாழ் வள் துளவன் - யாவரும் வந்து வணங்கும்படி வடவேங்கடமலையில் வாழ்கின்ற அழகிய திருத்துழாய்மாலையை யுடைய திருமால், தினம் - நாள்தோறும், உனை மருவுவன் - உன்னைக் கூடி வாழ்வன்; (எ - று.)

தலைமகனிடத்துக் காதல்கூர்ந்த தலைவிக்கு அத்தலைமகனது வாய்ம்மைக் குறத்தி குறிதேர்ந்துகூறுவதாகச் செய்யுள் செய்வது, குறம் என்னும் உறுப்பின் இலக்கணமாம்.

'இனிநினைந்துஇரக்கமாகின்றேன்', "எண்கையாய்கேளினி" என்றஇடங்களிற்போல,இனி என்னும் இடைச்சொல்-இங்கே,இப்பொழுதென்னும் பொருள்பட நின்றது. இதம் - ஹிதம். அந்த எனப் பிரித்து - சேய்மைச் சுட்டாகவுமாம். முறம் - சுளகு. நவ மணி - ஒன்பதுவகைத் தானியங்களென்றும், ஒன்பதுவகை இரத்தினங்களென்றுமாம். அன்பில் தா என இயைப்பினும் அமையும். கந்தம் - குங்குமக்குழம்பு, கலவைச்சந்தனம் முதலியவை பூசுதலா லாவது. இன்று எனப் பிரித்து, இப்பொழுது கண்டேனென்றுமாம். நின்று அலர் என எடுத்து, இயல்பாகவே ஒருபடிப்பட வாசனைவீசுகிற கூந்த லென்றுமாம். துளவுக்கு வண்மை - மிகுந்த வாசனை வீசுதலும், தேன்சொரிதலு மாகவுமாம்.

இது - நான்கும் எட்டும் புளிமாச்சீர்களும், மற்றவை கூவிளச்சீர்களுமாகிய எண்சீராசிரியவிருத்தம். (௪௫)

௪௬. உனைக்கருதாமனமுமுனைத்துதியாவாக்கு
முனைவணங்காத்தனுவையுங்கொண்டுலகிற்பாவ
மனைத்தினையுமீட்டினனின்றெழிக்கப்பூமே
லயனாலுமமையாதாலந்தப்பாவ
மெனைத்தொடராவிதம்பாலித்தருள்வோனீயே
யெனத்துணிந்துன்சரணடைந்தேனெனையாள்கஞ்ச
மனைக்குளுறைகொடியலர்மேன்மங்கைநாதா
வடமலையாயருள்பெருகிவழிகண்ணனே.

(இ - ள்.) கஞ்சம் - செந்தாமரை மலராகிய, மனைக்குள் - மாளிகையினிடத்தே, உறை - நித்தியவாசஞ் செய்கின்ற,கொடி - பூங்கொடிபோன்ற, அலர் மேல் மங்கை-அலர்மேன்மங்கை யென்னுந் திருநாமமுடைய பெரியபிராட்டிக்கு, நாதா - தலைவனே! வட மலையாய் - வடவேங்கட மலையில்

வாழ்பவனே! அருள் பெருகி வழி கண்ணனே-கருணை மிக்குச் சொரிகின்ற திருக்கண்களை யுடையவனே!—உனை கருதா மனமும் - உன்னைத் தியானியாத மனத்தையும், உனை துதியா வாக்கும் - உன்னைத் தோத்திரஞ் செய்யாத வாயையும், உனை வணங்கா தனுவையும் - உன்னை நமஸ்கரியாத உடம்பையும், கொண்டு - (இவ்வாறு உன்திறத்தில் உபயோகப்படாத திரிகரணங்களையும் யான்) உடையவனாய், உலகில் பாவம் அனைத்தினையும் ஈட்டினன் - இவ்வுலகத்திலே பெரும்பாவங்க ளெல்லாவற்றையும் சம்பாதித்தேன்; இன்று ஒழிக்க - (அவற்றை) இல்லையாம்படி ஒழித்தற்கு, பூமேல் அயனாலும் அமையாது - (உனது திருவுந்தித்) தாமரைமலரில் வாழ்கின்ற பிரமதேவனாலும் முடியாது; ஆல் - ஆதலால், அந்த பாவம் எனை தொடரா விதம் பாலித்து அருள்வோன் நீயே என துணிந்து-அந்தப் பாவங்கள் என்னைப் பின்பற்றாதபடி காத்தருள்பவன் நீயேயென்று நிச்சயித்து, உன்சரண் அடைந்தேன் - உனது திருவடிகளையே கதியாகப் பற்றினேன்; எனை ஆள்-என்னைக் காத்தருள்வாயாக; (எ - று.)

இன்றிஎன்னும்எதிர்மறைக்குறிப்புவினையெச்சம், இன்றுஎனஈறுதிரிந்தது: [நன் - உயிர் - உரு.] இனி, இன்று என்பதை எதிர்மறைக்குறிப்புமுற்றெச்சமாகவுங் கொள்ளலாம்; இப்பொழுது என்றுமாம். இன்று எனப் பதம் பிரித்து - நிலையாக ஒழிக்க எனவுமாம். அயன் - அஜன்; திருமாலினிடத்திலிருந்து தோன்றினவன்; இவனை இங்கே கூறியது, படைத்தற்றொழிலும், திருமாலினது குமாரனாதலும் பற்றி யென்க. கஞ்சம் - நீரில்முளைப்பது.

இது - நஅ-ஆங் கவிபோன்ற எண்சீராசிரியவிருத்தம். (சகூ)

ருo. கண்ணன்வேங்கடக்கண்ணன்வண்ணமேகரியவன்சொலற்கரியவன்திருப், பெண்ணனெங்கள்ன்பெண்ணனந்தன்வாழ்பெருமைநாட்டகப்பெருமைநாட்டமான், மண்ணிழைத்தனமண்ணிழைத்திடாமாசிலம்புதாண்மாசிலம்புயம், பண்ணின்மாவுணப்பண்ணின்மாகுழற்பரவையுண்மையேபாவையுண்மையே.

(இ - ள்.) கண்ணன் - கிருஷ்ணாவதாரஞ் செய்தருளினவனும், வேங்கடம் கண்ணன் - திருவேங்கடமலையினிடத்தி லெழுந்தருளியிருப்பவனும், வண்ணமே கரியவன் - திருமேனிநிறங் கறுத்துள்ளவனும், சொலற்கு அரியவன் - (எவராலும் அளவிட்டுச்) சொல்வதற்கு அருமையானவனும், திரு பெண்ணன் - திருமகளை மனைவியாக வுடையவனும், எங்கள் அன்பு எண் அனந்தன்-என்னைப்போன்றஅடியார்கள் செய்கின்ற பக்தியை மதிக்கின்ற அநந்தனென்னுந் திருநாம முடையவனும் ஆகிய எம்பெருமான், வாழ் - வாழ்ந்தருளுகின்ற, பெருமை நாடு அகம் - மகிமையையுடைய நாட்டினிடத்தே யுள்ள, பெருமை நாட்டம் மான் - விசாலமான மையிட்ட கண்களை யுடைய மான்போலும் மகளினது, மண் இழை தனம-அழகைச்செய்கின்ற ஆபரணங்களை யணிந்த கொங்கைகள், மண் இழைத்திடா - நிலவுலகத்திற் படைக்கப்படாதனவாம்; மா சிலம்பு தாள் - சிறந்த சிலம்பென்னும் அணியை யணிந்த பாதங்கள், மாசு இல் அம்புயம் - குற்றமில்லாத தாமரைமலர் போலும்; பண்ணின் மா உண பண் இன் மா குழல்-இசைப்பாட்டையுடைய வண்டுகளைத் தேனுண்ணச் செய்கின்ற காண்பதற்கு இனிய கரிய கூந்தல், பரவை உண் மையே - கடலினீரை உண்ட காளமேகமேயாம்; (அம்மகள்), பாவு ஐ - (யாவராலுந்) துதிக்கப்படுகின்ற கடவுளேயாம்; உண்மையே - (இது) மெய்யே; (எ - று.)

இது, இயலிடங்கூறு லென்னுந் துறை; அதாவது - தெய்வப்புணர்ச்சியின் இறுதியில் தலைமகளது அடைதற்கரிய தன்மையை நினைந்து வருந்து

இன்ற தலைமகனை எதிர்ப்பட்டு உற்றதுரைக்கக்கேட்ட பாங்கன் 'நின்னாற் காணப்பட்ட வடிவுக்கு இயலையும் இடத்தையுங் கூறுவாய்' என்றுசொல்ல, அவனுக்குத் தலைமகன் தான் கண்ட மகளின் இயல்பையும் இடத்தையுங் கூறியது.

அநந்தனென்னும் வடசொல்லுக்கு-அழிவில்லாதவனென்றும்,(திருக் கலியாணகுணங்களுக்கு ஒரு)எல்லையில்லாதவனென்றும் பொருள். மான்- உவமையாகுபெயர். மண்ணுதல் - அலங்கரித்தல். 'மண்ணிழைத்திடா' என்றதனால், தெய்வத்தன்மை பொருந்திய சிறப்புடையன என்றபடி. அம் புயத்துக்குக் குற்றமாவது - குவிதலும், வாடுதலும்,பங்கத்திற்படுதலும் முத லியன. பாவை - பாவியிருப்பது; கடல்: ஐ - கருத்தாப்பொருள்விகுதி. 'பா வையுண்மையே பாவையுண்மையே' என்ற பாடத்திற்கு - கூந்தலையுடைய கண்மணிப்பாவைபோன்ற தலைவியது நிலைமையைக் கூறுமிடத்து மெய் யாகவே சித்திரப்பாவை போல்வாள் என்று பொருள் கொள்க.

இச்செய்யுளில் வந்த எழுத்துக்களே மீண்டும் வந்தது, **மடக்கு** என் னுஞ் சொல்லணி.

இது - முதல் மூன்று ஐந்து ஏழாஞ்சீர்கள் மாச்சீர்களும், மற்றைநான் குங் கூவிளச்சீர்களு மாகிய எண்சீராசிரியச்சந்தவிருத்தம். (௫௦)

௫௧. மையவாங்கோலவிழிமழைபொழியவளர்தனச்சையமேற் பரவி மணங்கமழ்நறுங்குங்குமஞ்செழுஞ்சாந்த மான்மதங்கலந்து கொண்டொழுகுந், தூய்யநீராறங்கிருமருங்கோடச்சுழிக்குமவ்வாற் றிடைக்கிடந்து துலங்குசிரங்கம்படைத்தொருதுடியிற்சுருங்கிடை மடந்தைமாலாகி, மையமேகேளுனேரொத்தனள்கரத்திலாழிசங்க ணிந்திடாக்குறையொன் றக்குறையகற்றியனைந்திடத்தருங்காணங் கண்வானரசுவாநோக்கி, வெய்யவாய்த்தறுகட்கடும்புலிப்போத்து வெகுண்டெழுந்தடிக்கவாலடிக்கும்வேங்கடாசலத்திலோங்குமாதவ னே வினையிருள்சீக்குமாதவனே.

(இ - ள்.) அம் - அழகிய, கண் - இடத்தையுடைய, வான்-தேவலோக த்திலுள்ள, அரசு உவா - யானைகளுக்கு அரசனாகிய ஐராவத யானையை, நோக்கி - பார்த்து, வெய்ய வாய் தறுகண் கடு புலி போத்து-பயங்கரமான வாயையும் அஞ்சாமையையும் கொடுமையையும் உடைய இளைய ஆண்புலி, வெகுண்டு - கோபித்து, எழுந்து - (இருப்பிடம் விட்டுக்) கிளம்பி, அடிக்க - (அவ்யானையைத்)தாக்குதற்பொருட்டு, வால் அடிக்கும் -(சீற்றத்தால்)தனது வாலை (த்தரையிலே) மோதுகின்ற,வேங்கட அசலத்தில் - திருவேங்கடமலை யின்மேல், ஓங்கும் - உயர்வு பெற்று எழுந்தருளி நிற்கின்ற, மா தவனே - திருமகள் கணவனே! வினை இருள் சீக்கும் ஆதவனே-(அடியார்களது) ஊழ் வினையாகிய இருளை ஒழிக்கின்ற சூரியன் போன்றவனே! ஐய-சுவாமியே! கேள் - (யான்சொல்வதைக்) கேட்பாயாக:—ஒரு துடியின் சுருங்கு இடை மடந்தை - உடுக்கையென்பதொரு வாச்சியம்போலச் சிறுத்துள்ள இடைப் புள்ள இத்தலைமகள்,—மை அவாம் கோலம் விழி - அஞ்சனத்தை விரும்பி அணியப்பெற்றுள்ள அழகிய கண்கள்,மழை பொழிய - சோகநீர்மழையைப் பொழிதலினால், வளர் தனம் சையம் மேல் பரவி - மேன்மேல் வளர்கின்ற தனங்களாகிய மலைகளின்மேலே பரந்து, (அவற்றிற் பூசப்பட்டுள்ள), மணம் கமழ் நறு குங்குமம் - வாசனை வீசுகின்ற நல்ல குங்குமக் குழம்பையும், செழு சாந்தம் - சிறந்த சந்தனத்தையும், மான்மதம் - கஸ்தூரிப்புழுகையும், கல ந்து கொண்டு - (தன்னிலே) சேர்த்துக்கொண்டு, ஒழுகும் - பெருகுகின்ற, தூய நீர் ஆறு - பரிசுத்தமான நீர்மயமாகிய அக்கண்ணீர் நதி, அங்கு இரு

மருங்கு ஓட - அத்தனங்களினின்றும் இரண்டு பக்கங்களிலே பாய்ந்து செல்ல, சுழிக்கும் அ ஆறு இடை-நீர்ச்சுழிகளைப் பெற்றுள்ள அந்நதிகளின் நடுவிலே, கிடந்து - பொருந்தி, துலங்கு - விளங்குகின்ற, சீர் அங்கம்-சிறந்த உடம்பை, படைத்து - உடையளாய். [மைய ஆம் - கருநிற முடையனவாகிய, கோலம் - அழகிய, இழி - நீர்க்கால் இறங்குகின்ற, மழை - மேகங்கள், பொழிய - (நீரைப்) பெய்வதனால், வளர் தனம் சையம் மேல் பரவி - மிகுந்த (பொன் முதலிய) செல்வத்தையுடைய ஸஹ்ய மென்னும் மலையின் மேலே பரந்து, மணம் கமழ் நறு குங்குமம் - வாசனைவீசுகின்ற நல்ல குங்குமமரங்களையும், செழு சாந்தம் - செழித்து வளர்ந்துள்ள சந்தனமரங்களையும், மான்மதம் - கஸ்தூரியையும், கலந்துகொண்டு - (அம்மலையினின்றும் தன்னுடனே) கூட்டிக்கொண்டு, ஒழுகும் - பெருகுகின்ற, தூய நீர் ஆறு-பரிசுத்திகரமான தீர்த்தத்தையுடைய காவேரிநதி, அங்கு இரு மருங்கு ஓட-அவ்விடத்தே பிரிந்து இரண்டு பக்கங்களிலுஞ் செல்ல, சுழிக்கும் அ ஆறு இடை-சுழிபெற்ற அவ்வுபயகாவேரியின் மத்தியிலே, கிடந்து துலங்கு-பொருந்தி விளங்குகின்ற, சீரங்கம்-ஸ்ரீரங்கமென்னுந் திருப்பதியை, படைத்து-(தனக்கு உரிய திவ்வியதலமாகப்) பெற்று],—மால் ஆகி - (உன்பக்கல் உண்டான) வேட்கையின் மயமானவளாய் [திருமாலென்னுந் திருநாமத்தையுடையவளாய்],—உனை நேர் ஒத்தனள் - உன்னை முழுவதும் ஒத்தவளாயினாள்; (ஆயினும்), கரத்தில் ஆழி சங்கு அணிந்திடா குறை ஒன்று - (உன்னைப்போலவே) கையிற் சக்கரத்தையும் சங்கத்தையும் தரியாத குறைவு ஒன்றே உள்ளது [வியாமோகத்தால் கையில் மோதிரத்தையும் சங்குவளையல்களையும் அணியாமல் இழந்த குறை உள்ளது]; அ குறை அகற்றி - அவ்வொருகுறையையும் போக்கி, அணைந்திட தகும் - (நீ இவளைக்) கூடி வாழத்தகும்; காண் - (இதனை நீ) அறிந்து கருதுவாயாக; (எ - று.)

இது-தலைவியைத் தழுவவேண்டுமென்று தலைவனுக்குத் தோழிகூறியது.

முதலிரண்டடி - தலைவிக்கும், எம்பெருமானுக்குஞ் சிலேடை; இது, உவமைக்கு அங்கமாக வந்தது. அவாம்-அவாவுமென்னுஞ் செய்யுமென்னும் பெயரெச்சம், ஈற்றயலுயிர்மெய் சென்றது. மைய - பொருளடியாப் பிறந்த பலவின்பாற் குறிப்புவினையாலணையும்பெயர். இனி, மை-மேகங்கள், அவாம் - (யாவராலும்) விரும்பப்படுகிற, கோலம் - அழகிய, இழி மழை - சொரியும் மழையை, பொழிய என்றுமாம். சையம் - குடகுமலையைக் குறிக்கும்போது, வடமொழிச்சிதைவு. தூய - தூய்மை யென்னும் பண்பின் அடியாப்பிறந்த குறிப்புப்பெயரெச்சம் சீரங்கம்-வடசொற்றிரிபு. துடி - இடைக்கு மேலுங் கீழும் பருத்து நடுச்சிறுத்தலில் உவமை. வளர் தனம் - வளர்ந்த வளர்கிற வளரும் தனம் என முக்காலமுங் கருதிய வினைத்தொகை. மடந்தை - பருவப்பெயராகாமல் பெண்ணென்னு மாத்திரையாய் நின்றது; பதினான்குவயதுமுதற் பத்தொன்பதளவும் மடந்தைப்பருவம். சங்கு - அதனாலாகிய வளைக்குக் காரணவாகுபெயர். காண் - முன்னிலையசையும், தேற்றமு மாகவுமாம். பொன்னுலக மாதலால், 'அங்கண்வான்' எனப்பட்டது. வான் என்னும் ஆகாயத்தின் பெயர், அங்குள்ள தேவலோகத்துக்கு இடவாகுபெயர்.

அரசுவா வென்றது - எழுறுப்பு நிலந்தோய்ந்து வெள்ளியநகத்ததாய்க் காலாலுங் கையாலும் வாலாலுங் கோட்டாலும் பகையைக் கொல்லவல்லதாய் எழுமுழமுயர்ந்து ஒன்பதுமுழம்நீண்டு பதின்மூன்றுமுழம் சுற்றளவுடையதாய்த் தீயுமிழ் சிறுகணுஞ் செம்புகரு முடையதாய் முன் உயர்ந்து பின் தாழ்ந்திருப்பதாம்; "காலொருநான்குந் துதிக்கையுங்கோசமும், வாலுறுப்போடேழுமாநிலந்தோய்ந்து, பாலுஞ்சங்கும்போலுங்காலுகிர், காலினு நான்றவொருதனிக்கையினும், வாலினு மருப்பினுங் கோறல்வல்லதாய்,

பதின்மூன்றுமுழச்சுற்றுடையதாகி,யெழுமுழமுயர்ந்தொன்பதுமுழநீண்டு, தியுமிழ்சிறுகணுஞ் செம்புகரு முடைத்தாய்,முன்புயர்ந்துபின்பணிந்ததாயி னவ்யானை, யரசுவாவென்ன வறையப்படுமே" என்பது காண்க. உவா - யுவா ; உத்தமகஜம்: லக்ஷண மமைந்தது. போத்து - ஆண்மையோடு இள மையுங் குறிக்கும் பெயர் ; "பெற்றமெருமைபுலிமரைபுல்வாய், மற்றிவை யெல்லாம்போத்தெனப்படுமே," "பிள்ளைகுழவிகன்றேபோத்தெனக், கொ ள்ளவுமமையு மோரறிவுயிர்க்கே" என்னுஞ் சூத்திரங்களை உணர்க. புற விருளை யொழிக்கின்ற ஆதித்தன்போலன் றிக்கே வினையாகிய அகவிருளை விலக்குகின்ற சூரியனெனச் சிறப்புக்கூறினர். நல்வினையும்பிறப்புக்குக்கார ணமாதலால், பொதுப்பட 'வினை' எனப்பட்டது. ஆதவன் - ஆதபன்; நன் ருகத் தபிப்பவன். ஈற்றடியில் 'மாதவனே' என்றது, மடக்கு இறுதியடியிற் கூறிய வருணனையினால், அம்மலையின் உயர்ச்சியையும், அதிலுள்ள விலங்கி னது ஆற்றல்மிகுதியையும் உணர்த்தினர்: தலைவனுந் தலைவியுந் தம்மில் ஒத்திருத்தல் வேண்டு மென்பது அகப்பொருள்நூலாரது துணிபாதலின், 'உனைநேரொத்தனள்' என்றார். இச்செய்யுளின் கருத்துக்கும், "மணியாழி வண்ண னுகந்தாரைத் தன்வடிவாக்கு மென்றே, துணியாழிய மறைசொல் லுந் தொண்ட ரதுதோன்றக்கண்டோம்,பணியாழின்மென்மொழி மாலா கிப்பள்ளிகொள்ளாமற்சங்கோ, டணியாழிநீங்கிநின்றாள் வேங்கடேசனை யாதரித்தே" என்னுந் திருவேங்கடத்தந்தாதிச் செய்யுளின் கருத்துக்கும் உள்ள சம்பந்தத்தை உய்த்துணர்க.

இது - ௲க-ஆங் கவிபோன்ற பதினான்குசீராசிரியவிருத்தம். (௫க)

௫உ. ஆதவன்கதிர்சுடப் பாதவந்தீசுரத்

தழல்பொறுதண்டநன் னிழல்பெறுதிடருறுஞ்

சீதமென்குமுதவாய் மாதினிக்காண்பைநீ

சீர்த்தியாழ்வார்பெருந் தீர்த்தமுந்தூவியும்

மாதர்தண்டுணர்கொயுந் தாதலர்ச்சோலையும்

மஞ்சுலாவுங்குவட் டஞ்சனசலமுமப்

பூதரந்தனில்வருஞ் சீதரன்கோயிலும்

பொருவில்சூளிகையுமா தெருவுமாளிகையுமே.

(இ - ள்.) ஆதவன் - சூரியனது, கதிர் - கிரணங்கள், சுட - எரிப்பத னால், பாதவம் - மரங்கள், தீ - கரிந்து போன, சுரத்து - பாலைநிலத்திலு ள்ள, அழல் - வெப்பத்தை, பொறுது - பொறுக்கமாட்டாமலும்,அண்ட நல் நிழல் பெறுது - கிட்டிச் சேர்தற்கு அங்கே ஒரு மரத்தினது நல்லநிழலைப் பெறுமலும், இடர் உறும் - வருத்தம் மிகுந்த, சீதம் மெல் குமுதம் வாய் மாது - குளிர்ச்சியாயும் மென்மையாயு முள்ள செவ்வாம்பல்மலர்போன்ற வாயையுடைய மங்கையே!—இனி - இனிமேல் [விரைவிலே], நீ—, சீர்த்தி ஆழ்வார் பெருந் தீர்த்தமும் - மிக்க புகழை யுடைய சிறந்த ஆழ்வார்தீர்த்த மென்னுங் குளத்தையும், தூவியும் - கோபுரசிகரத்தையும், மாதர் தண் துணர் கொயும் தாது அலர் சோலையும் - மகளிர்கள் குளிர்ந்த பூங் கொத்துக்களைப் பறித்தற்கிடமான மகரந்தத்தையுடைய மலர்களையுடைய பூஞ்சோலைகளையும், மஞ்சு உலாவும் குவடு அஞ்சன அசலமும் - மேகங்கள் தவழ்கின்ற சிகரத்தையுடையதிருவேங்கட மலையையும்,அபூதரந்தனில்வரும் சீதரன் கோயிலும் - அம்மலையினிடத்துப் பொருந்திய திருமாலினது ஆலய த்தையும், பொருவு இல் சூளிகையும் - ஒப்பிலாத அக்கோயிலின் விமான கலசத்தையும், மா தெருவும் - பெரிய வீதிகளையும், மாளிகையும் - பெரிய வீடுகளையும், காண்பை - பார்ப்பாய்; (எ - று.)—எனவே, அவ்வளவும் நீ தள ராமல் விரைந்து வரவேண்டு மென்றபடி.

இது, தலைமகளை உடன்கொண்டு போகின்ற தலைமகன் அவள் இடை வழியிற் பாலைநிலத்திற் செல்லும்போது வெயிலால் மிகவும் வருந்தி இளைப்புற்றது நோக்கி அவளைத் தான் போகுமிடத்தின் அணிமை கூறி ஆற்றியது; அயர்வகற்றல் அல்லது நகரணிமைகூறல் என்னுந்துறை: "முன்னமேழ் புரவியா ரிரவிகாய் வெயிலினுன் முத்தரும்பியகலா முழுமதித் திருமுகத், தன்னமே யின்னமோர் காவதம் போதுமே லகலு மிப்பாலை யப்பா லரைக் காவத, மென்னையா ளுடையவன் றுயிலரா வமளியு மிலகுபொற் கோயிலு மிந்துவின் பொய்கையும், புன்னைவாய் நீழலும் புரிசையும் மதுகரம் பூவிரித் துறையு மக்காவிரித் துறையுமே" என்றார் திருவரங்கக்கலம்பகத்தும்.

பாதவம் - பாதபம்: காலால் நீரைக் குடிப்பது; "நின்று, தளராவளர் தெங்கு தாளுண்டநீரைத், தலையாலேதான் றருதலால்" என்பதுங் காண்க. நீசுரம் வினைத்தொகை. சுரம்-ஜ்வரம் என்னும் வடமொழியின் திரிபுமாம். நிழலுக்கு நன்மை - குளிர்ச்சியும், வழிநடந்த தளர்ச்சியை ஒழித்தலும். குமுத மென்னுங் கொடியின் பெயர், மலர்க்கு ஆகுபெயர். வாய்க்கு ஆம்பல், செந்நிறத்தாலும், நறுநாற்றத்தாலும் உவமை. மாது - அண்மைவிளியாதலின் இயல்பு. "சீர்த்திமிகுபுகழ்" என்றாராதலால், கீர்த்தியென்னும் வடமொழியின் திரிபன்றென்று உணர்க. தூவி - ஸ்தூபி. பூதரம் - பூமிக்கு மேலுங் கீழும் பொருந்தி அதனைத் தாங்குவது. ஸ்ரீதரன் - திருமகளைத் திருமார்பில் தரிப்பவன். ஆழ்வார்தீர்த்தமென்பது, திருமலையினடிவாரத்தி லுள்ள புண்ணியதீர்த்தம்.

இது - எல்லாச்சீரும் விளச்சீராகிய எண்சீராசிரியவிருத்தம். (ருஉ)

ருங. மாளிகைசுற்றமுடன்பிறந்தார்பெண்டிர்மக்கள்பொருட்
சாளிகைபொற்கலன்பட்டாடைவாகனந்தையனல்லார்
கேளிகையாநிற்கும்வேம்பெனச்சேடகிரித்தனிவில்
லாளிகைந்நேமியன்றாள்கரும்பாமுத்தியாசையர்க்கே.

(இ - ள்.) முத்தி ஆசையர்க்கு - வீட்டுலகத்தில் விருப்பமுடையவர்க்கு;— மாளிகை - வீடுகளும், சுற்றம் - பந்துவர்க்கமும், உடன்பிறந்தார் - கூடப் பிறந்தவர்களும், பெண்டிர் - மனைவிமாரும், மக்கள் - குழந்தைகளும், பொருள் சாளிகை - திரவியம்நிரப்பிய பைகளும், பொன் கலன் - பொன்னாபரணங்களும், பட்டு ஆடை - பட்டுவஸ்திரங்களும், வாகனம் - வாகனங்களும், தையல் நல்லார் கேளி - அழகையுடைய நல்ல பொதுமகளிரது விளையாட்டும், (இவையெல்லாம்), வேம்பு என - வேப்பங்காய் போல, கையாநிற்கும் - கைக்கும் [வெறுப்பைத்தரும்]; சேடகிரி - சேஷாசலத்தி லெழுந்தருளிய, தனி வில் ஆளி - ஒப்பற்ற வில்வீரனும், கை நேமியன் - திருக்கையில்திருவாழியையுடையவனும் ஆகிய திருமாலினது, தாள் - திருவடி, கரும்பு ஆம் - கருப்பஞ்சாறுபோலத் தித்திக்கும் [இனிப்பைத் தரு மென்றபடி]; (எ - று.)

விஷயாந்தரங்களை வெறுத்து எம்பெருமான் திருவடிகளை விரும்பி வழிபடுபவர்களே முத்திபெறுவ ரென்பது, கருத்து. சுற்றம் - (சுப அசுப காலங்களில் ஒருவனைச்) சுற்றி நிற்பது: அம் - கருத்தாப்பொருள்விகுதி. உடன்பிறந்தார், மக்கள் - ஆண்பால்பெண்பால்களுக்குப்பொது. பெண்டிர், இர் - பலர்பால்விகுதி; பெண்டு - ஒருமை. பட்டாடை - பட்டாகிய ஆடை யென இருபெயரொட்டுப் பண்புத்தொகையாக வாயினும், பட்டும் பிற ஆடையும் என உம்மைத்தொகையாக வாயினுங் கொள்க. வாகனம் - வகிப்பது; வகித்தல் - சுமத்தல்: ஊர்தி. நல்லாளென்று இலக்குமிக்குப் பெயராதலால், நல்லா ரென்பது - பெரும்பாலும் மகளிரையே உணர்த்தும். கேளி - வடசொல். வேம்பு, கரும்பு - பொருளாகுபெயர்கள். ஆளி - ஆள்பவன்; இ - வினைமுதற்பொருள்விகுதி.

இது - நேரசையாதிக் கட்டளைக்கலித்துறை. (ருங)

ருச. கேசவனார் சேட கிரிமாயர்க் கைந்துமுகத்
தீசனதி பத்த னிதுசரத—நேசமிகச்
சங்கங்கை யேந்துமவர் தாட்புனலென் றேதினமு
மங்கங்கை சென்னிவைத்தா னால்.

(இ - ள்.) கேசவனார் - கேசவ னென்னும் ஒரு திருநாம முடையவரா கிய, சேடகிரி மாயர்க்கு - சேஷாசலத்தி லெழுந்தருளிய எம்பெருமானுக் கு, ஐந்துமுகத்து ஈசன் - ஐந்துமுகங்களையுடைய பரமசிவன், அதிபத்தன்- மிகுந்த பக்தியையுடைய அடியவனாவன் [பரமபாகவதோத்தம னென்ற படி]; இது சரதம் - இஃது மெய்யேயாம்; (இதனை அறிவது எதனாலெனில்), (அப்பரமசிவன்), சங்கு அம் கை ஏந்துமவர் தாள் புனல் என்றே - திருச்சங் கை அழகிய திருக்கையில் தரித்த அம்மாயவரது ஸ்ரீபாததீர்த்த மென்று கருதியே, நேசம் மிக - (அதனிடத்து) அன்பு மேன்மேல் வளர, தினமும்- நாள்தோறும், அம் கங்கை - அழகிய கங்காநதியை, சென்னி வைத்தான் - (தனது)தலையின்மேல் வைத்துக்கொண்டுள்ளான்; ஆல்-ஆதலால்; (எ - று.)

கேசவன் என்பதற்கு - பிரமனையும், உருத்திரனையும் தன் அங்கத்திற் கொண்டவனென்றும், அழகிய தலைமயிர்களை யுடையவனென்றும், கேசி யென்னும்அசுரனைக் கொன்றவனென்றும் பொருள் கூறப்படும். ஈசன் ஐம் முகனாயிருப்பது, சதாசிவமூர்த்தியில். ஆல் - ஆதலால் என்பதன் விகாரம். என்றே, ஏகாரம் - தேற்றம்; வேறு காரணத்தா லன்றெனப் பிரிநிலையு மாம். திருமால் உலகமளந்தகாலத்தில், மேலே சத்தியலோகத்திலே சென்ற அவரது திருவடியைப் பிரமன் தன் கைக்கமண்டலநீர்த்தத்தாற் கழுவி விளக்க, அந்த ஸ்ரீபாததீர்த்தமே கங்காநதியாகப் பெருகிச் சிலநாள் தேவலோகத்துத் தங்கியிருந்து, பின்னர்ப் பகீரதன் கொணர்ந்த பொழுது பரமசிவனாற் சிரசில் வகிக்கப்பட்டதனால், இங்ஙனங்கூறப்பட்டது; "குறை கொண்டுநான்முகன் குண்டிகைநீர்பெய்து, மறைகொண்டமந்திரத்தால் வாழ்த்திக்—கறைகொண்ட,கண்டத்தான்சென்னிமேலேறக்கழுவினான், அண் டத்தான்சேவடியையாங்கு" என்னும் பெரியார்பாசுரத்தை உணர்க. "தாள் விளக்கும், வானந்தருங்கங்கைநன்னீருஞ் சென்னியிற்வைக்கப்பெற்ற, வானந்தானல்லவோ முக்கணான் மன்றுளாடுவதே" என்றார் திருவரங்கக் கலம்பகத்தும்.

நாளென்னும்வாய்பாடுபடமுடிந்தஇருவிகற்பநேரிசைவெண்பா.(ருச)

[கார். காலம்.]

ருரு. ஆலுமளியங்கண்வனமலர்முலைபாய்கால
மவர்பிரிவாலங்கண்வனமலர்முலைபாய்காலங்
கோலமயிலினம்பரிவிற்குனித்துவருங்காலங்
கொடியேன்முன்மதன்பரிவிற்குனித்துவருங்கால
நீலமணிவண்ணனம்பொனிழனாகவரையி
னெடுமோயன்மலர்ச்சோலைநிழனாகவரையின்
சாலுமழைக்குலம்பலகாற்றடித்துவிடுங்காலந்
தழற்கொழுந்தாமெனப்பலகாற்றடித்துவிடுங்காலம்.

(இ - ள்.) (இது),—ஆலும்-ஆரவாரிக்கின்ற, அளி-வண்டுகள், அங்கண்- அம்மலையினிடத்துஉள்ள, வனம் - சோலைகளிலே, மலர் முலை-முல்லைமலர் களில், பாய் - (மொய்த்தற்குப்) பாய்கின்ற, காலம்—; அவர் பிரிவால்-தலை வரது பிரிவினால், அம் கண் வனம் - அழகிய கண்களின் நீர், அலர் முலை -

அடி பரந்த தனங்களிலே, பாய் - பெருகுகின்ற, காலம்—; கோலம் மயில் இனம் - அழகிய மயில்களின் கூட்டம், பரிவின் அன்போடு, குனித்து வரும் - கூத்தாடி வருகின்ற, காலம்—; கொடியேன் முன் - கொடுமையான தீவினையையுடையவளாகிய எனது எதிரில், மதன் மன்மதன், பரி வில் - தான் தரிக்கின்ற கருப்புவில்லை, குனித்து - வளைத்து, வரும் - (போர்செய்ய) வருகின்ற, காலம்—; நீலம் மணி வண்ணன் - நீலரத்தினம்போன்ற திருநிறத்தை யுடையவனுகிய, அம் பொன் நிழல் நாகம் அரையின் நெடு மாயன் - அழகிய பொன்மயமான ஒளியையுடைய பீதாம்பரத்தை யுடுத்த திருவரையை யுடைய நீண்ட மாயவனது, மலர் சோலை நிழல் நாகம் வரையின் - பூஞ் சோலைகளின் சாயையையுடைய சேஷாசலத்திலே, சாலும் மழை குலம் - மிகுந்த மேகங்களின் கூட்டம், பல கால் - அனேக முறை, தடித்து விடும் - மின்னலை வீசுகின்ற, காலம்—; தழல் கொழுந்து ஆம் என - அக்கினிச்சுவாலை யென்னும்படி, பல காற்று அடித்துவிடும் - வலிய காற்று வீசிவிடுகின்ற, காலம்—; (எ - று.)

இப்படிப்பட்ட கார்காலத்தில் யான் எங்ஙனம் தலைவனைப் பிரிந்து உயிர்வாழ்வது? எனத் தலைவி இரங்கிக் கூறியவாறு.

அங்கண் - அக்கண்; மெலித்தல். முல்லை கார்காலத்திற் பூத்தலை "முல்லை காரெனப்பூப்ப" என்னுஞ் சிந்தாமணியாலும் அறிக. செய்யுளாதலின், 'அவர் பிரிவு' எனச் சுட்டு முன்னேவந்தது; தன்பாற் சிறிதும் இரக்கமின்றிப் பிரிந்து போன தலைவரது பெயரைச் சொல்லவும் விருப்பங் கொள்ளாமல் 'அவர்' எனச் சேய்மையாகச் சுட்டினளென்றலும் ஒன்று. பாதியைக்குறிக்கின்ற அரையென்னும் எண்ணலளவுப்பெயர், உடம்பில் அவ்வளவைக்கொண்ட இடைக்கு ஆகுபெயர். சொல்லணி - மடக்கு.

இது - நான்கு எட்டாஞ் சீர்கள் மாச்சீர்களும், மற்றவை காய்ச்சீர்களு மாகிய எண்சீராசிரியவிருத்தம். (ருரு)

ருசு. காலஞ்சென்றதெழுங்கனநரைதிரைமேவிக்
காயநெகிழ்ந்ததிணைக்கண்களிருண்டதடஞ்
சூலங்கொண்டுபொருந்தோணமனுள்வருமுன்
றுணையாவினிமனமேநினையாயனுதினமே
மாலம்பங்கயநாண்மலரிலணங்கலர்மேன்
மங்கைதன்மணவாளன்வண்டுளவணிதோள
ளாலந்தண்டளிர்மேலறிதுயில்கூர்பெருமா
ளஞ்சனவெற்பமலன்கஞ்சமலர்ப்பதமே.

(இ - ள்.) மனமே - (எனது) நெஞ்சே!—காலம் சென்றது - ஆயுள்பெரும் பாலுங் கழிந்துவிட்டது; எழும் - (வெளியே) காணப்படுகிற, கனம் நரை - மிகுந்த மயிர்வெளுப்பும், திரை - தோலின் சுருக்கமும், மேவி - பொருந்தி, காயம் - உடம்பு, நெகிழ்ந்தது - தளர்ந்தது; இணை கண்கள் - இரண்டு கண் களும், இருண்ட - (பார்வைதெரியாமல்) இருளடைந்தன; இனி - இனியா யினும், தட சூலம் கொண்டு பொரும் தோள் நமன் ஆள் வருமுன் - பெரிய சூலாயுதத்தைக் கையிலேந்திப் போர்செய்கின்ற தோள்வலிமையையுடைய யமனது தூதன் (அழைத்துப்போதற்கு) வருதற்கு முன்னே,—மால் - திருமா லென்னுந் திருநாமமுடையவனும், அம் பங்கயம் நாள் மலரில் அணங்கு அலர்மேல்மங்கைதன் மணவாளன் - அழகிய செந்தாமரையினது புதிய மலரில் வீற்றிருக்கின்ற திருமகளாகிய அலர்மேன்மங்கைப்பிராட்டியினது கணவனும், வள் துளவு அணி தோளன் - சிறந்த திருத்துழாய்மாலையை யணிந்ததிருத்தோள்களையுடையவனும், ஆல் அம் தண் தளிர்மேல் அறிதுயில்

கூர் பெருமாள் - (பிரளயப்பெருங்கடலில்) ஆலமரத்தினது அழகிய குளிர்ந்த தளிரின்மேல் யோகநித்திரை செய்தருளுகின்ற பெருமையையுடையவனும், அஞ்சன வெற்பு அமலன் - அஞ்சனாசலத்தி லெழுந்தருளிய குற்றமற்றவனுமாகிய எம்பிரானது, கஞ்சம் மலர் பதம் - செந்தாமரைமலர் போலுந் திருவடிகளை, துணை ஆ - (உனக்கு நற்கதியைத் தருந்)துணையாக, அனுதினம் - நாள்தோறும், நினையாய் - நினைப்பாயாக ; (எ - று.)

நரையுந் திரையுங் கண்ணிருளுந்தோய்-மூப்பின் குறி. இருண்ட-முற்று. நமன் ஆள் வருமுன்-யமன் அடிமை கொள்வதற்கு வருமுன்னே யென்றும் பொருளாம். இனி மனம் என்று எடுத்து, இனிமையான மன மென்றுமாம். நினையாய்-உடன்பாட்டு ஏவலொருமைமுற்று. பங்கஜம்-சேற்றிற் பிறப்பது. அறிதுயில் - வினைத்தொகை.

இது-பெரும்பாலும் முதல் மூன்று ஐந்து ஏழாஞ்சீர்கள் மாச்சீர்களும், மற்றவை காய்ச்சீர்களுமாகிய எண்சீராசிரியவிருத்தம். (௫௬)

௫௭. பதத்தளந்ததுமுப்புவனத்தையே பண்டடைத்ததுமுப்புவனத்தையே, வதைத்ததேற்றிடுமாத்தானவரையே மழைக்கெடுத்ததுமாத்தானவரையே, யிதத்தபூப்பெண்மணக்குமந்தாரமே யிங்குநாட்டுமணக்குமந்தாரமே,திதித்ததீங்கறிவேங்கடநாகமே செங்கண்மாலிடம்வேங்கடநாகமே.

(இ - ள்.) பதத்து அளந்தது - (திருமால்) திருவடிகளால் அளவிட்டது, மு புவனத்தையே - மூன்று உலகங்களையே ; பண்டு அடைத்ததும் - முன்னே அணைகட்டி அடைத்ததும், உப்பு வனத்தையே - உவர்நீர்க்கடலையே; வதைத்தது-கொன்றது, ஏற்றிடும் -(தன்னை)எதிர்த்த, மா தானவரையே - பெரிய அசுரர்களையே; மழைக்கு எடுத்தது - மழையைத் தடுக்கும்பொருட்டு (க்குடையாக) ஏந்தியது. மாத்து ஆன வரையே - மகத்தான [பெரிய]கோவர்த்தனமலையையே; இதத்த பூ பெண் - இனிமையையுடைய ஸ்ரீதேவியும் பூதேவியும், மணக்கும் அம் தாரமே - திருக்கலியாணஞ் செய்கின்ற அழகிய மனைவியேயாவர்; இங்கு நாட்டு - இந்தப்பூலோகத்திலே கொணர்ந்து நடப்பட்டது, மணக்கும் மந்தாரமே-வாசனை வீசுகின்ற(தேவலோகத்து)மந்தார தருவே; திதித்தது - காத்தருளப்பட்டது, ஈங்கு அறி இவ்வுலகத்தே (ஆதி மூலத்தை) அறிந்த, வேம் கடம் - வெவ்விய கன்னங்களையுடைய, நாகமே- கஜேந்திரனே ; செம் கண் மால் இடம்-சிவந்த திருக்கண்களையுடைய அத்திருமாலினது தானம், வேங்கடநாகமே - திருவேங்கடமலையே ; (எ - று.)

தானவர்-கசியபப்பிரமாவினது மனைவிமார்களுள் தனுவினது சந்ததியார். மா தானம் வரை எனப்பிரித்து, மிக்க மதநீரையுடைய குவலயாபீடமென்னுங் கைம்மலை [யானை] எனவுமாம் மாத்து - வடசொற்சிதைவு. மா தானம் வரை எனப்பிரித்து, பெரிய இடத்தையுடைய கோவர்த்தனமென்றும்; ஆஸ்தானம் வரை எனக்கொண்டு, இடம்விட்டுப் பெயராத கிரியென்றுமாம். பூப்பெண் - இரட்டுறமொழிதல். நாட்டு - செயப்படுபொருள் விகுதி புணர்ந்துகெட்டது. நாட்டும் எனப் பிரித்து,காலவழுவமைதியெனவுமாம்: திதித்தது-ஸ்திதி என்னும் வடமொழியின் திரிபாகிய திதி என்பதன் அடியாப் பிறந்தது. மதயானைக்குக் கன்னம் வெதும்புமாதலால்,'வேம் கடம்நாகம்' எனப்பட்டது. ஏகாரங்களுக்கும், உம்மைக்கும் ஏற்றபடி பொருள்கொள்க.

இது - மடக்குக் கட்டளை மண்டலக்கலிப்பா. இலக்கணம் ௩௧-ஆம் மிற் காண்க. (௫௭)

௫௪. நாகக் குலத்திறை காய்கதிர் மணிச்சூட்
டாயிரந் தலைக்கொளு மாயிரு ஞால
மகள்சிர மச்சிரந் திகழ்சுடர்க் கற்றை
வனைந்தவம் மௌலியி னனந்தலை நாயக
மரகத மணியெனத் தரையி னிலைஇய
வோங்குபொற் குடுமி வேங்கடக் கனகத்
தூவியி னுப்பண் மேவிய மாயோய்
நலமணி மலைபா னிலைபெற்பார்த் தென்ன
வாலிதிற் கருப்புர மேலணிந் தந்த
வியன்மலை கமஞ்சூற் புயல்படிந் தாங்குப்
புழுகொழு கப்புனை யழகிய வடிவோய்
செங்கட் பகவ வெங்கட் கிறைவ
வொருதனி யாழிப் பரிதிவிட் டகலா
விரிகதி ரெனநிற் பிரிகிலா திருக்கு
மடந்தைநுண் மருங்கு னுடங்கப் பணைத்தெழு
கொங்கையி னலர்மேன் மங்கைதன் கணவ
நிற்பணி யடியார் பொற்பதத் துகட்கு
நிகரலென் குற்ற மிகவுள சிறியே
னுன்மொழி புன்சொலுங் கேண்மதி யத்தை
முடிவிலா வொருநின் னுடைமையாய் நிற்கு
மிருவகைச் சத்தி னிருமல நித்திய
வித்தையு மாகிய சுத்தசத் தொன்றை
நித்தரு முத்தரு மைத்தகட் குவளைத்
தேவியர் நீயு மேவிவீற் றிருக்கப்
பேரிட மாக்கினை யோருமற் றதற்கு
வேறுபா டைத்தாக் கூறுமிச் சிரசத்
தொன்றினை யாலம்வித் தொன்று புரைத்துக்
குருஉத்தழை கொம்பாப் பருஉச்செழு மரமாப்
பரிணமித் தென்ன வரிசையி னேழா
விரியப் படுத்தி வரன்முறை தோன்றிய
வஞ்சினு மரையரைப் பஞ்சீ கரணம்
பண்ணி யிலஞ்சியு ளண்ணலங் கமல
வுருப்பொலன் றுதாற் றிரட்டுபு நடுவணிற்
சீரிய பொருட்டு மேருவிற் றிசைமுக
னுடைமகற் சேர்த்திப் படையென விதித்தாங்
கிலகு மவற்கொண் டுலகு மவற்றுட்
சாற்றொரு நால்வகைத் தோற்றத் தோரேழ்
பான்மைப் பிறப்பி னுன்மத் திரளையும்
வருவித் தவற்றை யுரியதா னத்தி
னிறைகொள வைப்பித் துறைதரு மவைதா
மிகப்புரி கரும மகத்தினும் புறத்தினு
மரீஇ யுணர்ந்துட் பரீஇய வனந்த

முயிர்கட் கின்பமுஞ் செயிரா ரனந்த
மாருயிர் தமக்குக் கூர்தரு துன்பமு
மூட்டித் திருவிளை யாட்டயர் கின்றனை
யடுக்குநின் மாயையைக் கடக்கவல் லவரா
ரவ்வுயிர்க் குழாத்தற வெவ்விய தமியெனு
நின்னருள் பெறுமே யிங்கிலந் தன்னிற்
கண்ணுள ரொருவ னெண்ணிலா வேட
மெடுத்துப் பலவித நடித்திடல் பொருவ
வினைத்தெனக் கூத்து நினைத்தளக் கொண்ணு
வுருவ மெடுத்தும் பருவம் வந்துழி
விடுத்தும் பெருநர கடுத்திட ருழந்து
நலங்கறங் கென்ன வலமந் தின்னணஞ்
சாலவு மெய்த்தனென் போதுமிப் பிறவிப்
பௌவப் பரப்பை யெவ்விதங் கடப்ப
லனுதின மிச்சை யெனதுணர் வழித்தலை
யொழியா ததனா லெழுமகங் காரம்
யானென தெனும்பற் றுனா தியற்றுதல்
விடாதத னானே கெடாதுறு மவாவு
மெனக்கிது வேண்டு மெனக்கரு துந்திற
னுதவுத றவிரா ததனா னுதித்துப்
பெருகிய விழைவு பொருள்களை யிறுகப்
பிடிக்கப் புரிதல் விடுத்திடா ததனான்
மறுதலை கடந்து கதுமென முளைக்கும்
வெறுப்புத் தீத்தொழின் மறுப்படு மாற்றமும்
வருவகை யிழைத்த லொருவா திவற்றான்
விளையிரு வினையும் வளர்வித மகலா
வாயிரு வினையான் மாயத் தனுவுந்
தோற்றிய தனுவான் மாற்றரு வினையும்
விரையாற் றருவுந் தருவால் விரையும்
வருவன போல வராதிரா வொருதலை
நோக்கி யவற்றை நீக்கலென் வயமோ
வெத்தவ றிழைக்கினுங் கத்துகிண் கிணிக்கான்
மழலையங் கனிவாய்க் குழவியை யீன்ற
தாயளிப் பதுபோ னீயளித் தருள
வுள்ளங் கருதியென் கள்ள மனத்தைத்
திருத்திமற் றுன்பா லருத்தியுண் டாக்கிப்
பற்றலர்ப் பொருமுன் வெற்றிக் கொடியெனும்
புயறொடு சாலி வயல்சூற் றுடுத்த
பூதூர் தனில்வரு மாதவத் ததிபதி
தனதா ணையின்வழி நனிமிக வொழுகும்
வரவை ணவத்தில் விரகிலா வெனையுங்
கூட்டிநற் குரவர் தாட்டுணை பணிந்தவர்

தம்மா லயத்து மும்மையா சாரமும்
படைத்தலர் வகுளத் தொடைப்புய மாறர்
சொற்றசெந் தமிழ்மறை கற்றுணர்ந் தழகிய
வுனைலந் தெரிந்துகொண் டென்னை யிகழ்ந்து
சிலகைங் கரிய நலனுறப் பண்ணும்
படிசெய் துறுபல னடையநீ கைக்கொண்
டெனக்குபா யமுமா யெனக்குபே யமுமா
யிருந்தொன் றாலும் வருந்தா விதமெனை
யாட்கொள வேண்டு மாட்கொண் டனையேற்
சனனமு மரணமும் வினைகளு நீங்கக்
கரைபொரு விரசையுங் கடந்து
பரமா முனது பதத்தடை குவனே.

(இ - ள்.) நாகம் குலத்து இறை - சர்ப்பங்களின் கூட்டத்துக்கு அரசனுன ஆதிசேஷனது, காய் கதிர் மணி சூடு - எறிக்கின்ற ஒளியையுடைய மாணிக்கத்தை யுடைய உச்சிக்கொண்டையோடுகூடிய, ஆயிரம் தலை - ஆயிரம் முடிகளாலும், கொளும்-சுமக்கப்படுகின்ற, மா இரு ஞாலம் மகள்-மிகவும் பெரிய பூமிதேவியினது, சிரம் - முடி உண்டன்றோ); அ சிரம் - அம்முடியில், திகழ் - (அணியப்பட்டு)விளங்குகின்ற, சுடர் கற்றை வளைந்த-ஒளியின் தொகுதியை(த்தன்னிடத்தே)கொண்ட, அம் மௌலியின் - அழகிய கிரீடத்திற் பதித்த, நனம் தலை நாயகம் மரகதம் மணி என - அகற்சியான இடத்தையுடைய நடுநாயகமணியாகிய தொரு பச்சை யிரத்தினம் போல, தரையில் நிலைஇய - பூமியிலே நிலைபெற்ற, ஓங்கு பொன் குடுமி - உயர்ந்த பொன்மயமான சிகரத்தையுடைய, வேங்கடம் - திருவேங்கட மலையி லுள்ள, கனகம் தூவியின் - பொ மயமான விமானத்தினது, நாப்பண் - நடுவிலே, மேவிய - எழுந்தருளிய, மாயோய் - ஆச்சரியகரமான திருக்கலியாணகுணகணங்களை யுடையவனே!—நலம் மணி மலை - அழகிய தொருநீலரத்தினமயமான பருவதம்,பால் நிலவு போர்த்து என்ன - பால் போன்ற வெண்ணிறமான சந்திரகாந்தியை (த்தன்மேலே) போர்த்துக்கொண்டாற்போல, வாலிதின் சருப்புரம்மேல் அணிந்து - வெண்ணிறமுடைய தான பச்சைக்கர்ப்பூரத்தை மேலே தரித்து, அந்த வியன் மலை - அந்தப் பெரிய நீலபருவதம், கம சூல் புயல் படிந்து ஆங்கு - நிறைந்த(நீராகிய)கருப்பத்தையுடைய காளமேகம் (தன்மீது) பொருந்தப் பெற்றாற்போல, புழுகு ஒழுக புனை - கஸ்தூரிப்புழுகை மிகுதியாகத் தரித்த, அழகிய வடிவோய் - அழகான திருமேனியை யுடையவனே!—செம் கண் பகவ - சிவந்த திருக்கண்களையுடைய பகவானே! எங்கட்கு இறைவ - என்போலியரான அடியார்கட்குத் தலைவனே!—ஒரு தனி ஆழி பரிதி விட்டு அகலா - ஒன்றாகிய ஒப்பற்ற தேர்ச்சக்கரத்தையுடைய சூரியனை விட்டுநீங்காத, விரி கதிர் என - பரந்த (அவனது) கிரணம்போல, நின் பிரிகிலாது இருக்கும் - உன்னைவிட்டு (எப்பொழுதும்) நீங்காம லிருக்கின்ற, மடந்தை - பெண்களுட் சிறந்தவளாகிய, நுண் மருங்குல் நுடங்க பணைத்து எழு கொங்கையின் - நுண்ணியதான இடை (அதிக பாரத்தைத் தாங்கமாட்டாமல்) ஒசியும்படி (மேன்மேற்) பருத்து வளர்கின்ற தனங்களை யுடைய, அலர்மேல்மங்கைதன் - அலர்மேன்மங்கை யென்னும் பெரியபிராட்டிக்கு, கணவ - கொழுநனே!—நின் பணி அடியார் பொன் பதம் துகட்கும் நிகர் அலென் - உன்னை வணங்குகின்ற மெய்யடியார்களது அழகிய திருவடிகளின் தூளிக்கும் ஒப்பல்லாதவனும், குற்றம் மிக உள சிறியேன் - பிழை

களை அதிகமாகவுடைய (அறிவு ஒழுக்கங்களிற் சிறுமையை யுடையவனு மாகிய,நான்—, மொழி - சொல்லுகின்ற, புல் சொலும் - இழிவான சொற்களையும், கேள் - கேட்டருளுவாயாக:—

முடிவு இலா - வரம்பில்லாத, ஒரு நின் - ஒப்பற்ற உனது, உடைமை ஆய் நிற்கும் - சொத்தாய் நிற்கின்ற, இரு வகை சத்தின் - (சுத்த சத்து மிசிரசத்து என) இரண்டு வகைப்பட்ட சத்தியப் பொருள்களினுள்ளே, நிருமலம் - குற்ற மற்றதும், நித்திய வித்தையும் ஆகிய - அழியாத ஞானமயமு மாகிய, சுத்தசத்து ஒன்றை - சுத்தசத்து எனப்படும் ஒரு பொருளை, நித்தரும் - (முக்காலத்தும் ஒரேதன்மையரான) நித்தியர்களும், முத்தரும் - (வீடு பெற்ற) முக்தர்களும், மைத்த கண் குவளை தேவியர் நீயும் - நீலோற்பலமலர்போன்ற கருநிறமாகிய திருக்கண்களையுடைய தேவிமாரோடு கூடிய நீயும், மேவி வீற்றிருக்க - விரும்பி எழுந்தருளியிருத்தற்கு, பேர் இடம் ஆக்கினை - (ஸ்ரீவைகுண்டமென்னும்) பெரிய ஸ்தானமாம்படி செய்தருளினாய்;—அதற்கு வேறுபாடு உடைத்து ஆகூறும் மிச்சிரசத்து ஒன்றினை - அந்தச் சுத்தசத்திற்கு வேறுபடுதலையுடையதாக [குற்ற முள்ளதும் அழிவு படுவதான அஜ்ஞாநமயமுமாகச்] சொல்லப்படுகின்ற மிசிரசத்து என்னப்படும் மற்றொருபொருளை, ஆலம் வித்து ஒன்று - ஆலமரத்தின் விதை யொன்று, முளைத்து - (நிலத்திலே) முளைத்து, குரூஉ தழை கொம்பு ஆ-பெரிய தழைத்த கிளைகளாகவும், பரூஉ செழு மரம் ஆ - பருத்த செழிப்பான மரமாகவும், பரிணமித்து என்ன - மாறினாற்போல, வரிசையின் - (ஒன்றன்மேலொன்றாக) வரிசைப்பட்ட, எழுஆ - ஸப்த ஆவரணங்களாக, விரிய படுத்தி - விஸ்தரிக்கும்படி செய்து, வரல் முறை தோன்றிய - முறையே ஒன்றிலிருந்து ஒன்று உண்டான, அஞ்சினும் - பஞ்ச பூதங்களுள்ளும், அரை அரை-ஒவ்வொன்றிலும் இரண்டு பாதிகளை, பஞ்சீகரணம் பண்ணி-ஐந்தாகச்செய்து, இலஞ்சியுள் அண்ணல் அம் கமலம் உரு பொலன் தாதால் திரட்டு - நீர்நிலையில் தோன்றுகின்ற (எல்லா மலர்களுள்ளும்) பெருமையை யுடைய அழகிய தாமரைமலரினது நிறத்தையுடைய பொன்னிறமான பூந்தாதுகளாகத் திரட்டி, நடுவணில் - (அத்தாதுகளின்)நடுவிலே, சீரிய பொகுட்டு மேருவில் - சிறப்பையுடைய தாமரைக்கொட்டையாகிய மகாமேருமலையிலே, திசை முகன் உடை மகன் (நான்கு) திக்குக்களிலும் (நான்கு) முகத்தையுடைய பிரமதேவனை, சேர்த்தி - உண்டாக்கி,—படை என விதித்து - ('உலகங்களைச் சிருஷ்டிப்பாய்'என்று(அவனுக்குக்) கட்டளையிட்டு,—ஆங்கு இலகும் அவன் கொண்டு - அவ்விடத்தே விளங்குகின்ற அப் பிரமனைக் கொண்டு, உலகும்- உலகங்களையும், அவற்றுள் - அவ்வுலகங்களி னுள்ளே, சாற்று ஒரு நால் வகை தோற்றத்து-சொல்லப்படுகின்ற ஒப்பற்ற நான்குவகையான தோன்றற்பாட்டையுடைய, ஓர் எழ் பான்மை பிறப்பின் - ஒரு எழுவகைப்பட்ட பிறப்புக்களையுடைய, ஆன்மம் திரளையும் - ஜீவாத்மாக்களின் கூட்டத்தையும், வருவித்து - படைக்கச்செய்து,—அவற்றை-(அங்ஙனம்படைக்கப்பட்ட) அந்த ஜீவகோடிகளை, உரிய தானத்தில்-(அவ்வவற்றிற்கு) உரிமையையுடையனவான இடங்களிலே, இறை கொள - தங்குதலைக்கொள்ளும்படி, வைப்பித்து - (அப்பிரமனைக் கொண்டே) வைக்கச்செய்து,—உறைதரும் அவை தாம் - (அவ்வாறு உரிய தானங்களில்) வசிக்கின்ற அந்த ஆன்மகோடிகள்தாம், மிக புரி - மிகுதியாகச் செய்கின்ற, கருமம் - (நல்வினையும் தீவினையும் ஆகிய) ஊழ்வினைகளை, அகத்தினும் புறத்தினும் மரீஇ உணர்ந்து - (எல்லாச்சேதநாசேதநங்களின்) உள்ளிலும் புறத்திலும் (நீயே) பொருந்தியிருந்து அறிந்து, உள் பரீஇய அனந்தம் உயிர்கட்கு- மனத்திலே (உன்பக்கல்)அன்புகொண்ட அநேகஜீவன்களுக்கு, இன்பமும்-

(இம்மை மறுமை வீட்டு) இன்பங்களையும், செயிர் ஆர் அனந்தம் ஆர் உயிர் தமக்கு - குற்றம் பொருந்திய அனேகமான அருமையான ஜீவன்களுக்கு, கூர்தரு துன்பமும் - மிகுதியான (பிறவித்) துன்பங்களையும், ஊட்டி - அதனதன் வினைக்கு ஏற்ப அனுபவிப்பித்து,—திரு விளையாட்டு அயர்கின்றனை - (இங்ஙனம்) அழகிய விளையாடுதலைச் செய்கிறாய்; அடுக்கும் நின் மாயையை கடக்க வல்லவர் ஆர் - (இவ்வாறு) பொருந்திய உனது மாயையை மீற வல்லவர் எவர்? [எவருமில ரென்றபடி];

அ உயிர் குழாத்து - (கீழ்க் கூறப்பட்ட) அத்தன்மையனவான உயிர்களின் தொகுதியினுள்ளே, அற வெவ்விய - மிகவுங் கொடுமையையுடைய, தமியெனும் - (கதியில்லாமல்) தனியனாகிய யானும், நின் அருள் பெறுமே - உனது கருணையை (இதுவரையிலும்) அடையாமலே, இ நிலம் தன்னில் - இந்த நிலவுலகத்திலே. கண்ணுளன் ஒருவன் - கூத்தாடியொருத்தன், எண் இலா வேடம் எடுத்து - அளவில்லாத [பலவாகிய] வேஷங்களை(த்தான்) கொண்டு, பல விதம் - பலவகையாக, நடித்திடல் - நர்த்தனஞ் செய்தலை, பொருவ - ஒக்கும்படி. கூத்து இனைத்து என நினைத்து அளக்க ஒண்ணா உருவம் எடுத்தும் - நடனம் இத்தன்மையதென்று எண்ணி அளவு செய்ய முடியாத (பல) சரீரங்களைச் சுமந்தும், பருவம் வந்த ஊழி விடுத்தும் - அந்திமகாலம் வந்தபொழுது (அந்தந்த உடம்பை விட்டும், பெரு நரகு அடுத்து இடர் உழந்தும் - (தீவினையாற் பின்பு) பெரிய நரகலோகத்தை அடைந்து (அங்குத்) துன்பங்களை அனுபவித்து வருந்தியும், நலம் கறங்கு என்ன - நன்மையையுடைய [நல்ல] காற்றாடிபோல, அலமந்து சுழன்று, இன்னணம் - இவ்வாறு, சாலவும் - மிகவும், எய்த்தனென் போலும் - தளர்ச்சியடைந்தேன் போலும்; (இத்தன்மையனாகிய யான்), இ பிறவி பௌவம் பரப்பை - இந்தப் பிறவித்துன்பங்களாகிய கடலின் விசாலமான இடத்தை, எ விதம் கடப்பல் - எவ்வாறு தாண்டுவேன்?

அனுதினம் - நாள் தோறும், அவிச்சை - அஜ்ஞானம், எனது உணர்வு அழித்தலை ஒழியாது - என்னுடைய நல்லறிவைக் கெடுத்தலை நீங்காது; அதனால் - அவ்வஜ்ஞானத்தால், எழும் - உண்டாகின்ற, அகங்காரம் - செருக்கு, யான் எனது எனும் பற்று - (தானல்லாத உடம்பை) நானென்று கருதும் அகப்பற்றையும் (தன்னோடு இயைபில்லாத பொருளை) என்னுடையதென்று கருதும் புறப்பற்றையும், ஆறாது - இடைவிடாமல், இயற்றுதல் - செய்தலை, விடாது - நீங்காது; அதனானே - அவ்வகங்காரத்தாலே, கெடாது உறும் - குறையாதபடி மேன்மேலுண்டாகிற, அவாவும்—, எனக்கு இது வேண்டும் என கருதும் திறன் உதவுதல் தவிராது - எனக்கு இன்னது வேண்டுமென்று எண்ணி ஒருபொருளை விரும்புந் தன்மையைத் தருதலை நீங்காது; அதனான் - அவ்வவாவினாலே. உதித்து - தோன்றி, பெருகிய - வளர்ந்த, விழைவு - ஆசை, பொருள்களை இறுக பிடிக்க புரிதல் விடுத்திடாது - (நுகரப்படுவனவாகிய) பொருள்களை நன்றாகக் கைக்கொள்ளச் செய்தலை நீங்காது; அதனான் - அவ்விழைவினால், மறுத்தலை கடந்து - தடையில்லாமல், கதம் என முளைக்கும் - (அப்பொருள் தனக்குக் கிடைப்பதற்கு எதிரானவற்றினிடத்தில்) விரைவாக உண்டாகின்ற, வெறுப்பு - வெறுப்பானது, தீ தொழில் - கெட்ட செய்கைகளும், மறு படு மாற்றமும் - குற்றம்பொருந்திய சொற்களும், வரு வகை இழைத்தல் - உண்டாகும்படி செய்தலை. ஒருவாது - நீங்காது; இவற்றான் - இக்குற்றங்களாந்தினாலும், விளை - உண்டாகின்ற, இரு வினையும் - (நல்வினை தீவினை என்னும்) இருவகைக் கருமங்களும், வளர் விதம் அகலா - மேன்மேல் வளருந் தன்மையை நீங்காவாம்; அ இரு வினையால் - அந்த இரண்டு கருமங்களாலும், மாயம் தனுவும் - (நிலையில்லாமையாற்) பொய்யாகிய உடம்பும், தோற்றிய தனுவால் - (கருமவசத்தால்) உண்டான உடம்பி

ஞல், மாற்று அரு வினையும் - விலக்குதற்கு அருமையான கருமங்களும், விரையால் தருவும் தருவால் விரையும் வருவன போல - விதையினுல் உண்டாகின்ற மரமும் அம்மரத்தால் உண்டாகின்ற விதையும் (ஒன்றற்கொன்று காரணமாகத்) தோன்றுவனபோல, வராது இரா - (பரஸ்பரஹேதுவாய்) வராமலிருக்கமாட்டாவாம்; ஒருதலை - (இது) நிச்சயம்; அவற்றை நோக்கி- அவ்வுடம்பையும் ஊழ்வினையையும் பார்த்து, நீக்கல் - விலக்குதல், என் வயமோ - எனது வசமோ? [அன்றென்றபடி];

எதவறு இழைக்கினும் - எப்படிப்பட்ட பெரும்பிழையைச் செய்தாலும், கத்து கிண்கிணி கால - ஒலிக்கின்ற கிண்கிணியென்னுஞ் சதங்கையை யணிந்த பாதங்களையும், மழலை அம் கனிவாய் - மழலைச்சொற்களைப் பேசுகின்ற அழகிய கொவ்வைப்பழம் போலச் சிவப்பான வாயையுமுடைய, குழவியை - குழந்தையை, ஈன்ற தாய் - பெற்ற தாயானவள், அளிப்பது போல் - காப்பதுபோல, நீ அளித்தருள உள்ளம் கருதி - (எத்தனை பெரும் பிழை செய்தாலும் பொறுத்து என்னைக்) காத்தருளும்படி நீ மனத்திலே நினைத்து, என் கள்ளம் மனத்தை திருத்தி - எனது வஞ்சனையுடைய மனத்தைச் சுத்தப்படுத்தி, உன்பால் அருத்தி உண்டாக்கி - உன்னிடத்தில் விருப்பத்தை உண்டாகச்செய்து,—பற்றலர் பொரும் உன் வெற்றி கொடி எனும்- பகைவர்களைப் போர்செய்து அழிக்கின்ற உனது ஜயத்துக்கு அடையாளமான த்வஜமென்று வருணிக்கத்தக்க, புயல் தொடு சாலி வயல் சுற்று உடுத்த பூதூர்தனில் வரும் மா தவத்து எதிபதிதனது - (வளர்ச்சியால்) மேகங்களை யளாவுகின்ற நெற்பயிர்களையுடைய கழனிகளால் எப்புறத்துஞ் சூழப்பட்டுள்ள ஸ்ரீபெரும்பூதூரில் திருவவதரித்த சிறந்த தவத்தையுடைய ஸ்ரீபாஷ்யகாரரது, ஆணையின் வழி-கட்டளையின் படியே, நனி மிக ஒழுகும் - நன்மை மிகும்படி நடக்கின்ற, வர வைணவத்தில் - (எல்லாமதங்களினும்) மேற்பட்டதாகிய ஸ்ரீவைஷ்ணவ மதத்தில், விரகு இலா எனையும் - (உய்தற்கு) உபாய மொன்று மில்லாத என்னையும், கூட்டி - சேர்த்து,—நல் குரவர் தாள் துணை பணிந்து - (யான்)நல்ல ஆசாரியரது உபயதிருவடிகளை வணங்கி, அவர்தம் ஆலயத்து - அவரது கோயிலாகிய திருமாளிகையிலே, மும்மை ஆகாரமும் படைத்து - (அநந்யார்ஹசேஷத்துவம், அநந்யசரணத்துவம், அநந்யபோக்கியத்துவம் என்னும்) மூன்று தன்மைகளையும் பெற்று, அலர் வகுளம் தொடை புயம் மாறர் சொற்ற செம் தமிழ் மறை கற்று - மலர்ந்த மகிழம்பூக்களினு லாகிய மாலையை அணிந்த திருத்தோள்களையுடைய நம்மாழ்வார் திருவாய்மலர்ந்தருளிய சுத்தமான தமிழ்வேதங்களாகிய திவ்வியப்பிரபந்தங்களைப் படித்து, உணர்ந்து - (அவற்றின் பொருளை) அறிந்து, அழகிய உன் நலம் தெரிந்து கொண்டு - (அவ்வறிவினுல் எல்லா) அழகையுமுடைய உனது நல்ல சொரூபத்தை அறிந்துகொண்டு, என்னை இகழ்ந்து - எனது தன்மையை (நானே) வெறுத்து, சில கைங்கரியம் நலன் உற பண்ணும்படி - சில அடிமைத் தொழில்களை நன்மைபொருந்த (உனக்குச்) செய்யும்படி, செய்து - (என்னைப்) பக்தனுக்கி,—உறு பலன் அடைய நீ கைக்கொண்டு-(அக் கைங்கரியஞ் செய்தலால்) வருகிற பயன் முழுவதையும் (எனக்குத்தராமல்) நீயே ஏற்றுக்கொண்டு,—எனக்கு உபாயமும் ஆய் எனக்கு உபேயமும்ஆய் இருந்து-(நீயே) எனக்கு (ப்பலபிராப்திக்குச்) சாதனமும் ஆகி எனக்கு அவ்வுபாயத்தா லடையும் பலனு மாகிப் பொருந்தி, ஒன்றாலும் வருந்தா விதம்-ஒருவகையாலும் (யான்) வருத்தமடையாதபடி, எனை ஆள்கொளவேண்டும்-என்னை (நீ) அடிமைகொண்டருளுதல் வேண்டும்; ஆள் கொண்டனை எல்-(இவ்வாறு என்னை நீ) அடிமை கொண்டருளினையானால்,— (யான்),—சனனமும் மரணமும் வினைகளும் நீங்க - பிறப்பு இறப்புக்களும் (அவற்றிற்குக்காரணமான) கருமங்களும் ஒழிய, கரை பொரு விரசையும்

கடந்து-கரைகளை யோதுகின்ற விரஜாநதியையுந் தாண்டி, உனது பரம்ஆம் பதத்து அடைகுவன் - உன்னுடைய (எல்லாப்பதவிகளினும்) மேம்பட்டதாகிய பரமபதத்தை அடைவேன்; (எ - று.)

நாகம் - (கால்களால்) நடவாதது. 'நனந்தலை' என்பது இப்பொருளதாதலை "நாளங்காடி நனந்தலைக் கம்பலை" என மதுரைக்காஞ்சியிலும், "நனந்தலை யுலகம் வளைஇ" என முல்லைப்பாட்டிலுங் காண்க. நாயகமணி - ஆரம்முதலியவற்றின் நடுவில் வைக்கும் பெருமணி. மௌலி என்னுஞ் சிரசின் பெயர், அதிலணியுங் கிரீடத்துக்கு ஆகுபெயர். பூமிதேவியின் சிரம் - வேங்கடமலைக்கும், சிரத்தி லணிந்த கிரீடம் - அம்மலையிலுள்ள கோயிலின் விமானத்துக்கும், கிரீடத்திலுள்ள நாயகரத்தினம்-அங்கு எழுந்தருளிய எம்பெருமானுக்கும் உவமை. மாயோய் - மாயோன் என்பதன் விளி; ஈறு திரிந்தது - உருபு. நீலரத்தினமலை - எம்பெருமான் திருமேனிக்கும், நிலா - கருப்பூரத்துக்கும், காளமேகம் - கஸ்தூரிப்புழுகிற்கும் உவமை. வியனென்னும் உரிச்சொல் விசாலமென்னும் பொருளதாதலை "வியனென் கிளவி யகலப் பொருட்டே" என்னுஞ் சூத்திரத்தால் அறிக. அடியார்களை அருளொடு நோக்கிநோக்கிக் கண்கள் சிவந்தனபோலு மென்பார், 'செங்கட்பகவ' என்றார். பகவ - பகவாந் என்னும் வடசொல்லின் விளி. நிறைந்த ஞானம், சக்தி, பலம், ஐசுவரியம், வீரியம், தேஜசு என்னும் ஆறு குணங்களுக்கும் 'பகம்' என்று பெயராதலால், பகவான் என்பதற்கு - இந்த ஆறு குணங்களையு முடையவனென்று பொருள். மதி, அத்தை - அடுத்துவந்த முன்னிலை யசைச்சொற்கள்.

சத்து - ஸத்து; ஸத்துவம்: காலசம்பந்த முள்ளது. பரமகாருணிகரான பிள்ளைலோகாசாரியர் என்னும் பூர்வாசாரியர் அருளிச்செய்த தத்வத்ரயம் என்னும் ரஹஸ்யத்தில், இரண்டாவது அசித்ப்ரகரணத்தில், 'அசித்து, ஜ்ஞாநசூந்யமாய் விகாராஸ்பதமாயிருக்கும்; இது - சுத்தஸத்வமென்றும், மிச்ரஸத்வ மென்றும், ஸத்வசூந்யமென்றும் த்ரிவிதம்: இதில் சுத்தஸத்வமாவது - ரஜஸ்தமஸ்ஸுக்கள் கலவாதே கேவலஸத்வமாய் நித்யமாய் ஜ்ஞாநாநந்தஜநகமாய்க் கர்மத்தாலன்றிக்கே கேவலபகவதிச்சையாலே விமாந கோபுர மண்டப ப்ராஸாதாதி ரூபேண பரிணமிக்கக்கடவதாய் நிரவதிக தேஜோரூபமாய் நித்யமுக்தராலும் ஈச்வரனாலும் பரிச்சேதிக்க அரிதாய் அத்யத்புதமாய் இருப்பது ஒன்று' என்றும், 'மிச்ரஸத்வ மாவது - ஸத்வரஜஸ்தமஸ்ஸுக்கள் மூன்றோடுங்கூடிப்பத்தசேதநருடையஜ்ஞாநாநந்தங்களுக்குத் திரோதாயகமாய் விபரீதஜ்ஞாநஜநகமாய் அநித்யமாய் ஈச்வரனுக்கு க்ரீடாபரிகரமாய் ப்ரதேசபேதத்தாலும் காலபேதத்தாலும் ஸத்ருசமாயும் விஸத்ருசமாயு மிருக்கும் விகாரங்களை உண்டாக்கக் கடவதாய் ப்ரக்ருதி, அவித்யை, மாயை என்கிற பேர்களை உடைத்தாயிருக்கும் அசித்விசேஷம்' என்றும் வருதல் காண்க. நித்திய மாகையாவது-எப்பொழுதும் உள்ளதாகுகை. நித்தியர் என்கிறது - எம்பெருமானைப்போலவே என்றும் ஒரு தன்மையராய்ப் பரமபதத்தில் பகவத்கைங்கரியஞ் செய்கின்ற அநந்த கருட விஷ்வக்ஸேநாதியரை. முக்தர்என்கிறது - முதலில் ஸம்ஸாரத்தில் இருந்து பின்பு அதன் ஸம்பந்தம் அற்று வீடுபெற்றவரை.

ஓரும், மற்று - அசைகள். ஓரும் - அறியப்படுகிற எனவும், மற்று - வினைமாற்றாகவும் ஆம். ஆலம், அம் - சாரியை. குரூஉ, பரூஉ என்பன - ஓசைகுறையாதவிடத்து வந்ததனால், இன்னிசையளபெடைகள். ஸ்ரீவிஷ்ணு புராணத்தின் முதலம்சத்தின் இரண்டாம் அத்தியாயத்தில் 'இப்படியுண்டான பிரமாண்டத்தைக் கவிந்து ஒன்றுக்கொன்று தசகுணோத்தரமான ஜலமும் அக்கினியும் மாருதமும் ஆகாசமும் தாமசாகங்காரமும் மகத்தத்துவமும் பிரகிருதியும் ஆகிய ஸப்தஆவரணங்கள் இருக்கின்றன; தேங்காயா

னது நார்மட்டைகளினாலே எப்படி கவியப்பட்டிருக்கின்றதோ, அப்படி பிரமாண்டம் ஸப்த ஆவரணங்களினாலே கவியப்பட்டிருக்கிறது' எனக் கூறப்பட்டிருத்தலை அறிக. தத்வத்ரயத்தில் 'அண்டங்கள்தாம் அநேகங்களாய்ப் பதினாலுலோகங்களோடே கூடி ஒன்றுக்கொன்று பதிற்று மடங்கான ஏழாவரணங்களாலுஞ் சூழப்பட்டு' என வருதலையும் உணர்க. 'வரன்முறை தோன்றிய' என்பதனால் தொகுத்துக்கூறப்பட்ட பிரபஞ்சவுற்பத்திக் கிரமத்தை விஷ்ணுபுராணத்தில் உ-ஆம்அத்தியாயத்திலும், தத்வத்ரயத்தில் உ-ஆம் ப்ரகரணத்திலும் விளங்கக் காண்க. பஞ்சீகரணம் பண்ணுதலாவது - பிருதிவியில் ஒருபாதி பிருதிவியும் மற்றைப்பாதி அப்பு தேயு வாயு ஆகாசங்களும், இவ்வாறே மற்றைப் பூதங்களிலும் பாதி அதுவும் பாதி மற்றைநானகுமாகக் கலக்கச் செய்தல். இப்படி அந்யோந்யமாய்க் கலந்தாலொழியப் பிரமாண்டம் உண்டாகாது. 'இவை கூடினாலல்லது கார்யகரமல்லாமையாலே மண்ணையும் மணலையும் நீரையும் சேர்த்து ஒருத்ரவ்யமாக்கிச் சுவரிடுவாரைப்போலே ஈச்வரன் இவற்றை யெல்லாந் தன்னிலே சேர்த்து ஒருஅண்டமாக்கி அதுக்குஉள்ளே சதுர்முகனை ஸ்ருஷ்டித்தருளும்' என்றார் பிள்ளைலோகாசார்யரும்.

பொலன்-பொன்என்பதன் விகாரமாகிய பொலம் என்பதன் இறுதிப்போலி. திரட்டு - செய்பு என்னும்வாய்பாட்டு இறந்தகாலவினையெச்சம். எம்பெருமானது நாபீகமலமென்பது, அண்டத்தின் இடையிலே பள்ளிகொண்ட அவரது நாபிஸ்தானமான அண்டமத்தியை யாதலால், அதன் பொகுட்டை அண்டமத்தியி லுள்ள மேருவாகக் கூறினார்; எனவே, அஷ்டகுலபருவதங்கள் அப்பொகுட்டைச் சூழ்ந்துள்ள பூந்தாதுகளாம்: "புறக்குன்று புல்லிதழ் முந்நீர் பிரசம் பொருவில்செம்பொன், னிறக்குன்றுகன்னிகை யெண்கிரிதாது நில மதனுட், பிறக்குந் துகண் மூதுமாசுண நாளம் பிரமன் வண்டு, சிறக்குந்திகிரியரங்கேசருந்திச்செழுமலர்க்கே" என்னுந் திருவரங்கத்துமாலைச்செய்யுளின்உருவகப்பொருளை உய்த்துஉணர்க. அஞ்சு-ஐந்துஎன்பதன் மரூஉப்போலி.'அதற்கு' என்பது முதல் 'விதித்து' என்றது வரையில் எம்பெருமான்தானேசெய்த அத்வாரகஸ்ருஷ்டியைச் சொல்லி, அதற்குமேல் பிரமனைக்கொண்டு செய்கிற ஸத்வாரகஸ்ருஷ்டியைக் கூறுகின்றார். நால்வகைத் தோற்றம் - தேவ,திர்யக், மநுஷ்ய, ஸ்தாவரங்கள்; பை, முட்டை, நிலம், வியர்வை எனவுமாம். எழ்பிறப்பு-தேவர், மக்கள், விலங்கு, புள், ஊர்வன,நீர்வாழ்வன, தாவரம் என்பவை. ஆன்மம் - வடசொற்றிரிபு. இறை - தொழிற்பெயர்; இறு - பகுதி, ஐ - விகுதி. மரீஇ - மருவி: பரீஇய-பரிந்த ; சொல்லிசையளபெடைகள்.

'அடுக்குநின்மாயையைக் கடக்கவல்லவ ரார்' என்ற விடத்து "அமைவுடைநாரணன்மாயையை யறிபவர்யாரே" என்னுந் திருவாய்மொழியையும், "மமமாயாதுரத்யயா" என்னும் பகவத்கீதையையும் உணர்க. இதுவரையில் முத்திபெறாமல் பிறப்பிறப்புக்களில்அலைதலால்,'நின்னருள்பெறுமே' என்றது. கண்ணுள் - கூத்து. வந்துழி - விகாரம். இன்னணம் - இன்னவண்ண மென்பதன் மரூஉ. போலும் - ஒப்பில்போலி; "ஒப்பில் போலியு மப்பொருட்டாகும்" என்னும் விதியால், இது உரையசைப்பொருளதாய் நின்றது. பிறவி - தொழிற்பெயர் ; வி - விகுதி. திருக்குறளுரையில் பரிமேலழகர் 'அறிவியாகிய அவிச்சையும், அதுபற்றி யானெனமதிக்கும் அகங்காரமும், அதுபற்றி எனக்கு இதுவேண்டு மென்னும் அவாவும், அதுபற்றி அப்பொருட்கண் செல்லும் ஆசையும், அதுபற்றி அதன்மறுதலைக்கண் செல்லும் கோபமும் என வடநூலார் குற்றம் ஐந்தென்றார்' என்றதையும் அறிக; இவை - அவித்யா அஸ்மிதா ராகம் அபிநிவேசம் த்வேஷம் என்னும் பஞ்சகிலேசமெனப்படும். அ + இரு = ஆயிரு; நீண்ட சுட்டின்முன் யகரந்தோன்

றிற்று: [நன் - உயிர் - கங.] விரையால் தருவுந் தருவால் விரையும் வருவன போல - இதனை வடநூலார் 'பீஜாங்குரந்யாயம்' என்பர். வயம் - வசம்; வடமொழித்திரிபு. ஓ - எதிர்மறை. கிண்கிணி - கிண் கிண் என்று ஒலிப்பது; காரணப்பெயர்: இ - கருத்தாப்பொருள்விகுதி. இது - மற்றைக்காலணிகளுக்கும் உபலக்ஷணம். குழவி - இளமையுடையது; குழ-இளமை. "அரிசினத்தாலீன்றதாயகற்றிடினு மற்றவள்தன், னருணினைந்தேயழுங்குழவியதுவே போன்றிருந்தேனே" என்றார் குலசேகராழ்வாரும். மற்று-அசை. பற்றலர்-தன்னோடு சேராதவர்; எதிர்மறைப் பலர்பால் வினையாலணையும்பெயர்.

"ஸ்ரீரங்கேசஜயத்வஜோவிஜயதேராமாநுஜோயம்முநி:" என்னும் வடநூன்மேற்கோளை மொழிபெயர்த்து, 'உன்வெற்றிக்கொடியெனுமெதிபதி' என்றார். சாலி-வடசொல்; இது செந்நெலென்னும் பொருளதாதலை "சாலிவேலிதண்வயல்" என்னுந் திருச்சந்தவிருத்தத்தாலும்அறிக பூதூர்-பூதபுரி. ஆணை-ஆஜ்ஞை; வடசொற்சிதைவு. வைணவம்-வைஷ்ணவம்; திரிபு. நற்குரவர்-சதாசாரியர்; "ஞானமனுட்டானமிவைநன்றாகவேயுடைய, னானகுரு" என்றார் உபதேசரத்தினமாலையில். குரவர்-குரவ:; வடசொல்: குருஎன்பதன் பன்மை. அநந்யார்ஹசேஷத்வம் - பகவானையொழியப் பிறர்க்கு ஆட்படாமை; அநந்யசரணத்வம் - பிறரை அடைக்கலமாகப் பற்றாமை; அநந்யபோக்யத்வம் - பிறரை அனுபவிக்கப்படும் பொருளாகக் கொள்ளாமை: இவை, ஆகாரத்ரய மெனப்படும். வகுளம் - மலருக்கு ஆகுபெயர். தமிழ்மறை - வேதார்த்தங்களைத் தமிழாற்சொன்ன நூல்கள். கைங்கரியத்தின் பலனைச் செய்பவன் தான் அடையக்கருதினால், அவனுக்கு வீடுபேறு இல்லையாமாதலால், 'பலனடைய நீளைக்கொண்டு' எனப்பட்டது. வேண்டும் - ஒருவகை வியங்கோள்வினைமுற்று; இது - இங்கே, வேண்டிக்கொள்ளுதற் பொருளது. விரஜை - பரமபதத்தின் அருகே உள்ளதோர் ஆறு. ஈற்றேகாரம் - தேற்றம். ஸ்ரீவைஷ்ணவவிசிஷ்டாத்வைத சமய சித்தாந்தம் ஸ்ரீபகவத்பாஷ்யகாரரால் சீர்திருத்தி உலகமுழுவதும் பரவச்செய்யப்பட்டதனால், 'எதிபதிதனதாணையின்வழியொழுகும்வைணவம்' எனப்பட்டது; "எம்பெருமானார்தரிசனமென்றே யிதுக்கு, நம்பெருமாள்பேரிட்டு நாட்டிவைத்தா-ரம்புவியோ, ரிந்தத்தரிசனத்தை யெம்பெருமானார் வளர்த்த, வந்தச்செயலை யறிகைக்கா" என்றார் உபதேசரத்தினமாலையிலும். நிலைஇய - நிலைத்த; சொல்லிசையளபெடை. எனதெனும்பற்று - மமகாரம்.

இது - ஈற்றயலடி முச்சீரடியும், மற்றையடிகள் நாற்சீரடிகளுமாகப் பெரும்பாலும் ஈரசைச்சீர்களால் வந்த தொண்ணூற்றாறடி நேரிசையாசிரியப்பா; தத்துவங்கள், பிரபந்தங்கள், நான்முகன்திருவந்தாதி என்னுஞ் சிறப்புடைப்பொருள்களின் தொகையைக் கருதி, இவ்வகையல் தொண்ணூற்றாறடியாகப் பாடப்பட்டதுபோலு மென்க. (௫௮)

௫௯. அடையமுண்டகமேலோன் பதத்தினுக்கப்புறத்திலருந் தூரமாழியம், படையன்வாழ்பதமென்றுரைப்பீ ரவன்பத்தருக்கப் பதநெடுந்தூரமோ, தடையிலாதிபங்கூப்பிடுகாலையத்தலைவன்வந்தமைதானறியீர்கொலோ, கொடையிலோங்கியவேங்கடமாயவன்குடிகொள்வைகுந்தங்கூப்பிடுதூரமே.

(இ - ள்) ஆழி அம் படையன் வாழ் பதம் - அழகிய சக்கராயுதத்தையுடைய திருமால் எழுந்தருளியிருக்கின்ற பரமபதம், முண்டகம் மேலோன் பதத்தினுக்கு அபுரத்தில்-(திருமாலின்) நாபித்தாமரைமலரின்மேலே தோன்றியபிரமனது பதவியாகிய சத்தியலோகத்துக்குவெளிப்பக்கத்தில், அடைய அரு தூரம்-சென்று சேர்வதற்கு அருமையான சேய்மையில் உள்ளது, என்று உரைப்பீர் - என்றுசொல்பவர்களே!—அவன் பத்தருக்கு-அத்திருமாலினது

அடியார்களுக்கு, அ பதம்-அப் பரமபதம், நெடுந் தூரமோ-மிகவுந் தூரத்திலுள்ளதோ? [அன்றென்றபடி]; இபம் - கஜேந்திராழ்வான், கூப்பிடு காலை-(ஆதிமூலமேயென்று) கூவி அழைத்த பொழுது, அ தலைவன் - (யாவர்க்குந்) தலைவனாகிய அத்திருமால், (அக்கூப்பாட்டைச் செவியுற்று, தடை இலாது-தடையில்லாமல், வந்தமை - (உடனே அருகில்) எழுந்தருளி அதனைக் காத்ததை, அறியீர்கொலோ - (நீங்கள்) அறியமாட்டீர்களோ? [பிரசித்தமான விஷயமே யென்றபடி]; (ஆதலால்), கொடையில் ஓங்கிய - (அடியார்களுக்கு அபீஷ்டங்களைக்) கொடுத்தலிற் சிறந்த, வேங்கடம் மாயவன் - திருவேங்கடமுடையான், குடி கொள் - வசித்தலைக் கொண்ட, வைகுந்தம் - ஸ்ரீவைகுண்டலோகம், கூப்பிடு தூரமே - கூப்பிட்ட சத்தங் கேட்குமவ்வளவு தூரமேயாம்; (எ - று.)

மெய்யடியார்களுக்குப் பகவத்ஸந்நிதானமும் பரமபதமும் எளிதிற் கிடைப்பனவா மென்பது, கருத்து. திருவாழ் பகைவர்களை அழிக்குமிடத்து ஆயுதகோடியிலேயாய் அடியார்களை உகப்பிக்குமிடத்து ஆபரணகோடியிலேயாய் விளங்குமாதலால், 'ஆழியம்படை' எனப்பட்டது. காலம் - காலை என ஈறுதிரிந்தது. கொடை - தொழிற்பெயர்: ஐ - விகுதி. உரைப்பீர் - விளி; முன்னிலைப் பன்மை முற்றாகவுங் கொண்டு உரைக்கலாம்.

இது-கட்டளைக்கலிப்பா; இலக்கணம், ௩௯-ஆங்கவியிற்கூறப்பட்டது. (௫௯)

[பாண்.]

௬௦. தூரச்சுரங்கள்பலசேர்க்குந்துணைநீயறிவாயெனவிருந்தேன்
வீரத்திருவேங்கடத்தானைவேற்றுமடவாரொடுசேர்த்தா
யீரக்கடல்சூழுலகிலுனக்கிணையார்பாணவிமிழிசைக்கோ
லாரப்பெருஞ்சீர்வீணைவிடுத்தகன்றிவ்வீணையடுத்தாயே.

(இ - ள்.) பாண - பாடல் பாடும் பாணசாதியனே!— நீ—, தூரம் சுரங்கள் பல சேர்க்கும் துணை - (ஒன்றோடொன்று) தூரமான அநேக ஸ்வரங்களைக் கூட்டி இசைபாடு மவ்வளவையே, அறிவாய் என - அறிந்தவனாவாயென்று, இருந்தேன்-(யான்) எண்ணியிருந்தேன்; (அதுமாத்திரமன்றி, நீ), வீரம் திருவேங்கடத்தானை-பராக்கிரமமுடைய திருவேங்கடமுடையானை, வேறு மடவாரொடு சேர்த்தாய் - (என்னை யொழிய, வேறு மகளிருடனே கூட்டினாய்; (ஆதலால் . ஈரம் கடல் சூழ் உலகில் - குளிர்ந்த கடல் சூழ்ந்த இப்பூமியில், உனக்கு இணை ஆர் - (கூட்டும் விஷயத்தில்) உனக்குச் சமானமானவர் எவர்? [எவரும் இலரென்றபடி]; இமிழ் - இனிமையாக ஒலிக்கின்ற, இசை - ஸ்வரங்களையுடைய, கோல் - நரம்புகள், ஆர் - அமைந்த, அ - அத்தன்மையதான, பெருஞ் சீர் - மிகுந்த சிறப்பையுடைய, வீணை - வீணையை, விடுத்து அகன்று-விட்டு விலகி, (நீ), இ வீணை அடுத்தாய் - இந்த வீணையைச் சேர்ந்தாய் [இந்தப் பயனில்தொழிலைப் பொருந்தினாய்]; (எ-று)

பரத்தையரைப் புணர்தற் பொருட்டுத் தலைமகளைப் பிரிந்து சென்ற தலைமகனால் தலைமகளது கருத்தை அறிந்து அவளைச் சமாதானப்படுத்தி அவளிடந் தான் வரும்படி பேசிவருமாறு அனுப்பப்பட்ட பாணனுக்குத் தலைவி வெகுண்டு கூறியது; 'பாணனொடுவெகுளுதல்' என்னுந் துறை.

வீரமாவது - பொருது பகைவர்களை வெல்லுந் திறம். வேற்று மடவார் - பரஸ்திரீகள்; அல்வழியில் நெடிற்றொடர் றகரவொற்று இரட்டிற்று: வேறாகிய மடவார் என்று விரியும். வேறு-ஐம்பான் மூவிடத்துக்கும் பொதுவாதலால், மடவார் என்னும் பலர்பாற்பெயரை விசேடித்தது. வீணை யென்பன இரண்டனுள், பின்னது-வீண் என்பதன் இரண்டாம்வேற்றுமை.

இது - ஆறுங் கவிபோன்ற அறுசீராசிரியவிருத்தம். (௬௦)

[தழை.]

௬௧. அடுத்தாரை வாழ்விக்கு மால்வட வேங்கடமன்னமன்னே, கொடுத்தாய் நறுந்தழை யான்கொண்டு போந்து கொடுத்தவுட, னெடுத்தாள்விழியொற்றிக்கொண்டாள் கைப்போதினூடீர்ந்தழை மேற், படுத்தா ணிற்கும்பொழு தோர்கொம்பு போன்றனள் பான் மொழியே.

(இ - ள்.) அடுத்தாரை - (தன்னைச்) சரணமடைந்தவர்களை, வாழ் விக்கும் - எல்லாவாழ்க்கைகளையும் அடையச் செய்கின்ற, மால் - திருமா லினது, வட வேங்கடம்-வடக்கிலுள்ள திருவேங்கடமலையை, அன்ன-ஒத்த, [எல்லாவளங்களையு முடைய], மன்னே-தலைவனே!—(நீ), நறு தழை கொடு த்தாய் - நல்ல தழையை (என்னிடம்) கொடுத்தாயன்றோ? (அதனை),யான் கொண்டு போந்து கொடுத்த உடன் - நான் எடுத்துக்கொண்டு போய்க் கொடுத்தவுடனே,—நிற்கும் பொழுது ஓர் கொம்பு போன்றனள் பால் மொ ழி - நிற்கும்பொழுது ஒரு பூங்கொம்பு நிற்பதை ஒத்தவளும் பால்போல இனியசொல்லை யுடையவளு மாகிய தலைவி, எடுத்தாள் - (அத்தழையைக் கையில்) எடுத்து, விழி ஒற்றிக்கொண்டாள் - கண்களிலே வைத்து ஒற்றிக் கொண்டு உபசரித்தாள்; கை போதினூடு-கையிற்கொண்டுள்ள (லீலார்த்த மான) மலருடனே, ஈர் தழை மேல் படுத்தாள் - குளிர்ந்த அந்தத்தழை யின்மேலே படுத்துக்கொண்டாள்; (எ - று.)

இது, தலைமகன் 'இத்தழையை வாங்கிக்கொண்டு என்குறையை முடித் தருளுவீராம்' என்று வேண்டிக் கையுறையாகக் கொணர்ந்து கொடுத்த தழையை அருமையாக ஏற்றுக்கொண்ட தோழி, தலைமகளிடஞ் சென்று அவள் குறிப்பறிந்து தழையை வியந்து உரைத்து அதனை அவள் ஏற்றுக் கொள்ளும்படி செய்து, பின்பு தலைமகனிடம் மீண்டு வந்து அத்தழையினி டத்து உண்டான தலைமகளது விருப்பத்தைக் கூறுகிற்றல்; 'தழைவிருப் புரைத்தல்' என்னுந் துறை.

"அளக்கலாகா அளவும் பொருளுந், துளக்கலாகா நிலையுந் தோற்ற மும், வறப்பினும் வளந்தரும் வண்மையும்" முதலிய காரணங்களால், 'வட வேங்கடமன்ன' எனத் தலைமகனுக்கு மலையை உவமித்ததாகவுங் கொள்ள லாம். 'அடுத்தாரை வாழ்விக்கும்' என்பதை வேங்கடத்துக்கு விசேஷண மாக்கி, அதனை ஒத்து அடுத்தவர்களை வாழ்விக்கின்ற தலைவனே யென்று மாம். 'எடுத்தாள் விழியொற்றிக்கொண்டா ளீர்ந்தழைமேற் படுத்தாள்' என்றதனால், அத்தழையையே தலைமகனாகப் பாவித்து அநுபவித்த திறத் தைக் கூறினாள். 'கைப்போதினூ டீர்ந்தழை மேற்படுத்தாள்' என்பதற்கு- தனது கைகளாகிய தாமரைமலர்களினால் அக் குளிர்ந்த தழையைத் தன் உடம்பு முழுவதிலும் படும்படி உடம்பில் தடவிக்கொண்டாள் என்றும் பொருள் உரைக்கலாம்; திருக்கோவையாரில் இத்துறையை உணர்த்துஞ் செய்யுளில் "பெயர்ந்தனைத்துப், பூசிற்றிலளன்றிச் செய்யாதனவில்லை பூந் தழையே"என்றதற்கு உரையாசிரியர் 'இவை வாடுமென்று கருதாது அரை த்துப் பூசினாற்போலத் தன்மேனிமுழுதும் படுத்தா ளென்றவாறு' எனக் கருத்து உரைத்திருத்தல் காண்க. ஈர்ந்தழை-அல்வழியில் இனமெலிமிக்கது; ஈரமாகிய தழை என விரியும் பான்மொழி - உவமைத்தொகையன்மொழி.

இது - நிரையசைமுதற் கட்டளைக்கலித்துறை. (௬௧)

௬௨. மொழியமு திதழ்தீங்கனி முலையிளநீர் முகமதியாக் தஞ் சகமதியயனுன், விழிவிடமனங்கல்லாகவேவிதித்தான்விருத்தமாவு லகைவருத்தவேயலவோ,வழிவழியடிமையெமைக்கொளுமலர்மேன்

மங்கைதன்கணவன்செங்கணெம்பெருமான், றெழிபுனலருவிமழை யெனமுழங்குந் திருமலைமீதேவருமடமாதே.

(இ - ள்.) எமை - எங்களை, வழி வழி - பரம்பரையாக, அடிமை கொளும் - ஆட்கொண்டருளுகின்ற, அலர் மேல் மங்கைதன் கணவன் - அலர் மேல்மங்கைப் பிராட்டியினது கொழுநனும், செம் கண் எம்பெருமான் - சிவந்த திருக்கண்களையுடைய எமது சுவாமியு மாகிய ஸ்ரீநிவாசனது, தெழி புனல் அருவி மழை என முழங்கும் திருமலைமீதே - இரைந்துகொண்டு வருகின்ற நீரருவி மேகம்போல ஒலிக்கப்பெற்ற திருவேங்கடமலையின்மேலே, வரும் - வந்த, மட மாதே - இளமகளே !—(உனது), மொழி - சொல்லை, அமுது - (மிக இனிய) தேவாமிருதமாகவும், இதழ் - அதரத்தை, தீம் கனி - இனிய கொவ்வைப்பழமாகவும், முலை - தனங்களை, இளநீர் - செவ்விளநீராகவும், முகம் - முகத்தை, மதி - சந்திரனாகவும், ஆக்கும் - படைத்த, சகம் மதி அயன் - உலகத்தார்யாவராலுங் கொண்டாடப்படுகின்ற பிரமதேவன், விருத்தம் ஆ - (கீழ்க் கூறப்பட்ட அவ்வினிய பொருள்களுக்கு) ஒவ்வாதனவாக, உன் - உனது, விழி - கண்களை, விடம் - விஷமாகவும், மனம் - மனத்தை, கல் ஆகவே - கல்லே யாகவும், விதித்தான் - படைத்தான்; (அவன் அங்ஙனம் படைத்தது), உலகை வருத்தவே அலவோ - உலகத்தாரை வருத்தும் பொருட்டே யன்றோ ? (எ - று.)

இது - தலைவியைநோக்கித் தலைவன் தனதுகாதலைப்புலப்படுத்திக் கூறியது.

இளநீர் - தெங்கின் இளங்காய். அலவோ - தேற்றம்; 'அன்றோ' என்பது போல. "எந்தைதந்தைதந்தைதந்தைதம்மூத்தப்பனேழ்படிகால்தொடங்கி, வந்து வழிவழியாட்செய்கின்றோம்" என்னும் பெரியாழ்வார் பாசுரத்திற் கேற்ப, 'வழிவழி யடிமையெமைக்கொளும்' என்றார். விருத்தமா - (உலகத் திலுள்ள ஆடவர்களுக்குப்) பகையாக வென்றுமாம்.

இது - ஒற்றைப்பட்ட சீர்கள் விளச்சீர்களும், இரட்டைப்பட்ட சீர்கள் மாச்சீர்களு மாகிய எண்சீராசிரியவிருத்தம். (கூஉ)

கூங மாதவத்தோர் சிந்தையுமா மாமறையி னுச்சியுமாங்
கோதகற்று வேங்கடப்பொற் குன்றமுமாஞ்—சீதமலர்
எட்டக் கரத்தா னிடந்திகழ்சங் கோன்குருந்தை
எட்டக் கரத்தா னிடம்.

(இ - ள்.) சீதம் மலர் எட்டு அக்கரத்தான் - குளிர்ச்சி மிகுந்த திரு வஷ்டாக்ஷர மகாமந்திரத்தையுடையவனும், இடம் திகழ் சங்கோன் - இடத் திருக்கையில் விளங்குகின்ற சங்கத்தை யுடையவனும், குருந்தை எட்டு அ கரத்தான் - குருந்தமரத்தை எட்டின அழகிய திருக்கையை யுடையவனு மாகிய எம்பிரானது, இடம் - (திருவுள்ளமுகந்து எழுந்தருளி யிருக்கும்) ஸ்தானம்,—மா தவத்தோர் சிந்தையும் ஆம் - சிறந்த தவத்தையுடைய முனிவர்களது இருதயகமலமுமாம்; மா மறையின் உச்சியும் ஆம் - சிறந்த வேதங்களின் அந்தமான உபநிஷத்துக்களுமாம்; கோது அகற்று வேங்கடம் பொன் குன்றமும் ஆம் - குற்றத்தை ஒழித்த திருவேங்கட மென்னும் அழகிய திருமலையுமாம்; (எ - று.)

உம்மைகள் மூன்றனுள், முன்னது - எதிரதுதழுவியஎச்சமும், பின்னது - இறந்தது தழுவிய எச்சமும், இடையது - இருவகை யெச்சமுமாம்; எல்லாவற்றையும் எண்ணும்மையாகக் கொள்ளலாகாது: தனித்தனி வாக்கியங்களில் நிற்றலால். வேதாந்தத்திற் பரதத்துவம் பிரதிபாதிக்கப்படுதலால், 'மாமறையி னுச்சியுமாம்' என்றது. அகற்று - அகல் என்பதன் பிறவினை; வினைத் தொகை. பொற் குன்றம் - பொன் நிறைந்த குன்றமுமாம். சீதம் -

உச்சரித்தற்கும், கேட்டற்கும் இனிமை. மலர் - வினைத்தொகை. அக்கரம்-வடசொற்றிரிபு. இடம் - கைக்கு ஆகுபெயர். குருந்தைக் கரத்தால் எட்டியது. குளத்தி லிறங்கி நீராடிக் கொண்டிருந்த இடைப்பெண்களது துகில்களை ஒருநாள்கண்ணன் விளையாட்டாகக்கவர்ந்துகொண்டுபோய்ஒளித்தற் பொருட்டுக் குருந்தமரத்தில் ஏறிய பொழுதி லென்க; "குருந்திடைக் கூறை பணியாய்" என்றதுங் காண்க. இனி, சீதம் மலர் எட்டக்கரத்தான்-குளிர்ந்த அஷ்டதள கமல மலரிற் பீஜாக்ஷரமெழுதப்படுகின்ற அஷ்டாக்ஷர மந்திரத்துக்கு உரியவ னென்றுமாம். பின்னிரண்டடியில் யமகம்.

மலரென்னும் வாய்பாட்டால் முடிந்த இருவிகற்ப நேரிசைவெண்பா.

[இடைச்சியார்.]

௯௪. இடங்கொண்டவடமலைவாழ் பெருமானைவளர்த்தகுலத்
தேந்திழாய்மோர்க்,கடங்கொண்டுதிரியிடைச்சியல்லைநீசிற்றிடைச்சி
கண்டாய்சும்மாக்,குடங்கொண்டுதிரிவையிப்பால்வாராயங்கன்றினை
க்கைகொடுகட்டாயா, றிடங்கொண்டுதிரியாமன்மயங்குறுமென்பசு
வருத்தஞ்சிந்தியாயே.

(இ - ள்.) வட மலை - வடவேங்கடமலையை, இடம் கொண்டு - (தகுந்த) ஸ்தானமாக (த் திருவுள்ளத்திலே) கொண்டு, வாழ் - (அங்கு)எழுந்தருளியிருக்கின்ற, பெருமானை - கண்ணபிரானை, வளர்த்த—, குலத்து - (இடையரது) குலத்தில் தோன்றிய, ஏந்து இழாய் - அணிந்த பலஆபரணங்களையுடைய மங்கையே!—நீ—, மோர் கடம் கொண்டு திரி இடைச்சி அல்லை - தயிர்ப் பானையை எடுத்துக்கொண்டு (விற்பதற்கு) அலைகின்ற [முதிய] இடைச்சி யல்லள் [மோர்ப்பானையைச் சுமந்து திரிவதற்கு ஏற்ற வலிய இடையை யுடையவ ளல்லள்]; சிறு இடைச்சி கண்டாய் - இளைய இடைச்சியே யாவாய் [மெல்லிய இடையை யுடையவ ளாவாய்]; சும்மா குடம் கொண்டு திரிவை - (தயிர் பால் முதலியன) ஒன்றையும் விற்காமல் குடத்தைச் சுமந்துகொண்டு திரிவாய் [குடங்கள் போன்ற தனங்களை (நீ) கொண்டு (பயன்படுத்தாமல்) வீணாய் உலாவுவாய்]; இ பால் வாராய் - இந்தப் பாலை வார்க்கமாட்டாய்[இங்கே வருவாயாக];அம் கன்றினை கைகொடு கட்டாய்-அழகிய கன்றைக் கையாற் பிடித்துக் கட்டமாட்டாய்[(கன்று இனை எனப் பிரிக்க.) அழகிய வளையல்கள் ஒலித்தலையுடைய கைகளால்(என்னை) ஆலிங்கனஞ் செய்வாயாக]; திடம் கொண்டு திரியாமல் மயங்குறும் மென் பசு வருத்தம் சிந்தியாய - வலிமைபெற்று நன்றாகச்சஞ்சரியாமல் மயங்குகின்ற மென்மையான பசுவினது வருத்தத்தை நினைக்கவும்மாட்டாய் [என்பசு எனப்பிரிக்க.) மனவுறுதியைக்கொண்டு (பலவிஷயங்களிலுஞ்) செல்லாமல் காமமயக்கம் மிக்க எனது உயிரினது வருத்தத்தைக் கருதுவாயாக]; (எ-று.)

தெருவிலே செல்லுகின்ற இடைச்சியொருத்தியை நோக்கிக் காதல் கொண்டானொருவன் தனதுவேட்கையைவெளிப்படுத்தி அவளை முன்னிலைப்படுத்துச் சொன்னதாகச் செய்யுள் செய்வது, இடைச்சியார் என்னும் உறுப்பின் இலக்கணமாம்.

இரண்டாம் அடி முதற் சிலேடையணி. 'இடங் கொண்ட' என்னும் பாடத்துக்கு - விசாலமான இடத்தைக் கொண்ட வடமலை யென்க. வசுதேவகுமாரனாய்த்தேவகியின் திருவயிற்றில்திருவவதரித்தகிருஷ்ணபகவானை வளர்த்தவர்கள் திருவாய்ப்பாடியிலுள்ள நந்தகோபரும் யசோதையு மாதலால், 'பெருமானை வளர்த்த குலம்' எனப்பட்டது. ஏந்திழாய் - ஏந்திழை யென்னும் பண்புத்தொகை யன்மொழியின் ஈறு திரிந்த விளி. இழை - ஆடையுமாம். இடைச்சி - இடைய னென்பதன் பெண்பால். இச்சொல்

வில், இரண்டு பொருளிலும், ச் - பெயரிடைநிலை. கண்டாய் - தேற்றம்; முன்னிலை யசையுமாம். சும்மா - இடைச்சொல்; பயனின்மைப் பொருளுணர்த்தும்: 'வாளா' என்பதும் இவ்வாறே வாராய் முதலிய மூன்று முற்றுக்களும் - உடன்பாட்டுக்கும் எதிர்மறைக்கும் பொது; "செய்யா யென்னு முன்னிலை வினைச்சொல், செய்யென் கிளவி யாகிட னுடைத்தே" என்னுந் தொல்காப்பியச்சூத்திரம் நோக்கி உய்த்துணர்க. கன்று - இளமைப் பெயர். இது கைவளையென்னும் பொருளது மாதலை "ஆன்கன் றினமுஞ் சிறுமையுங் கையின், வளையு மிளையமா முங் கன்றே" என்னும் பிங்கலந்தையினாலும் அறிக. இனை - முதனிலைத் தொழிற்பெயர். இனைத்தல் - ஒலித்தல். இனைக்கை - இரண்டனுருபும் பயனுந் தொக்க தொகை. "பசுஎறுசிலருவாம்" என்பதனால், பசு வென்பதும் பலபொரு ளொருசொல்லாம். பசுவருத்தஞ் சிந்தியாய் - பசுவினது வருத்தத்தை ஒழிக்கமாட்டாய் [பசு அருத்தம் சிந்தியாய் - உயிரின் பயனாகிய உன்னைப்பெறும்விருப்பத்தைக் கருதுவாய்] என்றுமாம். அல்லை - முன்னிலை யொருமை யெதிர்மறைக் குறிப்புமுற்று. சும்மாத்திரிவை - வீணாக (என்மனக்கருத்தோடு) மாறுபடுவாய் எனவுமாம்.

இது - நன்காங்கவிபோன்ற அறுசீராசிரியவிருத்தம். (கூச)

கூரு. சிந்திப்பனவுந்துதிசெய்வனவுந்தெரிசிப்பனவுந்துரிசற்றிடவே
வந்திப்பனவும்பூசிப்பனவும்வாஞ்சிப்பனவும்யாஞ்செப்புவமா
றந்திக்கிமையோர்பந்திக்களையின்றாழிக்கருள்கூராழிக்கடவுள்
கந்தித்தெழுபூவுந்தித்திருவேங்கடமால்சரணதடமாமலரே.

(இ - ள்.) சிந்திப்பனவும் - (யாவராலுந்) தியானிக்கப்படத்தக்கவையும், துதி செய்வனவும் - தோத்திரஞ் செய்யப்படத்தக்கவையும், தெரிசிப்பனவும் காணப்படத்தக்கவையும், துரிசு அற்றிடவே - குற்றங்கள் ஒழியும் பொருட்டாகவே, வந்திப்பனவும் - வணங்கப்படத் தக்கவையும், பூசிப்பனவும் - ஆராதிக்கப்படத் தக்கவையும், வாஞ்சிப்பனவும் - விரும்பப்படத்தக்கவையும், யாம் செப்புவம் - (இன்னவையென்று) நாம் சொல்லுவோம்; (எவையெனின்),—தந்திக்கு - கஜேந்திராழ்வானுக்கும், இமையோர் பந்திக்கு - தேவர்களது வரிசைக்கும், அளையின் தாழிக்கு - தயிர்ப் பானைக்கும், அருள் கூர் - கருணைசெய்த, ஆழி கடவுள் - சக்கரபாணியான பகவானும், கந்தித்து எழு பூ உந்தி திருவேங்கடம் மால் - வாசனை வீசி விளங்குகின்ற நாபீ கமலமலரையுடைய திருவேங்கடத்துத் திருமாலு மாகிய எம்பெருமானது, சரணம் தட மா மலரே - திருவடிகளாகிய பெரிய அழகிய தாமரை மலர்களேயாம்; (எ - று.)

தரிசி - தெரிசி என, மோனைப் பொருத்தம்நோக்கிய விகாரம். தந்தி - தந்தமுடையது; தந்தம் - மருப்பு. பந்தி - பங்தி என்னும் வடமொழியின் திரிபு அருள் கூர்தல் - பகையையொழித்து நன்மையையளித்தல். அளையின் தாழிக்கு அருள் கூர்ந்த கதை:— ஒருநாள் கண்ணன் யசோதை முலை கொடாததற்காக வெகுண்டு தயிர்த்தாழிகளை உடைத்து உருட்டிவிட்டு, அதுகண்டு தன்னை அடிக்கக் கோலெடுத்து வந்த அவளுக்கு அகப்படாதபடி ததிபாண்ட னென்னும் இடையனது மனையிலே மறைய, அவன் அப்பொழுது கிருஷ்ணனது திருவடித்தாமரைகளைப்பிடித்துக்கொண்டு 'எனக்கு முத்தியளிக்க வேண்டும்' என்ன, வாசுதேவன் 'தாய் என்னை அடிக்க வருகிறாள், எனது காலை விடு' என்று சொல்ல, அவ்வாயன் 'எனக்கும், எனக்கு வேண்டிய இருபத்தெட்டு மனையிலுள்ளோர்க்கும், எனது தயிர்த்தாழிக்கும் பரமபதங் கொடாயானால், யான் உன்காலை விடாமல் உன்னை யசோதைகையிற்காட்டிக்கொடுப்பேன்' என்று கூற, ஸ்ரீகிருஷ்ணன் உடனே அவன் வேண்டுகோளின்படியே முத்தியருளிச் சென்றனனென்பது.

எம்பெருமான் தனது நிர்ஹேதுக கருணையினாலே நற்கதி யளிக்கப் புக்கால் அவனுக்குத் தேவர்களோடு விலங்கோடு அசேதநத்தோடு வாசியில்லையென்பது விளங்க, 'தந்திக்கிமையோர்பந்திக்கலையின்தாழ்க்கருள்கூராழிக் கடவுள்' என்றார். அருள்கூர் ஆழிக்கடவுள் - கிருபை நிரம்பிய சமுத்திரமாகிய கடவுளுமாம். தடம் - தடாகத்திலே விளங்குகிற, மலர் எனினுமாம். இதில் வந்தஎழுத்துக்களே மீண்டும்வந்தது - ப்ராஸமென்னுஞ் சொல்லணி.

இது - நாற்பதாங் கவிபோன்ற எண்சீராசிரியவிருத்தம். (௬௮)

[நாரைவிடுதூது.]

௬௯. மாமலயத்தென்றலந்தேர்வருமாரன்கணையாகிவந்துநான்கு
பூமலைந்தென்னிறையொடுநாண்புத்திதுயில்கொண்டனவப்போர்வே
தேமலரையின்னம்விடாத்திறத்தாலிவ்வுடலிலுயிர் [ணீலத்
தாமதித்துநின்றதுபூந்தழைசிறையமடநாராய்
கோமுனைவேற்றுருபதன்றன்கொடிமானங்காத்தபிரான்
வேமணிகளுதிர்சாரல்வேங்கடத்துமாயனுட
னீமொழிந்துவாராயென்னிலையெல்லாந்தெரிந்துகொண்டே.

(இ - ள்.) பூ - அழகாகிய, தழை - தழைந்து செழித்துள்ள, சிறைய - இறகுகளை யுடைய, மடம் - இளமையான, நாராய் - நாரையே!—மா - பெரிய, மலயம் - பொதியமலையில் உண்டாகின்ற, தென்றல் - தென்றற் காற்றாகிய, அம் - அழகிய, தேர் - இரதத்திலே, வரு - (ஏறி) வருகின்ற, மாரன் - மன்மதனது, கணை ஆகி - அம்புகளாய், நான்கு பூ - (தாமரை அசோகு மா முல்லை என்னும்) நான்கு மலர்கள், வந்து - (என்னிடம்)வந்து (பாய்ந்து), மலைந்து-போரைச்செய்து, என் நிறையொடு நாண் புத்தி துயில் கொண்டன-எனது நிறையும் நாணமும் அறிவும் நித்திரையும் ஆகிய நான்கு பொருள்களையும் அபகரித்துப்போயின; அ போர் வேள் - அப்படிப்பட்ட யுத்தத்தையுடைய மன்மதன், நீலம் தேன் மலரை - (ஐந்தாவது பாணமாகிய) தேனினையுடைய நீலோற்பலமலரை, இன்னம் விடா திறத்தால் - இதுவரையிலும் (என்மேற்) பிரயோகியாத காரணத்தால், இ உடலில் உயிர் தாமதித்து நின்றது - இந்த உடம்பிலே உயிரானது தரித்து நின்றது; என் நிலை எல்லாம் - (இப்படிப்பட்ட) எனது நிலைமை முழுவதையும், நீ—, தெரிந்துகொண்டு - அறிந்துகொண்டு, (போய்), கோ முனை வேல் துருபதன் தன் கொடி மானம் காத்த பிரான் - வச்சிராயுதம்போன்ற கூர்நுனியையுடைய வேலாயுதத்தை ஏந்திய துருபதமகாராஜனது பூங்கொடிபோன்ற மகளாகிய திரௌபதியின் மானத்தை (அழியாதபடி) காத்தருளின பிரபுவாகிய, வே மணிகள் உதிர் சாரல் வேங்கடத்து மாயனுடன் - மூங்கில்களினின்று முத்துக்கள் சிந்துகின்ற பக்கங்களையுடைய திருவேங்கடமலையில் எழுந்தருளிய திருமாலுடனே, மொழிந்து - சொல்லிவிட்டு, வாராய் - வருவாயாக; (எ - று.)

இது - தலைமகள் நாரையைத் தலைமகனிடம் தூது விடுத்தது.

மாரன் - (காமநோயால் ஆடவரையும் மகளிரையும்) மரணவேதனைப் படுத்துபவன். நிறையாவது-இரகசியமான விஷயங்களைப் பிறர் அறியாதபடி மனத்திலே நிறுத்திவைத்தல்; "நிறையெனப்படுவது மறைபிறரறியாமை" என்றார் கலித்தொகையிலும். அதனை மன்மதனம்பு கொண்டதென்பது - தான் மனத்தில் அடக்கத்தக்கவற்றைக் காமமிகுதியால் அடக்கமாட்டாமல் வாய்விட்டுச் சொல்லி வெளியிடுதலை. நாணாவது - தனக்குத் தகாத காரியங்களில் உள்ளமொடுங்குதல். 'துகில்' என்னும் பாடத்திற்கு - ஆடையையும் அபகரித்த தென்க; கனிபெருவேட்கை யுற்ற மகளிர்க்குச் சேலை உடுத்த

படி நில்லாமல் ஒழியு மாதலின். "மாதே முழுநீலங், கொல்லுமதனம்பின் குணம்" என்றதனால், நீலமலர் மரணாவத்தையைச் செய்யும் பாணமென அறிக. பூஞ்சிறை - பண்புத்தொகை. சிறைய - சினையடியாப் பிறந்த குறிப்புப்பெயரெச்சம். "குலிசமுந் திக்குஞ் சலமுங் கோவே" என்பதனால், கோ - வச்சிரப்படையாம். இனி, கோ - அரசனாய், துருபதனுக்கு அடைமொழியாகவுமாம். காத்தற்றொழிலன்றிஅழித்தற்றொழில் பூண்ட முக்கட்கடவுட்குச் சூலவேல் படையாதலாலும், முருகற்கு வேல் படையாதலாலும், சான்றோர் வேற்படையையே சிறப்பப் பெரும்பான்மை கூறலாலும், வேலைக்கூறி, ஏனைப்படைகளை யெல்லாம் 'மொழிந்தபொருளோ டொன்ற அவ்வயின் மொழியாததனையும் முட்டின்றுமுடித்தல்' என்னும் உத்தியாற்பெற வைத்தார். இங்கே 'துருபதன்தன்கொடி மானங்காத்த பிரான்' என்றது-தனது அடியார்களின் மனைவியான பாஞ்சாலிக்குத் துகிலை ஒழியாதுஅளித்தருளி அவளது மானத்தைக் காத்த அவனுக்கு, மனைவியான எனக்குத் துகிலை ஒழியாது அளித்தருளி எனதுமானத்தைக் காத்தல் கடமையன்றோ? என்னுங் கருத்தைப் புலப்படுத்தற்கு; "தானையைவர்கொடிக்களித்தவர் தானைகொண்டதளிக்கிலார்" எனத் திருவரங்கக்கலம்பகத்துவருவதுங் காண்க. "கழைகன்னலாவின்பல் கட்செவி கா, ரிந்துவுடும்புகராமுத்தமீனும்" என்றதனால், மூங்கிலினின்றும் முத்துப்பிறத்தலை அறிக. நிறை - தொழிற்பெயர்; ஐ - விகுதி. நாண் - முதனிலைத் தொழிற்பெயர்.

இது - ஏழடியாய், முதலிரண்டடியும் முதல் நான்கு சீருங் காய்ச்சீர்களும் மற்றிரண்டுந் தேமாச்சீர்களுமாய் வந்த கழிநெடிலடிகளாய், மற்றை ஐந்து அடியும் நாற்சீருங் காய்ச்சீராகிய அளவடிகளாய், முன்னிரண்டடி ஓரோசையாய்ப் பின்னடிகள் வேறோசையாகி வந்த வேற்றொலிவெண்டுறை. (கூக)

கூஎ. கொண்டற்றிரள் குழனிரையொடும்
வண்டளவின மணிநகையொடுங்
கமழ்தோன்றிகள் கைத்துணையொடு
மிமிழ்வண்டின மிணைநோக்கொடுந்
தழைசிறைமயில் சாயலினொடு
மெழுகோபநல் லிலவிதழொடு
மிகல்பான்மையி னிவையாவையு
மகிழ்வாயிவண் மால்வேதனை
காணியநனி கணங்கொண்டன
தானுவையடு சரமாரனு
மெதிர்வந்தன னெய்வானினி
வெதிரைப்பொரு மென்றோட்கொடி
படுவெம்படர் பார்க்கிலமெனச்
சுடுவெங்கதிர் சொரிஞாயிறு
நகையெழுமுக நாண்மதியொடு
பகையாகிய பனிமதியமும்
வருவானக மறைவுற்றன
வெருவாமணி விடவரவமும்
வன்னச்சுடர் மணிகான்றிடக்
கன்னிப்பிடி கடமாவினைத்
தழுவுறவடு தாள்வள்ளுகி

ருழுவைக்கண முழையிற்புக
வொழியாதெழு முருமதிர்தரு
மழைநாளிது மடவஞ்சியர்
நாதற்பிரி நாளன்றுயர்
காதற்புரி கலையைப்பிரி
பிணைபோன்றனள் பெருமதர்விழி
யிணைதூம்புன லிலகியநறுங்
குங்குமமுலைக் குவடிழிதர
விங்கொருதனி யிக்கோற்றொடி
மனமுருகுபு மயலான்மிக
விணைகின்றன ளிந்நீர்மையை
வனநறுமலர் மழைதூய்மணி
யினமுடிபுனை யிமையோர்தொழு
மெல்லடியலர் மேன்மங்கைநல்
வல்லியையணை வன்றோட்பணை
யொருகற்பக முறைதருமொரு
திருவேங்கடத் திண்கிரியினில்
விறல்கெழுமுனை வேன்மன்னரு
மறிகிலரவர்க் கார்சொல்குநர்
மடவீ
ரீங்கிதற் கென்செய்து மியம்பீ
ராங்கவர் பொருணசை யகல்குந ரலரே.

(இ - ள்.) மடவீர் - இளமங்கையரே!—கொண்டல் திரள் - நீர்கொண்ட காளமேகங்களின் கூட்டம், குழல் நிரையொடும் - (இவளது) தலைமயிர்த் தொகுதியோடும், வள் தளவு இனம் - அழகாகிய முல்லையரும்புகளின் ஒழுங்கு, மணி நகையொடும் - (இவளது) முத்துப்போன்ற பற்களோடும், கமழ் தோன்றிகள் - வாசனை வீசுகின்ற தோன்றிமலர்கள், கை துணையொடும் - (இவளது) இரண்டு கைகளோடும், இமிழ் வண்டு இனம் - ஒலிக்கின்றவண்டுகளின்கூட்டம், இணைநோக்கொடும்-(இவளது)இரண்டுகண்களோடும், தழை சிறை மயில்-தழைந்துவளர்ந்தசிறகுகளையுடைய மயில்கள், சாயலினொடும்-(இவளது) சாயலோடும், எழு கோபம்-விளங்குகின்ற பட்டுப்பூச்சிகள், நல் இலவு இதழொடும் - நல்ல [அழகிய] இலவம்பூப் போன்ற (இவளது) அதரத்தோடும், இகல் பான்மையின் - பகைமை கொண்டுள்ள தன்மையால்,—இவை யாவையும் - இந்தக் கொண்டல் முதலிய பொருள்களெல்லாம், இவள் மால் வேதனை காணிய - இவளது மிகுந்த வருத்தத்தைப் பார்க்கும் பொருட்டு, மகிழ்வு ஆய் - மகிழ்ச்சியை யுடையனவாகி, நனி கணம் கொண்டன - நன்றாகக் கூட்டங்கொண்டு வந்து சூழ்ந்தன; தாணுவை அடு சரம் மாரனும் - பரமசிவனையும்வருத்தத்தொடங்கிய அம்புகளையுடைய மன்மதனும், எய்வான் - (இவள்மேற்) பாணப்பிரயோகஞ் செய்யும்பொருட்டு, எதிர் வந்தனன் - எதிரிலே வந்து சேர்ந்தான்; 'இனி-இனிமேல், வெதிரை பொரும் மெல் தோள் கொடி-இளமூங்கிலை ஒக்கின்ற மெல்லிய தோள்களையுடைய வல்லிபோன்ற இத்தலைவி, படு - அனுபவிக்கின்ற, வெம் படர் - கொடுந்துன்பத்தை, பார்க்கிலம் - பார்த்துச் சகிக்கமாட்டோம்', என - என்று கருதி,—சுடு வெம் கதிர் சொரி ஞாயிறும் - எரிக்கின்ற உஷ்ணகிரணங்களைப் பொழிகின்ற சூரியனும், நகை எழு முகம் நாள்

மதியொடு பகைஆகிய பனி மதியமும் - ஒளி விளங்குகின்ற (இவளது) முகமாகிய நாள்நிறைந்த பூர்ணசந்திரனுடன் பகைத்துத் தோற்ற குளிர்ந்தசந்திரனும், வரு வான் அகம் - பொருந்திய ஆகாயத்தினிடத்தே, மறைவு உற்றன - (மேகபடலங்களால்) மறைதலை யடைந்தன; வெருவா - (எதற்கும்) பயப்படாத, மணி விடம் அரவமும் - கரிய விஷத்தையுடைய நாகங்களும், வன்னம் சுடர் மணி கான்றிட - (ஓசையைக் கேட்டுப் பயந்து) செந்நிறத்தையும் ஒளியையுமுடைய மாணிக்கங்களைக் கக்கும்படியாகவும்,—கன்னி பிடி-இளமையான பெண்யானைகள், கடம் மாவினை தழுவுற - (திடுக்கிட்டு) மதத்தையுடைய ஆண்யானைகளை ஆலிங்கனஞ் செய்யும்படியாகவும்,—அடு-(பிராணிகளைக்) கொல்லவல்ல, தாள் - முயற்சியையும், வள் உகிர் - கூர்மையான நகங்களையு முடைய, உழுவை கணம் - புலிகளின் கூட்டம், முழையில் புக - (அஞ்சிக்) குகைகளினுள்ளே செல்லும்படியாகவும்,—ஒழியாது - இடைவிடாமல், எழும் உரும் அதிர்தரு - (மேகங்களில்) உண்டாகின்ற இடிகள் முழங்குகின்ற, மழை நாள்-வர்ஷாகாலமாகும், இது-இக்காலம்; மடம் வஞ்சியர் நாதன் பிரி நாள் அன்று - இளமையான வஞ்சிக்கொடிபோன்ற மகளிர் தத்தங்கணவரைப் பிரிந்து வாழத்தக்க காலமன்று; இ கோல் தொடி-அழகாகிய கைவளைகளையுடைய இம்மகள், உயர் காதல் புரி கலையை பிரி பிணைபோன்றனள்-மிகுந்த விருப்பத்தைச் செய்கின்ற ஆண்மானைப் பிரிந்த பெண்மான்போன்றவளாய், பெரு மதர் விழி இணை தாம் புனல்-பெரியகளித்த (தன்) கண்களிரண்டும் சொரிகின்ற சோகநீர், இலகிய நறு குங்குமம் முலை குவடு இழிதர - விளங்குகின்ற நல்வாசனைவீசுகிற குங்குமப்பூக்குழம்பை யணிந்த மலைச்சிகரம் போன்ற தனங்களிலே பெருகாநிற்க, இங்கு - இவ்விடத்தில் [இப்பொழுது], ஒரு தனி - (ஒருதுணையுமில்லாமல்) தன்னந்தனியாய், மயலால் - காமமயக்கத்தால், மனம் உருகுபு - நெஞ்சங் கரைந்து, மிக இனைகின்றனள்-மிகவும் வருந்துகின்றாள்; இ நீர்மையை - இந்தத் தன்மையை, மணி இனம் முடி புனை இமையோர்-இரத்தினங்களின் தொகுதியைப் பதித்துச்செய்த கிரீடங்களை யணிந்த தேவர்கள், வனம் நறு மலர் மழை தூய் - கற்பகச்சோலையிலுள்ள நல்லபூக்களை மழைபோலச் சொரிந்து, தொழும் - வணங்குகின்ற, மெல் அடி - மென்மையான திருவடிகளையுடைய, அலர்மேல்மங்கை - அலர்மேன்மங்கைப் பிராட்டியாகிய, நல் வல்லியை - அழகிய காமவல்லியை, அணை - தழுவுகிற, வல் தோள் பணை-வலிய தோள்களாகிய கிளைகளையுடைய. ஒரு கற்பகம் - ஒப்பற்ற கல்பகவிருக்ஷம் போன்ற திருமால், உறைதரும் - எழுந்தருளியிருக்கும் இடமான, ஒரு திருவேங்கடம் திண் கிரியினில் - திருவேங்கடமென்பதொரு வலியமலையிலே உள்ள, விறல் கெழு முனை வேல் மன்னரும் - வெற்றி மிக்க கூர்நுனியையுடைய வேற்படையைக்கொண்ட (இவளைப் பிரிந்து சென்ற) தலைவரும், அறிகிலர் - அறிகின்றாரில்லை; அவர்க்கு - (அங்ஙனம் அறியாத) அத் தலைவருக்கு, ஆர் சொல்குநர் - யார் சொல்வார்? [எவரும் இலரென்றபடி]; ஈங்கு இதற்கு என் செய்தும் - இவ்வாறாக [இங்கே] உள்ள இத்தன்மைக்கு (நாம்) என்ன செய்வோம்? இயம்பீர்-சொல்லுங்கள்; ஆங்கு அவர் பொருள் நசை அகல்குநர் அலர்-தூரத்தே சென்ற அத்தலைவர் பொருள்சம்பாதிக்கும் ஆசையை (இன்னும்) ஒழிபவரல்லர்; (எ - று.)

கார்காலத்தில் மீண்டுவருவதாகக் காலங்குறித்துப் போன தலைமகன் அக்காலம்வரவுந் தான் வாரானாக, தலைவி அவ்விரகத்தாற் படுந் துயரைச் செவிலி தோழியர்க்குக் கூறி இரங்கியது.

கொண்டல் - கொள் என்பதனடியாப் பிறந்த பெயர் ; தொழிலாகு பெயர்போலும். தளவு, தோன்றி, இலவு - ஆகுபெயர்கள். வண்மை - செழிப்பும், மணி - அழகுமாம். நகை - நகுதற்குக் கருவியாயிருப்பது; நகுதல் -

பிரித்தல் : ஐ - கருவிப்பொருள்விகுதி. அணி யெனப் பிரித்தல், மோனைத் தொடைக்குப் பொருந்தாது. நோக்கு - பார்த்தற்குக் கருவியாயிருப்பது; கருவிப்பொருள் விகுதி புணர்ந்து கெட்ட பெயர். மால் - (காம) மயக்கத்தாலாகிய என்றுமாம். காணிய - செய்யிய வென்னும் வாய்பாட்டு எதிர்கால வினையெச்சம். மேகங்கள் மேலே பரவுதலும், முல்லையுந் தோன்றியும் மலர்தலும், வண்டுகள் அம்மலர்களை மொய்த்தற்குச் சூழ்தலும், மயில்கள் களித்துக் கூத்தாடுதலும், பட்டுப்பூச்சிகள் கீழே பரவுதலும், கார்காலத்து இயல்பு; இவற்றை, தமக்குத் தனித்தனி ஒவ்வொரு அவயவத்தாற் பகையாகிய தலைமகளது துயரத்தைப் பார்த்து மகிழ்தற்குத் திரண்டு தோன்றினவாகக் குறித்தாள். தாணு - ஸ்தாணு; (பிரளயகாலத்தும் அழிவில்லாமல்) நிலை நிற்பவன். மாரனும் என்ற உம்மை - எதற்கும் நிலையழியாத சிவபெருமானையும் வென்ற அவனது சிறப்பை உணர்த்துதலால், உயர்வுசிறப்பு. எய்வான் - வான்விகுதிபெற்ற எதிர்காலவினையெச்சம்; வினைமுற்றாகக் கொண்டு, எதிரிலே வந்தான் இனிமேல் எய்வான் எனினுமாம். மேகங்களினிடையிலே சூரியசந்திரர் இயல்பாக மறைதல், தலைவியினது துயரத்தைக் காணப்பொறாமல் மறைவதாக உத்ப்ரேக்ஷிக்கப்பட்டது; "பெண்பிறந்தாரெய்தும்பெருந்துயர்காண்கிலேனென், றொண்சுடரோன்வாராதொளித்தானிம்மண்ணளந்த, கண்பெரியசெவ்வாயெங்காரேறுவாரானு, லெண்பெரிய சிந்தைநோய்தீர்ப்பாராரென்னையே" என்றார் திருவாய்மொழியிலும். மதியம், அரவம்—அம்-சாரியை. இடியோசையைக் கேட்ட மாத்திரத்திற் பாம்புகள் அஞ்சி நடுங்கு மென்பது, மரபு; "விரிநிறநாகம் விடருளதேனு, முருமின் கடுஞ்சினஞ் சேணின்று முட்கும்" என்றார் நாலடியாரிலும். வெருவா - உடன்பாட்டு வினையெச்சமாய், வெருவிக் கான்றிட வென்று இயைத்தலுமாம். வன்னம் - வர்ணமென்னும் வடசொல்லின் சிதைவு. கான்றிட, கால் - பகுதி, இடு-துணைவினை. கன்னி - இளமை யென்னும் பண்பை உணர்த்தும் பொழுது, உரிச்சொல்; இளம்பெண்ணைக் குறிக்கும் பொழுது, கந்யா என்பது திரிந்த வடசொல். பிடி - பெண்பெயர்; "பிடியென் பெண்பெயர் யானைமேற்றே" என்றார் தொல்காப்பியனார். கடமா எனவே, யானை யாயிற்று,. முன்னே 'பிடி' என வந்ததனால், பின்னே 'கடமா' என்றது - ஆண்யானையாம். கடமா - காட்டுயானை யெனவுமாம்.

ஒரு புருஷன் பல பெண்களை மணஞ்செய்தலும் ஒருபெண் பல புருஷர்களை மணஞ்செய்யலாகாமையு மாகிய மரபு விளங்க, 'வஞ்சியர்' எனப் பன்மையும், 'நாதன்' என ஒருமையுமாகக் கூறப்பட்டது. பிணை - பெண்பெயர்; "புல்வாய் நவ்வி யுழையே கவரி, சொல்வாய் நாடிற் பிணை யெனப்படுமே" என்பதனால், இது, மானுக்கு உரியதாம். கலை - மானின் ஆண்பெயர். தீரவு மென்னுஞ் செய்யுமெனெச்சம், 'தாம்' என ஈற்றயலுயிர்மெய் கெட்டது. கோல் - கோல மென்பதன் கடைக்குறை. கோற்றொடி - பண்புத்தொகையன்மொழி. உருகுபு - இறந்தகாலவினையெச்சம்; பு - காலங்காட்டும் விகுதி. 'இது' என்பதை மத்திமதீபமாக 'மழைநாள்' என்பதற்கும், 'பிரிநாளன்று' என்பதற்கும், எழுவாயாக்குக. 'நீர்மையை' என்பது - 'அறிகிலர்' என்பதற்கும், 'சொல்குநர்' என்பதற்கும் செயப்படுபொருளாம். வனம் - அழகுமாம். தாய் - வினையெச்சம்; ய் - இறந்தகாலங் காட்டும் விகுதி. வல்லி, பிணை, கற்பகம் என்பன - உருவகம். கற்பகம்-கல்பகம்; (நினைப்பவர் நினைப்பவற்றை யெல்லாம்) கல்பித்துத்தருவது: கல்பித்தல் - உண்டாக்குதல். 'ஒருகற்பகம்' என்றதனால், வீட்டின்பமுந் தருஞ் சிறப்பையுடைய கற்பகமென்றவாறு. சொல்குநர், அகல்குநர், கு-சாரியை; ந் - பெயரிடைநிலை. ஈங்கு, ஆங்கு - சுட்டு நீண்டன. மடவீர் - மடவார் என்பதன் ஈற்றயல் திரிந்த விளி. தேவர்களை உயர்திணையாகவும்

அஃறிணையாகவுஞ் சொல்லலா மாதலால், 'மறைவுற்றன' எனப்பட்டது. ஈற்றேகாரம். - இரக்கம்.

இது-கனிச்சீர்களால் வந்த இருசீரடி நாற்பது கொண்டு, தனிச்சொற் பெற்று, அகவற்சுரிதகத்தால் முடிந்த குறளடிவஞ்சிப்பா; மடவீர் என்பது - தனிச்சொல்: ஈற்றிரண்டடி - நேரிசையாசிரியச்சுரிதகம். (கூஎ)

[இரங்கல்.]

கூஅ. அலர்வாய்த்தேனேபடர்படவே அலர்வாய்த்தேனேபடர்படவே
அகலும்பாணிவளையினமே அகலும்பாணிவளையினமே
சலமுற்றாவிக்குருகீரே சலமுற்றாவிக்குருகீரே
சாலக்கொடியாரம்மணலே சாலக்கொடியாரம்மணலே
சிலைமாறுஞ்சுவடமலையான் சிலைமாறுஞ்சுவடமலையான்
சீர்த்தண்டுளவன்மாவுரத்தான் சீர்த்தண்டுளவன்மாவுரத்தான்
மலைபூவரிக்கணம்பாறே மலைபூவரிக்கணம்பாறே
மாநச்சுறவேபாலனமே மாநச்சுறவேபாலனமே.

(இ - ள்.) அலர்வாய்-பூக்களினிடத்தே வந்து மொய்க்கின்ற, தேனே - தேனென்னும் வண்டே! படர் - (கடலிலே) செல்லுகிற, படவே-சிறுமரக் கலமே! (யான்), படர் பட - துன்பம் மிக, அலர் வாய்த்தேன் - பெரும்பழி உண்டாகப்பெற்றேன்;—அகலும் - பரவுகிற, பாணி - நீரிலேயுள்ள, வளை இனமே - சங்குகளின் கூட்டமே! வளை இனம் - வளையல்களின் வரிசை, பாணி - கைகளை விட்டு, அகலும் - நீங்கும்;—சலம் முற்று ஆவி குருகீரே - நீர்நிறைந்த தடாகங்களிலுள்ள நாரைகளே! ஆவிக்கு-(எனது) உயிருக்காக, (நீங்கள்), சலம் உற்று - கவலைப்பட்டு, உருகீர் - மனமிரங்குங்கள்;—சாலம் கொடி ஆர் அ மணலே - கூட்டமாகிய கொடிகள் பொருந்திய அந்த மணலே! அம் அணல் சால கொடியார் - அழகிய தலைவர் மிகவுங் கொடுந்தன்மையையுடையவர்;—சிலை - கற்களிலே, மால் - மேகங்கள், துஞ்சு - தங்குகின்ற, வட மலையான் - வடக்கிலுள்ள திருவேங்கடமலைக்குத் தலைவனும், சிலை - (சார்ங்க மென்னும்) வில்லையுடைய, மால்-திருமாலும், துஞ்சு வடம் அலையான் - தான் யோகநித்திரை செய்தற்கிடமான ஆலிலையையும் கடலையும் உடையவனும், சீர் தண் துளவன் - சிறப்பையுடைய குளிர்ந்த திருத்துழாய்மாலையை யுடையவனும், மா உரத்தான் - திருமகளைத் திருமார்பிலேயுடையவனும், சீர் தண்டு உளவன் - (தன்னைச் சரணமடைந்தவர்களது) வாழ்வுக்குக் காரணமான கதாயுதத்தை யுடையவனும், மா உரத்தான்-மிக்க வலிமையை யுடையவனுமாகிய எம்பெருமானது, மலை - மலையினிடத்தே, பூ- உண்டான, அரி கண்-அரிகளையுடைய இடத்தையுடைய, அம்பு ஆறே - நீர்மயமான நதியே! மலை பூ அரி கணம் பாறு - போர்செய்கின்ற (மன்மதனது) மலரம்புகளாகிய பகைவருக்கத்தைத் தவிர்ப்பாயாக; மாநம் சுறவே- பெருமையையுடைய சுறாமீனே! பால் அனமே-வெண்ணிறமான அன்னப் பறவையே! பால் அனம் - பாலின் சோறு, மா நஞ்சு உறவு - (எனக்குக்) கரிய விஷத்துக்குச் சமானமாயிருக்கிறது [மிகக் கைக்கின்ற தென்றபடி].

இது - நெய்தனிலத்துப் பிரிந்துறைகின்ற தலைமகள் ஆங்குள்ள பொருள்களை நோக்கித் தான் படும் வருத்தங் கூறி இரங்கியது.

இச்செய்யுளில் மூன்றுமடியொழிந்த மற்றையடிகளில் ஒவ்வொருபாதியிலும், முன்னது - நெய்தனிலத்துப் பொருள்களின் விளியும், பின்னது - தலைவியின் இரக்கமுமாம்; முன்னவற்றில் ஏகாரங்கள் - விளியுருபும், பின்னவற்றில் ஏகாரங்கள் - இரக்கமு மாதல் காண்க.

அலர்வாய், வாய் - ஏழனுருபு. தேன் - வண்டின் சாதிபேதங்களுள் ஒன்று ; "எங்குமோடி யிடறுஞ் சுரும்புகாள், வண்டுகாண் மகிழ்தேனினங் காண் மது, வுண்டுதேக்கிடுமொண்மிஞிறீட்டங்காள்" என்னுஞ் சிந்தாமணியிலும், "தூங்கிசைவண்டுந்தேனுஞ்சுரும்பொடுமிஞிறும்பாட" என்னும் நைடதத்தும் காண்க: இது, நல்ல மணத்தே செல்லும். படர் படவு - வினைத்தொகை. படர் - சிந்தாகுலம்; "அரும்படர்," "படர்மெலிந்திரங்கல்"என்னுமிடங்களிலும் காண்க. இரண்டாவது 'வளையினம்' என்பதில், இனம் - இன்னம் [இதுவரையில் மாத்திரமே யன்றி இனிமேலும்], கைவளை கழலுமென்றும் பொருள் கொள்ளலாம். சலம் - ஜலம். ஆவி - வாபீ என்னும் வடசொல்லின் சிதைவு. குருகீர் - குருகார்என்பது ஈற்றயல்திரிந்த விளி. உருகீர் என்னும் முன்னிலைப்பன்மைமுற்றுக்கு-எதிர்மறையாக, மனமுருகமாட்டீர்களே யென்றும் உரைக்கலாம். சாலம் - ஜாலம். அம்மணல் - நீர்நிலைக் கரையிலுள்ள வெண்மணற் குன்று. அம் + அணல் = அம்மணல்; தனிக்குறில் முன் ஒற்று உயிர்வர இரட்டிற்று. அணல்-அண்ணல்; விகாரம். 'சிலைமாறுஞ்சு' என்னும் விசேஷணம், வடமலையினது உயர்ச்சியை விளக்கிற்று. துஞ்சு வடமலையான் - வடத்திலும் அலையிலுந் துஞ்சுபவன். அலை-கடலுக்குச் சினையாகுபெயர்.

முதலில், 'சீர்த்தண்டுளவன்' என்பதை - சீர்த்து அண் துளவன் எனப் பிரித்து-சிறப்புப்பெற்று நெருங்கிய திருத்துழாய்மாலையையுடையவன் என்றும் உரைப்பர். துளவு - மாலைக்குக் கருவியாகுபெயர். சீர் தண்டு உள வல் மா உரத்தான் எனக்கொண்டு-சிறந்த தண்டாயுதத்தையுடைய வலிய மிக்க பராக்கிரமத்தை யுடையவன் என்றுமாம். பூ - வடசொல் ; வினைப்பகுதி: உண்டாதலென்று பொருள்; இனி, பெயர்ச்சொல்லாகக்கொண்டு - மலைப் பிரதேசத்தினிடத்தே யுள்ளஎனவுமாம். யமகப்பொருத்தநோக்கி, 'மலைப்பூ' என வலி மிகாதாயிற்று; இனி, பூ - தமிழ்மொழியாய், (மலையினிடத்தே உண்டான) அழகிய வெனினுமாம். அரி - நீரரி. 'மலைபூ' எனவே, மன்மத பாணமாயிற்று. இனி, மலைபூ அரிக்கணம் பாறே - மலையினிடத்தேயுள்ள அழகிய வண்டுகளின் கூட்டமே! பருந்துகளே! பூ மலை அரி கண் அம்பு ஆறே - செந்தாமரைமலரோடு போர்செய்கின்ற [ஒக்கின்ற] செவ்வரிகளையுடைய (எனது)கண்களினின்றும் பெருகுகின்ற நீர்ப்பெருக்கு நதியையே ஒக்கும் என்றும் பொருள் கூறுவர். சுறு - மகரமீன். பால் அனமே - (நீரினின்றும்) பாலைப்பிரித்து உண்ணுந்தன்மையை யுடைய அன்னப்புள்ளே! எனினும் அமையும். நச்சுறவு - மென்றொடர் வேற்றுமையில் வன்றொடராயிற்று. உறவு - இனம். அனம்-அந்நம். விரகிகளுக்கு இன்சுவையுணவும் வேண்டியிராதாதலால், 'நச்சுறவேபாலனம்'எனப்பட்டது. இனி,பாலனம் என்பதை - வடசொல்லொருமொழியாகக்கொண்டு, மிகுந்த நச்சுத்தன்மையையுடைய உறவினரோ எனக்குக்காவலாவர்? என்றலும் ஒன்று. விரகிகளுக்கு உடல்மெலிதலால் வளைமுதலியன கழன்றுவிழும்.

இஃது, அடிதோறுந் தனித்தனியேவந்த முற்றுமடக்கு.

இது - ௩ரு - ஆம்கவிபோன்ற பன்னிருசீராசிரியவிருத்தம். (சுஅ)

[இரங்கல்.]

கூகூ. அனமேல்வருமயனுருறையலர்நாபியினெடுமால்
வனமேமலர்நறைகால்வடமலைவாழ்களிமயில்காள்
புனமேவருமடவாரொடுபுரிவாலொருதமியேன்
மனமேகினதவர்போகினவழியேதுரைசெயுமே.

(இ - ள்.) அனம்மேல் வரும் - ஹம்ஸவாகனத்தின்மேல் ஏறிவருகின்ற, அயனார் - பிரமதேவர், உறை - தங்குகின்ற, அலர்நாபியின் - திருவுந்தித்

தாமரைமலரையுடைய, நெடு மால்-நீண்ட திருமாலினது, வனம் மே மலர் நறை கால் வடமலை-சோலைகளிலே பொருந்திய பூக்கள் தேனைச்சொரிகின்ற வடவேங்கடமலையிலே, வாழ் - மகிழ்ந்து வாழ்கின்ற,களி மயில்காள்-களிப்பையுடைய மயில்களே!—ஒரு தமியேன் மனம்-துணையில்லாமல் தனியனாகிய எனது மனமொன்று, புனமே வரு மடவாரொடு - தினைப்புனத்திலே வந்த மாதருடனே, புரிவால் - ஆசையினால், ஏகினது - சென்றுவிட்டது; (ஆதலால், யான் அம்மனத்தைத் தேடிப் பிடிக்கும்பொருட்டு), அவர் போகின வழி ஏது உரைசெயும் - அத்தலைவியார் போன வழி எது? சொல்லுங்கள்.

இது - தலைமகளைக் குறிஞ்சிநிலத்தில் மலைச்சாரலில் தினைப்புனத்திலே கண்ட தலைமகன்,பின்பு தலைவி அப்புனத்தைவிட்டு நீங்கினளாக,மயில்களை நோக்கி இரங்கிக்கூறியது.

விஷ்ணுவுக்குக் கருடனும், பிரமனுக்கு அன்னமும், உருத்திரனுக்கு ருஷபமும் வாகனமுங் கொடியு மாமென அறிக. அலர்நாபியின் - நாபியலரின் என மாறுக. இனி,வினைத்தொகையாய், விளங்குகிறநாபி யெனவுமாம். மேமலர் - வினைத்தொகை; மேவுமலர் என்பதன் விகாரம். மேவும் என்னுஞ் செய்யுமென் எச்சம், 'மேம்'என ஈற்றுமிசையுகரம் மெய்யொடுங்கெட்டது என்றுங் கொள்ளலாம். இனி, வனமே - சோலைகளிலேயெல்லாம், மலர் நறை கால்-பூக்கள் வாசனைவீசுகின்ற என்றுமாம். புனம் - கொல்லை. மடவார் - சிறப்புப்பன்மை. போகினது என்பதில் போகு - பகுதி என்றாயினும், போ - பகுதி, கு - சாரியை என்றாயினுங் கொள்க. உரைசெயும் - முன்னிலை யேவற்பன்மை முற்று.

இது - ஈற்றுச்சீரொன்று புளிமாச்சீரும்,மற்றமூன்றும் புளிமாங்கனிச்சீருமாகிய கலிச்சந்தவிருத்தம். (சுகூ)

[சிந்து.]

௭௦. உரையாலுமனத்தாலுமளக்கொணாதவோங்குபுகழ்வேங்கடவனுபயபாதமரையாசைச்சித்தரியாம்பலநாகத்தில்வலியவாகிய விரும்பைவருவித்தந்தக், கரையாதவிரும்பையெல்லாம்பணங்களென்னக்காண்பித்தோமவ்வளவோகரியதோலு, மரையாரத்தோலுடுத்தோனிடமுங்கைக்கொளச்சிலையுமாதங்கமாக்கினோமே.

(இ - ள்.) உரையாலும் - வாக்கினாலும், மனத்தாலும் - நெஞ்சினாலும், அளக்கொணாத - (சொல்லியும் எண்ணியும்) அளவிடமுடியாத, ஓங்கு புகழ்-(மேலுலகங்களினளவும்) உயர்ந்த கீர்த்தியையுடைய, வேங்கடவன் - திருவேங்கட முடையானது, உபய பாதம் மரை - இரண்டு திருவடித்தாமரை மலர்களினிடத்தே, ஆசை - விருப்பத்தையுடைய, சித்தர் - சித்தராவேம், யாம் - நாங்கள்;—பல நாகத்தில் - பல துத்தநாகங்களிலே, வலிய ஆகிய இரும்பை வருவித்து - வலிமையையுடையனவான இரும்புகளை உண்டாகச் செய்து, அந்த கரையாத இரும்பை எல்லாம் - உருகாத அந்த இரும்புகளை யெல்லாம், பணங்கள் என்ன காண்பித்தோம் - செம்புநாணயங்களாகக் காட்டினோம்; அ அளவோ - அது மாத்திரமேயோ? கரிய தோலும்-கறுப்பான தோலையும், அரை ஆர தோல் உடுத்தோன் இடமும் - (உடுக்க ஆடையில்லாமல்) இடையிலே பொருந்தப் புலித்தோலை உடுத்துக்கொண்டுள்ள சிவனது ஸ்தானமாகிய வெள்ளிமலையையும், கைகொள் அ சிலையும்-(அவன்) கையிலே கொண்டுள்ள அந்தக்கல்லையும், மாதங்கம் ஆக்கினோம்-சிறந்த மாற்றுயர்ந்த பொன்னாகச் செய்தோம்; (எ - று.)

இரசவாதிகள் தமது திறமையை ஒருதலைவனுக்கு எடுத்துக்கூறுவதாகச் செய்யுள்செய்தல், சித்து என்னும் உறுப்பின் இலக்கணமாம்; இரசவாதமாவது - ஒரு லோஹத்தை மற்றொரு லோஹமாக மாற்றுதல்.

பலம் நாகத்தில் வலிய ஆகிய இரு பை வருவித்து - வலிமையையுடைய சர்ப்பங்களினிடத்திலே வலிமையை யுடையனவான பெரிய படங்களை எழும்பச் செய்து, அந்த கரையாத இருபை எல்லாம் பணங்கள் என்ன காண்பித்தோம் - அந்த உருவழியாத [அல்லது சொல்லமுடியாத] பெரியபடங்களை யெல்லாம் பணங்கள் என்னும் பெயருள்ளனவாகக் காண்பித்தோம்; (பணம் - பாம்பின் படம்: வடசொல்.) அவ்வளவோ - அது மாத்திரமோ? கரிய தோலும் - கருநிறமுடைய யானையையும், மாதங்கம் ஆக்கினேம் - மாதங்கமென்று ஒருவடமொழிப்பெயரை யுடையதாகச் செய்தோம்; அரை ஆர தோல் உடுத்தோன் இடமும் - சிவனது இடப்பக்கத்தையும் மாது அங்கம் ஆக்கினேம் - உமாதேவியினது திருமேனியாகச் செய்தோம்; கை கொள் அ சிலையும் - (அச்சிவன் திரிபுரசங்காரகாலத்தில்) கையிலே கொண்ட வில்லாகிய அந்த மகாமேருமலையையும், மா தங்கம் ஆக்கினேம் - சிறந்த பொன்மயமாகச் செய்தோம் என்று உள்ளுறைபொருள். அரையாரத்தோலுடுத்தோனிடமும் மாதங்கமாக்கினேம் என்பதற்கு - சிவனதுகைலாசகிரியையும் (வெண்)பொன்மயமாகச் செய்தோமென்றும் உரைக்கலாம்; வெண்பொன் என்று வெள்ளிக்குப் பெயர். மரை - முதற்குறைவிகாரம்; "மரையிதழ்புரையுமஞ்செஞ்சீறடி" என்னு மிடத்துப் போல. சித்தரியாம் - தன்னொழி மெய்ம்முன் யகரம்வர இகரந்தோன்றிற்று; [நன் - மெய் - ௩.] தத்தநாகம் - ஒரு லோஹம்.

பின்னிரண்டடியிற் குறித்த கதை:—ஒருகாலத்திற் பரமசிவன் தன்னை மதியாத தாருகவனத்து முனிவர்களது மனநிலைமையைப் பரீக்ஷிக்க எண்ணித் தான் ஒருவிடசங்கமத்திருவுருவங் கொண்டு சென்று அவரில்லந்தோறும் பிக்ஷாடநஞ்செய்து தன்னைநோக்கிக்காதல்கொண்ட அம்முனிபத்தினியர்களது கற்புநிலைமையைக் கெடச்செய்ய, அதுகண்டு பொறுமற் கோபம் மூண்ட அம்முனிவர்கள் அபிசாரயாகமொன்று செய்து அவ்வோமத்தீயினின்றும் எழுந்த நாகங்கள், பூதங்கள், மான், புலி, முயலகன், வெண்டலை முதலியவற்றைச் சிவனைக்கொன்றுவரும்படி ஏவ, சிவபெருமான் தன்மேற்சீறிவந்த நாகங்களை ஆபரணங்களாகவும், பூதங்களைத்தனது கணங்களாகவுங்கொண்டு, மானைக் கையில் ஏந்தி, புலியைத் தோலை உரித்து உடுத்து, முயலகனை முதுகிற் காலால் ஊன்றி, வெண்டலையைக் கையிற்பற்றிச் சடைமேல்அணிந்து, அவற்றை யெல்லாம் பயனிலவாகச் செய்துவிட்டன னென்பதாம்.

மாதங்கமாக்கினேம் - மூன்று பொருள் பட்டுவந்த சிலேடை.

இது - ௩௮ - ஆங் கவிபோன்ற எண்சீராசிரியவிருத்தம். (எ0)

எக. ஆக்குந்தொழிற்குவிரிஞ்சியைவைத்தழிக்குந்தொழிற்குச்
சிவனைவைத்துக், காக்குந்தொழிறான்கைக்கொளருட்கடவுள்வடவே
ங்கடங்காணு, நோக்குங்கருதாமனமுமொருநொடிப்போதேனுந்து
தியாத, வாக்கும்பணியாத்தலையுமுளமனிதரிருகான்மாடுகளே.

(இ - ள்.) ஆக்கும் தொழிற்கு - (உலகங்களைப்) படைக்குஞ் செய்கைக்காக, விரிஞ்சியை வைத்து - பிரமதேவனை நியமித்து, அழிக்கும் தொழிற்கு - (அவற்றை) ஒழிக்குஞ் செய்கைக்காக, சிவனை வைத்து - உருத்திரமூர்த்தியை நியமித்து, காக்கும் தொழில் தான் கைக்கொள் - (அவற்றையெல்லாம்) ஸம்ரக்ஷிக்குஞ் செய்கையைத் தானே மேற்கொண்ட, அருள் கடவுள் - திருவருளையுடைய சிறந்த தெய்வமாகிய திருமாலினது, வட வேங்கடம் - வடதிருவேங்கடமலையை, ஒரு நொடி போதேனும் - ஒரு மாத்திரைப் பொழுதாயினும், காணு - தரிசியாத, நோக்கும் - கண்களையும், கருதா - தியானியாத, மனமும் - மனத்தையும், துதியாத - ஸ்தோத்

திரஞ் செய்யாத, வாக்கும் - வாயையும், பணியா - வணங்காத, தலையும் - சிரசையும், உள - உடைய, மனிதர் - மனிதர்கள், இரு கால் மாடுகளே - (நான்குகால்களன்றி) இரண்டு கால்களையுடைய மாடுகளேயாவர்; (எ - று.)

"ஆக்குமாறயனாமுதலாக்கியவுலகங், காக்குமாறுசெங்கண்ணிறைகருணையங்கடலாம், வீக்குமாறரனாமவை வீந்தநாண் மீளப், பூக்கு மாமுதலெவ னவன்பொன்னடிபோற்றி" என்றார் வில்லிபுத்தூராழ்வாரும். 'காக்குந்தொழில்தான்கைக்கொள்' என்றதற்கு ஏற்ப, 'அருட்கடவுள்' என்றார். திருமாலிருஞ்சோலைமலையைத் தென்வேங்கடமென்று வழங்குவதும் உண்டாதலால், வடவேங்கட மென்பதில் வட என்பது - பிறிதினியைபுநீக்கிய விசேஷணமாம். 'ஒருநொடிப்போதேனும்' என்பதை மூன்றிடத்துங் கூட்டுக. 'நோக்கும் மனமும் வாக்கும்' எனத் திரிகரணங்களையும் கூறினார். உள - உண்மை யென்னும் பண்புப்பெயரின் அடியாகப் பிறந்த குறிப்புப் பெயரெச்சம். மனிதர் - மநுஷ்யர்; வடசொற் சிதைவு: மனுவின் சந்ததியார் என்று பொருள். மாடு - பசுவின் ஆண் பெண் இருபாற்கும் பொது. இருகான்மாடு - இல்பொருளுவமை. ஆகாரம் நித்திரை பயம் முதலியவற்றில் ஒத்த விலங்கிற்கும் மனிதர்க்கும் உள்ள பெருவேறுபாடு பகவத்பக்தியே யன்றி வேறன் றென்பது கருத்து.

இது - ஆறுங்கவிபோன்ற அறுசீராசிரியவிருத்தம். (எக)

எஉ. மாடாகநிழற்றுசெழுமரனாகத்தவச்சிறிய
பூடாகக்குழைத்தநறும்புதலாகவழிப்படுமோ
ரோடாகப்பெறுவமெனினுயிர்காணற்கதிபெறலாம்
வீடாகத்திருநெடுமால்வீற்றிருக்கும்வேங்கடத்தே.

(இ - ள்.) உயிர்காள் - ஜீவன்களே!—திரு நெடு மால் - திரிவிக்கிரமனாய் நீண்ட திருமால், வீடு ஆக - ஸ்தானமாகக் கொண்டு, வீற்றிருக்கும் - திருவுள்ள முவந்து எழுந்தருளி யிருக்கின்ற, வேங்கடத்து - திருவேங்கடமலையிலே, மாடு ஆக - விலங்காக வாயினும், நிழற்று செழு மரன் ஆக - நிழலைச் செய்கின்ற செழிப்பான மரமாக வாயினும், தவ சிறிய பூடு ஆக - மிகவுஞ் சிறிய புல்பூண்டுகளாக வாயினும், குழைத்த நறு புதல் ஆக - தளிர்த்த நல்ல புதராக வாயினும், வழி படும் ஓர் ஓடு ஆக - வழியிலே கிடப்பதொரு ஓடாக வாயினும், பெறுவம் எனில் - ஆகப்பெறுவோ மென்றால், நல் கதி பெறல் ஆம் - (நாம்) சிறந்த கதியைப் பெறுதல் கூடும்; (எ - று.)

"செம்பவளவாயான் றிருவேங்கடமென்னு, மெம்பெருமான் பொன்மலைமே லேதேனு மாவேனே" என்றார் ஸ்ரீகுலசேகராழ்வாரும். 'நாமறிய வேண்டா, திருவேங்கடமுடையானு மறியவேண்டா, கண்டாரு மறிந்து சிலாகிக்க வேண்டா, திருமலைமேலே உள்ளதொரு பதார்த்தமாக அமையும்' என்று பட்டர் அருளிச்செய்வர்.

இது - பதினோராங் கவிபோன்ற கொச்சகக்கலிப்பா. (எஉ)

[கவி.]

எஙு. வேங்கடக்கிரியிலோங்குசெங்கணெடுமேகம்வீறுகருணாகரன் விமலமானபதகமலமாயனதிவிருதுபாடிநடிகளியரே, நாங்கண் மெச்சுமதுவுண்ணவுண்ணமிகநல்லபுத்திதருமல்லதோர் நாளுமெங்களைமயக்குமோசமணஞானிகாளினிதுகேண்மினோ, வேங்குமத்தியினின்மாமுளைத்ததுவுமிக்குமீதுபலவரசெலா மிருப்பதுங்கருவனக்கொடித்திரளெழுந்துவிண்ணிடைபறப்பதுந், நீங்கலற்றபசுபதிகுளத்திலெரிநிற்குமாறுமொருகாலுமோ ணித்தமேருவலம்வருவிசித்திர முநிச்சயஞ்சுரருமறிவரே.

(இ - ள்.) வேங்கடம் கிரியில் - திருவேங்கடமலையிலே, ஓங்கு - உயர்ச்சிபெற்ற, செம் கண் - சிவந்த திருக்கண்களையுடைய, நெடு மேகம் - பெரிய காளமேகம் போன்றவனும், வீறு - சிறப்புப்பெற்ற, கருணை ஆகரன் - திருவருளுக்கு இடமாகவுள்ளவனும், விமலம் ஆன பத கமலம் மாயன் - குற்றமில்லாதனவான திருவடித்தாமரைகளையுடைய மாயவனுமாகிய திருமாலினது, அதி விருது - மிகுந்த வெற்றியை, பாடி - பாடல்பாடித் துதித்துக்கொண்டு, நடி - ஆநந்தக் கூத்தாடுகின்ற, களியரேம் - கட்குடியராவோம் (யாங்கள்); நாங்கள் மெச்சும் மது - நாங்கள் கொண்டாடுகின்ற கள்ளானது, உண்ண உண்ண மிக நல்ல புத்தி தரும் அல்லது - குடிக்கக்குடிக்க மேன்மேல் மிகவும் நல்ல புத்தியைக் கொடுக்குமேயல்லாமல், ஓர் நாளும் - ஒருநாளாயினும், எங்களை மயக்குமோ - எங்களை அறிவு மயங்கச் செய்யுமோ? சமணஞானிகாள் - க்ஷபணசமயத்தைச்சேர்ந்த தத்துவஞானமுடையவர்களே!—இனிது கேண்மினோ (நாங்கள் சொல்வதை) நன்றாகக் கேட்பீராக; எங்கும் அத்தியினில் - (இலைகள் அசைதலால்) ஒலிக்கின்ற அத்திமரத்திலே, மா முளைத்ததுவும் - மாமரம் முளைத்ததையும், இக்குமீது - கரும்பின்மேல், பல அரசு எலாம் இருப்பதும் - அனேகஅரசமரங்களெல்லாம் இருப்பதையும், கரு வனம் கொடி திரள் - பெரியகாடுகளில் உண்டாகிற லதைகளின் கூட்டம், எழுந்து விண்ணிடை பறப்பதும் - மேலேஎழுந்து ஆகாயத்திலே பறப்பதையும், நீங்கல் அற்ற பசுபதி குளத்தில் - பிரிதலில்லாத பிராணிகள் நீராடுகிற தடாகத்திலே, எரி நிற்கும் மாறும் - நெருப்பு நிற்கின்ற மாறான செய்கையையும், ஒரு கால் உளோன் - ஒருகாலையுடைய முடவன், நித்தம் மேரு வலம் வரு - நாள்தோறும் மகாமேருகிரியைச் சுற்றிஓடுகின்ற, விசித்திரமும் - வியப்பான செய்கையையும், நிச்சயம் - உண்மையாக, சுரரும் - தேவர்களும் [மதுபானஞ்செய்பவர் யாவரும்], அறிவர் - அறிவார்கள்; (எ - று.)

கட்குடியர் அக்கள்ளைச் சிறப்பித்துக்கூறுவதாகச் செய்யுள்செய்வது, களியென்னும் உறுப்புக்கு இலக்கணமாம்.

சமணசமயத்தார் கட்குடியை விலக்குதலை முக்கியதருமமாகக் கொண்டவராதலால், அவர்களை விளித்துக் கூறுகின்றார். கிரிக்கு ஏற்ப, மேகங் கூறினர். மேகம் - உவமவாகுபெயர். செங்கண்மேகம் - வெளிப்படை. செங்கண் - புண்டரீகாக்ஷ மென்றபடி. பதகமலத்துக்கு விமலமாதலாவது - தன்னைச்சரணமடைந்தவர்களைத் துன்பமனைத்தையும் ஒழித்தல். களியரேம் - தன்மைப்பன்மைக் குறிப்புமுற்று. முதலடிக்கு - திருவேங்கடமுடையானது புகழைப் பாடிப் பக்திமிகுதியாற் கூத்தாடுகின்ற களிப்புடையவராவோம் என்றும்; இரண்டாமடியில், மெச்சும் அது எனப்பிரித்து, நாங்கள் கொண்டாடுகின்ற அவ்வெம்பெருமானது புகழ் அனுபவிக்க அனுபவிக்க மிகவும் நல்ல தத்துவஞானத்தைத் தருமேயல்லாமல் எப்பொழுதும் எங்களை அஜ்ஞானத்தால் மயங்கச்செய்யாது என்றும் உள்ளுறைபொருள். இவ்வுரைக்கு, சமணஞானிகளை விளித்தது, அவர்கள் ஸ்ரீவைஷ்ணவசமயத்துக்கு விரோதியான புறச்சமயிகளாதலின். கேண்மின் - ஏவற்பன்மைமுற்று. பின்னிரண்டடிகளால், குடிமயக்கத்தில் தங்களுக்குப் பலவாறுதோன்றுகிற அற்புதங்களை எடுத்துக் கூறினார்களென்க.

இனி, அவ்வடிகளுக்கு உள்ளுறைபொருள் வருமாறு:—எங்கும் அத்தியினில் மா முளைத்ததுவும் - ஒலிக்கின்ற பாற்கடலிலே திருமகள் தோன்றியதையும், இ குமீது பலம் அரசு எலாம் இருப்பதும் - இந்தப்பூமியில் வலிமையையுடைய அரசர்கள் பலர் இருப்பதையும், கரு வனம் கொடி திரள் எழுந்து விண்ணிடை பறப்பதும் - கரியநிறத்தையுடைய காக்கைகளின் கூட்டம் ஆகாயத்திலே எழும்பிப் பறப்பதையும், நீங்கல் அற்ற பசுபதி குளத்தில் எரி நிற்கும் ஆறும் - பிரிதலில்லாத விருஷபத்துக்குத் தலைவனான சிவ

ணது நெற்றியிலே நெருப்புக்கண் பொருந்தும் விதத்தையும், ஒருகால் உளோன் மேரு வலம்வரு விசித்திரமும்-ஒற்றைத் தேர்ச்சக்கரத்தையுடைய சூரியன் நாள்தோறும் மேருமலையைப் பிரதக்ஷிணஞ் செய்துவருகிற வியப்பையும், நிச்சயம் சுரரும் அறிவர் - உண்மையாகத் தேவர்களும் அறியார்கள் என்பதாம். எனவே, எல்லாம் எம்பெருமானுடைய ஸங்கல்பமே யென்றதாம். இச்செய்யுள்-பாகவதர்க்கும் கட்குடியர்க்கும் சிலேடையாகப் பாடப்பட்டதென அறிக. சமணம், இக்கு - வடசொற்றிரிபுகள். மூளைத்ததும் - குற்றியலுகரங் கெடாமல் பொதுவிதியால் வகரம் பெற்றது.

இது - ஒன்று மூன்று ஐந்தாஞ்சீர்கள் மாச்சீர்களும், இரண்டு நான்கு ஆறுஞ்சீர்கள் கூவிளங்காய்ச்சீர்களும், ஏழாவது விளச்சீருமாய் வந்தது அரையடியாகவும்: அஃது இரட்டிகொண்டது ஓரடியாகவும் வந்த பதினன்கு சீராசிரியவிருத்தம். (எந)

எச. அறியுமவர் நம்மடிக ளாவார் மனனே
நறியவனச் சேடகிரி நாதன்—செறியும்
இசைக்கண்ணன் கத்தா வினங்களிக்க வூதெழ்
இசைக்கண்ணன் கத்தா வெனா.

(இ - ள்.) மனனே-மனமே!—செறியும் இசைக்கு அண்ணன்-நிறைந்த கீர்த்திக்குத் தலைவனும், கத்து ஆ இனம் களிக்க ஊது எழ் இசை கண்ணன்-கத்துகின்ற பசுக்களின் கூட்டம் (கேட்டு) மகிழும்படி குழலூதுகின்ற ஸப்த சுரங்களையுடைய கிருஷ்ணனும் ஆகிய, நறிய வனம் சேடகிரி நாதன் - வாசனை வீசுகின்ற சோலைகளையுடைய சேஷாசலத்துக்குத் தலைவனே, கத்தா என - (பிரபஞ்சமுழுவதுக்குஞ்) செய்பவனென்று, அறியுமவர் - அறிபவர்கள்தாமே, நம் அடிகள் ஆவார் - நமக்கு ஆசிரியராவர்; (எ - று.)

அடிகளாவார் - தெய்வமாவரென்றுமாம். மூன்றுமடியில், இசைக்கண்ணன் - கீர்த்தியையுடைய கிருஷ்ணன், நான்காம் அடியில், இசைக்கண்ணன் - சுரத்தையுடைய வேய்ங்குழலையுடையவன் என்றுங் கொள்ளலாம்; கண் - மூங்கில்: அதனாலாகிய குழலுக்குக் கருவியாகுபெயர்.

மலரென்னும்வாய்பாட்டால் முடிந்த இருவிகற்ப நேரிசைவெண்பா. (எச)

[இரங்கல்.]

எரு. எனதுவினையிருள்செற்றபரிதியிதுமதிவட்ட
மிதுவெனவில்விடுசக்ரநிலவேகால்
கனதவளவளைகைக்கொள்பரமனுறைபணிவெற்பர்
கனகநினையிதயத்தினினையாரோ
முனநறியமலர்மெத்தைதனின்மருவுபொழுதெதாற்றை
முகமுழுதுமளகத்தின்மறைநீரான்
மனமுருகிநிகரற்றசிவலயைமுகிலுக்குண்
மறைவதெனவவர்சொற்றமொழிதானே.

(இ - ள்.) எனது வினை இருள் செற்ற - என்னுடைய கருமமாகிய இருளை ஒழித்த, பரிதி இது - சூரியமண்டலமாகும் இது, மதிவட்டம் இது - சந்திரமண்டலமாகும் இது, என - என்னும்படி, வில் விடு சக்ரம் - ஒளியைவீசுகின்ற சக்கராயுதத்தையும், நிலவே கால் கனம் தவளம் வளை - சந்திரகாந்திபோன்ற காந்தியையே வீசுகின்ற பருத்த வெண்ணிறமான சங்கத்தையும், கை கொள் - திருக்கைகளிற்கொண்ட, பரமன்-யாவரினுஞ்சிறந்த திருமால், உறை - எழுந்தருளியிருக்கின்ற, பணிவெற்பர் - சேஷாசலத்திலுள்ள தலைவர்,—முனம் - முன்னே, நறிய மலர் மெத்தைதனில் - வாசனை

யையுடைய பூக்களைக்கொண்டு பரப்பிய மெத்தையிலே, மருவு பொழுது - (என்னோடு) கூடுகிறபொழுதில், ஒற்றை முகம் முழுதும் - எனது ஒருபாதி முகம் முழுவதும், அளகத்தில் மறை நீரால் - (சோர்கின்ற கூந்தலின்) முன்னெற்றிமயிரில் மறைந்த தன்மையால், மனம்உருகி - (தமது) மனம்அன்பாற் கரைந்து, நிகர் அற்ற சசிவலயம் முகிலுக்குள் மறைவது என - 'ஒப்பில்லாத சந்திரமண்டலம் மேகத்திற்குள்ளே மறைவது' என்று, அவர் சொற்ற மொழி - அவர் சொல்லியருளிய வார்த்தையை, கனகம் நினை இதயத்தில் நினையாரோ - பொருளை நினைத்த மனத்திலே இப்போது நினைக்கமாட்டாரோ? (எ - று.)

பொருள் வயிற் பிரிந்து சென்ற தலைவனைப் பிரிந்த தலைவி அவனுக்குத் தன் பக்கல் முன்னே அளவின்றி யிருந்த அன்பு பின்பு மறந்துபோனதைக் கூறிஇரங்கியது, இச்செய்யுள்.

சூரியமண்டலம் - திருவாழிக்கும், சந்திரமண்டலம் - திருச்சங்குக்கும் உவமை; முறைநிரனிறை. வட்டம் - வ்ருத்தம்; இதயம் - ஹ்ருதயம்: வடமொழிச்சிதைவுகள். மெத்தை - மெத்தென்று இருப்பது. ஒன்று என்னும் மென்றொடர்க்குற்றியலுகரம் வன்றொடராய் ஐகாரச்சாரியை பெற்று ஒற்றையென நின்றது. முகமண்டலம்-சந்திரமண்டலத்துக்கும், கூந்தல்-மேகத்துக்கும் உபமேயமாம். நீர்-நீர்மையென்னும் பண்புப்பெயரின் விகாரம்.

இது - ஒன்று மூன்று ஐந்தாஞ்சீர்கள் கருவிளங்காய்ச்சீர்களும், மற்றை நான்கும் புளிமாங்காய்ச்சீர்களு மாகிய எழுசீராசிரியவிருத்தம். (எரு)

எசு. மொழிமறைமுடிமே, லெழுமுதலதுவே,
செழுவடமலைவாழ், விழுமியபொருளே.

(இ - ள்.) மொழி மறை முடிமேல் - சப்தசுவரூபமான வேதங்களின் அந்தமாகிய உபநிஷத்துக்களில், எழும் - விளங்கிக்காணப்படுகின்ற, முதல் அதுவே - முதற்பொருளாகிய அதுவே, செழுவடமலைவாழ்விழுமியபொருளே - செழிப்பானவடவேங்கடமலையில் வாழ்கின்ற சிறந்த பொருளாகும்; (எ-று.)

விழுமியபொருள் - பரம்பொருள். மொழிமறை - சிறப்பித்துச்சொல்லப்படும் வேதமென்றும், பாராயணஞ்செய்தற்குஉரிய வேத மென்றுமாம்.

இது - முதற்சீர் கருவிளச்சீரும், இரண்டாவது புளிமாச்சீரு மாகிய குறளடி நான்கு கொண்டு வந்த வஞ்சித்துறை. (எசு)

[ஊசல்.]

எஎ. பொருளலாவிடயத்தைப்பொருளென்றெண்ணிப் போவதுமீள்வதுமாயெப்பொழுதுமாடு, மருளுலாமனவூசல்சுத்தஞ்செய்து மாறுதுவளர்பத்திவடத்தைப்பூட்டி, யிருளைநேர்குழனிலப்பெண்ணலர்மேன்மங்கை யிருவரொடுமேயதன்மேலேறிவீறு, மருளினொன்மெள்ளவசைந்தாடீருச லாதிவடமலைமாயராடீருசல்.

(இ - ள்.) ஆதி வட மலை மாயர் - எல்லாப்பொருள்களுக்கும் முதல்வரான வடவேங்கட மலையிலெழுந்தருளிய மாயவரே!—பொருள் அலா விடயத்தை பொருள் என்று எண்ணி - (நிலையில்லாமையாற்) பொருள்களாக மதிக்கத்தகாத செல்வம் இளமை யாக்கை முதலிய பொருள்களை நிலையுடைப் பொருள்களென்று திரிபாகக்கருதி, போவதும் மீள்வதும் ஆய் - (அவற்றினிடத்துச்) செல்வதும் மீண்டுவருவது மாகி, எ பொழுதும்—, ஆடும் - ஆடுகின்ற, மருள் உலாம் மனம் ஊசல் - மயக்கம்பொருந்திய (எனது) மனமாகிய ஊஞ்சற்பலகையை, சுத்தம் செய்து - (நீவிர்) பரிசுத்தமாக்கி, மாறுது வளர் பத்தி வடத்தை பூட்டி - மாறுபடாமல் மேன்மேல் வளர்கின்ற (உமதுவிஷய

மான பக்தியாகிய கயிற்றை (அம்மனைப்பலகையிலே) சேர்த்து, இருளை நேர் குழல் நிலப்பெண் அலர்மேல்மங்கை இருவரொடுமே-(கருநிறத்தால்) இருளையொத்த கூந்தலையுடைய பூதேவியும் செந்தாமரைமலரின்மேல் வாழ்கின்ற ஸ்ரீதேவியும் என்னும் இரண்டு தேவிமாருடனே, அதன்மேல் ஏறி- அம்மனவூசலின்மேல் ஏறி வீற்றிருந்து, வீறும் அருளினால் - ஒப்புயர்வில்லாத சிறப்புற்ற கருணையினால், மெள்ள அசைந்து ஊசல் ஆடீர் - மெதுவாக அசைந்து ஊஞ்சலாடுவீராக; ஊசல் ஆடீர்—; (எ - று.)

ஊசலாவது - ஆசிரியவிருத்தத்தாலாதல், கலித்தாழிசையாலாதல், 'ஆடீரூசல்','ஆடாமோவூசல்','ஆடுகவூசல்'என ஒன்றால் முடிவுறக்கூறுவது.

விடயம் - விஷயம். உலாம் - உலாவும் என்பதன் விகாரம். நிலப்பெண் அலர்மேன்மங்கை இருவர் - பெயர்ச்செவ்வெண் தொகைபெற்றது. மெள்ள - மென்மையென்னும் பண்பினடியாகப் பிறந்த மெல்ல என்னும் குறிப்புவினையெச்சத்தின் மரூஉ. ஆடீர் - முன்னிலையேவற்பன்மைமுற்று. மாயர் - இயல்பாகிய அண்மைவிளி.

இது - முப்பத்தெட்டாங்கவிபோன்ற எண்சீராசிரியவிருத்தம். (எஎ)

எஅ. ஊசலையொத்துத்தனத்தாற்றுயல்வருமொண்மருங்குற்
கோசலைதன்சுதன்வேங்கடவாணன்குணகணமாம்
வீசலைவெள்ளத்தழுந்தறிவாளர்க்குமீண்டுமுண்டோ
காசலைநேர்குழற்பெண்ணிலத்தாசைக்கனவழுக்கே.

(இ - ள்.) தனத்தால் - முலைப்பாரத்தால், ஊசலை ஒத்து துயல்வரும் - ஊஞ்சலைப்போன்று அலைகின்ற, ஒள் மருங்குல் - பிரகாசமான இடையையுடைய, கோசலைதன் - கௌசல்யாதேவியினது, சுதன் - குமாரனாய் (ஸ்ரீ ராமாவதாரமாக) உதித்தருளிய, வேங்கடவாணன் - திருவேங்கடமலையில் வாழ்கிற திருமாலினது, குண கணம் ஆம் - திருக்கலியாணகுணங்களின் தொகுதியாகிய, அலை வீசு வெள்ளத்து-அலைகளைவீசுகின்ற வெள்ளத்திலே, அழுந்து-ஈடுபட்டு ஆழ்ந்த, அறிவாளர்க்கு - அறிவையுடைய பாகவதர்களுக்கு, காசு (ஆசை) - பொருளினிடத்து ஆசையும், அலை நேர் குழல் பெண் (ஆசை)-கருமணலை யொத்த கூந்தலையுடைய பெண்ணினிடத்து ஆசையும், நிலத்து ஆசை - பூமியிலாசையும் ஆகிய, கனம் அழுக்கு - மிகுந்த அசுத்தி, மீண்டும் உண்டோ-பின்பு உண்டாகுமோ? [உண்டாகாதென்றபடி];(எ-று.)

பொன்னாசை, பெண்ணாசை, மண்ணாசை என்னும் ஈஷணாத்திரயமும் எம்பெருமான்குணங்களில் ஆழ்பவர்க்கு இல்லையென்பதாம். கோசலை - வடமொழித்திரிபு: கோசலதேசத்தரசனது மகளென்பது பொருள்; கோசலம் - உத்தரகோசலம் தக்ஷிணகோசலமென இரண்டு பிரிவுள்ளது: இவற்றுள் தக்ஷிணகோசலதேசத்தினரசன்மகள் இவள்; தசரதசக்கரவர்த்தியினது மனைவியர் பலருள் முதன்மையாய்ப் பட்டம்பெற்றவள். வாணன் - வாழ்நன்என்பதன் மரூஉ; வாள் நன் எனப்பிரித்து, ஒளியையுடையவனென்றுங் கூறுவர்.

இது - நேரசைமுதற் கட்டளைக்கலித்துறை. (எஅ)

[பிச்சியார்.]

எகூ. அழுக்கிலாநுதல்வெண்பிறையாகநீறணிந்ததன்றியிரசதவெற்புறு, கொழுக்குவான்முலைகொள்ளவெண்ணீற்றைநீகொட்டினுன்கொடியிடைதாங்குமோ, பழுத்தகாவித்துகிலுடுத்தோர்கைபற்றிநிற்பதென்பற்பலமாதவ, ரொழுக்கமாற்றுதற்கோவேங்கடேசனுறொலிவிழாக்கண்டுளங்களிபிச்சியே.

(இ - ள்.) வேங்கட ஈசனார் - திருவேங்கடநாதரது, ஒலி விழா - ஆரவாரத்தையுடைய உத்ஸவத்தை, கண்டு - தரிசித்து, உளம் களி - மனம் மகிழ்கின்ற, பிச்சியே—!—அழுக்கு இலா நுதல் - களங்கமில்லாத (உனது) நெற்றி, வெள் பிறை ஆக - வெண்ணிறமான பாலசந்திரனை யொக்கும்படி, நீறு அணிந்தது அன்றி - (அந்நெற்றியிலே நீ) விபூதியைத் தரித்ததுவேயல்லாமல், கொழு குவால் முலை - (உனது) பருத்த நுனிகுவிந்த கொங்கைகள், இரசதம் வெற்பு உரு கொள்ள - வெள்ளிமயமான கைலாசகிரியினது உருவத்தை அடையும்படி, வெள் நீற்றை நீ கொட்டினால் - வெண்ணிறமான விபூதியை (அவற்றிலும்) நீ மிகுதியாக அப்பினால், உன் கொடி இடை தாங்குமோ - உனது வல்லிபோல்மெல்லிய இடையானது (இப்பாரத்தைப்)பரிக்குமோ? [பரியா தென்றபடி]; (அன்றியும், நீ), பழுத்த காவி துகில் உடுத்து - பழுப்புநிறமடைந்த காஷாயவஸ்திரத்தை உடுத்துக்கொண்டு, ஓர் கழைபற்றி நிற்பது - ஒரு தடியை (க் கையிலே) பிடித்துநிற்பது, என் - எதற்காக? பல் பல மா தவர் ஒழுக்கம் மாற்றுதற்கோ - மிகவும் அநேகரான மிக்க தவத்தையுடைய முனிவர்களது ஆசாரத்தை (நீ)மாற்றுதற்காகவோ? (எ-று.)

சிவசின்னம் பூண்டு தெருவிற் பிச்சைக்கு வருகிற மகளொருத்தியை நோக்கி ஒருகாமுகன் தன்வேட்கையைப்புலப்படுத்தி முன்னிலைப்படுத்துக் கூறுவதாகச் செய்யுள்செய்வது, பிச்சியார் என்னும் உறுப்பாம்.

பித்தன்என்று சிவனுக்குப் பெயராதலால், அதன் இடைப்போலியாகிய பிச்சனென்பதன் பெண்பாலான பிச்சியென்பது - சிவசின்னம்பூண்டவளை உணர்த்தும். சிவசின்னத்துக்கு ஏற்ப, பிறையும் கைலாசமும் கூறப்பட்டன. 'காவித்துகிலுடுத்துக்கழைபற்றிநிற்பது மாதவரொழுக்கமாற்றுதற்கோ' என்றது - நீ முனிவர்போலக் காஷாயவஸ்திரத்தையும் கையில்தண்டத்தையுங் கொண்டிருப்பது அம்முனிவரது வேஷத்தை நீ மாறிப்பெறுவதற்கோ என்னும் பொருளோடு, நீ இங்ஙனம் காவிச்சேலையையுடுத்துக் கையில்தண்டத்தைக்கொண்டு வீதியில் வெளிப்படையாகப்புறப்பட்டது உன்பாற் காதல்கொண்டு முனிவர்கள் தமது ஸதாசாரத்தைக் கைவிடுதற்குக் காரணமாயிருப்ப தென்னுங் கருத்தையும் உடையதென அறிக. இரசதம் - ரஜதம் ; வடசொல். கொழுத்தல் - மதர்த்தல். பற்பல - பலவென்பது தன்முன் தான்வர அகரங்கெட்டு லகரம் றகரமாயிற்று; [நன் - உயிர் - ௨0.] வேங்கடேசன் - வடமொழிப்புணர்ச்சி, குணசந்தி.

கட்டளைக்கலிப்பா; இலக்கணம் ௫௯-ஆம் கவியிற் கூறப்பட்டது. (எகூ)

அ0. பிச்சிநறுங்குழலாயிதுவென்மதிபேசாய்பார்
மெச்சுமரங்கமுகந்துதுயின்றொளிமிகுமாடக்
கச்சியிருந்துரகாசலநின்றருள்கனிவாயெம்
மச்சுதரெம்மனமேவியுமாசையையறியாரே.

(இ - ள்.) பிச்சி நறு குழலாய் - பிச்சியென்னுங் கொடிபோலடர்ந்த இயற்கைமணம்வீசுகின்ற கூந்தலையுடையவளே!—பார்மெச்சும் அரங்கம் உகந்து துயின்று - நிலவுலகத்தார்யாவருங் கொண்டாடுகின்ற திருவரங்கம்பெரியகோயிலை விரும்பி (அங்கே) பள்ளிகொண்டு, ஒளி மிகு மாடம் கச்சி இருந்து - பிரகாசம்மிகுந்த மாளிகைகளையுடைய காஞ்சீபுரத்திலே(திருப்பாடகமென்னுந்திருப்பதியிலே) வீற்றிருந்து, உரக அசலம் நின்று அருள் - சேஷாசலத்திலே நின்றதிருக்கோலமாய் எழுந்தருளியிருக்கின்ற, கனி வாய் எம் அச்சுதர் - கொவ்வைப்பழம்போன்ற திருவதரத்தையுடையவராகிய எமது அச்யுதரென்னுந் திருநாமமுடைய தலைவர், எம் மனம் மேவியும் - எமதுமனத்திலே (எப்பொழுதும்) எழுந்தருளியிருந்தும், ஆசையை அறியார் - (எமது)

காதலை அறிகின்றாரில்லை; இது என் மதி - இஃது என்ன அறிவு? பேசாய்- சொல்வாயாக; (எ - று.)

இது - தலைவனைப்பிரிந்த தலைவி தோழியைநோக்கி இரங்கிக்கூறியது. மதி - முன்னிலையசையாகவுமாம். கச்சி - காஞ்சியிலுள்ள பரமேச்சுர விண்ணகரமென்னுந் திருப்பதியுமாம். தன்மனத்தில் எப்பொழுதுந் தலைவர் நினைக்கப்பட்டிருப்பதனால், 'எம்மனமேவியும்' என்றது. இதனால், அவர் மனத்தில் யான் இருந்தாலொழிய என்மனத்தில் அவர் இருப்பதனாற் பயனில்லை யென்பதை விளக்கினாள். எம் - தனித்தன்மைப்பன்மை. என் ஆசையை அறிவராயின் அதனை நிறைவேற்றுதற்காக உடனே வந்திருப்பரென்றவாறு. புறத்தேவந்து அணைந்தாலொழிய அகத்தே இருப்பதனால்திருப்தி யுண்டாகாதென்க. இங்கே 'அச்சுதர்' என்ற பதத்தால் நாயகரைக்குறித்தது- அவர் எனது ஆசையைக் கருதாவிடினும், அடுத்தவரைக்கைவிடாதவரென்பதனால் வந்த அவரது திருநாமத்தையாயினுங் கருதவேண்டாவோ? என்றபடி. 'கனிவாய்' என்றதனால், அவ்வாயழகிலே தான் ஈடுபட்டதைத் தெரிவித்தாள். எ - இரக்கம்.

இது - ஈற்றுச்சீரொன்று மாங்காய்ச்சீரும், மற்ற நான்குங் கூவிளச்சீர்களுமாய் வந்த கலிநிலைத்துறை; விருத்தக்கலித்துறை யெனவுமாம். (அ0)

அக. ஆர்படைத்தகணையை யலைத்தகன்றமதர்நெடுங்கண்மலரணங்கின்மார்ப, ரேர்படைத்த வடமலையி லெமையிருத்திப்போனவர்தம்மெதிர்ப்படாதோ, சீர்படைத்தமடப்பேடைக்கிரையருத்துங் கருத்துடைத்தாய்ச்சேண்மீன்கௌவு, கூர்படைத்தவாயுடைத்தாய் விரைந்துவருங்கருங்கால்வெண்குருகுதானே

(இ - ள்.) சீர்படைத்தமடம்பேடைக்கு இரை அருத்தும் கருத்து உடைத்து ஆய்-சிறப்புப்பெற்ற இளமையான தனது பெண்பறவைக்கு (மீனாகிய) இரையை உண்பிக்கவேண்டுமென்னும் எண்ணத்தையுடையதாய், சேண்மீன் கௌவு கூர்படைத்த வாய் உடைத்து ஆய்-(அதற்காக)நெடுந்தூரத்திலுள்ள மீனைப் பற்றிய கூர்மைபெற்ற வாயையுடையதாய், விரைந்துவரும் - துரிதப்பட்டுவருகின்ற, கரு கால் வெள் குருகு - கருநிறமான கால்களையுடைய வெண்ணிறமான நாரை,—ஆர் படைத்த - கூர்மையைப்பெற்ற, கணையை- அம்புகளை, அலைத்து-(தமக்கு ஒப்பாகாமையால்)வருந்தச்செய்து, அகன்ற - விசாலமான, மதர் - களிப்பாற்செழித்த, நெடு - நீண்ட, கண் - திருக்கண்களையுடைய, மலர் அணங்கு - செந்தாமரைமலரில் வீற்றிருக்கின்ற திருமகளைத்தரித்த, இன் மார்பர் - இனிய[அழகிய] திருமார்பை யுடையவரும், ஏர் படைத்த வடமலையில் எமை இருத்தி போனவர்தம் - அழகைப்பெற்ற வடவேங்கடமலையிலே எம்மைக் காத்திருக்கவைத்துவிட்டுப் போனவருமாகிய தலைவரது, எதிர் - எதிரில், படாதோ - செல்லமாட்டாதோ? (எ - று.)

செல்லுமாயின் உடனே அவர் என்னைவந்து கூடுவர் என, தன்னைப்பிரிந்து சென்ற தலைவனிடம் குருகைத் தூதுவிடுத்த தலைவி இரங்கியது.

'அணங்கின்மார்பர்' என்றதனால், ஒருமகளை எப்பொழுதும் பிரியாமல் மார்பிலேயே வைத்துக்கொண்டுள்ளவர் அவளை விட்டு என்னை ஒருபொழுதாயினும் விரும்புவரோ? என்றவாறு. திருமாலுக்குத் திருமகளது கடைக்கண்ணோக்கத்தின் அழகிலே உள்ள ஈடுபாட்டை விளக்குதற்பொருட்டு, அவளுக்கு 'ஆர்படைத்தகணையை யலைத்தகன்ற மதர்நெடுங்கண்' என்னும் விசேஷணங் கொடுத்தாள். மதர்கண் - வினைத்தொகை. எதிர்ப்படுதல்-முன்னிலையிற் சேர்ந்து காணவும் பேசவும் பெறுதல். "பேடையும்பெடையுநாடின்றும்" என்னுஞ் சூத்திரத்தால், பேடை - பறவைக்குஉரிய பெண்

மைப்பெயராம். தான் அனுப்பின குருகு ஆண்பெண்களுக்குப் பரஸ்பரம் உள்ள அன்பின் தன்மையை அறியாததன் றென்றற்கு, 'பேடைக்கிரையருந்துங் கருத்துடைத்தாய் மீன்கௌவுவாயுடைத்தாய் விரைந்துவருங் குருகு' என்றாள். அருத்தும் என்னும் எதிர்காலப்பெயரெச்சத்தில், அருந்து என்பதன் பிறவினையாகிய அருத்து - பகுதி. சேண்மீன் - பெரிய மீன் எனினுமாம். கருங்கால் வெண்குருகு - இயற்கைவருணனை; அடையடுத்தசினையும் அடையும் முதலை விசேடித்தது. மாறுபட்டசொற்கள் வந்ததனால், முரண்தொடை. அணங்கின்மார்பர் - ஸ்ரீநிவாசனது, வடமலை யெனினுமாம். கண்மலர் என எடுத்து, கண்களாகிய மலர்களை யுடைய வென்றுமாம்.

இது - நான்காங்கவிபோன்ற அறுசீராசிரியவிருத்தம். (அக)

அஉ. குருகைவளம்பதிமாறனார்கொழிதமிழாரமுதுண்ணுநின், னிருகுழையஞ்செவிகோதுசேரெனகவிநஞ்சமுமுண்ணுமால்,பெருகருள்வேங்கடநாயகாபேதையசோதைமனைக்கணுன், னொருகனிவாய்நறுவெண்ணெயுமுண்டதுமண்ணையுமுண்டதே.

(இ - ள்.) பெருகு அருள் - (அடியார்கள்பக்கல் மேன்மேல்) வளர்கின்ற கருணையையுடைய, வேங்கடம் நாயகா - திருவேங்கடமலைக்குத் தலைவனே!--பேதை யசோதை மனைக்கண் - பேதைமைக்குணத்தையுடைய யசோதையினது திருமாளிகையிலே, (ஸ்ரீகிருஷ்ணாவதாரத்தில்), உன் ஒரு கனி வாய்-உனது ஒப்பற்ற கொவ்வைப்பழம்போன்ற திருவாய்மலரானது, நறு வெண்ணெயும் உண்டது - நல்லவாசனைவீசுகின்ற வெண்ணெயையும் திருவமுதுசெய்தது ; மண்ணையும் உண்டது—; (ஆதலால்), குருகை வளம் பதி மாறனார் - எல்லாவளங்களையுமுடைய திருக்குருகாபுரியில் எழுந்தருளிய நம்மாழ்வாரது, கொழி தமிழ் ஆர் அமுது - ஆராய்ந்தெடுத்த தமிழ்ப் பாசுரங்களாகிய (கிடைப்பதற்கு) அருமையான அமிருதத்தை, உண்ணும் - உண்டருளிய [கேட்டு அனுபவித்த], நின் - உனது, இரு குழை அம் செவி - இரண்டுகுண்டலங்களையணிந்த அழகிய திருச்செவிகள், கோது சேர் என கவி நஞ்சமும் உண்ணும் - குற்றம்பொருந்திய எனது பாடல்களாகிய விஷத்தையும் திருவமுதுசெய்யும் [கேட்டருளு மென்றபடி]; (எ - று.)—எடுத்துக்காட்டுவமையணி.

ஆதலால், யான் துணிந்து பாடத்தொடங்கினே னென்றவாறு. கொழி தமிழ் - வடிதமிழ் ; குற்றந்தீர்ந்த தமிழ். ஆரமுது - நிறைந்த அமிருதமுமாம். "உண்டற்குரியவல்லாப்பொருளை, யுண்டனபோலக் கூறலுமரபே" என்னும் விதியால், 'செவி உண்ணும்' எனப்பட்டது; மரபுவழுவமைதி. இருசெவியென்க. செவி - காது. "அகமுனர்ச்செவிகைவரினிடையனகெடும்" என்னுஞ் சூத்திரத்தால், அஞ்செவி - அகஞ்செவியுமாம். என, அ-ஆறனுருபு. இது, கவியென்னும் பால்பகா அஃறிணைப்பெயரைக் கொண்டது. நாயகா - ஈறுகெட்டு ஈற்றயல்திரிந்த விளி. பேதைமையென்பது-எல்லாம் அறிந்தும் ஒன்றும் அறியாதுபோலிருத்தல்; "பேதைமையென்பது மாதர்க் கணிகலம்," "நுண்ணறிவுடையோர்நூலொடு பழகினும், பெண்ணறிவென்பது பெரும்பேதைமைத்தே" என்பவற்றால், இது-பெண்களுக்கு உரிய முக்கியமான குணமாம். யசோதை யென்னுஞ் சொல்லுக்கு - புகழைக்கொடுப்பவளென்பது பொருள்; இவள் - நந்தகோபரது மனைவி: கிருஷ்ணனைவளர்த்த தாய். "மண்ணையுண்டார் வெண்ணெயுண்ட மாயனார்" என்றார் காளமேகப்புலவரும். மண்ணையுண்ணுதல், சிறு குழந்தைகளது இயல்பு. மண்ணையுண்டது - பிரளயகாலத்தில் உலகங்களை உதரத்தினுள் ஒளித்ததாகவுமாம். நஞ்சமும், உம் - இழிவுசிறப்பு. வெண்ணெயும், மண்ணையும் - எச்சவும்மைகள்; சிறப்பும்மையாகவுமாம்.

இது - எல்லாச்சீரும் விளச்சீராகிய அறுசீராசிரியவிருத்தம். (௮௨)

௮௫. உண்டுமண்ணெலாமுமிழுமாயனு ரோங்குவேங்கடத்துறையுமாயனூர், தொண்டைநாடுவாழஞ்சொல்வஞ்சியார் தொழுமெனைத்தினைத்துணையும்வஞ்சியார், கொண்டல்சீறுவார்குழலுமோங்கலே கோவைதாழிளங்குயமுமோங்கலே, யண்டுமைக்கணீராவிக்காவியே யவர்விருப்பினேனாவிக்காவியே.

(இ - ள்.) மண் எலாம் - உலகங்களையெல்லாம், உண்டு - (பிரளயகாலத்தில்) வயிற்றினுள்ளே கொண்டு, உமிழும் - (பிரளயம்நீங்கினவுடனே) வாயினால்வெளியிட்டருளின, மாயனூர் - மாயையையுடையவரும், ஓங்கு வேங்கடத்து உறையும் - உயர்ந்த திருவேங்கடமலையிலே வசிக்கின்ற, ஆயனூர் - கிருஷ்ணாவதாரஞ்செய்தவருமாகிய திருமாலினது, தொண்டைநாடு - தொண்டைநாட்டிலே, வாழ் - வாழ்கின்ற, அம் சொல் வஞ்சியார் - அழகிய சொற்களையுடைய வஞ்சிக்கொடிபோல மெல்லிய மகளார், தொழும் எனை தினை துணையும் வஞ்சியார் - (தம்மை) வணங்குகின்ற என்னைத் தினையளவும் [மிகச்சிறிதும்] வஞ்சனைசெய்யமாட்டார்; கொண்டல் சீறு வார் குழலும் - நீர்கொண்ட காளமேகத்தை (த்தனக்கு ஒப்பாகாதென்று) கோபிக்கின்ற நீண்ட (அத்தலைவியாரது) கூந்தலும், ஓங்கு அல்லே - அதிகப்பட்ட இருளேபோலும்; கோவை தாழ் இள குயமும் - (பொன் இரத்தினம் முதலியவற்றாலாகிய) ஹாரங்கள் தொங்குகின்ற இளமையான தனங்களும், ஓங்கலே - உயர்ந்த மலைகளே போலும்; அண்டும் மை கண் - மையிட்ட கண்கள், நீர் ஆவி காவியே - நீர்நிறைந்த தடாகத்தில் தோன்றிய நீலோற்பலமலர்களே போலும்; அவர் - அந்நாயகியார், விருப்பினேன் ஆவிக்கு ஆவியே - (தம்பக்கல்) விருப்பமுடைய எனது உயிர்க்கு ஓர் உயிரேபோல்வர்; (எ - று.)

இது - இயலிடங்கூறல்; இலக்கணம், ௫-ஆம் கவியிற் கூறப்பட்டது.

ஆயன் - இடையர்குலத்தில் வளர்ந்தவன். சிறந்த சந்திரவம்சத்திற் பேர்பெற்ற யதுகுலத்திற் பிறந்திருந்தும் இடக்கை வலக்கை யறியாத இடையர்குலத்திற் சேர்ந்து வளர்ந்து கன்றுமேய்த்து ஒருத்தி கட்டவும் ஒருத்தி குட்டவும் தன்னைக் காட்டிக்கொடுத்த செளலப்யகுணத்தின் மிகுதி விளங்க, 'ஆயனூர்' என்றார். ஆயன் - பசுக்களையுடையவன் என்று இடையனுக்குப் பெயர்; ஆ - பகுதி, அன் - விகுதி, யகரமெய் - எழுத்துப்பேறு. இனி, ஆய் அனூர் - (எல்லாவுயிர்களுக்குந்) தாய்போன்றவரென்றுமாம்.

நாகபட்டினத்துச் சோழன் பிலத்துவாரத்தால் நாகலோகத்தே சென்று நாககன்னியைப் புணர்ந்தகாலத்து அவள் 'யான்பெற்ற புதல்வனை என்செய்வேன்?' என்றபொழுது, 'தொண்டையை (தொண்டை - ஓர்கொடி) அடையாளமாகக் கட்டிக் கடலிலே விட அவன் வந்து கரையேறின் அவற்கு யான் அரசவுரிமையை எய்துவித்து நாடாட்சிகொடுப்பல்' என்று அவன் கூற, அவளும் அங்ஙனம் புதல்வனை வரவிட, கடற்றிரை அவனைக் கொணர்ந்து சேர்த்த நாடாதலால், தொண்டைநாடென்று இந்நாட்டிற்குப் பெயர்; அவ்வாறு கொணரப்பட்ட தொண்டைமானிளந்திரையனென்னும் அரசன் காஞ்சீநகரத்தில் இருந்தான். (இவ்வரலாற்றைப் பெரும்பாணாற்றுப்படை யுரையிற் காண்க.) இனி, பூமிதேவிக்குத் தொண்டை [கண்டம்] போன்று இருத்தலால், தொண்டைநாடாயிற்றென்றுங் கூறுவர்: அன்றியும், பிறகாரணங்கள் கூறுவாரும், தொண்டநாடு என ஓதுவாரும் உளர்; அவை பொருந்துமாயிற் கொள்க. வஞ்சி - உவமையாகுபெயர். தினை - மிக்கசிறுமைக்கு எடுத்துக்காட்டுவதொரு அளவு; ஒருவகைச் சிறுதானியம். குயம் - குசம் என்னும் வடசொல்லின் திரிபு. ஓங்கல் - உயர்ச்சி; அதனையுடைய மலைக்குத்

தொழிலாகுபெயர். விருப்பினேன்-விருப்பு என்னும் முதனிலைத் தொழிற் பெயரின் அடியாகப் பிறந்த தன்மை யொருமைக்குறிப்பு வினையாலணையும் பெயர். உடம்புக்கு உயிர்போல உயிர்க்கும் உயிரானவள் எனத் தலைவியது அருமையையும், அவள்பால் தனக்கு உள்ள காதல்மிகுதியையும் கூறினான்.

இது-ருo - ஆங்கவிபோன்ற எண்சீராசிரியசந்தவிருத்தம். (அரு)

அச. காவிவண்ணர்வடமலையகத்திலுறைகண்ணர்செஞ்சரண
கஞ்சமுங் கனகவாடைதிகழிடையுமேடுவிரிகமலநாறுதிருநாபி
யும், பூவிலன்னமமர்மார்புநேமிவளைபொலிகையுமபயவரதவண்
பொற்கையானசதபத்ரநாலுநறைபொழிதுழாய்கமழுவாகுவும், மே
வுபன்மணியினணிதுலங்குதிருமிடறுமின்னகையின்வதனமும் விலை
யிலாதநலபவளவாயுமெழின்மிக்கநாசியுமொளிக்குழா, மேவுபொன்
மகரகுண்டலச்செவியுமிணைவிழிக்கருணைவாரியும் மிலகுநன்னுதலு
மௌலியுந்தமியனிதயமுண்டுகளிகொண்டதே.

(இ - ள்.) காவி வண்ணர் - நீலோற்பல மலர்போன்ற கரிய திருநிற முடையவராகிய, வடமலை அகத்தில் உறை கண்ணர் - வடவேங்கட மலையினிடத்திலே வாழ்கின்ற கிருஷ்ணபகவானது, செம் சரண கஞ்சமும் - சிவந்த திருவடித் தாமரைமலர்களும், கனகம் ஆடை திகழ் இடையும் - பொன்மயமான பீதாம்பரம் விளங்குகின்ற திருவரையும், ஏடு விரி கமலம் நாறு திருநாபியும் - இதழ்கள் மலர்ந்த தாமரைமலர் வாசனைவீசுகின்ற திருவுந்தியும், பூவில் அன்னம் அமர் மார்பும் - செந்தாமரைமலரில் வீற்றிருக்கின்ற அன்னப்பறவைபோன்ற நடையையுடைய திருமகள் விரும்பியெழுந்தருளியுள்ள திருமார்பமும், நேமி வளை பொலி கை - சக்கரமும் சங்கமும் விளங்குகின்ற இரண்டு திருக்கைகளும், அபய வரதம் வண் பொன் கை - அபயவரத முத்திரைகளையுடைய உத்தமலக்ஷணமமைந்த அழகிய இரண்டு திருக்கைகளும், ஆன சதபத்ரம் நாலும் - ஆகிய செந்தாமரை மலர்கள் நான்கும், நறை பொழி துழாய் கமழு வாகுவும் - தேனைச்சொரிகின்ற திருத்துழாய்மாலை வாசனை வீசுகிற திருத்தோள்களும், மேவு பல் மணியின் அணி துலங்கு திருமிடறும் - பொருந்திய பல இரத்தினங்களைப் பதித்துச்செய்த ஆபரணங்கள் விளங்குகிற அழகிய கண்டமும், இன் நகையின் வதனமும் - இனிமையான புன்சிரிப்பையுடைய திருமுகமும், விலை இலாத நல பவளம் வாயும் - விலைமதிப்பு இல்லாததொரு நல்ல பவழம்போற் சிவந்த திருவாயும், எழில் மிக்க நாசியும் - அழகு மிகுந்த திருமூக்கும், ஒளி குழாம் மேவு பொன் மகர குண்டலம் செவியும் - கிரணங்களின் கூட்டத்தை வீசுகின்ற பொன்மயமான மகரகுண்டலங்களை அணிந்த திருக்காதுகளும், இணை விழி கருணை வாரியும் - இரண்டு கண்களினின்றும் வெளிப்படுகின்ற திருவருள் வெள்ளமும், இலகு நல் நுதலும் - பிரகாசிக்கின்ற அழகிய திருநெற்றியும், மௌலியும் - திருமுடியும், தமியன் இதயம் உண்டு - (அவரையன்றி வேறு துணையுங்கதியுமில்லாமல்) தனிப்பட்ட எனது மனத்தை உட்கொண்டு, களி கொண்டது - களிப்பைக் கொண்டது; (எ - று.)

இது - தான் கண்ட தலைமகனது எழில்மிகுதியைத் தலைவி தோழிக்குக்கூறிய தென்றாயினும், எம்பெருமான்விஷயமான கவிக்கூற்று என்றாயினுங் கொள்க.

பாதாதிகேசம். கேசாதிபாதம் என்னும் இரண்டனுள் பாதாதிகேசமாக இதிற் கூறப்பட்டதென அறிக; "அமுதன் முடியின் காறு மறிவுற வனுமன்சொல்வான்" எனக் கம்பராமாயணத்தும் இவ்வாறே காண்க. களி கொண்டது-சாதியொருமை; 'களிகொண்டவே' எனப் பன்மையாகப் பாடங்

கொள்ளினும் இழுக்காது. சரணகஞ்சம் - கஞ்சம்போன்ற சரணம்; முன்பின்னாகத் தொக்குவந்த உவமத்தொகை: இனி, சரணமாகிய கஞ்சம் எனின், உருவகமாம். நாறுதல் - தோன்றுதலுமாம். 'பூ' என்றதற்கு ஏற்ப, அன்னம் கூறினர்; அன்னப்புள் தாமரையிலே தங்குதல் இயல்பு. அன்னம் - உவமையாகுபெயர். அங்கு - அசை. பொற்கை - பொன்னாபரணமணிந்த கையுமாம். வலப்பால் மேற்கரத்தில் சக்கரமும், இடப்பால் மேற்கரத்தில் சங்கமும், வலப்பால் கீழ்க்கரத்தில் அபயமுத்திரையும், இடப்பால் கீழ்க்கரத்தில் வரதமுத்திரையும் என அறிக. வரதமுத்திரையாவது - உள்ளங்கை வெளித்தோன்றுமாறு கையை மலர்த்தி விரல்கள்கீழ்நோக்கும்படி வைத்திருக்கும் நிலை; இது - தன்திருவடியைச் சுட்டிக்காட்டி இதுவே எல்லாவுயிர்க்கும் புகலிடமாதலால் இதனை அடைந்து யாவரும்வேண்டுவனபெறுங்கள் எனக் குறிக்கும் அடையாளமாம். அபயமுத்திரையாவது - அவ்வாறு விரல்கள் மேல்நோக்கும்படி வைப்பது; இது - அஞ்சாதேயுங்கள் என அடியார்களுக்கு அபயமளித்தற்கு அடையாளமாம்.

சதபத்திரம் - நூறு [அநேக] இதழ்களையுடையது எனத் தாமரைக்குக் காரணக்குறி; பண்புத்தொகையன்மொழி. நால் - நான்கு என்பதன் திரிபு. கமழு, உ - சாரியை. எம்பெருமானுக்கு ஏற்ற திவ்யாபரணங்களென்பார், 'மேவுபன் மணியினணி' என்றார். பல் என்பதை - மணிக்காயினும், அணிக்காயினுங் கூட்டுக. மின்நகை எனப்பிரித்து - விளங்குகின்ற மந்தஹாஸமெனினுமாம். விலை - கிரயம். மகரகுண்டலம் - சுறாமீனின்வடிவமாகச் சித்திரித்துச்செய்யப்படுவதோர் காதணி. 'இணைவிழி' என்றதனால், இத்திருக்கண்களுக்கு வேறுஉவமை கிடையாதென்றபடி. 'விழிக்கருணைவாரி' என்றது, குளிர்ந்த கிருபாகடாக்ஷத்தை. தமியன் - தமி என்னும் பகுதியடியாப் பிறந்த தன்மையொருமைக் குறிப்புவினையாலணையும் பெயர்.

இது - எகூ - ஆம் கவிபோன்ற பதினான்குசீராசிரியவிருத்தம். (அச)

அடு. களிகொண்டெமக்கருள்வேங்கடவாவெதிகட்கரச
னளிகொண்டளித்தவளையாழிவாங்கினையற்புதமா
நளிகொண்டபூங்குழற்பெண்ணரசாயினநங்கைசெங்கை
யொளிகொண்டவால்வளையாழிகைக்கொள்வதுசிதமன்றே.

(இ - ள்.) எமக்கு - (உன் அடியவராகிய) என்போலியர்க்கு, களிகொண்டு - மனக்களிப்பைக்கொண்டு, அருள் - கருணைசெய்கின்ற, வேங்கடவா - திருவேங்கடமுடையானே!—(நீ), அற்புதம் ஆ - (யாவரும்) ஆச்சரியப்படும்படி, எதிகட்கு அரசன் அளிகொண்டு அளித்த வளை ஆழி வாங்கினை - சன்னியாசிகளுக்குத்தலைவராகிய ஸ்ரீபாஷ்யகாரர் அன்பினால் கொடுத்த சங்க சக்கரங்களை வாங்கிக்கொண்டருளினாய்; [அது தகுதியே யென்றபடி]; (இன்னும் நீ), நளி கொண்ட பூ குழல் - பெருமையைக்கொண்ட மலர்களைச் சூடிய கூந்தலையுடைய, பெண் அரசு ஆயின - பெண்களுக்குச்சிறந்தவளான, நங்கை - நம்மகளது, செம் கை - சிவந்த கையி லணிந்த, ஒளி கொண்ட - பிரகாசத்தைக்கொண்ட, வால் வளை - வெண்மையான சங்கத்தையும் [சுத்தமான வளையல்களையும்], ஆழி - சக்கரத்தையும் [மோதிரத்தையும்], கைகொள்வது - வாங்கிக்கொள்வது, உசிதம் அன்று - தகுதியன்று; (எ - று.)

முன்னிரண்டடியிற்குறித்த வரலாறு:— முன்னொருகாலத்தில் திருவேங்கடமுடையான் தமது மெய்த்தொண்டனாகிய தொண்டைமான் சக்கரவர்த்திக்கு வெல்லுதற்கரிய பகைவர்களை எளிதில் வெல்லுதற்பொருட்டுத் தமது சங்கசக்கரங்களைத் தந்தருளி, அதற்குஅடையாளமாகப் பின்பு அவனது வேண்டுகோளால் அவற்றை அங்கே அர்ச்சாரூபத்தில் வெளிப்படையாகக்

கைக்கொள்ளா திருந்தனரென்பதும்; ஸ்ரீபாஷ்யகாரர் சிஷ்யர்களுடனே திவ்யதேச யாத்திரையிலே திருமலைக்கு எழுந்தருளினவளவிலே, அங்கே சைவர்கள் திருவேங்கடமுடையானைத் தங்கள்தெய்வமென்று வழக்குப் பேச, உடையவரும் 'சூல டமருகங்களையும் ஸ்ரீசங்கசக்கரங்களையும் எம்பெருமான் திருமுன்பே வைப்பது; அவர் எதனைத் தரித்தருளுகிறாரோ அதனைக்கொண்டு அவரை இன்னாரென்று நிச்சயித்துக்கொள்வது' என்று அருளிச்செய்ய, எல்லாரும் சம்மதித்து அப்படியே செய்ய, ஸ்ரீநிவாசன் இளையாழ்வார்திருவுள்ளத்தின்படி திருவாழி திருச்சங்கைத் தரித்தபடியைக் கண்டு எல்லாரும் ஆநந்தித்துச் சைவர்களை அடித்தோட்டிவிட்டாரென்பதும், இங்கே அறியத்தக்க கதைகளாம். இதுபற்றியே, எம்பெருமானுக்கு "அப்பனுக்குச் சங்காழி யளித்தருளும்பெருமாள்" என்று ஒரு திருநாமம் உண்டாயிருத்தலுங் காண்க. "முனித்தொண்டைமான்கையிற் சங்காழி நல்கியென்மூரற்செவ்வாய்க், கனித்தொண்டைமான்கையிற் சங்காழிகோடல் கருமமன்றே" என்னுந் திருவேங்கடத்தந்தாதியையும் அறிக.

அளிகொண்டு, கொண்டு - மூன்றாம்வேற்றுமைச் சொல்லுருபு. "உயர்திணை யும்மைத்தொகை பலரீறே" என்ற ஏகாரத்தால், 'வளையாழி' என்னும் அஃறிணை யும்மைத்தொகை, பன்மையீறு பெறுதுநின்றது. ஆ- ஆகவென்பதன் விகாரம். நளி - உரிச்சொல்;"தடவுங் கயவு நளியும் பெருமை". இனி, குளிர்ச்சியுமாம். 'வளையாழிகைக்கொள்வது'என்றது, தலைவனைப்பிரிந்த வருத்தத்தால் தலைவியது உடம்புமெலிந்து அவள்கையினின்று வளைகளும் மோதிரங்களும் கழன்றுவிழுதலை.

இது - செவிலிகூற்றென்றாயினும், தோழிகூற்றென்றாயினுங் கொள்க.

இது - நிரையசைத்தொடக்கத்துக் கட்டளைக்கலித்துறை. (அரு)

அசு. உசிதமறைக்குலம்போற்றும்வேங்கடத்தெம்பெருமா
னுருக்கனகமதிற்கீழைத்திருப்பதியில்ரத்ந
கசிதமனைமலிதெருவிலடகுவிற்குமடவாய்
காரையும்வள்ளையுந்தீண்டிற்கண்சிவப்பாய்வெம்மைப்
பசிதவிர்க்குமுன்னைவிரும்பினனெனிலொன்றேனும்
பகரமதியாய்வேளைபார்த்தளிக்கமாட்டாய்
சசிமருவுபதிவரினுமாரைநீகாட்டச்
சம்மதியாயுனக்கிந்தத்தன்மையடாதனவே.

(இ - ள்.) உசிதம் மறை குலம் போற்றும் - (முக்கியப்பிரமாணமாக அங்கீகரித்தற்குத்) தக்க வேதங்களின்கூட்டம் துதிக்கின்ற, வேங்கடத்து எம்பெருமான் - திருவேங்கடமலையி லெழுந்தருளிய நமது சுவாமியினது, உரு கனகம் மதில் கீழைத்திருப்பதியில் - பெரிய பொன்மயமான மதில்களையுடைய கீழ்த்திருப்பதியிலே, ரத்ந கசிதம் மனை மலி தெருவில் - நவரத்தினங்களும் இழைத்துச் செய்யப்பட்ட வீடுகள் நிறைந்த வீதியிலே, அடகு விற்கும் - பலவகைக் கீரைகளை விற்கின்ற, மடவாய்-இளமகளே!—காரையும் வள்ளையும் தீண்டின் கண் சிவப்பாய் - (உன்னிடத்திலுள்ள) காரைக்கீரையையும் வள்ளைக்கீரையையும் (யான்) தொட்டால் கண்சிவந்து கோபிப்பாய் [உனது மேகம்போன்ற கூந்தலையும் வள்ளையிலைபோன்ற காதுகளையும் நான் தொட்டால்கோபிப்பாய்]; வெம்மை பசிதவிர்க்கும் முன்னை விரும்பினன் எனில் ஒன்றேனும் பகர மதியாய் - கொடிய பசியைப்போக்குகின்ற முன்னைக்கீரையை விரும்பினேனாயின் ஒருசிறிதாயினும் விலைகூறிவிற்க விருப்பங்கொள்ளாய் [தவிர்க்கும் உன்னை எனப்பிரிக்க; காமமாகியபசியையொழிக்கின்ற உன்னை நான் விரும்பினேனாயின் ஒருவார்த்தையாயினும்

சொல்லச் சம்மதியாய்]; வேளை பார்த்து அளிக்கமாட்டாய் - வேளைக்கீரை யைத் தேடிப்பார்த்து எடுத்துக் கொடுக்கமாட்டாய் [சமயங்கண்டு(உனது இன்பத்தைக்) கொடுத்தருளமாட்டாய்]; சசி மருவு பதி வரினும்-இந்திராணி யைக் கூடுகின்ற கணவனாகிய தேவேந்திரனே வந்தாலும் [குளிர்ச்சியாற் சந்திரனையொத்த கணவன் நேர்வதாயிருந்தாலும்], ஆரை நீ காட்ட சம்மதி யாய் - ஆத்திக்கீரையை நீ எடுத்துக் காண்பிக்க இஷ்டங்கொள்ளாய் [மா ரை எனப்பிரிக்க; உனது மார்பை நீ காண்பிக்க விருப்பங்கொள்ளாய்]; உன க்கு இந்த தன்மை அடாதனவே - (விற்பதற்குத் தெருவிற் புறப்பட்டுவந்த) உனக்கு இந்தத்தன்மைகள் தகாதனவேயாம்; (எ - று.)

இது - பிச்சியார், கொற்றியார், வலைச்சியார், இடைச்சியார், மதங்கி யார் என்பனபோலத் தெருவில் கீரைவிற்கவந்தவ ளொருத்தியை நோக்கி ஒருகாமுகன் தனது காதலைப் புலப்படுத்தி முன்னிலைப்படுத்துக் கூறிய தொரு துறையாமென அறிக.

கீழைத்திருப்பதி, ஐ - சாரியை: திருவேங்கடமலையின் கீழிடம். கார், வள்ளை - உவமையாகுபெயர்கள். கண்சிவத்தல் - கோபக்குறி. "வெம்மை வேண்டல்" என்னுஞ் சூத்திரத்தால், வெம்மையென்னும்உரிச்சொல், விருப்ப த்தையும் உணர்த்தும். காரை என்பது முதல் சிலேடையணி. சசிமருவுபதி வரினும் என்பதற்கு - உயர்ச்சியாற்சந்திரமண்டலத்தையளாவுகின்ற நகர முழுவதும் விலையாகவந்தாலும் என்றும் பொருள்கொள்ளலாம். சசி என் னும் வடசொல்லுக்கு - சந்திரனை உணர்த்தும்பொழுது, முயற்கறையுடைய தென்று பொருள்; சசம் - முயல்: சந்திரனிடத்திலுள்ள களங்கத்தை முய லென்பது, கவிமரபு. மார் என்பது - இலக்கணையாய், இங்கே, கொங்கை யை உணர்த்தும். 'ரத்நகசிதமனே' எனச் செல்வச்சிறப்பைக் கூறியவாறு. ஒன்று - எண்ணலளவாகுபெயர். அடகு - இலைக்கறிப்பொதுப்பெயர்.

இது - ருரு - ஆங் கவிபோன்ற எண்சீராசிரியவிருத்தம். (அசு)

அஎ. வேதனைத்தருவிமலனென், னாதன்வேங்கடநாயகன்,
பாதமல்லதுபற்றுமே, யேதமற்றவரிதயமே.

(இ - ள்.) ஏதம் அற்றவர் இதயம் - (காமம்முதலிய)குற்றங்கள் நீங்கிய வரது மனம், வேதனை தரு விமலன் - பிரமனைப் படைத்த குற்றம் நீங்கிய வனும், என் நாதன் - எனது தலைவனும், வேங்கடம்நாயகன் - திருவேங்கட மலைக்கு அதிபதியும் ஆகிய ஸ்ரீநிவாசனது, பாதம் அல்லது - திருவடியை யேயல்லாமல் வேறொன்றை, பற்றுமே - சரணமாக அடையுமோ? [அடை யா தென்றபடி]; (எ - று.)—ஏ - எதிர்மறை.

'வேதனைத்தருவிமலன்' என்றதனால் பரத்துவத்தையும், 'என்னாதன்' என்றதனால் சௌலப்பியத்தையும், 'வேங்கடநாயகன்' என்றதனால் அர்ச் சாவிக்கிரக விசேஷத்தையுங் கூறினார். அநந்யபாவேந எம்பெருமான் திரு வடிகளைப்பற்றினவர்களே குற்றம்நீங்கியவ ரென்று கருத்து.

இது - முதற்சீர் மாச்சீரும், மற்றிரண்டும் விளச்சீருமாகிய சிந்தடி நா ன்குகொண்ட வஞ்சிவிருத்தம். (அஎ)

அஅ. மேதக்க நின்பெருமை வேலைக் கரைகாணக்
கோதற்ற நான்முகற்குங் கூடுமே—யோதரும்பொன்
மண்டபந்தா மேவு வடமலையாய் நீயாடக்
கொண்டபந்தா மண்டக் குழாம்.

(இ - ள்.) ஓது அரு - சொல்வதற்கு அருமையான சிறப்பையுடைய, பொன் மண்டபம் - சுவர்ணமயமான மண்டபங்கள், மேவு - பொருந்திய,

வட மலையாய்-திருவேங்கடமலையில்வாழ்பவனே!—அண்டம் குழாம்-உலக வுருண்டையின்கூட்டம், நீ ஆட கொண்ட பந்து ஆம் - நீ விளையாடுதற்கு வைத்துக்கொண்டுள்ள பந்துகளேயாகும்; (என்றால்), மேதக்க-அன்புமிகுந்த, நின்-உன்னுடைய, பெருமை - மகிமையாகிய,வேலை - கடலினது,கரை-அக்கரையை, காண - பார்ப்பதற்கு, கோது அற்ற நான்முகற்கும் - குற்றமில்லாத பிரமதேவனுக்கும், கூடுமே - சாத்தியமோ ? [அன்று என்றபடி]; (எ - று.)—தாம் - அசை.

காணக்கூடுமே என்பதற்கு - காணல்கூடுமே யென்று பொருள் உரைத்து, எழுவாயும் பயனிலையுமாக முடிக்க. மண்டபங்கள் - திருவேங்கட முடையானது நியமநப்படி தொண்டைமான்சக்கரவர்த்தியாலும், அவன் மரபிலரசர்களாலும் அமைக்கப்பட்டனவென அறிக. ஆடுதலென்றது - படைத்தல் காத்தல் அழித்தல்களை: இவற்றை, பந்திற்கு - எடுத்தல் ஏந்தல் எறிதலாகக் கொள்க. 'அண்டங்கள்தான்' என்று தொடங்கி, 'ஈச்வரனுக்கு க்ரீடாகந்துகஸ்தாநீயங்களாய் ஜலபுத்புதம்போலே ஏககாலத்திலே ஸ்ருஷ்டங்களாயிருக்கும்' என்றார் ஸ்ரீபிள்ளைலோகாசாரியரும். நான்குமுகங்களையுடைய பிரமனுக்கும் கூடாதென்றால், பிறர்க்குக்கூடாதென்பது தானே பெறப்படும்.

மலரென்னும்வாய்பாட்டால்முடிந்தஇருவிகற்பநேரிசைவெண்பா. (அஅ)

அ௯. அண்டனண்டத்துக்கதிபதிபதியாமாழியனாழியைவலத்திற், தொண்டவன்கொண்டனிறத்தினிறத்திற்கோதையான்கோதைநீங்குந்தி, முண்டகன்முண்டக்கண்ணினன் கண்ணுமுத்தன் முத்தருவிவேங்கடவே, தண்டவான்றண்டாதரிப்பவன்றரிக்குந்தனுவனைத்தனுவெடார்தாழ்வார்.

(இ - ள்.) அண்டன் - இடையர்குலத்தில் வளர்ந்தவனும், அண்டத்துக்கு அதிபதி - உலக வுருண்டைகளுக்குத் தலைவனும், பதி ஆம் ஆழியன்-(தனக்கு) இருப்பிடமாகிய கடலையுடையவனும், ஆழியை வலத்தில் கொண்டவன்-திருச்சக்கரத்தை வலத்திருக்கையிலே தரித்தருளினவனும், கொண்டல் நிறத்தினன்-மேகம்போன்ற நிறத்தையுடையவனும், நிறத்தில் கோதையான் - திருமார்பிலே இலக்குமியையுடையவனும், கோதைநீங்குஉந்தி முண்டகன் - குற்றத்தை நீங்கிய நாபீகமலத்தையுடையவனும், முண்டம் கண்ணினன் கண்ணும் முத்தன் - நெற்றியிலே நெருப்புக்கண்ணையுடைய சிவன் தியானிக்கின்ற வீட்டுலகத்தலைவனும், முத்து அருவி வேங்கடம் வேதண்டவான் - முத்துக்களைக் கொழிக்கின்ற நீரருவிகளையுடைய திருவேங்கட மென்னுந் திருமலையையுடையவனும், தண்டு ஆதரிப்பவன்-கதாயுதத்தை விரும்பிக் கைக்கொள்பவனும், தரிக்கும் தனுவனை - ஏந்திய வில்லையுடையவனும் ஆகிய திருமாலை, தாழ்வார் - வணங்குபவர்கள், தனு எடார்-(பிரகிருதிசம்பந்தமான) உடம்பை எடுத்துப் பிறக்கமாட்டார்கள்; (எ - று.)

பிறப்பற்றுத் தேஜோமயமான திவ்வியசரீரத்தைப் பெற்றுப் பரமபத முறுவ ரென்றபடி. பதியாம் ஆழியன் - ஆழியாம்பதியன் என மாறுக. வலம் - ஆகுபெயர். கோதை - பூமாலை; அதுபோல மெல்லிய பெண். வேதண்டவாந்,வாந்-வடமொழியில் உடைமைப்பொருள்காட்டும் பெயர்விகுதி.

இது - "இரவியை யிரவின்மதியினை மதியுள்நிறையினை யிறையுமெண்ணரிய, கரவனைக் கரவின் முனிவனை முனிவர்கருத்தனைக் கருத்தனைத்துடைத்தாள், பரமனைப் பரமபதத்தனைப் பதத்தட்பாரனைப் பாரநத்தூது,மரவனை யரவினரங்கனை யரங்கத்தடிகளை யடிகள் சேவியுமே" என்பது போன்ற அந்தாதிமடக்கு.

*இது - இருபத்துநாலாங்கலியோன்ற எழுசீராசிரியவிருத்தம்* (அக)

கூO. தாழ்வாருக்குயர்வாழ்வைத்தருமால்வேங்கடவன்
சயிலத்தைத்தரிசித்தர்ச்சனைநத்திச்செயமேற்
சூழ்வானோர்சொரிதோயத்துளிநேசித்துதவுந்
தூபஞ்செஞ்சுடர்பொற்றுந்துமிநாதந்தமைநீ
வீழ்வானிற்றுளிபேழ்வாய்மேகத்தின்படலம்
மின்னுப்பேரிடியென்பாயுன்னிப்பாரலவால்
வாழ்வாலாய்வெருவேலுன்மணவாளன்கொடிமுன்
வருமாரம்புனல்வீழும்பொருமாரன்கொடியே.

(இ - ள்.) வாழ் வாலாய் - வாழ்கின்ற இளமகளே!—தாழ்வாருக்கு - தன்னைவணங்குபவர்களுக்கு, உயர் வாழ்வை - சிறந்த பேரின்பவாழ்க்கையை, தரும் - கொடுத்தருளுகின்ற, மால்-திருமாலாகிய, வேங்கடவன் - திருவேங்கடமுடையானது, சயிலத்தை - திருமலையை, தரிசித்து - தரிசனஞ்செய்து, நத்தி - விரும்பி, அர்ச்சனை செய் - (அப்பெரியதிருமலைக்குப்) பூசைசெய்தற்கு, மேல் - ஆகாயத்திலே, சூழ் - சுற்றிநிற்கின்ற, வானோர் - தேவர்கள், சொரி - (திருமஞ்சனம் முதலியன செய்தற்காகப்) பொழிகின்ற, தோயம் துளி - நீர்த்துளியும், நேசித்து உதவும் - (அவர்கள்) பக்திகொண்டு சமர்ப்பிக்கின்ற, தூபம் - வாசனைப்புகையும், செம் சுடர் - செந்நிறமான தீபமும், பொன் துந்துமி நாதந்தமை - அழகிய துந்துபிவாத்தியத்தினது ஓசையுமாகிய நான்கையும்,—நீ—,வானின் வீழ் துளி-மேகங்களினின்றுவிழுகின்ற மழைநீர்த்துளியும், பேழ் வாய் மேகத்தின் படலம் - (மின்னலைவிடுதற்குத் திறக்கின்ற) பெரிய வாயை யுடைய மேகங்களின் கூட்டமும், மின்னு - மின்னலும், பேர் இடி - பெரிய இடியும், என்பாய் - என்று கூறுவாய்; உன்னி பார் - சிந்தித்துப்பார்ப்பாயாக; அல - அவையல்லவாம்; ஆல் - ஆகையால், வெருவேல் - பயப்படாதே; ஆர் அம் புனல் வீழும் - நிறைந்த அழகிய நீரில் விரும்பி வசிக்கின்ற, பொரும் மாரன் கொடி - போர்செய்கின்ற மன்மதனது கயற்கொடி,உன் மணவாளன் கொடிமுன் வரும்-உனது கணவனது தேர்க்கொடியின் முன்னே வரும்; (அதனால் நீ இங்ஙனம் காமவேதனைப்படுகிறா யென்றபடி) ; (எ - று.)

இது - காலமயக்கு என்னுந் துறை. கார்காலத்திலே வருவதாகக் காலங்குறித்துத் தலைவன் தலைவியைப் பிரிந்து தூரதேசத்தே சென்றானாக, அவன் சென்றநாள்முதற்கொண்டே இவளுக்குக் கார்காலமாக இருக்கையில், மெய்யாகவே அக்காலமும் வந்துவிட, தலைமகள் விரகவேதனையால் வருந்தத் தொடங்கிய வளவிலே, புத்திசாமர்த்தியமுள்ள தோழியானவள், மழைநீர்த்துளியைத் திருவேங்கடமலைக்கும் திருவேங்கடமுடையானுக்கும் தேவர்கள் அன்போடுசெய்கின்ற திருமஞ்சனத்தின் நீர்த்துளி யென்றும், மேகக்கூட்டத்தைத் தூபப்புகையென்றும், மின்னலைத் தீபவொளி யென்றும், இடியோசையைத் தேவதுந்துபிமுழக்க மென்றும் மாற்றிக்கூறிக் காலத்தை மயக்கி அவளை ஆற்றிவைக்கிறாள்; "ஓடைமாவிது பிளிறிய ஒலியிது மழையன்றே" என்றார் திருவரங்கக்கலம்பகத்தும்.

தாழ்வாருக்கு உயர்வாழ்வைத் தரு மென்பது, ஒருவகை முரண்தொடை. இது, எம்பெருமானது நிர்ஹேதுக கருணையின் சிறப்பை விளக்கும்; இரண்டுமூன்றாமடிகள் - முறைநிரனிறைப்பொருள்கோள். சைலம் - சிலாமயமானது; சிலா - கல். துந்துமி - துந்துபி; வடசொற்றிரிபு; பேரிகை. "மின்பின் பன் கன் தொழிற்பெயரனைய" என்னுஞ் சூத்திரவிதியால்,மின் என்பது உகரச்சாரியை பெற்றது. வாலாய் - பாலா என்னும் வடமொழித்

திரிபாகிய வாலை யென்பதன் ஈறுதிரிந்த விளி. வெருவேல்-எதிர்மறையேவ லொருமைமுற்று. முன் - இடமுன்; காலமுன்னாகவுமாம்.

இது - ருரு - ஆங் கவிபோன்ற எண்சீராசிரியவிருத்தம். (௬௩)

௬௪. மாரன்கொடிமுன்னேவந்ததுகாண்மின்னே
சேரன்றொடையென்னாற்சிதையாதோநீசெப்பாயால்
சேரன்றொடையுன்னாற்சிதையா தினிமாதே
யோரஞ்சனவெற்பானுகப்பாயணைவானுனைத்தானே.

(இ - ள்.) மின்னே - மின்னற்கொடிபோன்றவளே!—மாரன் - மன்மதனது, கொடி - கயற்கொடி, முன்னே - எதிரிலே [அல்லது கணவனது சேர்க்கை நேர்தற்குமுன்னமே], வந்தது - வந்துவிட்டது: காண் - பார்ப்பாயாக; (ஆகையால்), சேரன் தொடை என்னால் சிதையாதோ - சேரநாட்டரசனுக்குஉரிய மாலையாகிய பனை என்காரணமாக [யான்மடலூர்தலால்] அழியாதோ? [அழியு மென்றபடி]; நீ செப்பாய் - நீ சொல்வாயாக; மாதே - அழகிய மகளே!—சேரன் தொடை - அந்தப் பனை, உன்னால் சிதையாது - உன்னால் அழியாது; (ஏனெனில்), இனி - இப்பொழுதே [விரைவிலே யென்றபடி], ஓர் அஞ்சன வெற்பான் - ஒப்பற்ற அஞ்சனாசலத்திலே எழுந்தருளிய எம்பெருமான், உகப்பு ஆய் - விருப்பங்கொண்டு, உனை - உன்னை, அணைவான் - வந்து கூடுவான்; (எ-று.)—ஆல், தான், ஏ-அசைகள்.

இச்செய்யுள், முதலிரண்டடியும் - களவுப்புணர்ச்சி புணர்ந்து பிரிந்த தலைமகள் அவ்வாற்றாமைவிஞ்சி மடலூரக்கருதித் தோழியைநோக்கி வினவியதாகவும், பின்னிரண்டடியும் - அத்தோழி தலைமகனது விரைவில் வருகையைச் சொல்லித் தலைமகளை ஆற்றியதாகவும் செய்யப்பட்டுள்ளதென்க.

இது - நான்கடியாய், முதலடியும் மூன்றாமடியும் முதல் மூன்றுஞ்சீர்கள் மாச்சீர்களும் மற்றிரண்டும் புளிமாங்காய்ச்சீர்களுமாகிய அளவடியாய்க் குறைந்தும், இரண்டாமடியும் நான்காமடியும் முதல் மூன்று நான்காஞ்சீர்கள் மாச்சீர்களும் மற்றிரண்டும் மாங்காய்ச்சீர்களுமாகிய நெடிலடியாய் நீண்டும் இடைமடக்காய் வந்த ஆசிரியத்துறை. (௬௪)

௬௫. உனைத்தானவாரணமன்றழைத்தாங்குள்ளுகந்தழைக்கு
மெனைத்தானவாரணமெய்திவந்தாள்கிலையென்மொழிமோ
வனைத்தானவாரணமும்போற்றும்வேங்கடத்தற்புதபூ
மனைத்தானவாரணக்கண்டத்தின்மாதுறைமார்பத்தனே.

(இ - ள்.) அனைத்து ஆன ஆரணமும் போற்றும் - அநந்தமான வேதங்களெல்லாம் துதிக்கின்ற, வேங்கடத்து அற்புத - திருவேங்கடமலையிலே எழுந்தருளிய ஆச்சரியகரனானவனே!—பூ மனை தானம் - தாமரைமலராகிய மாளிகையை இடமாகவுடைய, வாரணம் கண்டத்தின் மாது - சங்கம்போன்ற திருக்கழுத்தையுடைய திருமகள், உறை - வசிக்கின்ற, மார்பத்தனே - திருமார்பையுடையவனே!—உனை - உன்னை, தானம் வாரணம் - மதஜலத்தையுடைய கஜேந்திராழ்வான், அன்று - (முதலையினாற்பீடிக்கப்பட்ட) அக்காலத்தில், அழைத்து ஆங்கு - (ஆதிமூலமே யென்று) கூவியழைத்தாற்போல, உள் உகந்து அழைக்கும் - மனம்விரும்பிக் கூப்பிடுகின்ற, எனை - என்னை, அவாரணம் எய்தி - தடையின்மையைப் பெற்று [தடையில்லாமல் என்றபடி], வந்து ஆள்கிலை - (இங்கே) வந்து அடிமைகொள்கின்றாயில்லை; என் - யாதுகாரணம்? மொழிமோ - சொல்வாயாக; (எ - று.)

ஒருதிர்யக்காலே ஒருதிர்யக்குக்கு நேர்ந்த நோவையும் பொறாமே அரைகுலையத் தலைகுலைய மடுக்கரைக்கே வந்து உதவின மகாகுணத்தி

லை ஈடுபட்டு இவ்வாறு கூறினார்; "மீனமர்பொய்கை நாண்மலர் கொய்வான் வேட்கையினோடு சென்றிழிந்த, கானமர்வேழங்கையெடுத்தலறக்கராவதன் காலினைக்கதுவ, வானையின்றுயரந்தீரப்புள்ளூர்ந்துசென்றுநின் றாழிதொட்டான்" என்றார் திருமங்கையாழ்வாரும். ஒரு விலங்குக்கு உதவின நீ அவ்விலங்கினுஞ் சிறந்த மக்களுள் ஒருவனாகிய எனக்கு ஒருகால் வந்து உதவலாகாதோ? என்றார். அவாரணம் - வாரண மென்னும் வடசொல்லின் எதிர்மறை. எய்தி, எய்து - பகுதி. மொழிமோ, மோ - முன்னிலையசைச்சொல். அனைத்து - சாதியொருமை. இரண்டாமடியில், தான் - அசை. நான்காமடியில், தானம் - ஸ்தானம் என்னும் வடமொழியின் திரிபு. வாரணம் - யானை, கோழி, சங்கு, தடுத்தல் முதலிய பலபொருள் குறித்த ஒரு பெயர்த்திரிசொல். மார்பத்தன், அத்து - சாரியை. உள் - மனதுக்கு இடவாகுபெயர். கண்டத்தின்—அத்து, இன் - சாரியைகள்.

இது - நிரையசைமுதற் கட்டளைக்கலித்துறை. (கூஉ)

[வலைச்சியார்.]

கூரு. பத்தருக்குயிரானவர்வேங்கடப்பரமனார்திருநாட்டின்
மைத்தகண்ணிணைமுலைச்சியாரெனவருவலைச்சியார்கண்வாளை
யைத்திருக்கையையன்னவராலையுமங்ஙனே கண்டாற்பூ
வொத்தகைத்தலங்கூப்புவார்கெஞ்சுவாருள்ளமீனசையாரே.

(இ - ள்.) பத்தருக்கு உயிர் ஆனவர் - பக்தர்களுக்கு உயிர்போல அன்புக்கு விஷயமாயும் ஆதாரமாயும் இருப்பவராகிய, வேங்கடம் பரமனார் - திருவேங்கடமலையிலெழுந்தருளிய யாவரினுஞ் சிறந்த திருமாலினது, திரு நாட்டில் - அழகிய திவ்வியதேசத்திலே யுள்ள, மைத்த கண் இணை முலைச்சியார் என வரு - கறுத்த நுனியையுடைய இரண்டு தனங்களையுடையவர்களென்று யாவரும் கொண்டாடும்படி வருகின்ற, வலைச்சியார் - வலையர் மகளிரே!—உள்ளம் மீன் நசையார் - மனத்தில் மீன்விருப்பத்தை யுடையவர்கள், கண் வாளையை - பெருமையை யுடைய வாளை யென்னும் மீனையும், திருக்கையை - திருக்கை யென்னும் மீனையும், அன்ன வராலையும் - அத்தன்மையதான வரால்மீனையும், அங்ஙனே கண்டால் - அவ்விடத்திலே [உம் பக்கல்] பார்த்தால், பூ ஒத்த கைத்தலம் கூப்புவார் கெஞ்சுவார் - மலரையொத்த தங்கள்கைகளினிடங்களைக் கூப்பிக்கொண்டு இன்சொற்சொல்லித் தாங்கள் பெறவேண்டுவார்கள்; [உள்ளம் ஈன் நசையார் - மனத்திற் பெற்ற காமமுடையவர்கள், (அல்லது), உள்ளம் மீ நசையார் - மனத்தின்மேல் விருப்பமுடையவர்கள், (மீ-ஏழனுருபு; நசை என்றவிடத்து நகரவேறுபாடு, சிலேடைப்பொருத்தம் நோக்கியது.) கண் வாளையை - வாளைமீன்போலுங் கண்களையும், திரு கையை - அழகிய கைகளையும், அன்ன வராலையும் - அத்தன்மையனவான வரால்மீன்போன்ற கணைக்கால்களையும், அங்ஙனே-அவ்விடத்திலே [உம்பக்கலிலே], கண்டால் - பார்த்தால், பூ ஒத்த கைத்தலம் கூப்புவார் கெஞ்சுவார் - மலர்களைப்போன்ற தமது கைகளைக் குவித்து அஞ்சலிசெய்துகொண்டு அவற்றைப் பெறவேண்டுவார்கள்]; (எ - று.)

மீன் விற்கும் வலையர்மகளொருத்தியைக் கண்டு காமுற்ற ஒருவன் அம்மகளை முன்னிலைப்படுத்திச் சிருங்காரமான வார்த்தை பேசினதாகச் செய்யுள் செய்வது, வலைச்சியார் என்னும் உறுப்புக்கு இலக்கணமாம்.

வலைச்சியார் - வலைச்சி யென்பதன் பன்மை: முலைச்சியார் என்பதும் இவ்வாறே. வலைச்சி - வலையன் என்பதன் பெண்பால்; ச்-பெயரிடைநிலை: முலைச்சியென்பதிலும், ச்-இவ்விடைநிலையேயாம். இ என்னும் பெயர்விகுதி, இவ்விடங்களிற் பெண்பாலைக் காட்டிற்று. மைத்த கண் என்பதில், கண் -

கொங்கைக்கண்; இனி, மையிட்ட கண்களிரண்டையும் இரண்டுதனங்களையுமுடையவ ளென்றுமாம்: இவ்வுரையில், இணை - மத்திமதீபம். வலைச்சியார் - அண்மைவிளி. வாளை, திருக்கை, வரால் என்பன - மீனின் சாதிபேதம். 'அன்ன' என்னும் சுட்டடியாகப் பிறந்த குறிப்புப்பெயரெச்சம், வரால்மீனைச் சிறப்பித்தது. இனி, கண் வாளை - வாளாயுதம்போலுங் கண்களையும்,ஐ திருக்கையை - அழகிய திருக்கையையும் என்றுங் கொள்ளலாம். "எஞ்சுபொருட்கிளவி செஞ்சொலாயின், பிற்படக்கிளவார் முற்படக்கிளத்தல்" என்னுஞ் சூத்திரவிதியைக்கொண்டு, 'கண்வாளையைத் திருக்கையையன்னவராலையும்' என்றவிடத்து, உம்மையில்சொற்கள் முன்னும் உம்மையுடைய சொல் பின்னுமாகக் கூறப்பட்டன வென அறிக. பூ - தாமரையென்றாயினும், காந்தளென்றாயினுங் கொள்ளலாம்.

இது - கூஉ-ஆங் கவிபோன்ற அறுசீராசிரியவிருத்தம். (கங)

கச. நகைதரு பொருளை நனிமிக வீட்டத்
திசையிரு நான்குஞ் செல்லுபு திரிந்து
பன்னுமந் தீஞ்சொற் பைந்தமி ழமுதை
மன்னுயிர்க் கிரங்கா மானிடர் தொன்னைச்
செவிக்கம ரொழுக்குஞ் செந்நாப் புலவீர்
புவித்தலை நீரைம் பொறிக்கிரை தேடலி
னெய்திய பாவமு மின்மையு நீங்கிநீ
ருய்திறந் தமியே னுரைப்பக் கேண்மின்
றவலரும் வறுமை தலைப்பட யானுங்
கவலையுற் றுறுபசி கனற்றிடத் தேம்பி
யுலகின் மாக்களை யும்மிற் பாடி
யலைவுறு மெல்லைவயி னுகூழ் பிடர்பிடித்
துந்தலின் வேங்கட வுயர்வரை சூழ்நாட்
டந்திற் சேர்ந்தன னுயிடை நிலமுதிர்
கூரிருட் படலங் கூட்டுணும் பல்கதிர்ச்
சூரிய னவிர்வெண் சுடர்கொப் புளிக்கு
மதிமகன் வீட்டில் வருமதி வரலாற்
பதின்மர்பாட் டுகந்த பதுமநா பியனை
யத்திருப் பதியி லயர்விழா வினிற்போய்ப்
பத்தியிற் பணிந்து பயன்பெறு பாக்குக்
குடங்கையி னமர்முக் கோலினர் காவிப்
படம்பொதி யரையினர் பன்னிரு திருமட்
காப்பின் மேனியர் கடைதுள வின்மணி
மாப்பக் கயமணி வடமசை மார்பினர்
திண்புயத் தேற்றுந் திருப்புற் கூடையர்
வண்பதத் திருவகை மறைபகர் வாக்கினர்
பெருகரு ளொதிபதி பெயர்பூண் டிலகு
மரிவாட் படையின ரறையுரத் தப்பினர்
சிறுகோ லாலடி சேமக் கலத்தினர்

மறுவிலா முகமேல் வளர்ந்திகழ் மாருதி
முகத்தினர் சதியின் முறைநடி தாளின
ரகத்தெழு பரிவா ரடிக்கடி பணியா
வருவிர தத்தினர் வண்கவு ளிணையி
லுருவக் குத்திய வொண்ணிறக் கம்பி
பூட்டினர் கையிற் புடைகா ளத்த
மீட்டுமின் னரம்பின் யாழொடு கின்னரி
தண்டையி னொலியொடு தமருகத் தொனிபோ
யண்டிய பாடு மரிகீர்த் தனத்தர்
துளைவேய்த் துண்டஞ் சுரிமுகக் குடக்கூன்
வளையூ தமுகிய வாய்ப்பவ ளத்தினர்
நீற்றைத் தைஇய நெற்றியர் சந்தனச்
சேற்றைத் தடவிய செழுமத் தகத்தினர்
வடியிடு குங்கும மட்குறி நுதலின
ரடைவினின் முத்திரை யைந்தணி மேனியர்
மறித்தோல் சுற்று மருங்கினர் புலியின்
பொறித்தோ லுடையினர் புரிசடைக் கற்றையர்
சிரத்திற் சுமையர் திரமோட் சுமையர்
கரத்திற் சுமையர் கனிவாய் மக்களை
யேந்துபு பின்வரு மில்லின ராதரஞ்
சேர்ந்துடன் வருமாத் திரளினர் தம்முன்
பலகொடி துயல்வரப் பல்லிய முழங்க
மலிகுழாங் கூடி வருபெருஞ் சீரின
ரேறு மேற்றின ரிவர்பரி மாவினர்
வீறிய தம்மேல் விரிநிழற் கவிகைய
ரூருஞ் சிவிகைய ருகைக்கு முலாவினர்
பாரப் படைக்கலம் பற்றுந் தானைய
ரொழியா தெறும்பூ ரொழுக்கென வெண்டிசை
வழிதொறு நடந்து மழையுரு மார்ப்ப
தெனக்கோ விந்த வெனுங்குரன் முழங்கக்
கனைக்கடல் வாய்வரு கடுவாலி யாறெனத்
தன்பிதா வறியச் சதுமுகன் படைத்த
மன்பதை யெல்லாம் வரவிடுத் தனனென
வருபிர சைத்திரள் வகைதரி சித்துத்
திருவளர் கிழைத் திருப்பதி தொழுது
பார்த்தவர் வினையும் பாற்றிடு மாழ்வார்
தீர்த்தந் தோய்ந்து செய்கடன் முடித்து
மோட்டுக் கவய முலைசொரி தீம்பா
லீட்டஞ் சுரநதிக் கிணையாப் பெருகி
யனுதினஞ் சார லவனம் வளர்க்கும்

கனகிரி யுரற்காற் கரிமருப் பிடிக்கக்
கொம்பி னிருலின் குலங்கிழிந் தூற்றும்
வம்புலாந் தாரையை வாளர வென்னச்
சிறைமயில் கொத்தித் தித்தித் திடலா
னறையென் றறிந்தனு நனிவரை காந்தட்
செங்குலை பாய்பறந் திருளழல் வீழ்ந்தென
வங்கெடுத் தோடு மருவிதோய்த் தந்தக்
குழவியின் மேலக் குளிரரு விப்புனல்
பொழிசெம் மணியைப் புண்ணென வூது
மந்தியுங் கானவர் வன்குடி லிற்பாய்ந்
தாந்தின வெனவெழுந் தூடற்கூன் பலவி
னிருங்கனிச் சுளையா லெறிதலு மாவின்
பெருங்கனி யாலெறி பேழ்வாய்க் கடுவனுந்
திரிதரு குன்றெனத் தேவரு முனிவரும்
வருதினந் துதிக்கும் வடமலை வணங்கி
யருமைப் பத்தியு மிருமைசற் றின்றிப்
பெருமை கெழீஇய பிரபத் தியுமே
யழியா முத்தி யடைகுநர்க் கிரண்டு
வழியாந் தன்மையின் மாயனைக் காண்பார்க்
கேறுதற் கரியன வெளியன வாய்மிக
வீறு படித்திரண் மெல்லக் கடந்து
செம்பொன் விமானஞ் சேவித் தணிமதில்
பைம்பொற் கோபுரம் பற்பல மண்டப
மணிமயத் தேரூர் மறுகுமா ளிகையின்
கணமெலா மிருகண் களிப்புற நோக்கி
நிகரில்கோ னேரி நீர்படிந் ததற்பின்
புகரில் கோயிலுட் புக்கிரு குழைதோய்
கண்ணெனுங் கமலக் கடவுளைக் கார்மணி
வண்ணனை யலர்மேன் மங்கைநா யகனை
யொப்பிலா மாலை யுலகெலாம் புரக்கு
மப்பனை யிறைஞ்சி யஞ்சலித் தேத்திப்
புன்சொற் கவிசில புகன்றனென் கிளிசொலு
மின்சொ லெனக்கேட் டெனையாட் கொள்ள
வுடனே யங்கவ னுபய விபூதி
யடையவு மெனவே யாகப் பெற்றனெ
னின்னண நீயிரு மேகிமற் றம்ம
வன்னவ னைப்பணிந் தன்பால் வாழ்த்திப்
பாடுமி னிகத்துப் பரத்துங்
கேடிலா வாழ்வு கிடைக்குமா லினியே.

(இ - ள்.) நசை தரு பொருளை - (யாவர்க்கும்) விருப்பத்தை யுண்டா க்குகின்ற செல்வத்தை, நனி மிக ஈட்ட - மிகவும் அதிகமாகச் சம்பாதிக்கும்

பொருட்டு, திசை இரு நான்கும் - எட்டுத்திக்குக்களிலும், செல்லுபு திரிந்து - போய் அலைந்து, பன்னும் - தாம் ஆராய்ந்தறிந்த, அம் தீம் சொல் பைந் தமிழ்-அழகிய இனிப்பான சொற்களையுடைய சுத்தமான தமிழாகிய, அமுதை - அமிருதத்தை, மன் உயிர்க்கு இரங்கா மானிடர் - நிலைபெற்ற உயிர்களின்பொருட்டு மனவிரக்கங் கொள்ளாத மனிதர்களது, தொளை செவி - துளையையுடைய காதுகளாகிய, தமர் - வெடிப்புநிலத்திலே, ஒழுக்கும்-சொரிந்துவிடுகிற, செம் நா புலவீர் - செம்மையான நாக்கையுடைய வித்துவான்களே!—புவித்தலை - இப்பூலோகத்தில், நீர்-நீங்கள், ஐம்பொறிக்கு - பஞ்ச இந்திரியங்களுக்கும். இரை - அனுபவிக்கப்படும் பொருள்களை, தேடலின் - தேடுதலினால், எய்திய - வந்த, பாவமும் - தீவினையும், இன்மையும் - (அப்பொருள்கள்) கிடையாமையாகிய வறுமையும், நீங்கி - ஒழிந்து, நீர் உய் திறம் - நீங்கள் நற்கதிபெறும் உபாயத்தை, தமியேன் - யானொருத்தன், ஓதுவல் - சொல்வேன்; கேண்மின் - கேளுங்கள்:

யானும் - நானும், தவல் அரும் வறுமை தலைப்பட-நீக்குதற்கரிய தரித்திரம் அதிகப்பட்டதனால், கவலை உற்று - கவற்சியை யடைந்து, உறு பசி கனற்றிட - மிகுந்த பசித்தீ எரித்தலால், தேம்பி - வாடி, உலகின் மாக்களை உம்மின் பாடி - உலகத்திலே யுள்ள மனிதர்களை உங்களைப்போலவே பாடல் பாடித் துதித்துக்கொண்டு, அலைவு உறும் எல்லையின் - அலைதலையடைகின்ற சமயத்தில், ஆகு ஊழ் - (முற்பிறப்பிற் செய்திருந்ததொரு) நல்வினை, பிடர் பிடித்து உந்தலின் - (எனது) கழுத்தின் பின்புறத்தைப் பிடித்துத் தள்ளியதனால், வேங்கடம் உயர் வரை சூழ் நாடு அந்தில் சேர்ந்தனன் - உயர்ந்த திருவேங்கடமலையைச் சூழ்ந்துள்ள நாட்டினிடத்திற் போய்ச் சேர்ந்தேன்;

அ இடை - அந்த நாட்டிலே [அந்தச் சமயத்தில்],—நிலம் முதிர் கூர் இருள் படலம் கூட்டுணும் பல் கதிர் சூரியன் - பூலோகத்திலே நிறைந்த மிகுந்த இருளின் தொகுதியைக் கொள்ளைகொண்டு உண்கிற பலகிரணங்களையுடைய சூரியன், அவிர் வெள் சுடர் கொப்புளிக்கும் மதி மகன் வீட்டில்வரும்-விளங்குகின்ற வெண்காந்தியை வீசுகின்ற சந்திரனது குமாரனான புதனது வீட்டிலே வருகின்ற, மதி - கந்யாமாசம், வரலால்-வருதலினால்,—பதின்மர் பாட்டு உகந்த பதுமம் நாபியனை - பத்து ஆழ்வார்களது பாடல்களுக்குத் திருவுள்ளமகிழ்ந்ததிருநாபித்தாமரைமலரையுடைய திருமாலை, அ திருப்பதியில் அயர் விழாவினில் போய் பத்தியின் பணிந்து - அந்தத் திருவேங்கடமலையிலே செய்கின்ற பிரமோற்சவத்திலே சென்று பக்தியுடனே வணங்கி, பயன் பெறுபாக்கு - (அதனால்) நல்ல பலனைப் பெறுதற்பொருட்டு,—

குடங்கையின் அமர் முக்கோலினர்-அகங்கையிலே பொருந்திய திரிதண்டத்தையுடையவர்களும்,காவி படம்பொதி அரையினர்-காஷாயவஸ்திரம் பொருந்திய இடையையுடையவர்களும், பன்னிரு திருமண்காப்பின் மேனியர் - துவாதசநாமங்களை யணிந்த திருமேனியையுடையவர்களும், கடை துளவின் மணி மா பங்கயம் மணி வடம் அசை மார்பினர் - கடைந்த துளசிக்கட்டையினாலாகிய மணிகளையும் பெரிய தாமரைமலர்க்கொட்டைகளினின்று எடுக்கும் மணிகளையும் கோத்துச் செய்த ஹாரங்கள் அசைகின்ற மார்பை யுடையவர்களும், திண் புயத்து எறும் திருப்புற் கூடையர் - வலிய தோள்களிலே மாட்டிக்கொண்டுள்ள திருப்புற்கூடையை யுடையவர்களும், வள் பதத்து இரு வகை மறை பகர் வாக்கினர் - அழகிய சொற்களையுடைய ஸம்ஸ்கிருதவேதம் தமிழ்வேதமாகியதிவ்வியப்பிரபந்தம் என்னும் உபய வேதங்களையும் சொல்லுகின்ற வாயையுடையவர்களும்,

பெருகு அருள் எதிபதி பெயர் பூண்டு இலகும் அரிவாள் படையினர்-மிகுந்தகருணையையுடைய ஸ்ரீபாஷ்யகாரரது எதிராஜனென்னுந் திருநாமத்தைத்தரித்துவிளங்குகின்றஅரிவாளாகியஆயுதத்தை யுடையவர்களும், அறை உரம் தப்பினர் - அடிக்கின்ற வலிய தப்புஎன்னும் வாசியத்தை யுடையவர்களும், சிறு கோலால் அடி சேமக்கலத்தினர் - சிறிய கோலினால் அடிக்கின்ற சேமக்கல மென்னும் எறிமணியை யுடையவர்களும், மறுஇலா முகம் மேல் வளம் திகழ் மாருதி முகத்தினர் - குற்றமில்லாத தங்கள் முகத்தின் மேல் மாட்சிமை விளங்குகின்ற ஹநுமானினது முகத்தையுடையவர்களும், சதியின் முறை நடி தாளினர் - தாளவொத்தின் கிரமப்படியே நர்த்தனஞ் செய்கின்ற கால்களையுடையவர்களும், அகத்து எழு பரிவான் அடிக்கு அடி பணியா வரு விரதத்தினர் - மனத்திலே தோன்றிய அன்பினாலே அடிவைப்புக்கள்தோறும் சாஷ்டாங்கநமஸ்காரஞ் செய்துகொண்டு வருகின்ற விரதத்தையுடையவர்களும், வள் கவுள் இணையில் உருவ குத்திய ஒள் நிறம் கம்பி பூட்டினர் - பெரிய இரண்டுகன்னங்களிலும் ஊடுருவும்படி குத்தின பிரகாசமான நிறத்தையுடைய (வெள்ளிமுதலியவற்றாலாகிய) கம்பிகளைப் பூட்டிக்கொண்டுள்ளவர்களும், கையில் புடை தாளத்தர் - கைகளினால் ஒத்தறுத்துப் போடுகின்ற தாளத்தையுடையவர்களும், கட்டும் இன் நரம்பின் யாழொடு கின்னரி தண்டையின் ஒலியொடு தமகளம் தொனி போய் அண்டிய பாடும் அரி கீர்த்தனத்தர் - கட்டியுள்ள இனிமையான நரம்புகளையுடைய யாழும் கிந்நரியென்னும் வாச்சியமும் தண்டையென்னுங் காலணியும் ஆகிய இவற்றின் ஒலியுடனே தமது கண்டத்தின் ஒலியும் போய்ப் பொருந்தும்படி பாடுகின்ற ஹரியின் விஷயமான கீர்த்தனங்களையுடையவர்களும், துளை வேய் தண்டம் சுரி முகம் குடம் கூன் வளை ஊது அழகிய வாய் பவளத்தினர் - தொளைகளையுடைய மூங்கிலினது தண்டினாலாகிய குழலையும் சுழிந்த முகத்தையுடைய குடம்போலப் பருத்த வளைவான சங்கத்தையும் ஊதுகின்ற அழகையுடைய பவழம்போற் சிவந்தவாயையுடையவர்களும்,

நீற்றை தைஇய நெற்றியர்-விபூதியை நிரம்பப்பூசிய நெற்றியையுடையவர்களும், சந்தனம் சேற்றை தடவிய செழு மத்தகத்தினர்-சந்தனக்குழம்பைத் தடவின பெரிய நெற்றியையுடையவர்களும், வடி இடு குங்குமம் மண் குறி நுதலினர் - பெரியதாக இட்ட குங்குமத்தாலும் மண்ணாலும் அமைந்த சின்னத்தையுடைய நெற்றியையுடையவர்களும், அடைவினில் முத்திரை ஐந்து அணி மேனியர் - கிரமப்படியே பஞ்சமுத்திரைகளை அணிந்த உடம்பையுடையவர்களும், மறி தோல் சுற்றும் மருங்கினர்-மானின்தோலை உடுத்த இடையையுடையவர்களும், புலியின் பொறி தோல் உடையினர்-புலியினது புள்ளிகளையுடைய தோலை உடுக்குமாடையாகவுடையவர்களும், புரி சடை கற்றையர் - கட்டிய ஜடைத்தொகுதியை யுடையவர்களும், சிரத்தில் சுமையர்-தலையின்மேற் பாரத்தையுடையவர்களும், திரள் தோள் சுமையர்-திரண்ட தோள்களிற் பாரத்தையுடையவர்களும, கரத்தில் சுமையர் - கைகளிற் பாரத்தையுடையவர்களும், கனி வாய் மக்களை ஏந்துபு பின்வரும் இல்லினர் - கொவ்வைப்பழம்போற் சிவந்த வாயையுடைய குழந்தைகளை எடுத்துக்கொண்டு தமதுபின்னே நடந்துவருகின்ற மனைவியையுடையவர்களும், ஆதரம் சேர்ந்து உடன் வரும் மா திரளினர் - விருப்பம்பொருந்தித் தம்முடனே வருகின்ற மிகுந்த (உறவினர்) கூட்டத்தையுடையவர்களும், தம் முன் பல கொடி துயல்வர பல் இயம் முழங்க மலி குழாம் கூடி வரு பெருசீரினர்-தமக்கு முன்னிடத்தே அநேகதுவசங்கள் அசையவும் பலவகைப்பட்ட வாத்தியங்கள் ஆரவாரிக்கவும் மிகுந்த பரிஜனக்கூட்டம் திரண்டுவருகின்ற பெரிய சிறப்பையுடையவர்களும், ஏறும் ஏற்றினர் -(தாம் வாகனமாகக்கொண்டு மேலே) ஏறிய எருதையுடையவர்களும், இவர் பரிமாவினர் - (அங்

கணம் தாம்) ஏறிய குதிரைகளையுடையவர்களும், வீறிய தம்மேல் விரி நிழல் கவிகையர் - ஒப்புயர்வில்லாத சிறப்புப்பெற்ற தமக்கு மேலே பரவுகின்ற நிழலைச் செய்கின்ற குடையையுடையவர்களும், ஊரும் சிவிகையர்-ஏறிய பல்லக்கையுடையவர்களும். உகைக்கும் உவாவினர் - ஏறிச்செலுத்துகின்ற உத்தமகஜத்தையுடையவர்களும். பாரம் படைக்கலம் பற்றும் தானையர்-கனமாகிய [பெரிய] ஆயுதங்களை ஏந்திய சேனையையுடையவர்களும்,—

(ஆக இப்படி பலவேறுவகைப்பட்டவர்களாய்). ஒழியாது-இடைவெளி விடாமல், எறும்புஊர் ஒழுக்கு என - எறும்புகள் செல்லுகிற ஒழுங்குபோல, எண் திசைவழிதொறும் நடந்து எட்டுத்திக்குகளிலுமுள்ளவழிகளிலெல்லாம் நடந்து, மழை உரும் ஆர்ப்பது என கோவிந்த எனும் குரல் முழங்க-மேகத்திலேதோன்றுகிற இடி ஆரவாரிப்பதுபோலக் கோவிந்தா கோவிந்தா வென்று அடிக்கடி சொல்லுகின்ற கண்டத்தொனிஉத்கோஷிக்கும்படி. கனைகடல்வாய் வரு கடுவால் யாறு என - ஒலித்தலையுடைய கடலினிடத்தே வருகிற விரைவையுடைய சுத்தமான நதிபோல, சதுமுகன் படைத்தமன்பதைஎல்லாம் தன்பிதா அறிய வர விடுத்தனன் என - நான்குமுகங்களையுடைய பிரமன் தான் சிருஷ்டித்த ஜனங்களையெல்லாந் தனது தந்தையாகிய திருமால் காணும் பொருட்டு (அவனிடம்) வரும்படி அனுப்பினானென்று கருணிக்கும்படியாக, வரு - (யாத்திரையாக) வருகின்ற, பிரசை திரள் வகை - பலவகைப்பட்ட ஜனங்களின் கூட்டத்தை, தரிசித்து - பார்த்து, (அதனோடுகூடவே யானும் சென்று),—திரு வளர் கீழைத்திருப்பதி தொழுது - செல்வம் வளர்கின்ற கீழ்த்திருப்பதியை வணங்கி, பார்த்தவர் வினையும் பாற்றிடும் ஆழ்வார் தீர்த்தம் தோய்ந்து - (தன்னில் நீராடியவர்களது மாத்திரத்தையே யன்றித் தன்னைப்) பார்த்தவர்களது கருமங்களையும் நாசஞ்செய்துவிடுகின்ற ஆழ்வார் தீர்த்தமென்னும் பொய்கையிலே ஸ்நானஞ்செய்து, செய் கடன் முடித்து - (அதில் அப்பொழுது) செய்யவேண்டுங் கடமைகளை நிறைவேற்றிக்கொண்டு,

'மோடு கவயம் முலை சொரி தீம்பால் ஈட்டம் சுரநதிக்கு இணை ஆ பெருகி அனுதினம் சாரல் ஐவனம் வளர்க்கும் சுன கிரி-பருத்த காட்டுப்பசுக்களின் முலைகள் தாமாகவே பொழிகின்ற இனியபாலினது திரள் (வெண்ணிறத்தாலும் தூய்மையாலும் பெருமையாலும்) தேவர்களது ஆகாச கங்காநதிக்குச் சமமாகப் பெருகி நாள்தோறம் மலைப்பக்கங்களிலுள்ள மலைநெற்களை வளர்க்கின்ற பருத்தமலை! உரல் கால் கரி மருப்பு இடிக்க கொம்பின் இறாலின் குலம் கிழிந்து ஊற்றும் வம்பு உலாம் தாரையை வாள் அரவு என்ன சிறை மயில் கொத்தி தித்தித்திடலால் நறை என்று அறிந்து உணும் நனி வரை-உரல்கள்போலுங்கால்களையுடைய யானைகளது தந்தந்தாக்குதலால் மரக்கொம்புகளிற் கட்டப்பட்டுள்ள தேன்கூண்டுகளின் கூட்டம் உடைந்து சொரிகின்ற வாசனைவீசுகிற தேன்பெருக்கை வாள்போலக் கொடிய பாம்பென்று மயங்கிச் சிறகுகளையுடைய மயில்கள் வாயலகாற்குத்தி (அது) தித்திப்பாயிருத்தலால் (பாம்பன்று) தேனாகும் என்று தெரிந்து (அதனைக்) குடிக்கின்ற பெரியமலை: காந்தள் செங்குலை பாய் பரம் திரள் அழல் வீழ்ந்து என அங்கு எடுத்து ஓடும் அருவி தோய்த்து அந்த குழவியின் மேல் அ குளிர் அருவி புனல்பொழி செம்மணியை புண் என ஊதும் மந்தியும் கானவர் வல்குடிலில் பாய்ந்து உந்தின என எழுந்து உடல் கூன் பலவின் இருகனிகளையால் எறிதலும் மாவின்பெருகனியால் எறி பேழ்வாய் கடுவனும் திரிதரு குன்று - செங்காந்தட்பூங் கொத்திலே பாய்ந்த தமது குட்டிகளைத் திரட்சியான நெருப்பிலே விழுந்துவிட்டன வென்று எண்ணி (ப்பயந்து உடனே) அங்கே (சென்று அவற்றை) எடுத்துக்கொண்டுபோய் விரைந்துசெல்கிற நீரருவியிலே நன்றாகநனைத்து அக்குழந்தைகளின்மேற் பொருந்திய அந்தக் குளிர்ந்த நீர்ப்பெருக்குக் கொழிக்கின்ற சிவந்த இரத்தினத்தை விரணமென்று

மயங்கி (நோவு ஆறும்பொருட்டு) வாயினூறுகின்ற பெண்குரங்குகளும் காட்டிலுள்ள வேடர்கள் (இவை) தமது வலிய குடிசைகளின்மேற் பாய்ந்து விழுந்து ஏறி (அவற்றை)த்தள்ளிவிட்டனவென்றுசீறி (இருப்பிடம்விட்டுப்) பெயர்ந்துவந்து உருவம்வளைந்த பெரிய பலாப்பழங்களின் சுளைகளினால் (தம்மை) வீசி யடித்தவளவில் (அவர்களைப்) பெரிய மாம்பழங்களினால் வீசி யடிக்கின்ற பெரிய வாயையுடைய ஆண்குரங்குகளும் சஞ்சரிக்கின்ற மலை,' என - என்று, தேவரும் - தேவர்களும், முனிவரும் - முனிவர்களும், வரு தினம் - (ஒன்றன்பின் ஒன்றாக) வருகின்ற நாள்கள்தோறும், துதிக்கும் - தோத்திரஞ்செய்கின்ற, வடமலை - வடவேங்கடமலையை, வணங்கி - நமஸ்கரித்து;—

அருமை பத்தியும் இருமை சற்று இன்றி பெருமை கெழீஇய பிரபத்தியுமே அழியா முத்தி அடைகுநர்க்கு இரண்டுவழி ஆம் தன்மையின் மாயனை காண்பார்க்கு ஏறுதற்கு அரியன எளியன ஆய் மிக வீறு படி திரள் மெல்ல கடந்து - (பெறுதற்கு) அருமையாகிய பத்தியும் இம்மைமறுமைகள் சிறிதும் இல்லையாம்படி (வீட்டின்பத்தையே தருதலாகிய) மகிமை விளங்குகின்ற பிரபத்தியும் என்னும் இவையே அழிவில்லாத மோக்ஷத்தை அடைபவர்களுக்கு இரண்டு மார்க்கங்களாகிற தன்மைபோல (ப்பிறர்க்கு ஏறுதற்கு) அருமையானவையா யிருந்தாலும் எம்பெருமானைத் தரிசிக்கச் செல்பவர்களுக்கு மேலேறிப் போவதற்கு எளிமையானவையாய் மிகச்சிறப்புற்ற படிகளின் கூட்டத்தை மெல்லமெல்லத் தாண்டிச்சென்று,—செம் பொன் விமானம் சேவித்து - சிவந்த பொன்னின் மயமான விமானத்தை வணங்கி,—அணி மதில் பைம்பொன் கோபுரம் பற்பலமண்டபம் மணி மயம் தேர் வார் மறுகு மாளிகையின் கணம் எலாம் இரு கண் களிப்பு உற நோக்கி - அழகிய மதில்களும் பசும்பொன்னால் வேய்ந்த கோபுரமும் மிகவும் பலவாகிய மண்டபங்களும் இரத்தினமயமான இரதங்கள் செல்லும்படியான பெரியதிருவீதிகளும் பெரியவீடுகளின் கூட்டமும் என்னுமிவற்றையெல்லாம் (அங்கேஎனது) இரண்டுகண்களுங் களிப்பை யடையும்படி பார்த்து,—நிகர் இல் கோனேரி நீர் படிந்து - ஒப்பில்லாத ஸ்வாமிபுஷ்கரிணியின் தீர்த்தத்திலே நீராடி,—

அதன்பின் - அதன்பின்பு, புகர் இல் கோயிலுள் புக்கு - குற்றமில்லாத் தேவாலயத்தினுள்ளே பிரவேசித்து, (அவ்விடத்திலே எழுந்தருளியுள்ள), இருகுழைதோய் கண் எனும் கமலம் கடவுளை - இரண்டு குண்டலங்களையும் அளாவி நீண்ட திருக்கண்களென்கிற செந்தாமரைமலர்களையுடைய பகவானை, கார்மணிவண்ணனை - காளமேகமும் நீலரத்தினமும் போன்ற திருநிறத்தையுடையவனை, அலர்மேல்மங்கை நாயகனை - அலர்மேன்மங்கைப் பிராட்டியின் கணவனை, ஒப்பு இலா மாலை - உவமையில்லாத திருமாலை, உலகு எலாம் புரக்கும் அப்பனை - பிரபஞ்சமுழுவதையுங் காக்கின்ற ஸ்வாமியை, இறைஞ்சி - வணங்கி, அஞ்சலித்து - கைகளைக் கூப்பித்தொழுது, ஏத்தி - துதித்து, புல்சொல் கவி சில புகன்றனென் - இழிவான சொற்களையுடைய பாடல்கள் சிலவற்றைச் சொன்னேன்; (அவற்றை அவ்வெம்பெருமான்), கிளி சொலும் இன் சொல் என கேட்டு - கிளிபேசுகின்ற இனிமையான சொல்லைக் கேட்டு மகிழ்தல்போலக் கேட்டு(மகிழ்ந்து), எனை ஆள்கொள்ள - என்னை அடிமையாகக்கொண்டருள,—உடனே - அடிமைகொண்டவுடனே, அங்கு - அவ்விடத்தில், அவன் உபயவிபூதி அடையவும் எனவே ஆக பெற்றனென் - அவனது (லீலாவிபூதி த்ரிபாத்விபூதி என்னும்) இருவகைச் செல்வம் முழுவதும் என்னுடையனவேயாகப்பெற்றேன்;

இன்னணம் - இவ்விதமாக, நீயிரும் - நீங்களும், ஏகி - சென்று, அன்னவனை பணிந்து - அப்பெருமானைச்சேவித்து, அன்பால் வாழ்த்தி - பக்தியினாற் பல்லாண்டுபாடி, பாடுமின் - கவிசெய்து துதியுங்கள்; (துதிப்பீராயின், உய்

களுக்கு), இகத்தும்-இம்மையிலும், பரத்தும்-மறுமையிலும், இனி-இனிமேல், கேடு இலா வாழ்வு-கெடுதலில்லாத வாழ்க்கை, கிடைக்கும் - உண்டாகும்.

நனிமிக - ஒருபொருட்பன்மொழி. பைந்தமிழ் - குளிர்ந்த தமிழ். உடம்புநிலையில்லாததாக உயிர் நித்தியமாய் எப்பொழுதும் நிலையுடையதாயிருப்பதனால், 'மன்னுயிர்' எனப்பட்டது. மானிடர்-மானுஷர்: வடசொற்றிரிபு; மனுவின் சந்ததியார். கேட்டவிஷயங்களைக் கருத்தில் வைத்திராமல் உடனே மறந்து வெளியில் விட்டிடுவனவென்பது தோன்ற, 'தொளைச்செவி' என்றார். புலவீர் - புலவர் என்பதன் ஈற்றயல் திரிந்த எட்டாம்வேற்றுமை. புலித்தலை, தலை - ஏழனுருபு. கனற்றிட, கனல் என்பதன் பிறவினையாகிய கனற்று - பகுதி. மாக்கள் - விவேகமில்லாத விலங்குபோன்ற மனிதர். ஆகூழ் - நன்மையுண்டாவதற்குக் காரணமாகிய விதி. இதற்குஎதிர்மொழி-போகூழ்; அஃது நன்மையழிவதற்குக் காரணமாகிய விதி. "ஆகூழாற்றோன்றுமசைவின்மை கைப்பொருள், போகூழாற்றோன்றுமடி" என்னுந் திருக்குறளின் விசேடவுரையில், 'ஆகூழ், போகூழ் என்னும் வினைத்தொகைகள்-எதிர்காலத்தான் விரிக்கப்பட்டுக் காரணப்பொருளாய் நின்றன' என்றார் பரிமேலழகர். ஊழாவது - இருவினைப்பயன் செய்தவனையே சென்று அடைதற்கு ஏதுவாகிய நியதி; ஊழ், பால், முறை, உண்மை, தெய்வம், நியதி, விதி என்பன - ஒருபொருட்சொற்கள். அந்தில் என்னும் இடைச்சொல் அவ்விடத்திலென்னும் பொருளை யுணர்த்துதலை, "அந்திலாங்கவசைநிலைக்கிளவியென், றாயிரண்டாகு மியற்கைத்தென்ப" என்னுஞ் சூத்திரத்தால் அறிக; [நன் - இடை - கஅ.]

புதன் - தேவகுருவாகிய பிருகஸ்பதியினது மனைவியினிடத்து அவர் சிஷ்யனான சந்திரனுக்குப் பிறந்த புத்திரனாதலால், 'மதிமகன்' எனப்பட்டான். பெறுபாக்கு-பாக்குஎன்னும் விகுதிபெற்ற எதிர்கால வினையெச்சம். குடங்கை - உள்ளங்கை. பன்னிருதிருமண்காப்பு - முகத்தில் ஒன்றும், வயிற்றில் மூன்றும், மார்பில் ஒன்றும், கழுத்தில் மூன்றும், தோள்களில் இரண்டும், பிடரியில் ஒன்றும், கீழ்முதுகில் ஒன்றுமாக எம்பெருமானது கேசவாதி த்வாதசநாமங்களைச் சொல்லி இடுவன. திருப்புற்கூடையர் - ஓலைகளினால் முடைந்த அழகிய ஒருவகைக்கூடையை யுடையவர்கள். 'எதிபதி பெயர் பூண்டிலகும் அரிவாட்படையினர்' என்பதற்கு - அடிக்கடி யதிராஜா யதிராஜா என்று சொல்லுகிற ஸ்ரீபாஷ்யகாரரது பெயரையே தாம்செல்லும் அருநெறியில் உண்டாகிற அச்சங்களைத் தவிர்த்துக்காக்கும் படைக்கலமாகக் கருதுபவரென்று கருத்து; இனி, பாஷ்யகாரரது பலவகைத் திருநாமங்களையே தாம்வைத்துக்கொண்டுள்ளவர்களும் திருமாலினது ஆயுதங்களாகிய சங்கசக்கரங்களைக் கைகளிற் பிடித்துள்ளவர்களுமாகியவர்களென்றுங் கொள்ளலாம்: அன்றியும், பாஷ்யகாரர் திருநாமத்தை வைத்துக்கொண்டு அரிவாளை இடையிலே கட்டிக்கொண்டு செல்பவர்களுமாம்; இது - ஒருவகைப் பிரார்த்தனை. அரிவாள் - கூன்வாள்.

மாருதி - வாயுவினது புத்திரர்; ஆஞ்சநேயர்: தத்திதாந்தநாமம். அண்டிய - வினையெச்சம். துண்டம் - கண்டித்தபாகம். தைஇய - தைத்த என்பதன் சொல்லிசையளபெடை; அலங்கரித்த வென்று பொருள். மத்தகம் - மஸ்தகம்; வடசொல். முத்திரையைந்து-சக்கர சங்க கதா பத்ம நாராயண முத்திரைகள். சுமை - சுமக்கப்படுவது; ஐ - செயப்படுபொருள்விகுதி: பகுதியீறு தொக்கது. இல் - மனைவிக்கு இடவாகுபெயர். பல்லியம் - கொட்டுவன, ஊதுவன முதலியன. ஏறு - ஆண்பெயர்; "எருமை யுமரையும் பெற்றமு மன்ன" என்பதனால், இது-பசுவின் ஆணுக்கு, உரியதாம். கோவிந்தனென்னும் சொல்லுக்கு-(எப்பொழுதும்) உயிர்களைக் காப்பவனென்றும், (க்ருஷ்ணாவதாரத்தில்) பசுக்களைக் காப்பவனென்றும் பொருள்கள். கனை -

முதனிலைத்தொழிற்பெயர். கனைக்கடல்-இரண்டனுருபும் பயனுந் தொக்க தொகை; ஒலிக்கின்ற கடல் என வினைத்தொகையாயின், 'கனைகடல்' என வலி இயல்பாம். அரவென்ன, அழல்வீழ்ந்தென, புண்ணென என்பவற்றில், ஒன்றை மற்றொன்றாக மாறக்கருதியதனால், மயக்கவணி; வடநூலார் பிராந்திமதலங்காரம் என்பர். பறழ் - இளமைப்பெயர்; "மகவும் பிள்ளையும் பறழும் பார்ப்பும், அவையுமன்ன வப்பாலான" என்னுஞ் சூத்திரத்தால், இது - குரங்குக்குட்டிக்கு உரியதாம். வீழ்ந்தென - வீழ்ந்ததென என்பதன்விகாரம். மந்தி-பெண்பெயர்; "குரங்குமுசுவமூகமுமந்தி." பலவின், மாவின் என்றவிடங்களில், இன் எனத் தனியே பிரித்து, இனியவெனினுமாம். கடுவன் – ஆண்பெயர்; இது முதலிற் பூனைக்கும் மனிதர்க்கும் உரியதாயிருந்து பின்பு குரங்குக்கும் வருகின்றதென்பதை "குரங்கினேற்றினைக் கடுவனென்றலும். * * * மூடியவந்தவவ்வழக்குண்மையிற், கடியலாகா கடனறிந்தோர்க்கே" என்னுந் தொல்காப்பியசூத்திரங்கொண்டு உணர்க.

"தெரிமாண்டமிழ்மும்மைத் தென்னம்பொருப்பன்" என்பதில் மும்மையென்பதுபோல, இருமையென்பது - இங்கே எண்ணின்கண் நின்றது; இரண்டின்தன்மையை உணர்த்தாமல் இரண்டென்னும் எண்ணையே உணர்த்திற்றென்றவாறு: இதில் மைவிகுதி - தன்மையை உணர்த்தாமல் தன்மையுடைய பொருளையே உணர்த்தியதனால், பகுதிப்பொருள்விகுதி யென்னுஞ் சுவார்த்தபாவ தத்திதப்பிரத்தியயம். இனி, இருமை - துன்பம் என்றும், தன்னின்வேறாகியதோருவமை யென்றுமாம். கெழீஇய - கெழுவிய; சொல்லிசையளபெடை. பிரபத்தியாவது - எல்லாவுபாயங்களையும் விட்டு எம்பெருமானையே தஞ்சமென்று பற்றுதல். மற்று, அம்ம-அசைகள். அம்ம-கேளென்கவென்றுமாம்; "அம்மகேட்பிக்கும்" என்றாதலின்: [நன் - இடை- ௧௬] ஆறுகளுக்குக் கடல்போல உயிர்களுக்குத் திருமால் நாயகனாதலால், 'கனைக்கடல்வாய் வரு கடுவொலியாறென' என உவமை கூறப்பட்டது. ஆல்-அசை. இவர்பரிமா - வினைத்தொகை. ஆயிழை - நீண்டசுட்டின்முன் யகரந் தோன்றிற்று. தண்டை - ஒருவாச்சியமுமாம். பிதாஅறிய - பிதாவைஅறிதற்கு எனினுமாம். கோனேரி - ஸ்வாமிபுஷ்கரிணியென்னும் வடமொழிப் பெயரின் மொழிபெயர்ப்பு. இன்னணம்-இன்னவண்ணமென்பதன் மரூஉ.

இது - நூற்றெட்டடியால் வந்த நேரிசையாசிரியப்பா; காயத்திரீமந்திரஜபஸங்கியை, இராமாநுசநூற்றந்தாதி, பகவந்நாமார்ச்சனை இவற்றைக் கருதி இது அஷ்டோத்தரசத அடிகளாகச் செய்யப்பட்டதென அறிக. (௯௪)

௯௫. இனிமன் மதாசலமெ னெங்கேனும் போய்விற்
குனிமன் மதாசலத்தின் கும்பந்
தங்கம் புயத்தார்தந் தார்சேட வெற்பருந்தி
தங்கம் புயத்தார்தந் தார்.

(இ-ள்.) மன் - பெரிய, மத அசலத்தின் - மதத்தையுடைய மலையாகிய யானையினது, கும்பம் - குடம்போன்ற மஸ்தகத்தில், தங்கு - வைத்து அபயப்பிரதானஞ்செய்த, அம்புயத்தார் - அழகிய வலத்திருக்கையையுடையவரும், உந்தி தங்கு அம்புயத்தார் - திருநாபியிற் பொருந்திய கமலமலரையுடையவரும் ஆகிய, சேடவெற்பர் - சேஷாசலநாதர்,—தம் தார் - தமது மலர்மாலையை, தந்தார் - (எனக்குக்) கொடுத்தருளினார்; (ஆதலால்), மன்மதா - மன்மதனே! இனி - இனிமேல், சலம் என் - (உனக்கு என்மேற்) கோபம் எதற்காக? எங்கேனும் போய் வில் குனி - (என்னைவிட்டு வேறு) எவ்விடத்தாயினும் சென்று உனது கருப்புவில்லை வளைத்துப் போர்செய்வாயாக; (எ-று.)

இது - தலைவனது தார் பெற்றுத் தாபந்தணிந்த தலைவி காமனை நோக்கிக் கூறியது; பகவானது பிரசாதத்தைப் பெற்ற பாகவதர் தமக்குப்பெரும் பகைவனாகிய மன்மதனை வெருட்டிக் கூறியதாக உள்ளுறைபொருள்.

மன்மதன் என்பதற்கு - (எல்லோருடைய) மனத்தையுங் கலக்குபவனென்று பொருள். மன்-உரிச்சொல். 'கைம்மலை' என்றாற்போல, 'மதாசலம்' என்றார். கும்பம் - உவமையாகுபெயர். தங்கம் புயத்தார் எனப் பிரித்து, பொன்போலரிய திருக்கையை வைத்தவரென்றுங் கொள்ளலாம்.

இச்செய்யுளில் பின்னிரண்டடி, யமகம். முன்னிரண்டடி, திரிபு. யமகமாவது - அடிமுதலெழுத்தோடு இரண்டெழுத்துமுதற் பத்தெழுத்தீறாக ஓரடிபோலப் பலவடிகள் பாடப்படுவது. திரிபாவது - அடிமுதலெழுத்தொழித்து இரண்டெழுத்துமுதற் பன்னிரண்டெழுத்தீறாக ஓரடிபோலப் பலவடிகள் பாடப்படுவது. இவ்விடங்களில் எழுத்துக்கணக்கு ஒற்றொழித்துப் பார்க்கவேண்டுமெ‌ன அறிக.

இது - முதலடியும் மூன்றாமடியும் நாற்சீராய்ச் சடையடியும் இரண்டாமடியும் முச்சீராய்த் தனிச்சொல்லின்றி இருவிகற்பத்தால் வந்த சவலை வெண்பா. (கூ௫)

[தூது.]

கூசு. தாராவையும்போதாவையுந் தான்வேண்டினேனூன்வேண்டி
நீராவிமீனாராயவேநினைவுற்றவிங்கெனை நத்துமோ [யே
வாராயெழில்கூராயிழாய்வடவேங்கடத்தடவோங்கல்வா
ழோராழியார்நாராயணர்க்குன்னாணையோதென்னாசையே.

(இ - ள்.) தாராவையும்-தாரா வென்னும் நீர்வாழ்பறவையையும், போதாவையும் - பெருநாரையையும், வேண்டினேன் - (தலைமகனுக்கு எனது காதலைச் சொல்லிவரும்படி) பிரார்த்தித்தேன்; ஊன் வேண்டியே நீர் ஆவி மீன் ஆராயவே நினைவுற்ற - தமது சரீரபோஷணத்தையே விரும்பி நீர் நிரம்பிய தடாகங்களிலே நல்லமீன்களைத் தேடி யெடுத்தற்கே நினைப்புக்கொண்ட அவை, இங்கு எனை நத்துமோ - இவ்விடத்தே (வருந்துகின்ற) என்னை உபேக்ஷியாதிருக்குமோ? [உபேக்ஷித்து விட்டன வென்றபடி]; (ஆதலால்), எழில் கூர் ஆய் இழாய் - அழகுமிக்க ஆராய்ந்தெடுத்தணிந்த ஆபரணங்களையுடையவளே! வாராய்-(அருகில்) வருவாயாக; வடவேங்கடம் தட ஓங்கல் வாழ் - வடக்கிலுள்ள திருவேங்கடமென்னும் பெரிய திருமலையில் வாழ்ந்தருளுகின்ற, ஓர் ஆழியார் நாராயணர்க்கு-ஒப்பற்ற சக்கராயுதத்தையுடையவராகிய ஸ்ரீமந்நாராயணமூர்த்திக்கு, உன் ஆணை - உன்மேலாணை, என் ஆசை ஓது - எனது காமநோயைச் சொல்லிவருவாயாக; (எ-று.)

இது - முன்னே நீர்வாழ்பறவையினங்களைத் தலைமகனிடந் தூதுவிடுத்து வாளாபோயின தலைமகள் தோழியைத் தூதுவிட்டது.

ஊன் வேண்டியே - எனது உடல் வாழ்க்கையையே விரும்பி, வேண்டினேனென்றுமாம். ஊன்என்னும் மாமிசத்தின்பெயர் - உடம்புக்கு ஆகுபெயர். ஊன், ன் - சாரியை; "ஊனெனொருபெய ரானொடு சிவணும்" என்னுந் தொல்காப்பியச் சூத்திரத்தால் அறிக. நினைவுற்ற - பெயர். எழிலாவது - நன்றாய் வளர்ந்தமைந்தபருவத்தும் இது வளர்ந்து மாறியதன்றி இன்னும் வளருமென்பது போன்று காட்டுதல். எழில்கூர் என்பது, ஆயிழை என்னும் அன்மொழித்தொகைக்கு விசேடணம். நாராயணன் - நார அயநன் எனப் பிரிக்க; நித்தியவஸ்துக்களினுடைய திரளுக்குத் தான் இருப்பிடமானவனென்றும், சிருஷ்டிப்பொருள்களை இருப்பிடமாகவுடையவனென்றும், பிரளயப்பெருங்கடலை ஸ்தாநமாகக்கொள்பவனென்றும்

பொருள்கள் கொள்ளப்படும். நீர்வாழ்பறவைகள் போலவே இத்தோழியும் தனது நோயைச் சொல்லாமற்போய்விடுவளோ வென்று ஐயங்கொண்டு 'உன் ஆணை ஓது' என்றாள்.

இது - நாற்சீரும் மாங்கனிச்சீராகிய கலிவிருத்தம். (௬௬)

௬௭. என்னிடத்தில்வேங்கடமாலன்பிலாநா
ளிதுவெனப்பார்த்தெய்மதனுவெம்பிராற்குத்
தன்னிடத்திலதிகபத்தியுடையமாந்தர்
தம்மிடத்தினேசமலாற்றயவிலாத
வுன்னிடத்தினேசமுண்டோவுரையாய்தன்பா
லுறமடியாரடியவரையொருவைகுந்த
மன்னிடத்தில்வைத்தனனுன்னடியரான
மக்களைப்பொல்லாநரகில்வைக்கின்றானே.

(இ - ள்.) என் இடத்தில் - என்பக்கலிலே, வேங்கடம் மால்-திருவேங்கடமலையிலுள்ள திருமால், அன்பு இலா நாள் - அன்பில்லாத சமயம், இது என - இதுவா மென்று கருதி, பார்த்து - காலம்பார்த்து, எய் - (என்மேல் மலரம்புகளைப்) பிரயோகிக்கிற, மதனு-மன் மதனே!—எம் பிராற்கு - நமது சுவாமிக்கு, தன்னிடத்தில் அதிக பத்தி உடைய மாந்தர்தம்இடத்தில் நேசம் அலால் - தன்பக்கலிலே மிகுந்த பக்தியையுடைய மனிதர்களிடத்தில் விருப்பமேயல்லாமல், தயவு இலாத உன் இடத்தில் நேசம் உண்டோ - (நீ அவ்வெம்பெருமானுக்கு மகனாயிருந்தாலும் உயிர்களிடத்துக் கருணையில்லாத உன்னிடத்தில் விருப்பம் உண்டோ? [இல்லை யென்றபடி];உரையாய்- சொல்வாயாக; (அன்புடைமையும் அன்பின்மையும் எதனால் விளங்குமெனின்),தன்பால் உறம் அடியார் அடியவரை ஒருவைகுந்தம் மன் இடத்தில் வைத்தனன் - தன்னிடத்தப்பக்திபொருந்திய தொண்டர்களது தொண்டரை (அப்பெருமான்) ஒப்பில்லாத ஸ்ரீவைகுண்டமென்னும் நிலைபெற்ற இடத்திலே (பேரின்பமனுபவிக்க)வைத்தான்;உன் அடியர் ஆன மக்களை பொல்லா நரகில் வைக்கின்றான் - உனது தொண்டர்களான காமமுடையமனிதர்களைக்கொடியநரகத்திலே(பெருந்துன்பமடைய)வைக்கிறான்;(இதனாற்பார்).

இது-தலைவிகூற்று. மன்மதனைமுன்னிலைப்படுத்தியது. காமோபாலம்பநம்.

மதனன் - ஆடவரையும் மகளிரையும் மோகிக்கச்செய்பவன். எல்லாவுலகமும்அழியுங்காலத்தும் பரமபதம்அழிவையடையாததனால்,'மன்னிடம்' எனப்பட்டது. வைகுந்தம் - வடசொற்சிதைவு. பொல்லாமை - பொலிவில்லாமை.

இது - ௬அ - ஆங் கவிபோன்ற எண்சீராசிரியவிருத்தம். (௬௭)

௬௮. ஆனதகீர்த்தித்திருவேங்கடத்துறையச்சுதநீ
தானுதரிக்கத்துதித்தேனல்லேனிந்தத்தாரணியின்
மேனாளின்மானிடம்பாடியநாச்சுத்தமேவுதற்கு
நானாசையாற்றுதிசெய்தேனுன்புண்ணியநாமத்தையே.

(இ - ள்.) ஆனாத கீர்த்தி - நீங்காத புகழையுடைய, திருவேங்கடத்து உறை அச்சுத-திருவேங்கடமலையில் வசித்தருளுகிற அச்சுதனே! நீ ஆதரிக்க துதித்தேன் அல்லேன் - நீ அன்பு வைக்கும்பொருட்டு (யான் உன்னை)த் தோத்திரஞ்செய்தேனல்லேன்; இந்த தாரணியில் - இப்பூமியிலே, மேல் நாளின் - அநாதிகாலமாக, மானிடம் பாடிய-மநுஷ்யஜாதியைத் துதித்துப் பாடல்பாடின, நா - (எனது) நாக்கு, சுத்தம் மேவுதற்கு-பரிசுத்தியையடைதற்காக, ஆசையால் - விருப்பத்தால், நான்—, உன் புண்ணியநாமத்தை -

உனது பரிசுத்திகரமான திருநாமங்களை, துதிசெய்தேன் - ஸ்தோத்திரம் பண்ணினேன்; (எ - று.)—தான் - அசை.

இது - நேரசைமுதற் கட்டளைக்கலித்துறை. (௯௮)

௯௯. மத்தவரை காத்தபெரு மான்வேங்க டந்துதியார்
பித்தரவர் வாயோ பிலவாயே—நித்தம்வளர்
கோணுக்கண் ணோங்கிவெளிக் கொண்டலைச்சீ றம்மலையைக்
காணுக்கண் சித்திரத்தின் கண்.

(இ - ள்.) மத்த வரை காத்த பெருமான் - மதம்பிடித்த மலைபோன்ற கஜேந்திராழ்வானைக் காத்தருளின பெருமையையுடைய திருமாலினது, வேங்கடம் - திருவேங்கடமலையை, துதியார் - ஸ்தோத்திரஞ் செய்யாதவர்கள், பித்தர் - பைத்தியமுடையராவர்; அவர் வாயோ - அவர்களது அவ்வாயோவென்றால், பிலம் வாயே - சுரங்கத்தின் வாயேயாம்; நித்தம் வளர் - நாள்தோறும் வளர்கின்ற, கோணு - வளைதலில்லாத, கண் - மூங்கில்கள், ஓங்கி - உயர்ந்து, வெளி கொண்டலை சீறு - ஆகாயத்திலே செல்லுகிற மேகங்களை வெருட்டுகின்ற, அ மலையை - அந்தத்திருமலையை, காணு - தரிசியாத, கண் - கண்கள், சித்திரத்தின் கண் சித்திரத்திலே யெழுதியமைத்த கண்களேயாம் [பயனற்றன வென்றபடி]; (எ - று.)

"கரியவனைக்காணுதகண்ணென்னகண்ணே," "நாராயணாவென்னுநாவென்னநாவே" என்றார் சிலப்பதிகாரத்தும். இது - படர்க்கைப் பரவல். திரிகரணங்களையும் பெற்றதற்குப் பயன் பகவத்விஷயத்தில் உபயோகிப்பதேயன்றி வேறன்றென்பது, கருத்து.

நாளென்னும்வாய்பாட்டால்முடிந்தஇருவிகற்பநேரிசைவெண்பா. (௯௯)

௧௦௦. கண்ணாயிரம்பெற்றகோனுலகோங்கியகற்பகக்காத்
தண்ணாரும்பூவையும்வேண்டிலம்வேண்டித்தலைக்கணிபூ
வெண்ணார்க்கிருளன்னவேங்கடத்தான்றொண்டரேவற்றொழில்
பண்ணுசைத்தொண்டரவர்தொண்டர்தொண்டர்பதமலரே.

(இ - ள்.) கண் ஆயிரம் பெற்ற கோன்-ஆயிரங்கண்களைப்பெற்ற தேவராசனான இந்திரனது, உலகு - சுவர்க்கலோகத்திலே, ஓங்கிய - உயர்ந்துள்ள, கற்பகம் கா - நந்தன வனத்திலுள்ள கல்பக விருக்ஷங்களின், தண் ஆரும் பூவையும் - குளிர்ச்சிநிறைந்த மலர்களையும் [தேவ போகத்தையுமென்றபடி]. வேண்டிலம்-(யாம்) விரும்புவோமல்லோம்; வேண்டி தலைக்கு அணி பூ-(யாம்) விரும்பித்தலைக்குஆபரணமாகஅதன்மேல்அணியும்மலர்,(எதுவென்றால்), எண்ணார்க்கு இருள் அன்ன வேங்கடத்தான் - தன்னைத்தியானியாதவர்களுக்கு இருளையொத்துப் பொருள்களின்சொரூபத்தைத் தெரியவொட்டாமல் மறைக்கின்ற திருவேங்கடமுடையானது, தொண்டர் - அடியார்களது, ஏவல் தொழில் - ஏவிய குற்றேவற்றொழில்களை, பண் - செய்கின்ற, ஆசை - அன்பையுடைய, தொண்டரவர் - அடியார்களது, தொண்டர் - அடியார்களது, தொண்டர் - அடியார்களது, பதம் மலரே - திருவடித்தாமரைமலரேயாம்; (எ - று.)

திருவாய்மொழியில் "எந்தைபிரான்றனக்கு, அடியாரடியார்தம்மடியாரடியார்தமக்கு, அடியாரடியார்தம்மடியாரடியோங்களே" என்றாற்போல, 'வேங்கடத்தான் றொண்டர் தொண்டரவர் தொண்டர் தொண்டர்' என்றார். பூவையும், உம்மை - உயர்வுசிறப்பு.

இது - நேரசை முதற் கட்டளைக்கலித்துறை. (௧௦௦)

# நூற்பயன்.

முத்தமிழ்க்கவிவீரராகவன், பத்தியிற்றுதிபாவின்மாலையை,
நித்தநித்தமுமோதுவாரவ, ரத்தனப்பனதாணைவாழ்வரே.

(இ - ள்.) முத்தமிழ்க்கவி வீரராகவன் - இப்பெயரையுடைய புலவன், பத்தியின் துதி - பக்தியோடு தோத்திரரூபமாகச்செய்த,பாவின் மாலையை - பாடல்களின் வரிசையினாலாகிய இப்பிரபந்தத்தை, நித்தம் - நித்தமும், ஓதுவார் அவர் - நாள்தோறும் படிப்பவர்கள், அத்தன் அப்பனது ஆணை வாழ்வரே - யாவர்க்குந்தலைவனாகிய திருவேங்கடமுடையான்மே லாணை (சத்தியமாக) எல்லாவாழ்க்கையையும் பெறுவர் ; (எ - று.)

'அப்பனது ஆணை வாழ்வர்' என்பதற்கு - கடவுளது கட்டளைப்படியே வாழ்வுபெறுவரென்றும் பொருள்கூறலாம். இது-நூலுக்குப்பயன் கூறியது.

இது - தன்னைப் பிறன்போலும் பதிகங்கூறியது; வடநூலாரும், சடகோபர் சம்பந்தர் முதலாயினாரும், திவாகரரும், பதினெண்கீழ்க்கணக்குச் செய்தாரும் முன்னாகப் பின்னாகத் தாமே பதிகங்கூறுமாறு காண்க.

இது - முதற்சீரும் மூன்றாஞ்சீரும் தேமாச்சீர்களும், இரண்டு நான்காஞ்சீர்கள் கூவிளச்சீர்களுமாய் வந்த சந்தக்கலிவிருத்தம்.

திருவேங்கடக்கலம்பகம் முற்றிற்று.

# அநுபந்தம்.

முதற்பாட்டு, இரண்டாந்தாழிசையில், 'வளர்ந்தருள்' என்றவிடத்து- 'அளந்தருள்' என்றும் பாடம்.

மூன்றாம்பாட்டில், 'குறள்வேய்' என்றவிடத்து - 'குழல்வேய்' என்றும் பாடம்.

பத்தாம்பாட்டு, தலைவி பிரிவாற்றாது வருந்தியபோது பாங்கி ஆற்றுவித்தது.

௧௧ - ஆம் பாட்டில், மாதரை விட - ஸ்ரீதேவியையும் பூதேவியையுங் காட்டிலும் என்றுமாம்.

௨௧ - ஆம் பாட்டில், 'பொற்குடந்தூக்கும்' என்றும் பாடம்.

௨௭-ஆம் பாட்டில், வரைந்திடும் திறன் அடைந்த கொம்பு போல விதியின் எ இனத்தையும் சேருமோ என்பதற்கு - எழுதப்படுந்தன்மையை யடைந்துள்ள கொம்பு என்ற எழுத்து [ =ெ ] விதிப்படி வல்லினம் முதலிய மூவினங்களையுஞ் சேர்வது போல எங்கள் மகள் எந்தச்சாதியையுஞ் சேர்வாளோ? சேராள் என்று பொருள்.

௩௯ - ஆம் பாட்டில், வாரம் மேவி நிற்கின்றீர் என்பதற்கு - மலையடிவாரத்திற் பொருந்தி நிற்கிறீர்களென்று இரண்டாம் உரை.

௪௫ ஆம் பாட்டுக்குத் துறை-செல்லுங்கிழத்தி செலவுகண்டு தலைவன் உளத்தொடு சொல்ல லென்றேனும், பாகனொடு சொல்லலென்றேனும் சொல்ல வேண்டும். காட்சியாயின், நடை கூறப்படாது.

௫௧-ஆம் பாட்டில், ஒருதுடியில்-ஒருதுடிப்பொழுதிலே, மாலாகி என்றும் உரைக்கலாம்; விரைவிலே யென்றபடி: துடி - துருடி, காலநுட்பம்.

௬௯-ஆம் பாட்டில், சீதம் - செல்வத்தைத்தருவதான, மலர் - விளங்குகின்ற, அஷ்டாக்ஷரம் என்றும் கொள்ளலாம், சீதம்; ஸ்ரீதம் என்றும் வடசொல்லின் திரிபு.

௬௬-ஆம் பாட்டில், கோமுனைவேல்-(பகை) யரசர்களைக் கோபிக்கின்ற வேல் என்றுமாம்.

# திருவேங்கடக்கலம்பகச்

## செய்யுண் முதற்குறிப்பகராதி.



| செய்யுள். | பக்கம். | செய்யுள். | பக்கம். | செய்யுள். | பக்கம். |
|---|---|---|---|---|---|
| அடுத்தாரை | ௮௫ | கள்ளநெடுங்கயல் | ௩௭ | பூப்பாதம் | ௫ |
| அடையமுண்டக | ௮௩ | காவலுஞ்சென்ற | ௭௩ | பொருளடுத்த | ௨௪ |
| அண்டனண்டத்து | ௧௧௧ | காவிவண்ணர் | ௧௦௭ | பொருளலாவிடய | ௧௦௧ |
| அத்தன்மலர் | ௩௯ | கிரிச்சிலையான் | ௪௩ | பொற்பாலிற் | ௮ |
| அலர்வாய்த்தேனே | ௯௪ | குநகையர்கோன் | ௯ | மங்காதகீர்த்தி | ௮ |
| அல்லளோசோலை | ௪௯ | குருகைவளம் | ௧௦௫ | மதியாரிகச்சுகங் | ௩௪ |
| அழுக்கிலா | ௧௦௨ | கேசவனார் | ௭௨ | மத்தவரைகாத்த | ௧௨௯ |
| அறியுமவர் | ௧௦௦ | கைத்திகிரியானு | ௫௩ | மலர்மேவு | ௯ |
| அற்புதனலர் | ௩௨ | கோடியொன்றிர | ௯௩ | மலையக்குவடு | ௫௪ |
| அனமேல்வரு | ௯௫ | கொண்டற்றிரள் | ௯௦ | மலைவளைத்து | ௩௮ |
| அன்றுலகமுண்டு | ௩௩ | சரணமென | ௩௨ | மறவர்கொம்மை | ௪௬ |
| ஆக்குந்தொழிற்கு | ௯௭ | சரதங்கதி | ௪௭ | மாடாசநிழற்று | ௯௮ |
| ஆதவன்கதிர்சுட | ௭௦ | சிந்திப்பனவுந் | ௮௮ | மாதவத்தோர் | ௮௬ |
| ஆர்படைத்த | ௧௦௪ | தங்கநாகத்தான | ௫௬ | மாமலயத் | ௮௯ |
| ஆலத்தாங்கத் | ௪௮ | தாரானையும் | ௧௨௪ | மாயமலநெடிய | ௫௯ |
| ஆலுமளியஞ்சண் | ௭௨ | தாழ்வாருக்குபர் | ௧௧௨ | மாரன்கொடி | ௧௧௩ |
| ஆனதகீர்த்தி | ௧௨௫ | தானமகலாத | ௨௭ | மாளவிராக | ௫௫ |
| இடங்கொண்ட | ௮௭ | தானேதனக்கிணை | ௫௨ | மாளிகைசுற்ற | ௭௧ |
| இறைவனிவனென | ௫௭ | தூரச்சுரங்கள் | ௮௪ | மானிடர்காள் | ௪௧ |
| இனிமன்மதா | ௪௨௩ | தெரியாமன்மது | ௪௬ | மீன்கொண்டு | ௩௬ |
| உசிதமறை | ௧௦௯ | நேசங்கோதை | ௬௨ | முத்தமிழ் | ௧௨௭ |
| உண்டுமண் | ௧௦௬ | நசைதருபொருளை | ௧௧௫ | மூன்னஞ்சினவி | ௨௬ |
| உரையாலு | ௯௬ | நண்ணுரிலங்கை | ௬௫ | மேகந்தவழ் | ௪௫ |
| உறவேதுமக்கு | ௬௪ | நாகக்குலத்திறை | ௭௫ | மேதக்க | ௧௧௦ |
| உனைக்கருதா | ௬௬ | நீளைத்தருகு | ௩௫ | மையவாங்கோல | ௬௮ |
| உளைத்தான | ௧௧௩ | நீயேகத்தா | ௨௪ | மையார்தருகண் | ௫௯ |
| ஊசலையொத்து | ௧௦௨ | நோற்றவர்மே | ௪௩ | மொழிமறை | ௧௦௧ |
| எந்தவிதங்களு | ௯௫ | பணம்பரப்பு | ௫௧ | மொழியமுதித்தழ் | ௮௫ |
| எம்பிரான்மழை | ௨௫ | பதத்தளந்தது | ௭௪ | யாவருக்கிந்தப் | ௪௨ |
| எனாதுவினை | ௧௦௦ | பதமலராற் | ௪௧ | விடுத்திடு | ௬௧ |
| என்னிடத்தில் | ௧௨௫ | பதின்மர்செந்தமி | ௪௪ | விரகறிமுத்தமிழ் | ௨ |
| ஐங்கோலைவென்று | ௭ | பத்தருக்கு | ௧௧௪ | வீரமேவுஞ்சுடர் | ௫௮ |
| ஒளிக்குங்குமக் | ௬௨ | பத்தர்மனப்பதும | ௩௪ | வேங்கடக்கிரியி | ௯௮ |
| கண்ணன்வேங்கட | ௬௭ | பிச்சிறுங்குழலா | ௧௦௩ | வேங்கடவாச | ௨௩ |
| கண்ணுயிரம் | ௧௨௯ | புயங்கமலை | ௩௧ | வேதனைத்தரு | ௧௧௦ |
| களிகொண்டு | ௧௦௮ | புவனமுழுதும் | ௪௩ | | |

# பிரகடனம்.

இவை, சென்னைத் திருவல்லிக்கேணி தெளிசிங்கப்பெருமாள்கோவில் வீதி ௬௰ - ஆவது கிருகத்தில் (சென்னை ராயபேட்டை வெஸ்லி காலேஜ் தமிழ்ப்பிரதமபண்டிதர்) சே. கிருஷ்ணமாசாரியரிடத்திற் கிடைக்கும். (விலை குறைக்கப்பட்டிருக்கிறது. இருப்புக்காபிகள் மிகச் சிலவே.)

## கம்பராமாயணம்.

| | ரூ. | அ. |
|---|---|---|
| ஆரணியகாண்டம் முழுவதும் உரையுடன் ... ... | ௫ | 0 |
| கிஷ்கிந்தாகாண்டம் முழுவதும் உரையுடன் ... ... | ௫ | 0 |
| பாலகாண்டம் கையடைப்படலவுரை ... ... ... | 0 | ௨ |
| ஷை எதிர்கொள்படலம்முதல்காண்டமுடிவுவரையில் உரையுடன் | ௧ | 0 |
| சுந்தரகாண்டம் முதலிரண்டுபடலம் உரையுடன் ... ... | ௧ | 0 |
| ஷை உருக்காட்டுபடலம், சூளாமணிப்படலம் உரையுடன் ... | 0 | ௧௨ |
| ஷை இறுதிநான்குபடலம் உரையுடன் ... ... ... | ௧ | 0 |
| யுத்தகாண்டம் இரணியன்வதைப்படலம் உரையுடன் ... | 0 | ௮ |
| ஷை நாகபாசப்படலம் உரையுடன் ... ... ... | ௧ | ௪ |
| ஷை மீட்சிப்படலம் உரையுடன் ... ... ... | ௧ | 0 |
| உத்தரகாண்டம் இராவணன்பிறப்புப்படலம், வரையெடுத்தபடலம் இவற்றின் உரை ... ... ... ... | 0 | ௪ |

## வில்லிபுத்தூரார்பாரதம்.

| | ரூ. | அ. |
|---|---|---|
| அருச்சுனன்தீர்த்தயாத்திரைச்சருக்கம் உரையுடன் ... | 0 | ௪ |
| காண்டவதகனச்சருக்கம் உரையுடன் ... ... ... | 0 | ௮ |
| இராயசூயச்சருக்கம் உரையுடன் ... ... ... | 0 | ௧௨ |
| சூதுபோர்ச்சருக்கம் உரையுடன் ... ... ... | ௧ | 0 |
| நிரைமீட்சிச்சருக்கம் உரையுடன் ... ... ... | 0 | ௧0 |
| கிருஷ்ணன்தூதுசருக்கம் உரையுடன் ... ... ... | ௧ | ௮ |
| பதினான்கு பதினைந்து பதினாறும் போர்ச்சருக்கங்கள் உரையுடன் | ௧ | 0 |
| பதினெட்டாம்போர்ச்சருக்கம் உரையுடன் ... ... | ௧ | 0 |

## பிள்ளைப்பெருமாளையங்கார் அஷ்டப்பிரபந்தம்.

| | ரூ. | அ. |
|---|---|---|
| திருவரங்கத்தந்தாதி உரையுடன் ... ... ... | 0 | ௮ |
| திருவரங்கக்கலம்பகம் உரையுடன் ... ... ... | 0 | ௮ |
| திருவரங்கத்துமாலை உரையுடன் ... ... ... | 0 | ௮ |
| திருவேங்கடமாலை உரையுடன் ... ... ... | 0 | ௮ |
| திருவேங்கடத்தந்தாதி உரையுடன் ... ... ... | 0 | ௮ |
| அழகரந்தாதி உரையுடன் ... ... ... ... | 0 | ௮ |
| நூற்றெட்டுத்திருப்பதியந்தாதி உரையுடன் ... ... | 0 | ௮ |
| சிரங்கநாயகரூசல் .. .. ... ... | 0 | ௪ |
| இவையெட்டும் ஒன்றாகச்சேர்த்துப் பயிண்டுசெய்யப்பட்டது... | ௫ | 0 |

---

| | ரூ. | அ. |
|---|---|---|
| திவ்யப்பிரபாவர் குருபரம்பராவிவரணத்துடன் ... | ௨ | 0 |
| சடகோபரந்தாதி உரையுடன் ... ... ... | 0 | ௮ |
| அழகர்கலம்பகம் உரையுடன் (இரண்டாம்பதிப்பு) ... | 0 | ௮ |
| திருவேங்கடக்கலம்பகம் உரையுடன் (இரண்டாம்பதிப்பு) | 0 | ௧0 |
| மதுரைக்கலம்பகம் உரையுடன் (இரண்டாம்பதிப்பு) ... | 0 | ௮ |
| நம்மாழ்வார் அருளிச்செய்த திருவிருத்தம் விரிவுரையுடன் ... | 0 | ௧0 |
| முதுமொழிக்காஞ்சி உரைகளுடன் ... ... | 0 | ௪ |
| ஆழ்வார்கள் சரித்திரம் (இரண்டாம்பதிப்பு) ... ... | 0 | ௮ |
| பட்டர்வைபவம் ... ... ... ... | 0 | ௪ |
| உபயப்ரதாநஸாரம் ... ... ... ... | 0 | ௪ |
| தண்டியலங்காரம் பொதுவணியியல் விசேடவுரையுடன் ... | 0 | ௪ |

## பாகவதம்.

| | ரூ. | அ. |
|---|---|---|
| முதலிரண்டுஸ்கந்தம் உரையுடன் ... ... | க | 0 |

## கந்தபுராணம்.

| | | |
|---|---|---|
| திருவிளையாட்டுப்படலம் உரையுடன் ... ... | 0 | ௪ |
| தசரோறுபடலம்முதல் படையெழுபடலம்வரை உரையுடன் | 0 | ௪ |
| தாரகன்வதைப்படலம் உரையுடன் ... ... ... | 0 | ௮ |
| வழிநடைப்படலம் முதல் திருச்செந்திப்படலம்வரை உரையுடன் | 0 | ௪ |
| மார்க்கண்டேயப்படலம் உரையுடன் ... ... ... | 0 | க௨ |
| விந்தகிரிப்படலம்முதல் ஐந்துபடலங்கள் உரையுடன் ... | 0 | கூ |
| [illegible]சூரந்தரைப்படலம், காவிரிநீங்குபடலம், இந்திரனருச்சனைப்படலம் உரையுடன் ... ... ... | 0 | ௮ |

| | | |
|---|---|---|
| சிலப்பதிகாரம் காடுகாண்காதை உரைகளுடன் ... ... | 0 | ௪ |
| சூளாமணி முதல்நான்குசருக்கத்துக்குத் தெளிவான உரை ... | 0 | ௮ |
| ஷை ஆரியற்சருக்கத்தில் [illegible]-செய்யுளுக்குத் தெளிவான உரை | 0 | ௪ |
| துருவசரித்திரம் ... ... ... ... ... | 0 | உ |
| விசாரசருமர் வரலாறு ... ... ... ... | 0 | க |

| | | |
|---|---|---|
| பன்னூற்றிரட்டு கல்வியதிகாரம் உரையுடன் ... ... | 0 | கூ |

| | | |
|---|---|---|
| இராமாயணவெண்பா வனம்புகுகாண்டம் உரையுடன் ... | 0 | ௪ |
| ஷை போர்புரிகாண்டம் உரையுடன் ... ... ... | 0 | ௪ |

| | | |
|---|---|---|
| மணவாளமாமுனி நூற்றந்தாதியும், நூற்றெட்டுத்திருப்பதியகவலும் | 0 | உ |
| மாறன்கோவை ... ... ... ... . | 0 | ௮ |
| திருவேங்கடவுலா ... ... ... . | 0 | ரு |
| ஆண்டாள் பிள்ளைத்தமிழ் ... ... ... ... | 0 | உ |
| ஆண்டாள் சந்திரகலாமாலை ... . .. | 0 | க |
| அழகர் கிள்ளைவிடுதூது ... ... ... ... | 0 | க |

திருக்குறளிலும், நாலடியாரிலும், பாரதவெண்பாவிலும் சிற்சில பகுதி உரையுடன் கிடைக்கும்.

| | | |
|---|---|---|
| நன்னூற்காண்டிகை ... ... ... ... | க | 0 |
| பஞ்சதந்திரம் ... ... ... ... .. | 0 | ௪ |
| ஷை அரும்பதவுரையுடன் ... ... ... ... | 0 | க |
| நான்காவது ஐந்தாவது பாரம் ரீடர் ... | 0 | ௮ |
| ஷை உரை ... ... ... ... | 0 | ௪ |

| | | |
|---|---|---|
| கம்பராமாயண வசனம். புதியபதிப்பு. 100-விசித்திரப்படங்களுடன் எழுகாண்டமும் இரண்டு புத்தகம் ... ... | ௪ | 0 |
| ஷை உயர்ந்த கடிதத்தில் அச்சிட்டது .. ... ... | ௬ | 0 |
| தேவாரம் திருவாசகம் முதலிய பன்னிருதிருமுறைத்திரட்டு... | 0 | ௮ |
| விநாயகபுராணம் மூலம் இரண்டு காண்டமும் (ஒருபுத்தகம்). | உ | ௮ |
| இராமாயணம் கும்மிப்பாட்டு (புதியபதிப்பு) ... | க | ௪ |
| இங்கிலீஷ் தமிழ் ஒக்கபிலேரி (12800-வார்த்தையுள்ளது.) . | 0 | ௮ |
| ஷை தெலுங்கு ... ... ... ... ... | 0 | ௮ |
| நீதிநூற்றிரட்டு ... ... ... ... .. | 0 | ௬ |
| சிற்றம்பலநாடிகள் சாத்திரக்கொத்து ... ... | 0 | ரு |